# ஏழாம் வகுப்பு
# சமூக அறிவியல்

## மூன்றாம் பருவம்
## தொகுதி – 3



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_1.indd 126 9/30/2023 11:01:16 AM

# வரலாறு



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_1.indd 127 9/30/2023 11:01:16 AM

# பாடப் பொருளடக்கம்


| அலகு | தலைப்பு | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|
| | **வரலாறு** | | |
| 1. | புதிய சமயக் கருத்துக்களும் இயக்கங்களும் | 129 | ஜனவரி |
| 2. | தமிழ்நாட்டில் கலையும் கட்டடக் கலையும் | 140 | பிப்ரவரி |
| 3. | தமிழகத்தில் சமணம், பௌத்தம், ஆசீவகத் தத்துவங்கள் | 152 | மார்ச் |
| | **புவியியல்** | | |
| 1. | கண்டங்களை ஆராய்தல் – வடஅமெரிக்கா மற்றும் தென்அமெரிக்கா | 168 | ஜனவரி |
| 2. | நிலவரைபடத்தை கற்றறிதல் | 201 | பிப்ரவரி |
| 3. | இயற்கை இடர்கள் – பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை புரிந்து கொள்ளல் | 210 | மார்ச் |
| | **குடிமையியல்** | | |
| 1. | பெண்கள் மேம்பாடு | 223 | ஜனவரி |
| 2. | சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு | 231 | மார்ச் |
| 3. | சாலைப் பாதுகாப்பு | 241 | ஏப்ரல் |
| | **பொருளியல்** | | |
| 1. | வரி மற்றும் அதன் முக்கியத்துவம் | 253 | ஏப்ரல் |


மின்நூல்

மதிப்பீடு

## அலகு - 1

# புதிய சமயக் கருத்துக்களும் இயக்கங்களும்



### கற்றல் நோக்கங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை குறித்த அறிவினைப் பெறுதல்

- ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியோரின் பக்தி இயக்கம்
- ஆதிசங்கரரின் அத்வைத தத்துவம், இராமானுஜரின் விசிஷ்டாத்வைத தத்துவம்
- வட இந்திய பக்திக் கோட்பாடுகளும் அவற்றை முன்மொழிந்த ஆளுமைகளும்
- இந்து இஸ்லாம் சமயங்களுக்கு இடையிலான உறவு ஊடாட்டங்களும் அது குறிப்பாக சூபியிசம் (இஸ்லாமிய மறைமெய்ஞானம்) போன்ற புதிய கோட்பாடுகள் உருவாவதற்கு இட்டுச் சென்றமையும்
- கபீர், குருநானக் ஆகியோரின் போதனைகள்
- பக்தி இயக்கத்தின் தாக்கம்

### அறிமுகம்

இடைக்கால இந்தியாவில் வியப்பை ஏற்படுத்தும் அளவில் பக்திக் கவிதைகள்/ செய்யுள்கள் இயற்றப்பட்டன. அவை ஒரு குறிப்பிட்ட சமயம் சார்ந்ததாக இல்லாமல் பல்வேறு சமய இயக்கங்களினால் தூண்டப்பெற்றன. கடவுளின் மீதான முழுமையான பக்தியே மனிதனை வாழ்வின் இடர்ப்பாடுகளிலிருந்து காத்து முக்தியை அருளுமென இவ்வியக்கங்களை நிறுவியவர்கள் கருதினர். மேலும் இறைவன் எங்கும் நிறைந்து இருப்பதினாலும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் உறைந்திருக்கின்றார் என்பதாலும் ஒருவர் கோவிலுக்குச் செல்ல வேண்டியதோ, சடங்குகள் செய்ய வேண்டியதோ அவசியமில்லை. எனவும் நம்பப்பட்டது. அறிவின் வழிப்பட ஞானமார்க்கம், சடங்குகள், நற்செயல்கள் ஆகியவற்றின் வழிப்பட கர்மா மார்க்கம் ஆகிய இவை இரண்டைக் காட்டிலும் பக்திமார்க்கமே சிறந்தது என பகவத்கீதையில் கூறப்பட்டுள்ளது. இது பக்திக் கோட்பாடுகளை முன்மொழிந்தவர்களை ஊக்குவிப்பதாய் அமைந்தது.

## பக்தி இயக்கம் : தொடக்கங்கள்

பக்தி இயக்கம் அல்லது வழிபாட்டு முறைகளிலான புத்தெழுச்சி தமிழகத்தில் கி.பி. (பொ.ஆ.) ஏழாம் நூற்றாண்டை ஒட்டித் தொடங்கிற்று. அப்புத்தெழுச்சி ஆண், பெண் கடவுளர்களின் பெயர்களைத் தொடர்ந்து ஓதுதல். கடவுளர்களைப் புகழ்ந்து பாடுதல், மதச் சின்னங்களை அணிந்து கொள்வது அல்லது அடையாளச் சின்னங்களைச் சுமந்து செல்வது, கடவுளுடன் தொடர்புடைய புனிதத்தலங்களுக்கு ஆன்மீகப் பயணங்கள் மேற்கொள்வது என்பனவற்றை உள்ளடக்கியதாக இருந்தது. தனக்குச் சொந்தமான கடவுளை வழிபடும் பக்தனுக்கும் அக்கடவுளுக்கும் இடையிலான பரஸ்பர உணர்வு ரீதியிலான பற்றுதலுக்கும் அன்பிற்கும் பக்தி இயக்கம் சிறப்பு முக்கியத்துவம் கொடுத்தது. சூபி தத்துவமும் இதே போன்ற கருத்தையே போதித்தது. தொடக்ககால இஸ்லாம் சமயத்தின் உலகப்பற்றுதலுக்கு எதிராகத் தோன்றியதே சூபி தத்துவமாகும். தீவிர உணர்ச்சிவயப்பட்ட பக்தி, ஆழமான தியானம் ஆகியவற்றின் மூலமே கடவுளை உணரமுடியுமென சூபி கோட்பாடு நம்பியது. இவ்வகையிலான தியானங்களே ஒரு பக்தனுக்குக் கடவுளின் உண்மையான இயல்பைப் புரிந்துகொள்ள உதவுமென சூபிக்கள் நம்பினர். இவ்வாறு செய்தால் மட்டுமே உலகப் பிணைப்புகளிலிருந்து ஒரு பக்தன் விடுபட முடியுமென்றும் அதுவே அவர் கடவுளுடன் இரண்டறக்கலக்க உதவுமென்றும் சூபிக்கள் வாதிட்டனர். இந்து, இஸ்லாம் ஆகிய இரு சமயங்களிலும் அறிவுநிலை கடந்த சமய இயக்கங்கள் செயல்பட்டன. தங்களுடைய போதனைகளில் வெவ்வேறு சமயங்கள் சார்ந்த கூறுகளையும் சேர்த்துக் கொள்வதில் அவர்கள் தயக்கம் காட்டவில்லை. "இந்துக்களும் இஸ்லாமியரும் கடவுளை வெவ்வேறு பெயர்களில் அழைத்தாலும் இருப்பது ஒரேயொரு கடவுள் மட்டுமே" என ஹரிதாசர் கூறியுள்ளார்.

## 1. தமிழகத்தில் பக்தி இயக்கம் (ஆழ்வார்களும் நாயன்மார்களும்)

பக்தி இயக்கத்தைத் தொடங்கிவைத்த வைணவ பக்தி அடியார்களான ஆழ்வார்களும் சிவனை வழிபடும் சைவர்களான நாயன்மார்களும் தமிழ்மொழியில் பக்திப்பாடல்களை இயற்றி தங்கள் கடவுளர்களுக்குச் சமர்ப்பித்தனர். சிவபக்தியானது இவ்வுலகில் நடைபெற்ற சிவபெருமானின் திருவிளையாடல்களோடு தொடர்புடையதாகும். சிவன், விஷ்ணு குறிப்பாக கிருஷ்ணர் குறித்த பாடல்கள் தமிழிலும் ஏனைய தென்னிந்திய மொழிகளான கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் இயற்றப்பட்டன. பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களின் கடுமையான தாக்குதல்களைத் திறம்பட எதிர்கொள்வதற்காக, புலவர்களாகவும் ஞானிகளாகவும் இருந்த இவர்கள் சாதியை அடிப்படையாகக் கொண்ட சமூகநிலைகளைச் சாடியதோடு அல்லாமல் ஆண், பெண் சமத்துவத்தையும் முன்னிறுத்தினர்.

விஷ்ணு பக்தி அல்லது வைணவம் விஷ்ணுவின் அவதாரங்களைக் குறிப்பாக இராம, கிருஷ்ண அவதாரங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். பன்னிரு தமிழ் ஆழ்வார்கள் அவர்கள் இயற்றிய அழிவில்லாப் பாடல்களுக்காகவே நன்கறியப்பட்டவர்கள் ஆவர். பக்தி இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தாங்கள் செய்த பங்களிப்பின் காரணமாய் இரண்டு ஆழ்வார்கள் தனித்துவம் மிகுந்து காணப்படுகின்றனர். நம்மாழ்வார் அவர் இயற்றிய 1,102 பத்திகளைக் கொண்ட திருவாய்மொழி எனும்நூலால் புகழ்பெற்றார். நம்மாழ்வாரின் 4000 பாடல்களை நாலாயிர திவ்வியப் பிரபந்தம் எனும் பெயரில் நாதமுனி தொகுத்துள்ளார். ஆழ்வார்களில் ஆண்டாள் மட்டுமே பெண்பால் ஆழ்வாராவார்.

பெரியாழ்வார் தொடக்கத்தில் விஷ்ணு சித்தர் என அறியப்பட்டார். தாய் யசோதையின் இடத்தில் தன்னை இருத்தி குழந்தை கிருஷ்ணனைப் பற்றி பல பாடல்களைப் புனைந்துள்ளார். திருவில்லிபுத்தூர் கோவில் துளசித் தோட்டத்தில் பெரியாழ்வார் ஆண்டாளைக் குழந்தையாகக் கண்டெடுத்து, தனது குழந்தையாக ஏற்றுக்கொண்டதாகக் கூறப்படுகிறது. கோவில் நகரமான திருவில்லிபுத்தூரில் வளர்ந்த அவர் ஆண்டாள் (ஆட்சி புரிபவள்) என அழைக்கப்பட்டார். திருப்பாவை (கிருஷ்ணனை அடையும் வழி) நாச்சியார் திருமொழி (பெண்ணின் புனிதப் பாடல்கள்) ஆகிய இரண்டும் ஆண்டாளின் புகழ்பெற்ற கவிதை நூல்களாகும். திருவரங்கம் கோவிலிலுள்ள விஷ்ணுவின் அவதாரமான அரங்கநாதனின் மீதான காதலை ஆண்டாள் தனது பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். தமிழ்நாட்டில் வைணவத் திருமண விழாக்களின்போது இப்பாடல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

வைணவ அடியார்கள் (12 ஆழ்வார்கள்)



**முதல் மூன்று ஆழ்வார்கள்:** பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்.

ஏனைய ஆழ்வார்கள்: திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கையாழ்வார், திருப்பாணாழ்வார், குலசேகராழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், மற்றும் ஆண்டாள்.

**சைவ அடியார்கள் (63 நாயன்மார்கள்)**



மரபுவழிக் கதையின்படி நாயன்மார்கள் 63 பேராவர். அவர்களில் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் (மும்மூர்த்திகள் என அழைக்கப்படுபவர்கள்) ஆகியோர் தென்னிந்தியக் கோவில்களில் சிலைவழிபாடு செய்யப்படுகின்றனர். நாயன்மார்களின் பாடல்கள் அனைத்தையும் நம்பி ஆண்டார் நம்பி (கி.பி.1000) என்பார் தொகுத்ததாகக் கூறப்படுகிறது. அதுவே சைவப்புனித நூல்களான திருமுறையின் அடிப்படையாக உள்ளது. திருமுறை 12 நூல்களைக் கொண்டுள்ளது. அவற்றில் 11 நூல்கள் நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டவையாகும். சேக்கிழாரின் பெரியபுராணம் 12வது திருமுறையாகும்.



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_1.indd 131 9/30/2023 11:01:17 AM

### அ. ஆதிசங்கரர்

ஆதிசங்கரர் அல்லது சங்கராச்சாரியார் (ஏறத்தாழ கி.பி. 700 – 750) அத்வைதம் எனும் தத்துவத்தைப் போதித்தவராவார். ஞானத்தைப் பெறுவதன் வழியாக ஜீவாத்மா பரமாத்மாவுடன் (பிரம்மா) இணையும் என்பதே இத்தத்துவத்தின் சாரமாகும் அவர் பத்ரிநாத், பூரி, துவாரகா, சிருங்கேரி ஆகிய இடங்களில் மடங்களை நிறுவினார். அவை கற்றுக்கொள்வதற்கான, வழிபாடு செய்வதற்கான மையங்களாகத் திகழ்ந்தன. இவ்விடங்கள் இன்றும் முக்கியமான புனிதத்தலங்களாக விளங்குகின்றன. தன்காலத்து பக்தி இயக்கத்தின் மீது கவனம் கொள்ளாத சங்கரர் வேதமரபுகளை மீட்டெடுக்கும் முயற்சிகளில் ஆர்வம் கொண்டார். பிரம்ம சூத்திரம் எனும் நூலுக்கு அவர் எழுதிய உரையே அவர் ஆற்றிய பணிகளில் சாலச் சிறந்ததாகும். பிரம்ம சூத்திரம் வேதாந்தப் பள்ளியின்அடிப்படை நூலாகும்.முதன்மையான உபநிடதங்களுக்கு அவர் எழுதிய உரைகளும் முக்கியமானவையாகவேக் கருதப்படுகின்றன.



ஆதிசங்கரர்

### ஆ. இராமானுஜர்

பதினொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த வைணவத் திருத்தொண்டரான ராமானுஜர் மிகவும் செல்வாக்குபெற்ற வைணவச் சிந்தனையாளர் ஆவார்.



இராமானுஜர்

அவர் முன்வைத்தத் தத்துவம் விசிஷ்டாத்வைதம் ஆகும். ஆத்மாவானது பிரம்மத்துடன் கலந்த பின்னரும் தனக்கான அடையாளத்தைத் தக்கவைத்துக் கொள்கிறது என இத்தத்துவம் அறிவித்தது. நீண்ட நெடிய ஆன்மீகப் பயணங்களுக்குப் பின்னர் அவர் ஸ்ரீரங்கத்தில் குடியேறினார். சமூக, சமத்துவக் கருத்துக்களை பரப்பிய அவர் கோவில்களில் நுழைவதற்கான சாதியக் கட்டுப்பாடுகளைக் கண்டனம் செய்தார். விஷ்ணுவின் மீதும் அவரின் இணையான லட்சுமியின் மீதும் அவர் கொண்டிருந்த பக்திநெறி ஸ்ரீவைஷ்ணவம் என்றழைக்கப்படுகிறது. அந்நெறியைப் பரப்புவதற்காக அவர் பல மையங்களை நிறுவினார்.

16, 17 ஆம் நூற்றாண்டுகளில் வைணவ சமயம் இந்தியா நெடுகிலும் பரவியது. புகழ்பெற்ற கல்வி மையமாக விளங்கிய காஞ்சிபுரத்தில் வடகலை வைணவம் செழித்தோங்கியது. தென்கலை வைணவம் திருவரங்கத்தை மையமாகக் கொண்டிருந்தது. சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட வேத நூல்களே முக்கியமானவை என வடகலையினர் கருதினர். தமிழ் மொழியில் பன்னிரு ஆழ்வார்களால் எழுதப்பட்ட திவ்விய பிரபந்தத்திற்கு தென்கலையினர் அதிக முக்கியத்துவம் கொடுத்தனர்.

## 2. வட இந்தியாவில் பக்தி இயக்கம்

பதினான்காம் பதினைந்தாம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் நடைபெற்ற சமய இயக்கங்களைப் பற்றி அறிய விரும்புவோர், இக்கால இந்துசமயத் தலைவர்கள் இஸ்லாம் குறித்து மிகவும் வேறுபட்ட இரு அணுகுமுறைகளைக் கொண்டிருந்தனர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். ஒரு குழுவினர் இஸ்லாமில் எது சிறந்ததோ அதை ஏற்றுக்கொண்டனர்.

ஏனையோர் இஸ்லாம் மதத்திற்கு சமயம் மாறிச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு சில வழிமுறைகளைக் கையாண்டனர் இரு பிரிவினருமே இஸ்லாமை எதிர்கொண்டு செயலாற்றினர். ஆனால் ஒரு பிரிவினர் இஸ்லாமை பரிவோடு அணுகினர். மற்றொரு பிரிவினரோ பகைமை பாராட்டினர். புதிய சமயப்பிரிவுகளை நிறுவிய கபீர், குருநானக் மற்றும் பிறர் முதல் குழுவைச் சேர்ந்தோராவர். அதே சமயம் வங்காளத்தில் உருவான சைதன்ய தேவா அல்லது சைதன்ய மகாபிரபுவுடன் தொடர்புடைய இயக்கம் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட குணநலனைக் கொண்டிருந்தது.

### அ) பக்தி இயக்கச் சான்றோர்கள்

வடஇந்தியாவில் பக்திச் சிந்தனையை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றியவர் இராமாநந்தர் ஆவார். தெலுங்கு தத்துவஞானியான வல்லபாச்சாரியார், மதுராவுக்கு அருகே கோவர்தன் குன்றுகளில் கிருஷ்ணபகவானுக்கு ஒரு கோவிலை அமைத்தார். கவிஞரும் இசைக்கலைஞரும், பார்வைத்திறன் அற்றவருமான சூர்தாஸ் இக்கோவிலோடும் ஆக்ராவிலுள்ள கோவிலோடும் தொடர்புடையவராவார். அவருடைய புகழ் பெற்ற கவிதைகளின் தொகுப்பு சூர்சாகர் என்றழைக்கப்படுகிறது. மேவார் நாட்டின் பட்டத்து இளவரசரின் மனைவியான மீராபாய் கிருஷ்ணபகவானின் தீவிர பக்தையாவார். அவ்வம்மையார் ரவிதாஸ் என்பவரின் சீடராவார். மீராபாய் அவருடைய பஜன் (பஜனை) பாடல்கள் மூலம் பிரபலமானார். சைதன்யதேவர் தனது பரவசமூட்டும் பாடல்கள், களிப்பூட்டும் நடனங்கள் மூலம் கிருஷ்ண வழிபாட்டைப் பிரபலமாக்கினார். இது வங்கத்தில் வைணவ சமயத்தின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பதினாறாம் நூற்றாண்டில் துளசிதாசர் இந்தி மொழியில் எழுதிய இராமனின் கதையை மீண்டும் சொல்லும் இராமசரிதமானஸ் எனும் நூல் நட்பு, விசுவாசம் ஆகிய உணர்வுகளுக்கு அதிக அழுத்தம் கொடுத்தது. அப்பாடல்களில் பல இரவு முழுவதுமாக நடைபெறும் விழாக்களில் இன்றளவும் தொடர்ந்து பாடப்படுகின்றன.


இராமாநந்தர்


வல்லபாச்சாரியார்


சூர்தாஸ்


மீராபாய்


சைதன்யதேவா


துளசிதாசர்


துக்காராம்


பாண்டு ரங்கா கோவில், பண்டரிபுரம்

பதினேழாம் நூற்றாண்டில் மகாராஷ்டிராவில் வாழ்ந்த துக்காராம் கவிஞரும் திருத்தொண்டருமாவார். விஷ்ணுவின் அவதாரமான விதோபா குறித்து அவர் இயற்றிய ஆன்மீகப் பாடல்களுக்காகவே (அபங்கா அல்லது கீர்த்தனைகள்) அவர் நன்கு அறியப்பட்டிருந்தார். மகாராஷ்டிராவில் சோலாப்பூர் மாவட்டத்திலுள்ள பந்தர்பூர் அல்லது பண்டரிபுரத்தில் விதோபா/பாண்டு ரங்கா கோவில் உள்ளது. வங்காளத்திற்கு சைதன்ய தேவா எவ்விதமோ அதைப்போன்றே மகாராஷ்டிராவுக்கு துக்காராம் விளங்குகிறார்.



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_1.indd 133 9/30/2023 11:01:18 AM

## 3. இந்தியாவில் சூபியிஸம் (Sufism)

சிந்துவை அராபியர் கைப்பற்றிய காலத்தில் சூபியிஸம் இந்தியாவிற்குள் பாதம் பதித்தது. பத்து, மற்றும் பதினொன்றாம் நூற்றாண்டுகளில் டெல்லி சுல்தான்களின் ஆட்சியின்போது அது முக்கியத்துவம் பெற்றது. யோகப்பயிற்சி தோற்ற அமைவுகள், இந்திய இசை, நடனம் ஆகியவற்றையும் சூபியிஸம் கைக்கொண்டது. சூபியிஸத்தை பின்பற்றியோர் இஸ்லாம், இந்து ஆகிய இரு சமயங்களையும் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

சூபியிஸம் சூபி எனும் சொல் 'சுப்' எனும் சொல்லில் இருந்து தோன்றியதாகும். அதன் பொருள் கம்பளி ஆகும். சூபிக்கள் சொர சொரப்பான முரட்டுக் கம்பளியாலான உடைகளை அணிந்ததால் சூபிக்கள் என அழைக்கப்பட்டனர். சூபியிஸம் அடிப்படையில் இஸ்லாமியத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் அதன் மீது இந்து, பௌத்த (மகாயான) சமயக் கருத்துக்களின் தாக்கத்தைப் பெற்றிருந்தது. உலேமாக்களின் கடுமையான ஒழுக்க விதிகளை சூபியிஸம் மறுத்தது. மடாலய வாழ்க்கையை ஒத்த துறவு வாழ்வை மேற்கொண்ட சூபிக்கள் சமுதாயத்திற்கு வெளியே செயல்பட்டனர்.



இடைக்கால இந்தியாவைச் சேர்ந்த சூபிக்கள் மூன்று முக்கிய அமைப்பினராகப் பிரிக்கப்பட்டிருந்தனர். அவை சிஸ்டி, சுரவார்டி, பிர்தௌசி என்பனவாகும். மொய்னுதீன் சிஸ்டி, சிஸ்டி அமைப்பை இந்தியாவில் பிரபலமாக்கினார். அவர் ஆஜ்மீரில் இயற்கை எய்தினார்(1236). அவருடைய நினைவிடம் ராஜஸ்தான் மாநிலத்தில் ஆஜ்மீரில் ஷரிப் தர்கா என்ற இடத்தில் அமைந்துள்ளது. இடைக்காலத்தின் தொடக்கத்தில் நன்கறியப்பட்டிருந்த சிஸ்டி அமைப்பைச் சார்ந்த சூபி, நிஜாமுதீன் அவுலியா என்பவராவார். டெல்லியின் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த எண்ணற்ற நபர்கள் அவரைப் பின்பற்றினர். இதனைப் பின்பற்றிய புகழ்பெற்ற பலருள் கவிஞர் அமீர் குஸ்ருவும் ஒருவர். சுரவார்டி அமைப்பைத் தோற்றுவித்தவர் ஈரானைச் சேர்ந்த சூபியான அப்துல்–வகித் அபு நஜிப் என்பவராவார். பிர்தௌசி அமைப்பு சுரவார்டியின் ஒரு கிளைப் பிரிவாகும். அது பீகாரில் மட்டுமே செயல்பட்டது.

## 4. அ. கபீர்

கபீர், வாராணாசியை இருப்பிடமாகக் கொண்ட இராமாநந்தரின் செல்வாக்கிற்கு ஆட்பட்டார். சில இந்து சமயக் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட அவர் இந்து இஸ்லாம் சமயங்களிடையே ஒத்திசைவை ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டார். இருந்தபோதிலும் அவரின் கருத்துக்கள் இந்து சமூகத்தில் குறிப்பாகக் கீழ்த்தட்டு நிலையில் உள்ள மக்களுக்கு ஏற்புடையதாய் அமைந்தன. பல்வேறு சமயப்பிரிவுகள் கடவுளுக்கு வெவ்வேறு பெயர்களையும் வடிவங்களையும் கொடுத்திருந்தாலும் கடவுள் ஒருவரே என்றும், வடிவமற்றவர் என்றும் கபீர் நம்பினார். சமயம்,




கபீர்



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_1.indd 134 9/30/2023 11:01:18 AM

சாதி, செல்வம் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாடுகளை அவர் கண்டனம் செய்தார். பொருளற்ற சடங்கு முறைகளையும் அவர் கண்டனம் செய்தார். கபீரின் பாடல்கள் போஜ்புரி மொழியோடு உருது மொழி கலந்து எழுதப்பட்டவையாகும் கபீரின் கிரந்தவளி, பைஜக் ஆகிய நூல்கள் அவருடைய கவிதைகளின் தொகுப்புகளாகும்.

### ஆ. குருநானக்

**தொடக்ககால வாழ்க்கை:** 1469 இல் லாகூருக்கு அருகே ஒரு கிராமத்தில் பிறந்த குருநானக், குழந்தைப் பருவத்திலேயே ஏனைய சான்றோர்களிடம் சமயம் தொடர்பான கலந்துரையாடல்கள் செய்வதில் ஆர்வம் காட்டினார். அவருடைய பெற்றோர்கள் அவரை இயல்பான உலகவாழ்க்கையில் ஈடுபடுத்துவதில் அக்கறை கொண்டனர். ஆனால் அவரோ ஆன்மீகத்தின் மீது மனச்சாய்வு கொண்டிருந்தார். பல புனிதத்தலங்களுக்குச் சென்று வந்த அவர் இறுதியில் லாகூருக்கருகே கர்தார்பூரில் குடியேறினார். அங்கேயே அவர் 1539 இல் இயற்கை எய்தினார். அவருடைய 550வது பிறந்தநாளைச் சிறப்பிக்கும் வகையில் இந்திய அரசு நடைபாதை ஒன்றைக் கட்டியுள்ளது. அந்நடைபாதை குர்தாஸ்பூரிலுள்ள நானக் கோவில், பாகிஸ்தானின் கர்தார்பூரில் உள்ள குருத்வாரா தர்பார் சாகிப் இரண்டையும் இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.



குருநானக்



குருத்வாரா தர்பார் சாகிப், கர்தார்பூர்

**குருநானக்கின் போதனைகள்:** கடவுள் வடிவமற்றவர் என குருநானக் போதித்தார். தன்னைப் பின்பற்றுவோர் அமைதிக்காகவும், வீடுபேற்றிற்காகவும் கடவுளை நினைந்து தியானம் செய்யும்படி கூறினார். அவர் சீக்கியர்களின் முதல் குருவாகக் கருதப்படுகிறார். வேதச்சடங்குகள் சாதிப்பாகுபாடுகள் ஆகியவை மீது அவர் பெரும் வெறுப்புக் கொண்டிருந்தார். குருநானக்கின் போதனைகளே பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிறுவப்பட்ட சீக்கிய மதத்தின் மூலக்கோட்பாடாக அமைந்தது. குருநானக், அவருக்குப் பின்வந்தோர் ஆகியோரின் போதனைகள் தொகுக்கப்பட்டு குரு கிரந்த் சாகிப் என்றழைக்கப்பட்டது. அதுவே சீக்கியர்களின் புனித நூலாகும். கீர்த்தன் எனப்படும் பாடல்கள் பாடும் இசைக்குழுக்கள் மூலமாக குருநானக்கின் போதனைகள் பரப்புரை செய்யப்பட்டன. இவருடைய பக்தர்கள் தர்மசாலைகள் எனப்படும் ஓய்வு விடுதிகளில் ஒன்று கூடினர். இவைகளே காலப்போக்கில் குருத்வாராக்கள் ஆயின.

குருநானக் லேனா என்ற தனது சீடரைத் தனக்குப் பின்னரான குருவாக நியமித்தார். இந்த முன் உதாரணத்தைப் பின்பற்றி ஒவ்வொரு சீக்கிய குருவும் தங்களுக்கு அடுத்த குருவை நியமித்தனர். குரு கோவிந் சிங் காலத்தில் பாகல் எனப்படும் திருமுழுக்கு (குறு வாளால் கிளறப்பட்ட இனிப்பான நீரைக் கொடுத்தல்) செய்யும்முறை அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வாறு திருமுழுக்கு பெற்றவர்கள் கால்சா (தூய்மை) எனப்பட்ட முறைப்படுத்தப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட சகோதரத்துவ அமைப்பின் உறுப்பினராயினர். இவர்களுக்கு சிங் (சிங்கம்) என்ற பட்டமும் வழங்கப்பட்டது. கால்சாவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஐந்து தனித்தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும். அவை கேஷ் (வெட்டப்படாத முடி), கன்கா (சிகைக்கோல்), கிர்பான் (குறுவாள்), கடா (இரும்புக் காப்பு), கச்சேரா (உடலின் கீழ்ப்பகுதியில் அணியும் உள்ளாடை) ஆகியனவாகும். குரு கோவிந் சிங்கிற்குப் பின்னர் புனித நூலான குரு கிரந்த் சாகிப் குருவாகக் கருதப்பட்டது. அதன் கருத்துக்களை கால்சா அமைப்பு பரப்பியது.

## 5. சமயங்களின் / பக்தி இயக்கத்தின் தாக்கம்

- இஸ்லாமியத் தத்துவக்கூறுகளான கடவுள் ஒருமைப்பாடு, உலக சகோதரத்துவம் போன்றவை பக்தி இயக்கச் சான்றோர்களால் வலியுறுத்தப்பட்டு அமைதியும், இணக்கமும் வளர்ந்தன.
- பக்தி இயக்கம் சாமானிய மக்களின் இயக்கமாகும். அவ்வியக்கம் தனது பக்தி இலக்கியங்களை எழுத அம்மக்களின் மொழியையேப் பயன்படுத்தியது.
- இந்திய மொழிகள் வளர்வதற்கான இடத்தை பக்தி இயக்கம் ஏற்படுத்திக் கொடுத்தது. பிராந்திய மொழிகளில் இலக்கியச் செயல்பாடுகளுக்கு அது உந்து சக்தியாக அமைந்தது.
- சரிவைச் சந்தித்துக் கொண்டிருந்த சமஸ்கிருத மொழி இந்து அரசுகளின் அரசர்கள் நல்கிய ஆதரவால் தக்க வைக்கப்பட்டது.
- இக்காலப் பகுதியில் உயிர் துடிப்புடன் விளங்கிய ஒரே பழமையான மொழி தமிழ் மட்டுமே. ஆனால் தமிழ் இலக்கியத்தின் பொதுப்பண்பு இடைக்காலத்தில் மாறிவிட்டது. செவ்வியல் காலத்தில் அன்றாட வாழ்க்கையையும் அதன் இன்ப துன்பங்களையும் தமிழ் இலக்கியம் சித்தரித்து வந்தது. ஆனால் பக்தி இயக்கக் கோட்பாடுகளின் தாக்கத்தின் விளைவாய் அது சமயங்களுக்கும் சமய இலக்கியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியது.
- சாதி முறையும் சமூக ஏற்றதாழ்வுகளும் விமர்சனங்களுக்கு உள்ளாயின.

### சுருக்கம்

- பக்தி இயக்கம் விளக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஆழ்வார்களும் அவர்களைத் தொடர்ந்து நாயன்மார்களும் மேற்கொண்ட முன்னெடுப்புகள் விவரிக்கப்பட்டுள்ளன.
- ஆதிசங்கரரின் அத்வைத தத்துவமும் இராமானுஜரின் விசிஷ்டாத்வைதமும் விளக்கப்பட்டுள்ளன.
- திருத்தொண்டர்களின் பக்திப் பாதைகள் பற்றி, குறிப்பாக வட இந்தியாவில் துளசிதாசர், மீராபாய் வங்காளத்தில் சைதன்யதேவா ஆகியோரின் பக்தி மார்க்கங்கள் திறனாய்வு செய்யப்பட்டுள்ளன.
- இஸ்லாம், இந்துமதம் ஆகிய இரண்டும் ஒன்றின்மேல் மற்றொன்று ஏற்படுத்திய தாக்கமும் சூபியிஸம், சீக்கியமதம், அறிவுநிலை கடந்த இந்துமதம் ஆகியனவும் சுருக்கமாக விவாதிக்கப்பட்டுள்ளன.



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_1.indd 136 9/30/2023 11:01:19 AM

❖ முற்போக்குத்தன்மை கொண்ட பக்தி இயக்கம்: கபீர், குருநானக் ஆகியோரின் பங்களிப்பு விவரிக்கப்பட்டுள்ளது

❖ பக்தி இயக்கத்தின் இன்றியமையாதத் தனிச்சிறப்புகள் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

❖ இடைக்கால இந்தியச் சமூகத்தின் மீது பக்தி இயக்கம் கொண்டிருந்த தாக்கம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

## மூலாதார நூல்கள்


1. R. Champakalakshmi, *Religion, Tradition and Ideology in Pre-Colonial South India,* Oxford University Press, 2011.
2. Burton Stein, *A History of India,* Oxford University Press, 2004.
3. Abraham Eraly, *Emperors of the Peacock Throne*, Penguin, 1997.
4. https://www.britannica.com.


## கலைச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | நிவர்த்தி, விமோசனம் | salvation | a way of being saved from danger, loss or harm |
| 2. | எங்கும் நிறைந்திருக்கின்ற | omnipresent | present everywhere at the same time |
| 3. | அவதாரம் | incarnation | a living being embodying a deity or spirit |
| 4. | விரோதமாக, பகைமையுள்ள | hostile | showing enmity or dislike, unfriendly |
| 5. | முக்கியத்துவம் | prominence | importance |
| 6. | ஆதரவாளர், பின்பற்றுபவர் | adherent | supporter (of a person, cause or belief) |
| 7. | கடுமையான, கெடுபிடியான | stringent | severe, harsh |
| 8. | இஸ்லாமியப் பேரறிஞர் | ulema | Islamic scholar trained in Islamic law |
| 9. | ஆசிரமம், துறவி வாழிடம் | hermitage | the dwelling of persons living in seclusion |
| 10. | ஒத்த இயல்புடைய | akin | similar |
| 11. | குத்துவாள், குறுவாள் | dagger | short, pointed knife that is sharp on both sides |
| 12. | சித்தரிக்கும், விவரமாக விளக்கும் | depicting | showing, portraying |
| 13. | வேறுபாடு, சமமற்ற | disparity | a great difference, the state of being unequal |

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

1. கீழ்க்காண்பவருள் யார் தன்னை தாய் யசோதாவாக பாவித்துக் கொண்டு கிருஷ்ணனின் மேல் பாடல்களைப் புனைந்துள்ளார்?

   அ) பொய்கையாழ்வார் ஆ) பெரியாழ்வார்
   இ) நம்மாழ்வார் ஈ) ஆண்டாள்

2. *அத்வைதம்* எனும் தத்துவத்தை போதித்தவர் யார்?

   அ) இராமானுஜர் ஆ) இராமாநந்தர்
   இ) நம்மாழ்வார் ஈ) ஆதி சங்கரர்

3. பக்திச் சிந்தனையை ஒரு மக்கள் இயக்கமாக வட இந்தியாவில் பரவச் செய்தவர் யார்?

   அ) வல்லபாச்சாரியார் ஆ) இராமானுஜர்
   இ) இராமாநந்தர் ஈ) சூர்தாஸ்

4. *சிஸ்டி* அமைப்பை இந்தியாவில் பிரபலமாக்கியவர் யார்?

   அ) மொய்னுதீன் சிஸ்டி ஆ) சுரவார்டி
   இ) அமீர் குஸ்ரு ஈ) நிஜாமுதின் அவுலியா

5. சீக்கியர்கள் தங்களின் முதல் குரு என யாரைக் கருதுகின்றனர்?

   அ) லேனா ஆ) குரு அமீர் சிங்
   இ) குரு நானக் ஈ) குரு கோவிந் சிங்

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. பெரியாழ்வாரின் தொடக்ககாலப் பெயர் _______________
2. சீக்கியர்களின் புனிதநூல் _______________ ஆகும்.
3. மீராபாய் _______________ என்பாரின் சீடராவார்
4. _______________ என்பாரின் தத்துவம் விசிஷ்டாத்வைதம் என அறியப்படுகிறது
5. தர்பார் சாகிப் குருத்வாரா பாகிஸ்தானின் _______________ என்ற இடத்தில் அமைந்துள்ளது.

### III. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. *பாகல்* | – | கபீர் |
| 2. *இராமசரிதமானஸ்* | – | இராமானுஜர் |
| 3. *ஸ்ரீவைஷ்ணவம்* | – | அப்துல் வகித் அபுநஜிப் |
| 4. *கிரந்தவளி* | – | குரு கோவிந் சிங் |
| 5. *சுரவார்டி* | – | துளசிதாசர் |

### IV. 1. சரியான இணையைத் / இணைகளைத் தேர்ந்தெடுக்கவும்

| | | |
|---|---|---|
| 1. ஆண்டாள் | – | திருவில்லிபுத்தூர் |
| 2. துக்காராம் | – | வங்காளம் |
| 3. சைதன்யதேவா | – | மகாராஷ்டிரா |
| 4. *பிரம்ம சூத்திரம்* | – | வல்லபாச்சாரியார் |
| 5. குருத்வாராக்கள் | – | சீக்கியர்கள் |

2. **கூற்று:** குரு கோவிந் சிங்கிற்குப் பின்னர் புனித நூலான *குரு கிரந்த் சாகிப்* குருவாகக் கருதப்பட்டது.

   **காரணம்:** குரு கிரந்த் சாகிப் நூலைத் தொகுத்தவர் குரு கோவிந் சிங்.

   அ) காரணம், கூற்றின் சரியான விளக்கமல்ல.
   ஆ) காரணம், கூற்றை சரியாக விளக்குகிறது.
   இ) கூற்று சரி, காரணம் தவறு.
   ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

3. பொருந்தாததைக் கண்டுபிடி.

   பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார். பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார்.

## V. சரியா? தவறா? காண்

1. இஸ்லாமியப் பண்பாடு பரவ சூபியிஸம் காரணமாயிற்று.
2. இடைக்காலத்தின் தொடக்கத்தில் நன்கறியப்பட்டிருந்த சிஸ்டி அமைப்பைச் சார்ந்த சூபி, நிஜாமுதீன் அவுலியா என்பவராவார்.
3. குருநானக், சீக்கியர்களின் முதல் குருவாகக் கருதப்படுகிறார்.
4. கடவுளை உய்த்துணர உணர்சிகரமான பக்தியும் தீவிர தியானமுமே சாத்தியம் என சூபிக்கள் நம்பினர்.
5. அடிப்படை தமிழ் சைவப் புனித நூல்கள் 12 ஆகும்.

## VI. குறுகிய விடையளி

1. திருமுறை பற்றி நீவிர் அறிவது என்ன?
2. நாயன்மார்கள் மொத்தம் எத்தனைபேர்? அவர்களில் முக்கியமானோர் யாவர்?
3. சீக்கிய மதத்தைத் தோற்றுவிக்க குருநானக் எவ்விதம் உதவினார்?
4. பண்டரிபுரம் விதோபா கோவிலுக்கு, துக்காராம் எவ்விதம் பணியாற்றினார்?
5. கபீரின் சமயக்கருத்துக்கள் கீழ்நிலை சாதிகளைச் சார்ந்தோருக்கு ஏற்புடையதாயிற்று என்பதை முன்னிலைப்படுத்து.

## VII. விரிவான விடையளி

1. தென்னிந்திய மற்றும் வட இந்தியப் பகுதிகளில் பக்தி இயக்கத்திற்கு சான்றோர் பலரது பங்களிப்பினைப் பற்றிக் கூறு.
2. சூபியிஸம் என்றால் என்ன? அது இந்தியாவில் எவ்விதம் தடம் பதித்தது?
3. இந்திய சமூகத்தில் பக்தி இயக்கம் எவ்விதத் தாக்கத்தை ஏற்படுத்தியது?

## VIII. செயல்பாடு

தமிழகத்தின் பக்தி இயக்கப் பெரியோர் வாழ்ந்த பகுதிகள் மற்றும் அவர்களோடு தொடர்புடைய பகுதிகளுக்கு நேரில் செல்க.

*அலகு – 2*

# தமிழ்நாட்டில் கலையும் கட்டடக் கலையும்



## கற்றல் நோக்கங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை குறித்த அறிவினைப் பெறுதல்

- ❖ தென்னிந்தியாவில் கோவில் கட்டடக் கலையின் பரிணாம வர்ச்சியைப் புரிந்துகொள்வது
- ❖ தமிழர்களின் பண்பாட்டுப் பாரம்பரியம் குறித்த அறிவினைப் பெறுதல்
- ❖ தமிழ்நாட்டில் கோவில் கலையின் வளர்ச்சிக்கு பல்லவ, சோழ, விஜயநகர, நாயக்க அரசர்கள் வழங்கிய பங்களிப்பினை அறிந்துகொள்ளுதல்

## அறிமுகம்

திராவிடக் கட்டடக்கலை நம்மண்ணில் பிறந்ததாகும். காலப் போக்கில் பரிணாமச் செயல்பாட்டின் வழியாய் அக்கலை மேம்பாடு அடைந்தது. தமிழ் திராவிடக் கட்டடக் கலையின் மரபிற்கு மகாபலிபுரத்திலுள்ள கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த குடைவரைக் கோவில்களே (குகைக்கோவில்கள்) எடுத்துக்காட்டுகள் ஆகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முந்தைய நினைவுச்சின்னங்கள் தென்னிந்தியாவில் கிடைக்கப்பெறவில்லை. அதற்கு முந்தைய கோவில்கள் மரத்தால் கட்டப்பட்டிருக்க வேண்டுமெனவும் அதன் காரணமாக அவை இயற்கை சக்திகளால் அழிவுக்கு உள்ளாகி இருக்கலாமெனவும் அறிஞர்கள் கருதுகின்றனர். தமிழ்நாட்டில் கோவில் கட்டடக்கலையின் பரிணாம வளர்ச்சி ஐந்து கட்டங்களாக நடைபெற்றுள்ளது. அவை: 1. பல்லவர் கட்டடக்கலை வளர்ச்சிக் காலம் (கி.பி 600 – 850), 2. முற்காலச் சோழர் கட்டடக்கலை வளர்ச்சிக் காலம் (கி.பி 850 - 1100), 3. பிற்காலச் சோழர் கட்டடக்கலை வளர்ச்சிக் காலம் (கி. பி. 1100 -1350), 4. விஜயநகர/நாயக்கர் கட்டடக்கலை வளர்ச்சிக் காலம் (கி.பி.1350-1600), 5. நவீன கட்டடக்கலை வளர்ச்சிக் காலம் (கி.பி.1600க்கு பின்னர்).

## பல்லவர் காலம்

பல்லவர் காலத்தில் கோவில் கட்டடக் கலை குடைவரைக் கோவில்கள் எனும் நிலையிலிருந்து கட்டுமானக் கோவில்கள் எனும் மாற்றத்திற்கு உள்ளானது. குடைவரைக் கோவில்கள் நிர்மாணிக்கும்போது முதலில் ஒரு மலையின்



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_2.indd 140 9/30/2023 11:07:54 AM

பாறைப் பரப்பிலிருந்து தேவைப்படும் வடிவத்தில் ஒரு பகுதி வெட்டப்படும். தனியொரு பாறையாக பிரிக்கப்படும். பின்னர் அப்பாறை செதுக்கப்பட்டும், குடையப்பட்டும் கோவிலாக வடிவமைக்கப்படும். குடைவரைக் கட்டடக் கலைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் பல்லவ அரசர் மகேந்திரவர்மன் ஆவார்.



குடைவரைக் கோவில், மண்டகப்பட்டு

மண்டகப்பட்டிலுள்ள குடைவரைக் கோவில் அவர் உருவாக்கிய முதல் குடைவரைக் கோவிலாகும். இக்கோவிலின் முன்புறம் அமைந்துள்ள இரண்டு தூண்கள் அக்கோவிலைத் தாங்கி நிற்கும். கோவில்கள் அனைத்திலும் பின்புறச் சுவற்றில் செதுக்கப்பட்ட ஒரு கருவறையையும் அதற்கு முன்பாக ஒரு முன்னோக்கிய மண்டபத்தையும் இக்கோவில்கள் கொண்டுள்ளது. மண்டபத்தின் இரு பக்கங்களிலும் துவாரபாலகர்கள் (வாயிற் காப்போர்) சிலைகள் இடம் பெற்றுள்ளன. குடைவரைக் கோவில்கள் அமைக்கும் முறை கி.பி.700 க்குப் பின்னர் மறைந்து பெரிய வடிவிலான கட்டுமானக் கோவில்கள் கட்டப்படுவதற்கு வழிவிட்டது. சிற்பிகள் தங்கள் திறமைகள் அனைத்தையும் பயன்படுத்தி கல்லிலே கலைவண்ணம் காண, கட்டுமானக் கோவில்கள் அதிக வாய்ப்பினைக் கொடுத்தது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

ஏழு கோவில்கள் எனவும் அழைக்கப்படும், மகாபலிபுரத்தில் அமைந்துள்ள கடற்கரைக் கோவில்கள் பல்லவ அரசர் இரண்டாம் நரசிம்மவர்மனால் எழுப்பப்பட்டவை ஆகும். அவை தென்னிந்தியாவின் மிகப்பழமையான கட்டுமானக் கோவில்களாகும். ஒரே பாறையில் ஒரு கோவிலை அமைக்கும் பழைய முறைப்படி இல்லாமல் கட்டுமானக் கோவில்கள் பாறைப் பாளங்களைக் கொண்டு கட்டப்பட்டன. ராஜசிம்மன் என்றும் அறியப்பட்ட பல்லவ மன்னன் இரண்டாம் நரசிம்மவர்மன் காஞ்சி கைலாசநாதர் கோவிலைக் கட்டுவித்தார். காஞ்சிபுரத்திலுள்ள வைகுந்தப் பெருமாள் கோவில் இரண்டாம் நந்திவர்மனால் கட்டப்பட்டது. மகாபலிபுரத்திலுள்ள ஏழு கோவில் குடைவரைக் கோவில்களாக அமைக்கப்படாமல், வெட்டியெடுக்கப்பட்ட கற்களைக்கொண்டு கட்டப்பட்டது. இக்கோவிலில் இரு கருவறைகள் உள்ளன.



காஞ்சி கைலாசநாதர் கோவில்



காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவில்



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_2.indd 141 9/30/2023 11:07:55 AM

ஒன்று சிவபெருமானுக்கும் மற்றொன்று விஷ்ணுவுக்கும் படைத்தளிக்கப்பட்டுள்ளது.

தமிழ் திராவிட கோவில் கட்டடக் கலை மரபிற்கு மகாபலிபுரத்திலுள்ள ஒற்றைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள பஞ்ச பாண்டவ இரதங்கள் என்றழைக்கப்படும் திரௌபதி இரதம், தர்மராஜா இரதம், பீமரதம், அர்ச்சுன இரதம், நகுல சகாதேவ இரதம் ஆகியன சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன. இரதங்களில் குறிப்பாக அர்ச்சுன, பீம, தர்மராஜா இரதங்களின் வெளிப்பக்கச் சுவர்கள் மாடக் குழிகளாலும் பூவணி வேலைப்பாடுகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன. மாடக்குழிகள் ஆண், பெண் தெய்வங்கள், அரசர்கள் ஆகியோரின் சிற்பங்களையும் புராணக் காட்சிகளைச் சித்தரிக்கும் சிற்பங்களையும் கொண்டுள்ளன. மிகப்பெரும் கருங்கல் பாறையின் மீது புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ள அர்ச்சுனன் தவமிருக்கும் காட்சி பிரமாண்டமான கலைப் படைப்பாகும். இக்கருங்கல் பாறை ஏறத்தாழ 100 அடி நீளமும் 45 அடி உயரமும் கொண்டதாகும்.



அர்ச்சுனன் தவம்

1984இல் கடற்கரைக் கோவில் வளாகம் உட்பட மாமல்லபுரத்திலுள்ள நினைவுச் சின்னங்களும் கோவில்களும் மொத்தமாக உலகப் பாரம்பரிய இடமென யுனெஸ்கோவால் (UNESCO) அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## பல்லவர் காலத்துப் பாண்டியர் கோவில்கள்

முற்காலப் பாண்டியர்கள் பல்லவர்களின் சம காலத்தவராவர். பல்லவர்களைப் போலல்லாமல் பாண்டியர்கள் தங்கள் குடைவரைக் கோவில்களின் கருவறையில் கடவுளர்களின் சிலைகளை நிறுவினர். பாண்டியப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட குகைக் கோவில்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவைகளில் மிக முக்கியமானவை மலையடிக்குறிச்சி, ஆனைமலை, திருப்பரங்குன்றம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் காணக்கிடைக்கின்றன. இக்குகைக் கோவில்கள் சிவன் விஷ்ணு பிரம்மா ஆகிய கடவுளர்களுக்குப் படைத்தளிக்கப்பட்டுள்ளன. பாண்டியர் காலத்துச் சிவன் கோவில்களின் லிங்கங்கள் மற்றும் நந்தி உருவங்கள் தாய்ப்பாறையிலிருந்தே செதுக்கப்பட்டதாகும். சிவலிங்கமானது கருவறையின் மையத்தில், சுற்றிலும் போதுமான இடம் விடப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. கருவறையில் உபயோகித்த நீர் வெளியே செல்ல கால்வாயும் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோவில்களில் உள்ள தூண்கள் வெவ்வேறு அளவுகளைக் கொண்ட மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தூண்களில் இடம் பெற்றுள்ள அலங்கார வேலைப்பாடுகளும் ஒரே மாதிரியாக இல்லை. சுவர்களின் வெளிப்பகுதி நான்கு மாடக் குழிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சிவன், விஷ்ணு, துர்கை, கணபதி, சுப்பிரணியன், சூரியன், பிரம்மா, சரஸ்வதி ஆகிய கடவுளர்களின் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. கருவறையின் இருபுறத்திலும் துவாரபாலகர் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_2.indd 142 9/30/2023 11:07:56 AM

பாறை குடைவரைக் கோவில்களும் கட்டுமானக் கேவில்களும் பாண்டியர் கட்டடக் கலையின் சிறப்புமிக்க அம்சங்களாகும். ஒற்றைக்கல்லில் செதுக்கப்பட்ட கோவிலுக்கு, மிகச் சிறந்த எடுத்துக்காட்டு கழுகுமலையில் உள்ள முற்றுப்பெறாத வெட்டுவான் கோவிலாகும்.



ஒற்றைக்கல் கோவில், கழுகுமலை



நெல்லையப்பர் கோவில் பிரகாரம், திருநெல்வேலி

கழுகுமலையில் அமைந்துள்ள ஒற்றைக்கல் கோவில் ஒரு பெரும் பாறையின் நான்கு புறங்களிலிருந்தும் செதுக்கி அமைக்கப்பட்டதாகும். கோவிலின் உச்சியில் உமா மகேஸ்வரர், தட்சிணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா ஆகியோரின் சிற்பங்கள் காணப்படுகின்றன. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலும் திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலும் பாண்டியர் கட்டடக்கலைப் பாணியைப் பறைசாற்றும் எடுத்துக்காட்டுகளாகும்.

### சிற்பங்கள்

குடைவரைக் கோவில்களின் குகை சுவர்களில் கடவுள் சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. கட்டுமானக் கோவில்களைப் பொருத்தமட்டிலும் கருவறையின் சுவர்களில் அலங்கார வேலைப்பாடுகள் காணப்படவில்லை. மாறாகக் கருவறையின் மேலுள்ள கட்டுமானங்களிலும் தூண்களிலும் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இச்சிற்பங்கள் கம்பீரமாகவும், அகன்ற தோள்களோடும் ஒடிசலான உடல்வாகுடனும் அழகான ஆபரணங்களோடும் உயரமான கிரீடங்களோடும் காட்சியளிக்கின்றன.



வெட்டுவான் கோவில் சிற்பங்கள்

திருப்பரங்குன்றம், ஆனைமலை, கழுகுமலை, ஆகிய இடங்களிலுள்ள குடைவரைக் கோவில்களில் சிவன், விஷ்ணு, பிரம்மன், பார்வதி, சுப்பிரமணியன், கணபதி, தட்சிணாமூர்த்தி ஆகிய கடவுளர்களின் புடைப்புச் சிற்பங்கள் குறிப்பிடத்தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ளன. மதுரை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட, முற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த சிலைகள் தற்போது மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_2.indd 143 9/30/2023 11:07:56 AM

## ஓவியங்கள்

புதுக்கோட்டையிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள சித்தன்னவாசலிலும் திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டத்தைச் சேர்ந்த திருமலைபுரத்திலும் முற்காலப் பாண்டியர்களின் உன்னதமான ஓவியங்கள் உள்ளன. சித்தன்னவாசல் சமணத்துறவிகள் வாழ்ந்த குகையாகும். அவர்கள் குகைச் சுவர்களில் சாந்துபூசி, ஈரம் காய்வதற்கு முன்னரே ஓவியங்களைத் தீட்டியுள்ளனர். கெடுபயனாக அப்படியான ஓவியங்களில் பலவற்றை நாம் இழந்துவிட்டோம், இருப்பனவற்றுள் தாமரைத் தடாக ஓவியம் அதன் மிகச் சிறந்த வர்ணங்களின் பயன்பாட்டிற்கும் காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ள நேர்த்திக்காகவும் புகழ்பெற்றதாகும். தாமரை மலர்கள், குளமெங்கும் நீரில் பரவிக்கிடக்கும் இலைகள், குளத்தில் காணப்படும் யானை, எருமை, அன்னப்பறவை மற்றும் பூக்களைப்பறிக்கும் ஒரு மனிதன் என விரியும் அவ்வோவியக் காட்சி மனங்களைக் கொள்ளை கொள்வதாய் சிறப்பாக அமைந்துள்ளது.



சித்தன்னவாசல் ஓவியங்கள்

சித்தன்னவாசல் ஓவியங்கள் அஜந்தா ஓவியங்களுடன் சில ஒப்புமைகளைப் பெற்றுள்ளன. திருமலைபுரத்தில் கிடைத்துள்ள முற்காலப் பாண்டியர் ஓவியங்கள் சேதமடைந்த நிலையிலுள்ளன.



திருமலைபுரம் சிற்பங்கள்

## முற்காலச் சோழர்கள் காலம்

கி.பி.850 இல் விஜயாலய சோழன் காலத்தில் முக்கியத்துவம் பெறத்துவங்கிய சோழர்கள் தொடர்ந்து அப்பகுதியில் நானூறு ஆண்டு காலம் ஆட்சி புரிந்தனர். முற்காலச் சோழர்களின் கோவில் கட்டடக்கலைக்கு தமிழ்நாட்டில் திண்டிவனத்திற்கு அருகேயுள்ள தாதாபுரத்திலுள்ள கோவிலைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.



திருப்புறம்பியம் கோவில்

முற்காலச் சோழர்களின் கோவில் கட்டக்கலை செம்பியன் மாதேவி பாணியைப் பின்பற்றி அமைந்ததாகும். கோவில்களில்



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_2.indd 144 9/30/2023 11:07:57 AM

அதிக எண்ணிக்கையில் தேவகோஷ்டங்கள் (மாடக் குழிகள்) இருந்தால் அதை செம்பியன் மாதேவி பாணி என வகைப்படுத்தலாம். செம்பியன் மாதேவிவியால் மறுவடிவாக்கம் செய்யப்பட்ட முற்காலக் கோவில்களுக்குத் திருப்புறம்பியத்திலுள்ள கோவில் ஓர் எடுத்துக்காட்டாகும்.

### பிற்காலச் சோழர்கள் காலம்

தஞ்சாவூர் மற்றும் கங்கைகொண்ட சோழபுரத்தில் அமைந்துள்ள இரண்டு உன்னதமான கோவில்கள் சோழர்களின் கட்டடக் கலை முதிர்ச்சியைப் பிரதிபலிக்கின்றன. ஏறத்தாழ கி.பி.1009இல் கட்டிமுடிக்கப்பட்ட தஞ்சாவூரிலுள்ள சிவன் கோவில் ராஜாராஜன் காலத்து செல்வப் பெருக்கச் சாதனைகளுக்குப் பொருத்தமான நினைவுச் சின்னமாகும்.



தஞ்சாவூர் பெரிய கோவில் (பிரகதீஸ்வரர் கோவில்)



கங்கைகொண்ட சோழபுரம் கோவில்

### தஞ்சாவூர் பெரிய கோவில்

தஞ்சாவூர் பெரிய கோவில் அது கட்டப்பட்டபோது ஒரு பெரிய கோவில் வளாகமாக இருந்தது. அதன் *விமானம்* (கர்ப்பகிரகத்தின் மேலுள்ள கட்டுமானம்) 216 அடிகள் உயரம் கொண்டதாகும். உலகத்தில் மனிதனால் கட்டப்பட்ட மிக உயரமான சிகரங்களில் அதுவும் ஒன்று என்பதால் அது குறிப்பிடத் தகுந்ததாக உள்ளது. மிகவும் உயரமாக அமைந்திருப்பதால் அதன் சிகரம் தட்சிண மேரு என்றழைக்கப்படுகிறது. இங்குள்ள 16 அடி நீளமும் 13 அடி உயரமும் கொண்ட மிகப்பெரும் நந்தியின் சிலை ஒரே பாறையில் செதுக்கப்பட்டதாகும்.

### கங்கைகொண்ட சோழபுரம்

சோழர்கள் வீழ்ச்சியடைந்து, பாண்டியர்கள் எழுச்சி பெறும்வரை சுமார் 250 ஆண்டுகள் கங்கைகொண்ட சோழபுரமே சோழர்களின் தலைநகராக விளங்கிற்று. ராஜேந்திரசோழனால் கங்கைகொண்ட சோழபுரத்தில் எழுப்பப்பட்ட பிரகதீஸ்வரர் கோவில் ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலின் வழித் தோன்றலாகும். இக்கோவிலின் உயரம் 55 மீட்டராகும். இக்கோவிலின் கருவறை தஞ்சாவூர் பெரிய கோவிலின் கருவறையைப் போலவே இரண்டு அடுக்குகளைக் கொண்டுள்ளது. வெளிச்சுவர்களின் மூன்று பக்கங்களிலும் சற்றே முன்புறம் நீண்ட மாடக் குழிகளும் இடையில் உள்ளொடுங்கிய பகுதிகளும் இடம் பெற்றுள்ளன. மாடக்குழிகளில் சிவன், விஷ்ணு, ஏனைய, கடவுளர்களின் வடிவங்கள் இடம் பெற்றுள்ளன. இக்கோவில் வளாகத்தில் சண்டிகேஸ்வரர், கணேசன், மகிஷாசுரமர்த்தினி ஆகியோருக்கான சன்னதிகள் உள்ளன.



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_2.indd 145 9/30/2023 11:07:58 AM

## தாராசுரம்

கும்பகோணத்திற்கு அருகேயுள்ள தாராசுரத்தில் பிற்காலச் சோழர்களின் கோவில் உள்ளது. பேரழகுமிக்க கட்டடக்கலைக் கூறுகளைக் கொண்ட இக்கோவில் ஐராவதீஸ்வரருக்கு (இந்திரனின் யானை வழிப்பட்ட கடவுள்) படைத்தளிக்கப்பட்டதாகும். சோழ அரசன் இரண்டாம் ராஜராஜன் இக்கோவிலைக் கட்டுவித்தார். இக்கோவில் சோழர்களின் கட்டடக் கலைக்கு மற்றுமொரு சிறந்த அடையாளமாகும். கோவிலின் மகாமண்டபம் வடிவத்தில் பெரியதாக உள்ளது. இக்கோவிலின் ஒட்டுமொத்த வடிவம் ஒரு தேர்போலக் காட்சியளிக்கிறது. ஏனெனில் மகாமண்டபத்தின் கீழ்ப்பகுதியில் நான்கு சக்கரங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கருவறையிலும் தூண்களிலும் புராண இதிகாசக் கதாபாத்திரங்கள் சிற்றுருவங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோவிலைச் சுற்றி கோபுரத்துடன் கூடிய சுற்றுச் சுவர் உள்ளது.



ஐராவதீஸ்வரர் கோவில்

## பிற்காலப் பாண்டியர்கள்

தென்னிந்தியக் கலைக்கு பிற்காலப் பாண்டியர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தகுந்ததாகும். அதற்குச் சிறந்த சான்றாக 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, பிள்ளையார்பட்டியிலுள்ள (தமிழ்நாட்டின் காரைக்குடிக்கு அருகே) குடைவரைக் கோவிலாகும். இங்குள்ள சிற்பங்கள், கல்வெட்டுகள் ஆகிய இரண்டிற்காகவும் இக்கோவில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. நுழைவாயிலைப் பார்த்தவண்ணம் அழகான கணேசனின் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. தேசிவிநாயகம் என குகைக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இச்சிற்பத்தின் சிறப்பு யாதெனில் இரண்டு கைகளைக் கொண்டுள்ள கணபதியின் தும்பிக்கை வலதுபுறமாகத் திரும்பியுள்ளது.



பிள்ளையார்பட்டி கோவிலும்
கற்பக விநாயகரும்

## விஜயநகர காலம்

விஜயநகர அரசர்களின் ஆட்சிக்காலத்தில் ஒரு புதிய வடிவிலான கட்டடம் கட்டும் முறை உருவானது. கோவில்களில் மண்டபங்கள் கட்டப்பட்டன. ஒவ்வொரு ஆண்டும் கடவுளர்களின் திருவுருவச் சிலைகள் மண்டபங்களில் காட்சிப்படுத்தப்பட்டன. கோவிலுக்கு வெளிப்புறத்தில் கட்டப்பட்ட தூண்களுடன் கூடிய இம்மண்டபங்கள் பொது நிகழ்ச்சிகளுக்காக உருவாக்கப்பட்டவையாகும். கோவிலுக்கு கிழக்கே பொதுமக்கள் கூடுவதற்காகக் கட்டப்பட்ட இம்மண்டபங்கள் பொற்குடத்திற்கு பொட்டு வைத்தாற்போல் கோவிலுக்கு மேலும் அழகு சேர்த்தன. மண்டபத்திலுள்ள ஒற்றைக்கல் தூண்கள் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்துள்ளன. இத்தூண்களில்



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_2.indd 146 9/30/2023 11:07:58 AM

குதிரைகள், சிங்கங்கள் மற்றும் கடவுளர்களின் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவில், வேலூரிலுள்ள ஜலகண்டேஸ்வரர் கோவில் ஆகியவற்றிலுள்ள கல்யாண மண்டபங்கள் குறிப்பிடத்தகுந்த எடுத்துக்காட்டுகள் ஆகும். இம்மண்டபங்களுள் மிகவும் புகழ்பெற்றது மதுரை கோவிலில் அமைந்துள்ள புதுமண்டபமாகும்.



ஜலகண்டேஸ்வரர் கோவில்
கல்யாண மண்டபம், வேலூர்

பதினைந்தாம் நூற்றாண்டு முதல் பதினேழாம் நூற்றாண்டு வரையிலான விஜயநகர, நாயக்க கட்டடக் கலையின் முக்கியக் கூறுகளாகத் திகழ்பவை அழகூட்டப்பட்ட மண்டபங்கள், அலங்கரிக்கப்பட்ட தூண்கள், இயற்கை வடிவ அளவிலான சிலைகள், கோபுரங்கள், பிரகாரங்கள், இசைத்தூண்கள் மலர் அலங்கார வேலைப்பாடுகள், கல்லால் ஆன சாளரங்கள், ஆகியனவாகும். மேலும் கோவில்களோடு சேர்ந்து தெப்பக்குளங்கள் அமைக்கப்பட்டன. கோவில்களுக்கான நுழைவாயில்கள் நான்குபுறங்களிலும் மிகப்பெரும் கோபுரங்களுடன் கட்டப்பட்டன.

சிற்பங்களோடு கூடிய மாடக்குழிகளை அமைக்கும் பழக்கம் நாயக்கர் காலத்திலும் தொடர்ந்தது. பெரிய வடிவங்களிலான புடைப்புச் சிற்பங்களை அமைக்கும்முறை அதிகரித்தது என்பதை திருநெல்வேலி மாவட்டம் திருக்குறுங்குடி அழகியநம்பி கோவில், திருவரங்கம் ரங்கநாதர் கோவில் வளாகத்தில் அமைந்துள்ள கோபாலகிருஷ்ண கோவில் ஆகியவற்றில் காணமுடியும். ஆழ்வார்திருநகரியில் ஆதிநாதர் கோவிலிலுள்ள தெற்குவிழா மண்டபம், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலின் முகப்பில் மேற்கூரையுடன் அமைந்துள்ள புகுமுக மண்டபம் ஆகியவை குறிப்பிடத்தகுந்த எடுத்துக்காட்டுகளாகும்.



ஆதிநாதர் கோவில் மண்டபம்,
ஆழ்வார்திருநகரி

தமிழ்நாட்டில் கோவில்களின் மையப்பகுதிகளிலும் அவற்றையொட்டி அமைந்திருக்கும் பத்திகளிலும் இடம்பெற்றிருந்த தெய்வங்களின் உருவச் சிலைகள் ஏனைய பகுதிகளிலும் இடம்பெறத் துவங்கின. மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் அமைந்துள்ள 1000–கால் மண்டபம், புதுமண்டபம், திருக்குறுங்குடி,



1000–கால் மண்டபம்,
மீனாட்சியம்மன் கோவில், மதுரை



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_2.indd 147 9/30/2023 11:07:59 AM

நாங்குநேரி வானமாமலையார் கோவில் ஆகியவற்றிலுள்ள இரதிமண்டபம் ஆகியவை இக்கால மண்டபக் கட்டடக்கலைக்கு சிறப்புமிக்க எடுத்துக்காட்டுகளாகும்.

இக்காலப்பகுதியைச் சேர்ந்த தூண்கள் முந்தைய காலப்பகுதியைச் சேர்ந்தவைகளைக் காட்டிலும் அதிகம் அலங்கரிக்கப்பட்டவைகளாக உள்ளன. ஒற்றைக்கல்லில் மிகப்பெரிய யாழி, குதிரை வடிவச்சிலைகள் உருவாக்கப்பட்டன. அவற்றில் புராண இதிகாசக் காட்சிகள் அரசகுடும்ப உறுப்பினர்களின் இயற்கை வடிவ அளவிலான முழுமையான உருவங்கள், சாதாரண மனிதர்களின் வடிவங்கள், விலங்குகள், பூவேலைப்பாடுகள் ஆகியவை செதுக்கப்பட்டன. இக்காலப் பகுதியின் மற்றொரு சிறப்பம்சம் இசைத்தூண்களாகும். மண்டபங்களிலுள்ள தூண்களின் மேற்பகுதி சிங்கம் அமர்ந்திருப்பதுபோல அமைக்கப்பட்டிருப்பது ஒரு பொதுவான கூறாகும். கர்ப்பகிரகத்தின் சுவர்களிலும் மண்டபங்களிலும் கற்சாளரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வேலூர் ஜலகண்டேஸ்வரர் கோவில், திண்டுக்கல்லுக்கு அருகே தாடிக்கொம்பில் அமைந்துள்ள கோவில்கள், திருநெல்வேலிக்கு அருகே கிருஷ்ணாபுரத்தில் அமைந்துள்ள கோவில், தஞ்சாவூரில் பெரிய கோவிலுக்குள் அமைந்துள்ள சுப்பிரமணியசாமி கோவில் ஆகியவை இக்காலப்பகுதியைச் சேர்ந்த சிறப்பித்துச் சொல்லவேண்டிய, கண்ணையும் கருத்தையும் கவரக்கூடிய மிகப்பெரும் கலைப்படைப்புகளாகும். காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவில், மதுரை கூடல் அழகர் கோவில், திருவில்லிபுத்தூர், திருவெள்ளரை, அழகர்கோவில், திருவண்ணாமலை, திருவரங்கம் ஆகிய ஊர்களிலுள்ள கோவில்களில் விஜயநகர, நாயக்கர் கால ஓவியங்கள் காணப்படுகின்றன. இவற்றில் இதிகாசக் கதைகள், பெரும்பாலும் ராமாயணக் காட்சிகள், அரண்மனைக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.



வரதராஜ பெருமாள் கோவில் சிற்பங்கள், காஞ்சிபுரம்

## நவீன காலம் கி.பி.1600க்குப் பின்னர்

மதுரை நாயக்க அரசின் சிற்றரசர்களாக இராமநாதபுரம் பகுதியை ஆண்டு வந்த சேதுபதிகள் இராமேஸ்வரம் இராமநாத சுவாமி கோவிலின் கட்டடக் கலைக்குப் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளனர். இராமேஸ்வரம் கோவிலின் சிறப்புமிக்க பிரகாரங்கள் நம் கவனத்தை ஈர்ப்பதாய் அமைந்துள்ளன. உலகிலேயே மிகவும் நீளமான கோவில் பிரகாரங்கள் இவையே எனச் சொல்லப்படுகிறது. இக்கோவில் மூன்று பிரகாரச் சுற்றுக்களைக் கொண்டுள்ளது. கோவிலின் வெளிப்பிரகாரம் ஏறத்தாழ 7 மீட்டர் உயரம் கொண்டதாக உள்ளது. வெளிப்பிரகாரத்தின் கிழக்கு மேற்குப் பிரகாரங்கள் 120 மீட்டர் நீளமுடையவைகளாக உள்ளன. வடக்கிலும் தெற்கிலும் உள்ள பிரகாரங்கள் 195 மீட்டர் நீளமுடையவைகளாக உள்ளன. வெளிப்பிரகாரத்தைத் தாங்கிநிற்கும் 1200க்கும் மேற்பட்ட தூண்கள் தனிச்சிறப்பு கொண்டனவாகும். மேலும் இத்தூண்களில் பெரும்பாலானவை



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_2.indd 148 9/30/2023 11:08:00 AM

அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளன. இம்மூன்று பிரகாரங்களில் உட்புறம் அமைந்துள்ள பிரகாரமே மிகப் பழைமையானதாகும்.



இராமநாத சுவாமி கோவில் பிரகாரம், இராமேஸ்வரம்

## சுருக்கம்

❖ பாறைகளில் சிற்பங்களைப் படைப்பது பல்லவர்கால சிறப்புக்கூறாக அமைந்திருந்தது. முற்காலச் சோழர்களின் காலம் பேரழகுமிக்க விமானங்களுக்குப் பெயர்பெற்றதாகும். பிற்காலச் சோழர்கள் காலம் பொலிவுமிக்க கோபுரங்களுக்காகப் புகழ்பெற்றது. மண்டபங்கள் விஜயநகர காலப்பகுதியின் தனிச்சிறப்பாகும். நவீனகாலத்தில் பிரகாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டன.

## மூலாதார நூல்கள்


1. K.A. Nilakanta Sastri, *A History of South India: From Pre-Historic Times to the Fall of Vijayanagar Empire* (Oxford University Press, 1997) - with an introduction by R. Champakalakshmi.
2. Burton Stein, *A History of India*, Oxford University Press, 2004.
3. Crispin Branfoot, "The Architectural Sculpture of the South Indian Temples, 1500-1700," *Artibus Asiae,* vol. 62, No.2, 2002.
4. Crispin Branfoot, "The Tamil Gopura: From Temple Gateway to Global Icon," *ARS Orientalis*, vol. 45, 2015.
5. *https://www.britannica.com.*


## கலைச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சுதேசம், உள் நாடு | indigenous | native |
| 2. | சகாப்தம், வரலாற்றின் ஒரு காலகட்டம் | epoch | era, age |
| 3. | கருவறை | sanctum | a sacred place set apart in a temple |
| 4. | சீர்கேடான | decadent | corrupt, a state of moral decline |
| 5. | எடுத்துக்காட்டாய் திகழ்கிறது | exemplified | illustrated, represented |
| 6. | சிலை வைக்கப்படும் இடம் | niche | a cavity, especially in a wall to display a statue |
| 7. | கலைப்பண்புக் கூறு | motif | a decorative design forming a pattern in an artistic work |
| 8. | பெரிய கற்பாறை, பாறாங்கல் | boulder | a very large rock |
| 9. | சமகாலத்தைச் சேர்ந்தவர்கள் | contemporaries | living or occurring at the same time |
| 10. | செதுக்கப்பட்ட | hewn | cut out and shaped |
| 11. | சுவற்றில் செதுக்கப்படும் சிற்பம் | bas-relief | a sculpture carved into a wall |
| 12. | செயல் திறன், ஒன்றைச் செய்து முடித்தல் | execution | carrying out |
| 13. | உட்பகுதிகள், இடைவெளிகள் | recesses | hollow spaces inside the wall or a structure |



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_2.indd 149 9/30/2023 11:08:01 AM

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. தென்னிந்தியாவில் உள்ள மிகப்பழமையான கட்டுமானக் கோவில் எது?
   அ) கடற்கரைக் கோவில்
   ஆ) மண்டகப்பட்டு
   இ) கைலாசநாதர் கோவில்
   ஈ) வைகுந்தபெருமாள் கோவில்

2. மாமல்லபுரத்திலுள்ள நினைவுச் சின்னங்களும் கோவில்களும் யுனெஸ்கோவால் எப்போது அங்கீகரிக்கப்பட்டது?
   அ) 1964　　ஆ) 1994
   இ) 1974　　ஈ) 1984

3. முற்காலச் சோழர் கட்டடக்கலையின் சிறப்பம்சம் யாது?
   அ) புடைப்புச் சிற்பங்கள்
   ஆ) விமானங்கள்
   இ) பிரகாரங்கள்
   ஈ) கோபுரங்கள்

4. அழகிய நம்பி கோவில் எங்கமைந்துள்ளது?
   அ) திருக்குறுங்குடி
   ஆ) மதுரை
   இ) திருநெல்வேலி
   ஈ) திருவில்லிபுத்தூர்

5. வைகுண்ட பெருமாள் கோயிலைக் கட்டியவர் யார்?
   அ) மகேந்திரவர்மன்
   ஆ) நரசிம்மவர்மன்
   இ) ராஜசிம்மன்
   ஈ) இரண்டாம் ராஜராஜன்

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. பல்லவ அரசர் மகேந்திரவர்மனால் முதன்முதலாய் கட்டப்பட்ட குடைவரைக் கோவில் ________________ என்ற இடத்தில் உள்ளது.
2. முற்கால சோழர் கட்டடக்கலை ________________ பாணியைப் பின்பற்றியது
3. மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் உள்ள மிகவும் புகழ்பெற்ற மண்டபம் ________________ ஆகும்
4. பிற்கால சோழர் காலம் பொலிவுமிக்க ________________ பெயர்பெற்றது
5. விஜயநகர கால கட்டடக்கலையின் தனித்துவ அடையாளம் ________________ ஆகும்.

### III. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | ஏழு கோவில்கள் | – மதுரை |
| 2. | இரதிமண்டபம் | – தாராசுரம் |
| 3. | ஐராவதீஸ்வரர்கோவில் | – திருக்குறுங்குடி |
| 4. | ஆதிநாதர் கோவில் | – கடற்கரைக்கோவில் |
| 5. | புதுமண்டபம் | – ஆழ்வார் திருநகரி |

### IV. தவறான இணையைக் காண்க

(1) 1. கிருஷ்ணாபுரம்கோவில்–திருநெல்வேலி
2. கூடலழகர் கோவில் – ஆழ்வார் திருநகரி
3. சேதுபதிகள் – மதுரை நாயக்க அரசின் சிற்றரசர்கள்
4. ஜலகண்டேஸ்வரர் கோவில் – வேலூர்

(2) **கூற்று:** இராமேஸ்வரம் கோவிலின் சிறப்புமிக்க பிரகாரங்கள் நம் கவனத்தை ஈர்ப்பதாய் அமைந்துள்ளன.

**காரணம்:** உலகிலேயே மிக நீளமான கோவில் பிரகாரங்களை இக்கோவில் கொண்டுள்ளது.

அ) காரணம், கூற்றை விளக்கவில்லை
ஆ) காரணம், கூற்றை விளக்குகின்றது
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

3. **பொருந்தாததைக் கண்டுபிடி**

திருவில்லிபுத்தூர் அழகர்கோவில், ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை

4. **சரியான வாக்கியங்களைக் கண்டுபிடி**

1. மிகப்பெரும் கருங்கல் பாறையின் மீது புடைப்புச் சிற்பமாக அர்ச்சுனன் தவமிருக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது.
2. பல்லவர்கால கட்டடக்கலைப் பாணியில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அமைந்துள்ளது.
3. பின்ளையார்பட்டியிலுள்ள குகைக் கோவில் பிற்கால பாண்டியரின் பங்களிப்பாகும்.
4. மதுரை நாயக்க அரசின் சிற்றரசர்களான சேதுபதிகள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளனர்.

## V. சரியா ? தவறா?

1. இராஜசிம்மன் காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கட்டினார்.
2. முற்கால பாண்டியர், பிற்காலச் சோழரின் சமகாலத்தவர் ஆவர்.
3. பாண்டியக் கட்டடக்கலையின் சிறப்பம்சமாய் திகழ்வது குடைவரை மற்றும் கட்டுமானக் கோவில்கள் ஆகும்.
4. பிரகதீஸ்வரர் கோவில் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்டது.
5. தாதாபுரம் கோவிலில் விஜயநகர மற்றும் நாயக்கர் கால ஓவியங்களைக் காணமுடியும்.

## VI. குறுகிய விடையளி

1. பஞ்சபாண்டவ இரதம் பற்றி குறிப்பு வரைக.
2. சித்தன்னவாசல் ஓவியங்கள் பற்றிக் கூறுக
3. தஞ்சை பெரிய கோவிலின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.
4. இராமேஸ்வரம் கோவில் நம் கவனத்தை ஈர்க்கும் விதத்தைக் கூறுக.

## VII. விரிவான விடையளி

1. பல்லவர் காலத்தில் கோவில் கட்டடக்கலை குடைவரைக் கோவில்கள் எனும் நிலையிலிருந்து கட்டுமானக் கோவில்கள் எனும் மாற்றத்திற்கு உள்ளானது விளக்குக.
2. விஜயநகர, நாயக்கர் கால கட்டடக்கலையானது பல்லவர் மற்றும் பிற்கால சோழர் கட்டடக்கலையிலிருந்து எவ்விதம் வேறுபடுகிறது என விவாதிக்கவும்.

## VIII. உயர்சிந்தனை வினா

1. திராவிடக் கட்டடக்கலை உள்நாட்டில் தோன்றியதே விளக்குக.
2. கோயில்கலை வளர்ச்சியானது நாயக்கர் காலத்தில் சிறந்தோங்கியது என்பதை தெளிவுபடுத்துக.

## IX. செயல்பாடு

பல்லவ, சோழ, பாண்டிய மற்றும் நாயக்க ஆட்சியாளர்கள் காலத்தில் எழுப்பப்பட்ட கோவில்களுக்குச் சென்று கட்டுமானத்திலும் சிற்பங்களிலும் அவை ஒன்றோடொன்று எவ்விதம் வேறுபடுகின்றன என்பதைக் கண்டறியவும்.



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_2.indd 151 9/30/2023 11:08:01 AM

*அலகு – 3*

# தமிழகத்தில் சமணம், பௌத்தம், ஆசீவகத் தத்துவங்கள்



## கற்றல் நோக்கங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை குறித்த அறிவினைப் பெறுதல்

- அவைதீகச் சமயப் பிரிவுகளான சமணம், பௌத்தம், ஆசீவகம் ஆகியவை குறித்த சான்றுகளையும் இலக்கியங்களையும் அறிந்து கொள்ளுதல்
- மகாவீரர், புத்தர், ஆசீவகப் பிரிவை நிறுவிய கோசலா ஆகியோரின் போதனைகள் பற்றிய அறிவினைப் பெறுதல்
- தமிழ்நாட்டிலுள்ள மேற்சொல்லப்பட்ட சமயப் பிரிவுகள் சார்ந்த நினைவுச் சின்னங்களைத் தெரிந்துகொள்வது

## அறிமுகம்

பிகநிதயா எனப்படும் பழமையான பௌத்த சமய நூல் கி.மு. ஆறாம் நூற்றாண்டில், இந்தியாவில் வெவ்வேறு வகைப்பட்ட 62 தத்துவ, சமயப்பள்ளிகள் செழிப்புற்று இருந்ததாகக் கூறுகின்றது. இருந்தபோதிலும் இப்பலவகைப்பட்ட பிரிவுகளில் ஆசீவகம் மட்டுமே இடைக்காலத்தின் பிற்பகுதிவரை செயல்பாட்டில் இருந்தது. ஆனால் சமணமும், பௌத்தமும் நவீன காலம் வரையிலும் தொடர்ந்து செழிப்படைந்தன. மகாவீரரும் புத்தரும் தங்கள் அற போதனைகளை வேத மதத்தின் பலிகொடுக்கும் வழிபாட்டு முறைகளுக்கு எதிராக வைத்தனர். அவர்களின் போதனைகள் பாதுகாக்கப்பட்டு, பல்வேறு சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த துறவிகளின் மூலமாகப் பின்வந்த சந்ததிகளிடம் கையளிக்கப்பட்டன.

## 1. சமணம்: சான்றுகள், இலக்கியங்கள்

மகாவீரரின் அறவுரைகள் ஓராயிரம் ஆண்டுகளாக அவருடைய சீடர்களால் வாய்மொழி மூலமாகவே மக்களுக்குச் சொல்லப்பட்டு வந்தன. சமணத்தின் தொடக்க காலத்தில் சமணத்துறவிகள் சமணத்தின் ஐந்து உறுதிமொழிகளைக் கடுமையாகப் பின்பற்றினர். சமயம் சார்ந்த கையெழுத்துப் பிரதிகளே சொத்தாகக் கருதப்பட்டதால் சமயம் பற்றிய அறிவானது

ஆவணப்படுத்தப்படவில்லை. மகாவீரர் இயற்கை எய்திய (நிர்வாணா) இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னர், சமண அறிஞர்கள் பாடலிபுத்திரத்தில் ஒரு பேரவையைக் கூட்டித் தங்கள் சமயம் சார்ந்த போதனைகளையும் ஒழுக்க விதிகளையும் தொகுக்கும் முயற்சியை மேற்கொண்டனர். இது தொடர்பாகக் கூட்டப்பட்ட முதல் சமணப் பேரவைக்கூட்டம் இதுவேயாகும். சட்ட விதிகளை வரையறுப்பதில் ஒருமித்தக் கருத்து எட்டமுடியாமல் போனதால் இக்கூட்டம் தோல்வியில் முடிந்தது. இருந்தபோதிலும் கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் வல்லபியில் கூட்டப்பட்ட பேரவை கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதில் வெற்றிபெற்றது. இது அறிஞர்களை, சமண சமயத்தின் கொள்கைகளை உறுதிபட விளக்க ஊக்குவித்தது. மேலும் காலப்போக்கில் அதிக வயதும் ஆழமான ஞானமும் கொண்ட கற்றறிந்த பல சமணத் துறவிகள் சமண சமயம் தொடர்பாகப் பல்வேறு தலைப்புகளிலான உரைகளைத் தொகுத்தனர். ஏறத்தாழ கி.பி.500இல் சமண ஆச்சாரியார்கள் ஒன்றை உணர்ந்தனர். அதாவது கடந்தகாலம், நிகழ்காலம் ஆகிய காலப்பகுதிகளைச் சேர்ந்த பல அறிஞர்களால் தொகுக்கப்பட்ட ஒட்டுமொத்த சமண இலக்கியங்களையும் மனனம் செய்வது மிகச்சிரமமானது என்பதை உணர்ந்தனர். உண்மையில் சமணம் குறித்த மிக முக்கியச் செய்திகள் இழக்கப்பட்டு விட்டன. ஆகவே அவர்கள் தாங்கள் அறிந்த சமண இலக்கியங்கள் அனைத்தையும் ஆவணப்படுத்துவது என முடிவுசெய்தனர்.

> சமணத்தின் ஐம்பெரும் உறுதிமொழிகள்: 1. எந்த உயிரினத்தையும் துன்புறுத்தாமலிருப்பது – அகிம்சை; 2. உண்மை– சத்யா; 3. திருடாமை – அசௌர்யா; 4. திருமணம் செய்து கொள்ளாமை – பிரம்மச்சரியா; 5. பணம், பொருள், சொத்துக்கள் மீது ஆசை கொள்ளாமை – அபரிக்கிரகா

கி.பி முதலாம் நூற்றாண்டில் சமணத்தில் பெரும்பிளவு ஏற்பட்டு திகம்பரர், சுவேதம்பரர் என இருபெரும் பிரிவுகள் ஏற்கனவே தோற்றம் பெற்றிருந்தன. திகம்பரர் சுவேதம்பரர் ஆகிய இரு பிரிவினருமே ஆகம சூத்திரங்களைத் தங்களின் அடிப்படை நூல்களாக ஏற்றுக்கொண்டனர். ஆனால் அவற்றின் உள்ளடக்கம், கொடுக்கப்படும் விளக்கம் ஆகியவற்றில் வேறுபட்டனர்.

## சமண இலக்கியங்கள்

சமண இலக்கியங்கள் பொதுவாக இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

### 1. ஆகம சூத்திரங்கள்

ஆகம சூத்திரங்கள் பல சமண சமயப் புனித நூல்களைக் கொண்டுள்ளது. அவை அர்த்த–மகதி பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளன. 12 நூல்களைக்கொண்ட அவை மகாவீரரின் நேரடி போதனைகளைக் கொண்டுள்ளன. அவை மகாவீரரின் நேரடிச் சீடர்களால் தொகுக்கப்பட்டவையாகும். 12வது ஆகம சூத்திரம் தொலைந்து போனதாகக் கருதப்படுகிறது.

### 2. ஆகமங்கள் அல்லாத இலக்கியங்கள்

ஆகமங்கள் அல்லாத இலக்கியங்கள் என்பன ஆகமங்கள் மேல் எழுதப்பட்ட உரைகள், விளக்கங்கள், தனிநபர்களால் எழுதப்பட்டு துறவிகளாலும், அறிஞர்களாலும் தொகுக்கப்பட்ட நூல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். அவை பிராகிருதம், சமஸ்கிருதம், பண்டைய மராத்தி, ராஜஸ்தானி, குஜராத்தி, இந்தி, கன்னடம், தமிழ், ஜெர்மன் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ளன. மொத்தம் 84 நூல்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் 41 சூத்திரங்கள், 12 உரைகள், மகா பாஷ்யா அல்லது (ஒரு மாபெரும் உரை) ஆகியன இடம் பெற்றுள்ளன.



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_3.indd 153 9/30/2023 11:06:57 AM

41 சூத்திரங்கள் என்பன 11 அங்கங்களையும் (சுவேதம்பரர்களால் பின்பற்றப்படும் நூல்கள்) 12 உப அங்கங்களையும் (நெறிமுறைக் குறிப்பேடுகள்) 5 சேடாக்களையும் (துறவிகளுக்கான நடத்தை விதிகள்) 5 மூலங்களையும் (சமணத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்) பத்ரபாகுவின் கல்பசூத்ரா போன்ற எட்டு பல்வகைப்பட்ட நூல்களையும் கொண்டுள்ளது. பஞ்சதந்திரம் எனும் நூலில் பெருமளவில் சமணத்தின் தாக்கம் இருப்பதாக நம்பப்படுகிறது.

கல்பசூத்ராவின் ஜைனசரிதா எனும் சமண நூல் சமண தீர்த்தங்கரர்களின் வாழ்க்கை வரலாறுகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக சமண சமயத்தை நிறுவியவரும் முதல் தீர்த்தங்கரருமான பார்சவநாதர், கடைசியும் 24 வது தீர்த்தங்கரருமான மகாவீரர் ஆகியோரின் வரலாறுகள் இதில் இடம் பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியராகக் கருதப்படும் பத்ரபாகு, சந்திரகுப்த மௌரியரோடு மைசூருக்குப் புலம்பெயர்ந்து (ஏறத்தாழ கி.மு.296) பின் அங்கேயே குடியமர்ந்தார்.

நிர்வாண நிலையை அடைந்து அதன் பின்னர் இவ்வுலகிற்கும் அடுத்த உலகத்திற்குமிடையே பாதை அமைப்போரே தீர்த்தங்கரர்கள் ஆவர்.

இவைகளோடு இந்தி, தமிழ், கன்னடம் ஆகிய இந்திய பிராந்திய மொழிகளில் எழுதப்பட்ட சில சமண நூல்களையும் நாம் பெற்றுள்ளோம். அதற்கு எடுத்துக்காட்டு தமிழ்மொழியில் எழுதப்பட்ட காப்பிய நூலான சீவகசிந்தாமணி ஆகும். இந்நூல் சங்க இலக்கிய மரபில் திருத்தக்கத் தேவர் என்பாரால் இயற்றப்பட்டது. இந்நூல் தன் சொந்த முயற்சியால் மேநிலையை அடைந்த சமயப்பற்றுடைய, இறுதியில் துறவுபூண்ட ஒரு அரசனின் வாழ்க்கையை வர்ணிப்பதாகும். தமிழில் எழுதப்பட்ட மற்றொரு அறிவுசார் நூலான நாலடியார் சமணத்துறவி ஒருவரால் இயற்றப்பட்டதாகும். திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் ஒரு சமணர் என நம்பப்படுகிறது.

## தமிழ் நாட்டில் சமணங்கள்

சமணர்கள் கர்நாடகாவிலிருந்து கொங்குப்பகுதிக்கும் (சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் பகுதிகள்) காவேரி கழிமுகப்பகுதிக்கும் (திருச்சிராப்பள்ளி) தெற்குமுகமாக புதுக்கோட்டைப் பகுதிக்கும் (சித்தன்னவாசல்) இறுதியில் பாண்டிய நாட்டுக்குள்ளும் (மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள்) இடம் பெயர்ந்தனர் என்பதற்குத் தெளிவான சான்று உள்ளது. பொதுவாகத் தமிழர்கள் திகம்பரர் பிரிவைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். களப்பிரர்கள் சமண சமயத்தின் ஆதரவாளர்களாய் இருந்ததாக நம்பப்படுகிறது.

## சித்தன்னவாசல் குகைக்கோவில்

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சித்தன்னவாசல் குகை நிலத்திலிருந்து 70 மீட்டர் உயரமுடைய பெரும்பாறையொன்றில் அமைந்துள்ளது. இதன் ஒரு முனையில் ஏழடிப்பட்டம் எனப்படும் இயற்கையாக அமைந்த குகையும், மற்றொரு முனையில் ஒரு குடைவரைக் கோவிலும் உள்ளன. வேலி அமைக்கப்பட்டுள்ள குகையின் பின்னே தரையில் 17 சமணப்படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. வரிசைகளில் அமைக்கப்பட்டுள்ள இந்த கல்துயிலிடங்கள் சமணர்களின் தங்குமிடங்களாக இருந்துள்ளதாய் நம்பப்படுகிறது. இத்துறவிகளின் கற்படுக்கைகளில் அளவில் பெரிதாக இருக்கும் ஒன்றில் கி.மு.இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்–பிராமிக்

கல்வெட்டு உள்ளது கி.பி. எட்டாம் நூற்றாண்டு, அதற்குப் பின்னரான காலப்பகுதியைச் சேர்ந்த கல்வெட்டுகளும் உள்ளன. அவைகளில் துறவிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர்கள் இவ்விடத்தில் தனிமையில் தங்கள் வாழ்வைக் கழித்திருக்கலாம் என நம்பப்படுகிறது.



சித்தன்னவாசல் குகை

அறிவர் கோவில் எனும் பெயருடைய சித்தன்னவாசல் குகைக்கோவில் குன்றின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. கோவிலின் முகப்பு எளிமையானதாக கல்லில் செதுக்கப்பட்ட நான்கு தூண்களைக் கொண்டுள்ளது. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் முற்காலப் பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட இக்கோவிலின் முன்பகுதியில் அர்த்த மண்டபமும் பின்பகுதியில் கருவறையும் (கர்ப்பகிரகம்) உள்ளன.

இக்கோவிலில் காணப்படும் சுவரோவியங்கள் புகழ்பெற்ற அஜந்தா சுவரோவியங்களுடன் ஒப்புமை கொண்டுள்ளன. 1958இல் தான் மத்திய அரசின் தொல்லியல் துறை (ASI) இதைத்தனது பாதுகாப்பின் கீழ்க்கொண்டு வந்தது. அதன் பின்னர் இதைச் சுற்றி வேலிஅமைக்கவும், பார்வையாளர்களின் வருகையை முறைப்படுத்தவும் இருபது ஆண்டுகளாயின. கருவறைக்குள் நுழைவதற்கு முன்பாக உள்ள மண்டபத்தின் இடப்புறச்சுவரில் தீர்த்தங்கரர்களின் புடைப்புச் சிற்பங்களும் வலப்புறச்சுவரில் ஆச்சாரியார்களின் புடைப்புச் சிற்பங்களும் உள்ளன.



சுவரோவியங்கள், சித்தன்னவாசல்

## காஞ்சிபுரத்தில் சமணர்கள் (திருப்பருத்திக் குன்றம்)

பல்லவர்களின் ஆட்சிக் காலத்தில் சமண சமயம் செழித்தோங்கியது. கி.பி.7ஆம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்திற்கு வருகை புரிந்த சீனப்பயணி யுவான் சுவாங் அங்கு பெரும் எண்ணிக்கையிலான பௌத்தர்களும் சமணர்களும் இருந்ததாகத் தனது பயணக் குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளார். பெரும்பாலான பல்லவ அரசர்கள் சமணர்களாவர். பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் தொடக்கத்தில்



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_3.indd 155 9/30/2023 11:06:57 AM

சமணராக இருந்தவராவார். காஞ்சியில் இரண்டு சமணக் கோவில்கள் உள்ளன. ஒன்று திருப்பருத்திக் குன்றத்தில் பாலாற்றின் கரையில் அமைந்துள்ள திரிலோக்கியநாத ஜைனசுவாமி கோவில் மற்றொன்று சந்திரபிரபா எனும் பெயரைக் கொண்டிருந்த தீர்த்தங்கரருக்கு அர்ப்பணிக்கப்பட்ட சந்திரபிரபா கோவிலாகும். பல்லவர் கட்டடக்கலைப் பாணியில் இக்கோவில்கள் அமைந்துள்ளன. ஆனால் காலப்போக்கில் இவை சேதமடைந்துவிட்டன. விஜயநகர ஆட்சியின்போது (1387) புஷ்பசேனா எனும் சமண முனிவரின் சீடரான இருகப்பா என்பவரும் விஜயநகர அரசர் இரண்டாம் ஹரிஹர ராயரின் (1377–1404) அமைச்சரும் சேர்ந்து இக்கோவிலில் சங்கீத மண்டபம் ஒன்றைக் கட்டி கோவிலை விரிவுபடுத்தினர். அழகுமிக்க சுவரோவியங்களும் இக்காலத்தில்தான் வரையப்பட்டன.



ஜைன கோவில், திருப்பருத்திக் குன்றம்

கோவில்களிலுள்ள சுவரோவியங்கள் தீர்த்தங்கரர்களின் வாழ்க்கையில் நடந்த சில காட்சிகளைச் சித்தரிக்கின்றன. திருப்பருத்திக் குன்றத்திலுள்ள திரிலோக்கியநாத கோவிலின் ஓவியங்களின் மீது புதுப்பித்தல் பணியின்போது வர்ணங்கள் பூசப்பட்டுவிட்டதால் பாழாகிவிட்டன. திரிகூட பஸ்தி எனப்படும் இரண்டாவது கருவறையினுள் ஏராளமான கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளில் கோவிலின் வளர்ச்சி குறித்த செய்திகளும், நூற்றாண்டுகளின் போக்கில் இக்கோவிலுக்குக் கொடையளித்த பலரைப்பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன.



சுவரோவியங்கள், திரிலோக்கியநாத கோவில்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருப்பருத்திக் குன்றம் தவிர மாநிலத்தின் வேறுபல கிராமங்களிலும் சமண சமயம் குறித்தத் தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

> 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் சமணர்களின் எண்ணிக்கை 83,359 ஆகும். மொத்த மக்கள்தொகையில் இது 0.12 விழுக்காடாகும்.

### கழுகுமலை சமண குடைவரைக் கோவில்கள்

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம் கழுகுமலையிலுள்ள கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணர் கோவில்,

தமிழ் நாட்டில் சமணம் புத்துயிர் பெற்றதைக் குறிக்கின்றது. இக்குகைக்கோவில் பாண்டிய அரசன் பராந்தக நெடுஞ்சடையனால் உருவாக்கப்பட்டது. இக்கோவிலில் பஞ்சவர் படுக்கை என்றழைக்கப்பட்ட பாறையில் செதுக்கி மெருகேற்றப்பட்ட கற்படுக்கைகள் உள்ளன. கழுகுமலை குகைக்கோவிலில் தீர்த்தங்கரர்களின் உருவங்களைத்தவிர யக்சர்கள், யக்சிகள் ஆகியோரின் உருவச் சிலைகளும் இடம் பெற்றுள்ளன.



கழுகுமலை குகைக்கோவில் சிற்பங்கள்

## தமிழ்நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள சமணக் கோவில்கள்

### வேலூர்

வேலூர் மாவட்டத்தில் ஒரு குன்றின் உச்சியில் அமைந்துள்ள குகைகளின் உள்ளே கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணத் துறவிகளின் கற்படுக்கைகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா லத்தேரியிலுள்ள பைரவ மலையில் இப்படுக்கைகள் காணக்கிடைக்கின்றன. மூன்று குகைகளில் இரண்டில் மட்டுமே கற்படுக்கைகள் உள்ளன. அவற்றில் ஒன்றில் நான்கு படுக்கைகளும் மற்றொன்றில் ஒரு படுக்கையும் உள்ளன. ஏனைய பகுதிகளில் காணப்படும் கற்படுக்கைகளில் உள்ள தலையணைப் பகுதி இங்குள்ள கற்படுக்கைகளில் காணப்படவில்லை.

### திருமலை

திருமலை சமணக் கோவில் தமிழ்நாட்டின் திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகரின் அருகே அமைந்துள்ள ஒரு குகை வளாகத்தில் அமைந்துள்ளன. கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இவ்வளாகத்தில் மூன்றுசமணக் குகைகளும், இரண்டு சமணக் கோவில்களும், 22வது தீர்த்தங்கரரான நேமிநாதருடைய 16.5 அடி உயரமுடைய சிலையும் உள்ளன. நேமிநாதரின் இச்சிலையே தமிழ் நாட்டிலுள்ள சமணச் சிலைகளில் மிகவும் உயரமானதாகக் கருதப்படுகின்றது.

### மதுரை

மதுரையிலும் அதைச் சுற்றிலும் 26 குகைகளும் 200 சமண கற்படுக்கைகளும், 60 கல்வெட்டுகளும் 100க்கும் மேற்பட்ட சிலைகளும் உள்ளன. மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது கீழக் குயில்குடி கிராமமாகும். இங்குள்ள குன்றுகள் மதுரை நகருக்கு மேற்கே 12 கிலோமீட்டர் தொலைவில் மதுரை–தேனி நெடுஞ்சாலையில் அமைந்துள்ளன. இங்குள்ள சிற்பங்கள் கி.பி. 860 முதல் 900 வரை ஆட்சிபுரிந்த பாண்டிய அரசன் பராந்தக வீரநாராயண பாண்டியன் காலத்தைச் சேர்ந்தவையாகும்.

இங்கு எட்டு சிற்பங்கள் உள்ளன. ரிஷபநாதர் அல்லது ஆதிநாதர், மகாவீரர், பார்சவநாதர், பாகுபலி ஆகியோரின் சிற்பங்கள் இங்கு காணக்கிடைக்கின்றன.



கீழக் குயில்குடி குடைவரைக் கோவில்

### கல்விக்குச் செய்த பங்களிப்பு

சமண மடாலயங்களும் கோவில்களும் கல்வி கற்றுக்கொடுக்கும் மையங்களாகவும் சேவை செய்துள்ளன. இந்நிறுவனங்களில் சமூக, சமய வேறுபாடுகள் இல்லாமல் அனைவருக்கும் கல்வி கற்றுத்தரப்பட்டது. சமணர்கள் தங்கள் கோட்பாடுகளைப் பரப்புரை செய்ததோடு, வெகு மக்களிடையே கல்வியைக் கொண்டு செல்வதில் தாங்கள் ஆற்றல்மிக்கத் தொடர்புச் சாதனங்கள் என்பதையும் நிரூபணம் செய்தனர். நாம் முன்னரே குறிப்பிட்டுள்ள பைரவமலை என்பது குக்கரப் பள்ளி என்னும் சிறு கிராமத்தின் அருகே அமைந்துள்ளது. 'பள்ளி' என்பது சமணர்களின் கல்வி மையங்களாகும். தமிழ்நாட்டில் 'பள்ளி' எனும் சொல்லை தங்கள் ஊர்ப்பெயர்களில் பின் ஒட்டாகக் கொண்ட கிராமங்களைப் பல பகுதிகளில் சாதாரணமாகக் காணமுடியும்.

கல்வி நிலையங்கள் அவற்றோடு இணைக்கப்பட்ட நூலகங்களைக் கொண்டிருந்தன. சமணத்தைப் போதித்தவர்களால் சமண மதத்தின் முக்கியக் கூறுகளை வலியுறுத்தி பற்பல நூல்கள் எழுதப்பட்டன. பெண்களும் துறவறம் பூண அனுமதிக்கப்பட்டதானது பெண்களிடையே கல்வியைக் கொண்டுசெல்வதற்கு ஊக்கமளித்தது.

## 2. பௌத்தம்

புத்தரின் உண்மையான பெயர் சித்தார்த்த சாக்கிய முனி கௌதமர் என்பதாகும். ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தால் "கௌதமர் சாக்கிய இனக்குழுவைச் சேர்ந்தவர், மேலும் அவர் முழுநிறைவு எனும் இலக்கை எட்டியவர்" எனப் பொருள்படும். கௌதம புத்தர் மகாவீரரின் சமகாலத்தவர் ஆவார். அவரது தந்தையார் இன்றைய நேபாளத்திற்கு அருகேயுள்ள ஒரு பகுதியில் சாக்கிய இனக்குழுவின் தலைவராக ஆட்சிசெய்து வந்தார். கௌதமர் பழைய மதங்களின் குருமார்களிடமிருந்து தான் கற்றுக்கொள்வதற்கு ஏதுவுமில்லை எனத் தெரிந்து கொண்டார். துறவற வாழ்க்கையை மேற்கொள்வதே வீடுபேறு எனப்படும் முக்தியை அடைவதற்கான ஒரேவழி என மதங்கள் அறிவித்தன. ஆனால் துறவுவாழ்க்கை மேற்கொண்ட பின்னரும் கௌதமரால் எங்கிருந்தும் உண்மைக்கான பொருளை உணரமுடியவில்லை. ஒருநாள் இரவு அவர் ஒரு போதிமரத்தின் கீழ் அமர்ந்து தனது சந்தேகங்கள், தனிமை ஆகியவை பற்றி சிந்தனை வயப்பட்டிருந்த வேளையில் ஒரு பேரமைதி அவர் மீது நிலவியது. விளைவாக கௌதமர் எனும் துறவி புத்தர் எனும் ஞானியானார். இறுதியில் மானுடத் துயரங்கள் குறித்த புதிரையும் அதற்கான காரணங்களையும், களைவதற்கான வழிகளையும் தெரிந்து கொள்வதில் வெற்றிபெற்றார். அரச வாழ்வு (மிகை ஆர்வமும் இன்ப நுகர்வும்) துறவு வாழ்வு (தன்னடக்க நிலையை எய்துதல்) ஆகிய இரண்டுமே தவறு என உறுதிபடக் கூறிய அவர் இவை இரண்டிற்கும் இடைப்பட்டதைக்

கண்டறிந்தார். அவருடைய இடைப்பட்ட வழி எண்வகை வழிகளை அடித்தளமாகக் கொண்டதாகும். அவை நல்ல எண்ணங்கள், நல்ல குறிக்கோள்கள், அன்பான பேச்சு, நன்னடத்தை, தீது செய்யா வாழ்க்கை, நல்ல முயற்சி, நல்ல அறிவு, நல்ல தியானம் என்பனவாகும்.

புத்தர் கடவுளின் புகழைக் கற்றுக் கொடுக்கவில்லை. ஆனால் அன்பின் வலிமையைக் கற்றுக் கொடுத்தார். அனைத்து மனிதர்களும் 'சமமான உரிமைகளுடன்' பிறக்கின்றனர் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். அவர் நீண்ட பயணங்களை மேற்கொண்டு தனது செய்திகளைத் தொலைதூரப் பகுதிகளில் பரப்பினார். புத்தர் தனது போதனைகளை பிராகிருத மொழியில் பரப்புரை செய்தார். புத்தரின் நான்கு பேருண்மைகள் பின்வருமாறு:

1. வாழ்க்கை துயரம், வயோதிகம், நோய், இறுதியில் மரணம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
2. துயரங்கள் ஆசையினாலும் வெறுப்பினாலும் ஏற்படுகின்றன.
3. ஆசையைத் துறந்துவிட்டால் துயரங்களை வென்று மகிழ்ச்சியை அடையலாம்
4. ஒருவர் எண்வகை வழிகளைப் பின்பற்றினால் உண்மையான மகிழ்ச்சியும், நிறைவும் கைவரப்பெறலாம்.

## பௌத்த இலக்கியங்கள்

புத்தருடைய போதனைகள் நீண்ட காலத்திற்கு ஆசிரியர்களின் நினைவாற்றல் வழியாக சீடர்களுக்குக் கற்றுத்தரப்பட்டது. ஏறத்தாழ கி.மு.80இல் அவை எழுதப்பட்டன. அவை பாலி மொழியில் எழுதப்பட்டன. பாலிமொழியில் எழுதப்பட்ட திரிபிடகா எனும் பௌத்தப் பொதுவிதிகள் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளன. அவை மூன்று கூடைகள் என்றும் அழைக்கப்பட்டன. அவை: வினய பிடகா, சுத்த பிடகா, அபிதம்ம பிடகா.

வினய பிடகா: இதில் பௌத்தத் துறவிகளுக்கான (பிட்சுக்கள்) விதிமுறைகள் இடம் பெற்றுள்ளன. தூய்மையான நடத்தையைப்பெற இவை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும்.

சுத்த பிடகா: விவாதங்களைச் சான்றுகளாகக்கொண்டு பௌத்தத்தின் மூலக் கோட்பாடுகளைக் கூறுகின்றது.

அபிதம்ம பிடகா: இது நன்னெறிகள், தத்துவம், நுண்பொருள் கோட்பாடு ஆகியன குறித்து விளக்குவதாகும்

**பொதுவிதிகளைப் பற்றிக் கூறுகிற ஏனைய பௌத்த நூல்கள்:**

ஜாதகங்கள்: பௌத்த இலக்கியங்களில் காணப்படும் புத்தருடைய வாழ்க்கை தொடர்பான பல்வேறு கதைகளைக் கூறும் நூல்

புத்தவம்சா: இது கவிதை வடிவில் எழுதப்பட்டுள்ள மரபுவழிக் கதையாகும். கௌதமருக்கு முன்பாக வாழ்ந்ததாக நம்பப்படுகிற 24 புத்தர்களின் வாழ்க்கையையும் செயல்பாடுகளையும் இது எடுத்துரைக்கின்றது. பொதுவிதிகள், கோட்பாடுகள் குறித்து விளக்கும் நூல்களைத் தவிர பாலி மொழியில் எழுதப்பட்ட நூல்கள் நீண்ட வரிசை கொண்டதாக உள்ளது. கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை அவற்றில் அடங்கும்.

- மிலிந்தபன்கா – அதாவது 'மிலிந்தாவின் கேள்விகள்' எனப் பொருள். கிரேக்க – பாக்டீரியன் அரசன் மிலிந்தா என்பவருக்கும் பௌத்த பிட்சுவான நாகசேனர் என்பவருக்குமிடையே



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_3.indd 159 9/30/2023 11:07:01 AM

பௌத்தத்தின் சில அம்சங்கள் குறித்து நடைபெற்ற உரையாடலைக் கொண்டுள்ளது. இதன் மூலம், சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டது.

- இலங்கையின் புகழ்பெற்ற வரலாற்றுத் தொகுப்புகளான மகாவம்சம், தீபவம்சம் ஆகியனவற்றுள், மகாவம்சம் இலங்கை உட்பட இந்தியத் துணைக்கண்டத்தின் அரச குலங்களைப் பற்றி கூறுகிறது. தீபவம்சம் புத்தருடைய போதனைகளையும் அவற்றைப் பரப்பியோர் இலங்கைக்கு வருகை புரிந்ததைப்பற்றியும் பேசுகிறது.
- புத்தகோசாவால் எழுதப்பட்ட விசுத்திமக்கா பிற்காலத்தைச் சேர்ந்த ஒரு நூலாகும். இவரே முதல் பௌத்த உரையாசிரியர் ஆவார்.
- மகாயான பௌத்தத்தின் எழுச்சியைத் தொடர்ந்து பௌத்த சமயத்துள் சமஸ்கிருத மொழி முக்கிய இடத்தை வகிக்கத் தொடங்கியது. இருந்தபோதிலும் ஒருசில சமஸ்கிருத நூல்கள் ஹீனயானப் பிரிவினராலும் படைக்கப்பட்டன. அஸ்வகோஷரால் எழுதப்பட்ட புத்தசரிதா சமஸ்கிருதத்தில் இதிகாச பாணியில எழுதப்பட்ட நூலாகும். இந்நூல் கௌதம புத்தரின் வாழ்க்கை வரலாற்றை இயம்புகிறது.

## தமிழகத்தில் பௌத்தம்

தமிழகத்தில் பௌத்தமானது இலங்கையைச் சேர்ந்த சமயப் பரப்பாளர்களால் பரப்பப்பட்டதாக நம்பப்படுகிறது. இதற்குச் சான்றாக பாண்டிய நாட்டில் சில நினைவுச் சின்னங்கள் உள்ளன. அவை கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை ஆகும். குகைகளில் காணப்படும் அவை பஞ்ச பாண்டவ மலை என அழைக்கப்படுகிறது. இக்காலப் பகுதியில் தழைத்தோங்கிய பௌத்தமானது சமணம், ஆசீவகம் இந்து மதத்தின் பல்வேறு பிரிவுகள் ஆகியவற்றுடன் நட்பமைதியுடன் கூடிச் செயல்பட்டுள்ளது. பக்திஇயக்க காலம் முதல் பக்தி இயக்கப் பெரியோர்கள் பௌத்தத்தை எதிர்த்தனர். பௌத்தம் அரசர்கள் அளித்து வந்த ஆதரவை இழக்கத் தொடங்கியது. தமிழகத்தில் பௌத்தம் சந்தித்த சவால்கள் குறித்த சான்றுகளைச் சைவ நாயன்மார்களின் தேவாரப் பாடல்களும் வைணவ ஆழ்வார்களால் இயற்றப்பட்ட நாலாயிர திவ்விய பிரபந்தமும் முன்வைக்கின்றன. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சீனப் பயணியான யுவான்சுவாங் தென்னிந்தியா வந்தபோது பௌத்தம் ஏறத்தாழ சரிவுற்ற நிலையிலிருந்தது.

பௌத்தம் முற்றிலுமாக மறைந்து போனது என்ற ஒரு பொதுக் கருத்து உள்ளது. ஆனால் அப்படியல்ல, வீரசோழியம் எனும் நூல் (11 ஆம் நூற்றாண்டில் பிற்காலச் சோழர்கள் காலத்தில் பௌத்தர் ஒருவரால் எழுதப்பட்ட இலக்கண நூல்) கிடைக்கப் பெற்றமையும், நாகப்பட்டினத்தில் கிடைத்துள்ள 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்தரின் செப்புச் சிலைகளும் பின்வந்த காலங்களிலும் பௌத்தம் இருந்தமையை உறுதி செய்கின்றன. சேலம் மாவட்டம் தியாகனூர் கிராமத்தில் கிடைத்திருக்கும் புத்தரின் சிற்பங்கள் இக்கருத்திற்கு மேலும் வலுச் சேர்க்கின்றன.


புத்தர் சிற்பம், தியாகனூர்



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_3.indd 160 9/30/2023 11:07:01 AM

நாம் முன்னர் பார்த்தவாறு பல்லவர் காலம் முதலாகவே பௌத்தம் சைவ, வைணவச் சமயங்களின் சவால்களை எதிர்கொண்டது. இதில் நாகப்பட்டினம் மட்டுமே விதிவிலக்காகத் திகழ்ந்தது. அங்கே பௌத்தத்தை சோழ அரசர்கள் ஆதரித்தனர். அவ்வாதரவு சமயக் காரணங்களுக்காக அல்ல. மாறாக அரசியல் காரணங்களுக்காக அளிக்கப்பட்ட ஆதரவாகும். நாகப்பட்டினத்தில் ஸ்ரீவிஜயா அரசரால் கட்டப்பட்ட சூடாமணி விகாரைக்கு ராஜராஜ சோழன் ஆதரவளித்தார் பிற் காலத்தில் அது அழிவுக்குள்ளாயிற்று கூலவாணிகன் சீத்தலை சாத்தனாரால் எழுதப்பட்ட மணிமேகலை முற்றிலுமாக தமிழ் பௌத்தத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் காப்பியமாகும். சமஸ்கிருதம், பாலி ஆகிய மொழிகளில் இருந்த பௌத்த சமயம் தொடர்பான சொற்களை அவர் தமிழில் மொழியாக்கம் செய்து பௌத்தத்தை இம்மண் சார்ந்ததாக ஆக்கினார்.

வஜ்ரபோதி எனும் பௌத்தத் துறவி தாந்ரீகச் சடங்குகளில் திறன் பெற்று விளங்கினார் என்றும், பல்லவ அரச சபையை அலங்கரித்த அவர் பின்னர் சீனம் சென்று விட்டதாகவும் இரண்டாம் நரசிம்ம பல்லவன் காலத்து சான்றொன்று கூறுகிறது. பௌத்தம் சரிவைச் சந்தித்துக் கொண்டிருந்த சமயமென மகேந்திரவர்மனின் மத்தவிலாச பிரகாசனம் எனும் நூல் எடுத்துரைக்கின்றது.

கல்விப்புலத்தில் பௌத்த சங்கங்களும் விகாரைகளும் கல்விக்கான இல்லங்களாகத் தொண்டுசெய்தன. கல்வி கற்பதற்காக உலகின் பல பகுதிகளிலிருந்து மாணவர்கள் இங்கு வந்தனர். நாளந்தா, தட்சசீலம், விக்கிரமசீலா ஆகியன மிகச்சிறந்த கல்வி மையங்கள் எனப் பெயர்பெற்றன. இவையனைத்தும் பௌத்த விகாரைகளாகும். திபெத், சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் மீது பௌத்தம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திற்று. பௌத்தத்தின் போதனைகளைப் பரப்புவதற்கு அவர்கள் செயல்திறன் மிக்க முயற்சிகளை மேற்கொண்டனர்.

விகாரா எனும் சமஸ்கிருதச் சொல்லுக்கு 'வாழ்விடம்' அல்லது 'இல்லம்' என்று பொருள். தொடக்கத்தில் சுற்றியலைந்து திரியும் துறவிகள் இவற்றை மழைக்காலங்களின் போது தங்குமிடங்களாகப் பயன்படுத்தினர். பணம்படைத்த, சாமானிய பௌத்தர்களால் வழங்கப்பட்ட கொடைகளின் மூலம் இவை கல்வி மையங்களாக மாற்றம் பெற்றன. அரசர்கள் அளித்த ஆதரவினால் இஸ்லாமிய ஆட்சிக்கு முந்தைய இந்தியா, பல விகாரைகளைக் கொண்ட நாடாக விளங்கியது. அவை பல்கலைக்கழகக் கல்வியை வழங்கியதோடு, புனித நூல்களின் கருவூலச் சேகரங்களாகவும் திகழ்ந்தன. நாளந்தாவைப் போன்றே பல விகாரைகள் உலகப்புகழ் பெற்றவையாகும்.

## விகாரைகள்



நாளந்தா பௌத்த விகாரை

இந்தியத் தொல்லியல் துறையால் காவிரிப்பூம்பட்டினத்தில் அகழ்வாய்வு செய்து ஒரு பௌத்த விகாரையும் ஒரு கோவிலும் கண்டறியப்பட்டது. மேலும் 125க்கும் மேற்பட்ட ஆய்விடங்களில் நூற்றுக்கணக்கான கல்சிற்பங்களும் செப்புச்சிலைகளும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பௌத்தம் தமிழகம் முழுவதும் பரவியிருந்தது என்பதற்கு இவைகளே சான்றுகளாகும். திருவாரூர் மாவட்டத்தில் மிகவும் ஒதுக்கமாயுள்ள

திருநாட்டியட்டாங்குடி கிராமத்தின் ஒரு வயலில் கிணறு வெட்டும்போது 1.03 மீட்டர் உயரமுடைய, பத்மாசன கோலத்திலுள்ள புத்தரின் சிலையொன்று கிடைத்துள்ளது.



பத்மாசன கோலத்தில் புத்தர்

### 3. ஆசீவகத் தத்துவம்

ஆசீவகர்கள் வினைப்பயன்(கர்மா), மறுபிறவி, முன்தீர்மானம் ஆகிய கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆசீவகப் பிரிவின் தலைவர் மற்கலி கோசலர் ஆவார். ஆசீவகர்கள் மிகக் கடுமையான துறவறத்தைக் கடைபிடித்தனர். ஆசீவக சமயமும் அதன் தத்துவமும் வேதப்பாடல்களிலும் பிராமணங்கள், ஆரண்யங்கள் ஆகியவற்றிலும் பண்டைய சமஸ்கிருதத் தொகுப்புகளிலும் சமண பௌத்த சமயங்களுக்கு முந்தைய காலப்பகுதியைச் சேர்ந்த ஆய்வுகளிலும் காணக் கிடைக்கின்றன. ஆசீவகத்திற்கான இலக்கியங்கள் இல்லாது போனாலும் கோசலரின் தத்துவங்கள் ஏனைய மதங்களில் ஜீவித்திருக்கின்றன.

ஆறாண்டு காலங்கள் கோசலா மகாவீரருடன் நெருக்கமாக நட்புக் கொண்டிருந்தார். பின்னர் இருவரும் பிரிந்தனர். மௌரியப் பேரரசர் அசோகரும் அவருடைய பேரன் தசரதாவும் ஆசீவர்களை ஆதரித்தனர். மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் வடஇந்தியாவில் ஆசீவகம் சரிவைச் சந்தித்தது. இதனிடையே தென்னிந்தியாவில் பரவியிருந்த ஆசீவகம் அங்கே பல நூற்றாண்டுகளுக்குத் தொடர்ந்து செயல்பட்டது.



ஆசீவகத் துறவிகளைக் குறிக்கும் படம்

வரலாறு முழுவதிலும் ஆசீவகர்கள் அனைத்து இடங்களிலும் அடக்குமுறையைச் சந்திக்க நேர்ந்தது. பல்லவர், சோழர், ஹோய்சாளர் ஆகியோரது ஆட்சிக் காலங்களில் கிராம சமூகத்தினர் ஆசீவகர்கள் மீது சிறப்பு வரிகளை விதித்தனர். இதுபோன்ற இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும் 14ஆம் நூற்றாண்டு வரை இன்றைய கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில், பாலாற்றின்



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_3.indd 162 9/30/2023 11:07:02 AM

பகுதிகளில் (வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்கள்) ஆசீவகம் செல்வாக்கு பெற்றுத்திகழ்ந்தது. இறுதியில் ஆசீவகர்கள் சைவம் அல்லது வைணவத்தால் ஈர்த்துக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

## சுருக்கம்

- ❖ சமணத்தை அறிந்து கொள்வதற்கான சான்றுகளும் இலக்கியங்களும் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.
- ❖ தமிழகத்தில் சமணம் இருந்தமை குறித்துத் திறனாய்வு செய்யப்பட்டுள்ளது.
- ❖ தமிழகத்திலிலுள்ள சமண நினைவுச் சின்னங்களும் கலைகளும் முக்கியமாக சித்தன்னவாசலும் கழுகுமலையும் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- ❖ 'பள்ளி' வாயிலாக கல்விக்கு சமணர்கள் ஆற்றிய பங்களிப்பு விளக்கப்பட்டுள்ளது.
- ❖ பௌத்த போதனைகள் பகுத்தாய்வு செய்யப்பட்டுள்ளன.
- ❖ தமிழ் நாட்டில் பௌத்தம் செயல்பட்டது ஆய்வு செய்யப்பட்டுள்ளது
- ❖ தமிழகத்தின் பௌத்த மரபு குறித்து விவாதிக்கப்பட்டுள்ளன.
- ❖ ஆசீவகத் தத்துவத்தின் சாரமும் அது தமிழ் நாட்டில் இருந்தமையும் விவரிக்கப்பட்டுள்ளன.

## மூலாதார நூல்கள்


1. *Glimpses of World Religions: Buddhism,* Jaico, 2004).
2. Henry Thomas, Dana Lee Thomas, *Living Biographies of Great Religious Leaders,* Bharatiya Vidya Bhavan, 1996.
3. Abraham Early, *Gem in the Lotus,* Penguin, 2002.
4. P.C. Alexander, *Buddhism in Kerala,* Annamalai University, 1949.
5. *Times of India,* 21 July 2014.
6. *The Hindu,* 7 September 2014.


## கலைச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பழமை சாராத, வழக்கத்திலுள்ள மதக்கொள்கைக்கு மாறான | heterodox | not conforming to orthodox beliefs, especially religious ones, unorthodox |
| 2. | ஒரு விதி, பொது ஒழுங்கு | canon | a rule, an accepted principle |
| 3. | ஒருமனதாக | unanimous | all sharing the same view |
| 4. | துறவி, சந்நியாசி | ascetic | monk, hermit |
| 5. | சீர்கெடு, மோசமடை | deteriorate | to grow worse |
| 6. | தடங்கள், அடையாளங்கள், சுவடுகள் | vestiges | things left behind, remains, traces |
| 7. | அடிநில குகை | cavern | a large deep underground cave |
| 8. | சிறு குன்று | hillock | small hill, mound |
| 9. | கட்டடத்தின் முகப்பு | facade | the front of a building |
| 10. | சுவரில் அல்லது மேற்கூரையில் வரையப்படும் ஓவியங்கள் | frescoes | paintings done in water colour on a wall or ceiling |
| 11. | சுவரோவியம் | mural | a large picture painted on a wall |
| 12. | உத்வேகம், உந்துசக்தி | impetus | motivation, stimulus |
| 13. | இரட்சிப்பு, முக்தி, விமோசனம் | salvation | saving from harm, ruin or loss |
| 14. | ஐயுறவுவாத, சமய ஐயுறவாளர் | sceptic (skeptic) | someone who habitually doubts accepted beliefs |
| 15. | அடக்கமுடியாத ஆசை, மிகு விருப்பம் | craving | a strong desire |
| 16. | துன்புறுத்தல், அடக்குமுறை | persecution | unfair treatment of a person or a group, especially because of their religious or political beliefs |



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_3.indd 163 9/30/2023 11:07:02 AM

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. சமணப்பேரவை முதன்முதலில் எங்கு கூடி தங்களின் சமய போதனைகளையும் ஒழுக்க விதிகளையும் தொகுக்க முற்பட்டனர்?
   அ) பாடலிபுத்திரம் ஆ) வல்லபி
   இ) மதுரா ஈ) காஞ்சிபுரம்
2. ஆகம சூத்திரங்கள் எம் மொழியில் எழுதப்பட்டன?
   அ) அர்த்த–மகதி பிராகிருதம் ஆ) இந்தி
   இ) சமஸ்கிருதம் ஈ) பாலி
3. கீழ்க்கண்டவற்றுள் எது களப்பிரர்களால் ஆதரிக்கப்பட்டது ?
   அ) புத்தமதம் ஆ) சமணமதம்
   இ) ஆசீவகம் ஈ) இந்து மதம்
4. தலையணைப்பகுதி செதுக்கப்படாமல் உள்ள கற்படுக்கைகளை எங்கு காணலாம்?
   அ) வேலூர் ஆ) காஞ்சிபுரம்
   இ) சித்தன்னவாசல் ஈ) மதுரை
5. கழுகு மலை குடைவரைக் கோவில் யாரால் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது?
   அ) மகேந்திரவர்மன்
   ஆ) பராந்தக நெடுஞ்சடையான்
   இ) பராந்தக வீரநாராயண பாண்டியன்
   ஈ) இரண்டாம் ஹரிஹரர்

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. தமிழ் நாட்டிலுள்ள சமணச் சிலைகளில் மிக உயரமாகக் கருதப்படும் சிலை ______________
2. புத்த சரிதத்தை எழுதியவர் ______________ ஆவார்
3. ______________ நூற்றாண்டில் சீனப் பயணி யுவான்சுவாங் பல்லவ நாட்டிற்கு வந்திருந்தார்.
4. பௌத்தம் சரிவைச் சந்தித்துக் கொண்டிருக்கும் சமயம் என ______________ எடுத்துரைக்கின்றது
5. மௌரியப் பேரரசர் அசோகரும் அவருடைய பேரன் தசரதாவும் ______________ ஆதரித்தனர்.

### III. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | கல்ப சூத்ரா | – | திருத்தக்கத் தேவர் |
| 2. | சீவகசிந்தாமணி | – | மதுரை |
| 3. | நேமிநாதர் | – | நாகசேனர் |
| 4. | மிலிந்தபன்கா | – | பத்ரபாகு |
| 5. | கீழக் குயில் குடி | – | 22வது தீர்த்தங்கரர் |

### IV. கீழ்க் காண்பனவற்றிற்கு விடையளி

1. **பொருந்தாததைக் காண்**

   திருப்பருத்திக் குன்றம், கீழக் குயில் குடி, கழுகுமலை, நாகப்பட்டினம், சித்தன்னவாசல்

2. **கூற்று:** பழைய மதங்களின் குருமார்களிடமிருந்து தான் கற்றுக்கொள்வதற்கு எதுவுமில்லை என கௌதமர் தெரிந்து கொண்டார்.

   **காரணம்:** துறவு வாழ்க்கையை மேற்கொள்வதே முக்தி அடைவதற்கான ஒரேவழி என மதங்கள் அறிவித்தன.

   அ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்
   ஆ) கூற்று சரி , காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
   இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.
   ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

3. **சரியான கூற்றினைக் / கூற்றுகளைக் காண்க**

   i) கி.மு. ஆறாம் நூற்றாண்டில், இந்தியாவில் வெவ்வேறான 62 தத்துவ சமயப்பள்ளிகள் செழிப்புற்று இருந்தன.



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_3.indd 164 9/30/2023 11:07:02 AM

ii) 'பள்ளி' என்பது புத்தமதத்தாரின் கல்வி மையமாகும்.

iii) அரசர்கள் அளித்த ஆதரவினால் இஸ்லாமிய ஆட்சிக்கு முந்தைய இந்தியா, பல விகாரைகளைக் கொண்ட நாடாக விளங்கியது.

iv) ஆசீவகம் பதினைந்தாம் நூற்றாண்டுவரை தொடர்ந்து செயல்பட்டது.

அ) (i) மற்றும் (iii) சரி

ஆ) (i, ii) மற்றும் (iv) சரி

இ) (i) மற்றும் (ii) சரி

ஈ) (ii, iii) மற்றும் (iv) சரி

**4. தவறான இணையைக் காண்க**

1. பார்சவநாதர் – 22 வது தீர்த்தங்கரர்
2. மகாபாஷ்யா – இலங்கையைச் சேர்ந்த வரலாற்றுத் தொகுப்பு
3. விசுத்திமக்கா – புத்தகோசா
4. புத்தர் – எண்வகை வழிகள்

## V. சரியா? தவறா?

1. 12வது ஆகமசூத்திரம் தொலைந்து போனதாகக் கருதப்படுகிறது.
2. வரலாறு முழுவதிலும் ஆசீவகர்கள் அனைத்து இடங்களிலும் அடக்குமுறையைச் சந்திக்க நேர்ந்தது.
3. சமண நிறுவனங்களில் சமூக, சமய வேறுபாடுகளின்றி அனைவருக்கும் கல்வி கற்பிக்கப்பட்டது.
4. நாளந்தா, தட்சசீலம், விக்கிரமசீலா ஆகியன மிகச்சிறந்த புனிதத்தலங்களாயின.
5. சோழர்காலம் முதலாகவே பௌத்தம் சைவ, வைணவ சமயங்களின் சவால்களை எதிர்கொண்டது.

## VI. கீழ்க்காண்பனவற்றுக்கு விடையளி

1. சமணத்தின் ஐம்பெரும் உறுதி மொழிகளைப் பட்டியலிடுக.
2. புத்தரின் நான்கு பேருண்மைகளைக் கூறுக?
3. திரிபிடகாவின் மூன்று பிரிவுகளை விளக்குக.
4. சித்தன்னவாசலின் முக்கியத்துவத்தை வெளிக்கொணர்க.

## VII. விரிவான விடையளி

1. சமணம், பௌத்தம் பற்றி அறிய உதவும் சான்றுகளை வரிசைப்படுத்துக.
2. தமிழ்நாட்டில் கண்டறியப்பட்ட சமணம், பௌத்தம், சார்ந்த ஆதார எச்சங்களை விளக்கமாய் பட்டியலிடுக
3. ஆசீவகத் தத்துவத்தின் சாரம் மற்றும் அது தமிழ்நாட்டில் தோன்றிய விதம் குறித்து விவாதிக்க

## VIII. உயர் சிந்தனை வினா

1. வைதீக மதங்களுக்கும் வேதமதத்திற்கும் உள்ள பொதுவான அம்சங்களையும் வேறுபாடுகளையும் அலசி ஆராய்க.
2. ஏன் இத்தகைய அவைதீக மதங்கள் இந்தியாவின் முக்கிய மதங்களாய் உருவெடுக்க முடியவில்லை?

## IX. செயல்பாடு

மாணவர்கள் மாவட்ட அருங்காட்சியகங்களுக்குச் சென்று எங்கெல்லாம் பௌத்தம், சமணம் சார்ந்த எச்சங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளனவோ அவற்றைப் பார்வையிட்டு வரலாம்



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_3.indd 165 9/30/2023 11:07:02 AM

## இணையச்செயல்பாடு

# புத்த மதம்




இச்செயல்பாட்டின் மூலம் புத்தமதத்தினரைப் பற்றின கதைகளை அறிந்து கொள்ளலாம்.

### படிநிலைகள்:

**படி 1:** கொடுக்கப்பட்டுள்ள உரலி (URL) அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப்பக்கத்திற்கு செல்க.

படி 2: அதில் Story of Buddha எனும் வண்ணமிகு பக்கம் ஒன்று தோன்றும்.

படி 3: திரையில் தோன்றும் புத்தரின் படத்தினை சொடுக்கவும்.

படி 4: கிழே கொடுக்கப்பட்டுள்ள ebook னை சொடுக்கி இந்த புத்தகத்திற்கான PDF வடிவமைப்பினை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.



படி 1



படி 2



படி 3

**புத்த மதம் உரலி:**

http://www.buddhanet.net/e-learning/buddhism/storybuddha.htm

** படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

* தேவையெனில் 'Adobe Flash' ஐ அனுமதிக்கவும்.



7th Social Science_Term_III_History_ Tamil_Unit_3.indd 166 9/30/2023 11:07:03 AM

# புவியியல்



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 167 9/30/2023 11:16:11 AM

## அலகு – 1

# கண்டங்களை ஆராய்தல் – வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா



### கற்றல் நோக்கங்கள்

- ❖ வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா கண்டங்களின் அமைவிடம், எல்லைகள் மற்றும் அரசியல் பிரிவுகள் குறித்து புரிந்து கொள்ளுதல்.
- ❖ இயற்கைப் பிரிவுகள் மற்றும் ஆறுகள் பற்றி புரிந்து கொள்ளுதல்.
- ❖ வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்க கண்டங்களின் காலநிலை, இயற்கை தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- ❖ இயற்கை வளங்கள், பொருளாதார செயல்பாடுகள் மற்றும் கலாச்சார கலவை குறித்து விவாதித்தல்.
- ❖ வரைபடத்தில் இடங்களை குறிக்கும் திறனை வளர்த்தல்.

### அறிமுகம்

**மாணவர்கள் :** காலை வணக்கம் அம்மா.

**ஆசிரியர் :** அனைவருக்கும் வணக்கம். உங்களது அரையாண்டு தேர்வு விடுமுறையை நன்றாக கொண்டாடினீர்களா?

**மாணவர்கள் :** நன்றாக கொண்டாடினோம் அம்மா.

**ஆசிரியர் :** அருமை. நம் உலகத்தில் எத்தனை கண்டங்கள் உள்ளன என உங்களுக்கு தெரியுமா? அவற்றை உங்களில் யாராவது ஒருவர் பெயரிட்டு சொல்லுங்கள்.

**மாணவர்கள் :** உலகில் ஏழு கண்டங்கள் உள்ளன. அவை வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா, அண்டார்ட்டிகா ஆஸ்திரேலியா மற்றும் ஆப்பிரிக்கா.

**ஆசிரியர் :** சென்ற ஆண்டு எத்தனை கண்டங்களை பற்றி படித்து உள்ளீர்கள்?

**மாணவர்கள் :** ஐரோப்பா மற்றும் ஆசியா கண்டங்கள் பற்றி சென்ற ஆண்டு படித்தோம் அம்மா.

**ஆசிரியர் :** சரி. இவ்வாண்டு வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா ஆகிய இரு கண்டங்களைப் பற்றி நாம் படிப்போம்.

## அ. வட அமெரிக்கா

பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டதால் வட அமெரிக்காவும் தென் அமெரிக்காவும் "புதிய உலகு"

என அழைக்கப்படுகிறன. இந்தியாவிற்கான புதிய கடல் வழியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில், 1492 ஆம் ஆண்டு வட அமெரிக்காவை கிறிஸ்டோபர் கொலம்பஸ் கண்டுபிடித்தார். இத்தாலிய ஆய்வுப்பயணி அமெரிக்கோ வெஸ்புகி இங்கு வந்ததை அடுத்து 1507 ஆம் ஆண்டு இந்நிலப்பகுதி அமெரிக்கா என பெயரிடப்பட்டது. அமெரிக்காவின் அமைவிடம், எல்லைகள், நிலதோற்றம், ஆறுகள், காலநிலை, இயற்கை தாவரங்கள், கனிம வளங்கள் மற்றும் போக்குவரத்து ஆகியவற்றைப் பற்றி இப்பாடத்தில் நாம் காணலாம்.

## அமைவிடம் மற்றும் நிலப்பரப்பு

வட அமெரிக்கா 7° வடக்கு முதல் 84° வடக்கு வரையிலான அட்சக்கோடுகளுக்கு இடையில் முழுவதுமாக வட அரைக்கோளத்தில் அமைந்துள்ளது.கடகரேகை(23½°வ)மெக்சிகோ வழியாகவும் ஆர்க்டிக் வளையம் (66½ °வ) கனடாவின் வடக்கு பகுதிகள் வழியாகவும் கடந்து செல்கின்றன. 53° மே மற்றும் 180° மே தீர்க்கரேகைகளுக்கு இடையில் வட அமெரிக்கா மேற்கு கோளத்தில் முழுவதுமாக அமைந்துள்ளது. தீர்க்கரேகைகளின் அடிப்படையில் மிக அதிகமான பரப்பளவை கொண்டிருப்பதால் ஏழு நேர மண்டலங்களை உள்ளடக்கியுள்ளது. வட அமெரிக்காவில் மொத்த நிலப்பரப்பு 24,709,000 சதுர கிலோ மீட்டர்கள் ஆகும். இவை உலகின் மொத்த நிலப்பரப்பில் 16.50 சதவிகிதத்தை ஆக்கிரமித்துள்ளது.

## எல்லைகள்

வட அமெரிக்கா மேற்கில் பசிபிக் பெருங்கடலையும், கிழக்கில் அட்லாண்டிக் பெருங்கடலையும், வடக்கில் ஆர்க்டிக் பெருங்கடலையும், தெற்கில் தென் அமெரிக்காவையும் எல்லைகளாக கொண்டுள்ளது. பனாமா நிலச்சந்தி வட அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் இணைக்கிறது. பேரிங் நீர்ச்சந்தி வட அமெரிக்காவை ஆசியாவில் இருந்து பிரிக்கிறது.

## அரசியல் பிரிவுகள்

ஆசியா, ஆப்பிரிக்காவிற்கு அடுத்தபடியாக மூன்றாவது பெரிய கண்டமாக வடஅமெரிக்கா திகழ்கிறது. வடஅமெரிக்கா மூன்று பெரிய நாடுகளையும் பல சிறிய நாடுகளையும் உள்ளடக்கியது. வட அமெரிக்கக் கண்டத்தின் மிகப்பெரிய நாடாக கனடாவும் அதனைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்க நாடுகளும் மெக்ஸிகோவும் இரண்டாம் மூன்றாம் இடத்தில் உள்ளன. மெக்ஸிகோவிற்கு தென்பகுதியில் அமைந்துள்ள நிகாராகுவா, ஹாண்டுராஸ், குவாதமாலா, பனாமா, கோஸ்டாரிக்கா, எல்சால்வடார் மற்றும் பெலிஸ் ஆகிய நாடுகள் கொண்ட பகுதி மத்திய அமெரிக்கா என அழைக்கப்படுகிறது.

உங்களுக்குத் தெரியுமா?

**நிலச்சந்தி** : இரண்டு மிகப் பெரிய நிலப் பகுதிகளை இணைக்கும் சிறிய துண்டு.

**நீர்ச்சந்தி** : இரண்டு பெரிய நீர் பரப்புகளை இணைக்கும் சிறிய நீர் பரப்பு.



வட அமெரிக்காவின் அரசியல் பிரிவுகள்

## இயற்கை அமைப்பு

இயற்கை அமைப்பு பிரிவுகளில் மிகப்பெரிய பன்முகத் தன்மையை கொண்ட கண்டம் வட அமெரிக்கா. மெக்கென்லீ சிகரம் கடல் மட்டத்திலிருந்து 6194 மீட்டர் உயரத்தோடு வட அமெரிக்காவின் உயரமான சிகரமாக திகழ்கிறது. மரண பள்ளத்தாக்கு கடல் மட்டத்திலிருந்து 86 மீட்டர் ஆழத்தில் உள்ளது. இது வட அமெரிக்கக் கண்டத்தின் மிக ஆழமான பகுதியாக கருதப்படுகிறது. பூமியின் மிகவும் பழமையான மற்றும் இளமையான பாறைகள் இங்குள்ளன.

இயற்கை அமைப்பு பிரிவுகளின் அடிப்படையில் வட அமெரிக்கா கீழ்கண்ட நான்கு முக்கிய பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. ராக்கி மலைகள்
2. பெரும் சமவெளிகள்
3. அப்பலேஷியன் உயர் நிலம்
4. கடற்கரை சமவெளிகள்

### 1. ராக்கி மலைகள்

வட அமெரிக்கா கண்டத்தின் மேற்குப் பகுதியில் இளம் மடிப்பு மலைகளை நீண்ட மலைத்தொடர்களாக கொண்டது ராக்கி




வட அமெரிக்காவின் இயற்கை பிரிவுகள்



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 170 9/30/2023 11:16:14 AM

மலைகள். இது உயர் பீடபூமிகள், குறுகிய பள்ளத்தாக்குகள் மற்றும் அகன்ற ஆற்றுப் படுகைகளை ஆங்காங்கே கொண்டுள்ளது. வடக்கில் அலாஸ்காவில் இருந்து தெற்கில் பனாமா நிலச்சந்தி வரை சுமார் 4,800 கிலோ மீட்டர் நீளத்திற்கு இம்மலைத்தொடர் நீண்டுள்ளது. இதன் அகலம் 110 கிலோ மீட்டர் முதல் 480 கிலோமீட்டர் வரை வேறுபடுகிறது. ராக்கி மலைத்தொடர் இரண்டு இணை மலைத் தொடர்களை கொண்டுள்ளது. கிழக்கில் இருக்கும் மலைத்தொடரை ராக்கி எனவும் மேற்கில் இருக்கும் மலைத்தொடரை கடற்கரை மலைத்தொடர் எனவும் குறிப்பிடுகின்றனர். சியார் நிவாரா மலைத்தொடர் அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் மத்திய கலிபோர்னியா பள்ளத்தாக்கிற்கும் பெரும் வடிநில பகுதிக்கும் இடையில் அமைந்துள்ளது. மெக்சிகோ நாட்டில் இதனை சியாரர் மாட்ரே என அழைக்கின்றனர். ராக்கி மலைத்தொடரும் கடற்கரை மலைத்தொடரும் மேற்கத்திய கார்டில்லெராஸ் என அழைக்கப்படுகின்றன. இம்மலைத் தொடர்களுக்கு இடையில் பல உயரமான மலையிடை பீடபூமிகள் உள்ளன. இவற்றில் மெக்ஸிகன் பீடபூமி, கொலரடோ பீடபூமி மற்றும் கொலம்பியா பீடபூமி ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

**உங்களுக்குத் தெரியுமா?**

பல இயங்கும் எரிமலைகளை கொண்டுள்ளதால் கார்டில் லெராஸ், பசிபிக் நெருப்பு வளையத்தின் ஒரு பகுதியாக கருதப்படுகிறது. இப்பகுதி நில அதிர்வுகளையும் அடிக்கடி எதிர் கொள்கிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

**கண்டங்களும் அதன் உயரமான சிகரங்களும்**

ஆசியா : எவரெஸ்ட் சிகரம் (8848 மீ)

தென் அமெரிக்கா : அகான்காகுவா (6961 மீ.)

வட அமெரிக்கா : மெக்கென்லீ சிகரம் (6194 மீ.)

ஆப்பிரிக்கா : கிளிமஞ்சாரோ (5895 மீ.)

ஐரோப்பா : எல்பரஸ் சிகரம் (5642 மீ.)

அண்டார்டிகா : வின்சன் மாசிப் சிகரம் (4892 மீ.)

ஆஸ்திரேலியா : காஸ்கியூஸ்கோ சிகரம் (2228 மீ.)

## பெரும் சமவெளிகள்

ராக்கி மலைகளின் கிழக்கிலும் அப்பலேஷியன் மலைகளின் மேற்கிலும் வட அமெரிக்காவின் பெரும் சமவெளி பரவியுள்ளது.

இச்சமவெளி வடக்கில் ஆர்டிக் பெருங்கடல் முதல் தெற்கில் மெக்ஸிகோ வளைகுடா வரை வடஅமெரிக்க கண்டத்தின் ஐந்தில் மூன்று பகுதி நிலப்பரப்பில் பரவியுள்ளது. கிழக்கு மேற்காக அப்பலேஷியன் உயர் நிலங்கள் முதல் ராக்கி மலைகள் வரையும் இது பரவி காணப்படுகிறது. ராக்கி மலைத்தொடர்களின் மலை அடிவாரத்தில் காணப்படும் பெரும் சமவெளியின் மேற்குப் பகுதி உயர் சமவெளிகள் என்று அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் பாயும் பெரும்பாலுமான நதிகள் மேற்கு உயர்நிலப்பகுதியில் இருந்தே தோன்றுகின்றன. இச்சமவெளி கிழக்கு மற்றும் தெற்கு நோக்கி மென் சரிவை கொண்டுள்ளது. இங்கு மிஸிஸிப்பி, மிஸ்ஸௌரி போன்ற ஆறுகள் பாய்கின்றன.

## அப்பலேஷியன் உயர்நிலங்கள்

ராக்கி என அழைக்கப்படும் மேற்கு உயர்நிலங்கள் போன்று அப்பலேஷியன் உயர்நிலங்கள் தொடர்ச்சியானவையல்ல. அப்பலேஷியன் உயர் நிலம் உயரம் குறைந்தும் அகன்றும் காணப்படுகின்றது. 1800மீட்டருக்கு மேல் உயரமான மிகச் சில சிகரங்களே உள்ளன. கிரீன்லாந்திலுள்ள உயர் பீட பூமிகள், கனடாவில் உள்ள லாப்ரடார் அல்லது லாரன்ஷியன் பீடபூமி மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் உள்ள

அப்பலேஷியன் மலைகள் ஆகியவற்றை அப்பலேஷியன் உயர்நிலம் உள்ளடக்கியுள்ளது. வானிலை சிதைவு காரணமாக மடிப்பு மலைகள் சிதைந்து, மேற்கு உயர் நிலங்களை விட உயரம் குறைந்து காணப்படுகின்றன. நிலக்கரி, இரும்பு, தாமிரம் போன்ற கனிம வளங்கள் நிறைந்து, வட அமெரிக்க பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பங்காற்ற கூடிய பகுதியாக அப்பலேஷியன் உயர்நில பகுதிகள் விளங்குகின்றன.

## கடற்கரை சமவெளிகள்

அமெரிக்காவின் கடற்கரை சமவெளிகள் உலகில் மிகவும் இன்றியமையானவையாக கருதப்படுகின்றன. அட்லாண்டிக் கடற்கரை சமவெளி தற்போது பெரும்பாலும் நீருக்கடியில் மூழ்கியுள்ளது. இவை மிகவும் உயரம் குறைந்து விவசாயத்திற்கு பயன்படாத மணற்பாங்கான நிலப்பகுதி ஆகும். இங்கு சதுப்பு நிலப் பகுதிகள் அதிகமாக காணப்படுகின்றன. ஆறுகளின் முகத்துவாரங்கள், வளைகுடாக்கள் கடற்கரை சமவெளியில் அமைந்து முக்கிய துறைமுகங்களாக செயல்படுகின்றன.

## ஆறுகள்

வட அமெரிக்க கண்டத்தில் பல ஆறுகள் ஓடுகின்றன.அவற்றில்சிலபனியாறுகளிலிருந்து உருவாகி இந்நிலப்பரப்பில் பயணிக்கின்றன. மிஸிஸிப்பி மற்றும் மிஸ்ஸௌரி ஆறுகள் வட அமெரிக்காவின் மிகநீளமான ஆறுகளாகும். இவை இரண்டும் இணைந்து நோான் பேனாவிலிருந்து மெக்ஸிகோ வளைகுடா வரை 6114 கிலோ மீட்டர் நீளம் பாய்ந்து உலகின் நான்காவது மிகப்பெரிய நதி அமைப்பாக உள்ளது. உருவாகும் இடத்திலிருந்து 3700 கிலோமீட்டர்களுக்கு பிறகு மிஸிஸிப்பி ஆற்றுடன் கலக்கிறது. வட அமெரிக்காவின் இரண்டாவது மிகப்பெரிய ஆற்றுப்படுகையாக இருப்பது மெக்கன்ஸி ஆறு. இது கிரேட் ஸ்லேவ் ஏரியில் ஆரம்பித்து ஆர்க்டிக் பெருங்கடலில் கலக்கிறது.

ஒன்டேரியோ ஏரியில் தன் பயணத்தை துவங்கி வடகிழக்காக பயணித்து அட்லாண்டிக் பெருங்கடலில் கலக்கிறது புனித லாரன்ஸ் ஆறு. மேற்கு பீடபூமியில் ஓடும் கொலம்பியா ஆறும் அதன் கிளை ஆறுகளும் மிக ஆழமான பள்ளத்தாக்குகளை உருவாக்குகின்றன. கிராண்ட் கேன்யான் எனப்படும் உலகப் புகழ்வாய்ந்த மிகப்பெரிய பள்ளத்தாக்கினை கொலராடோ ஆறு கொலம்பியா பீடபூமியில் உருவாக்கியுள்ளது. இவ்வாறுகள் போக்குவரத்திற்கு பயன்படுத்தும் வகையில் இல்லை என்றாலும் அவற்றின் குறுக்கே அணைகள் கட்டப்பட்டு நீர்ப்பாசனத்திற்கும் மின் உற்பத்திக்கும் பயன்படுத்தப்படுகின்றன. மேற்கு மலைத்தொடர் பகுதியின் வடமேற்கிலிருந்து உருவாகும் யூகான் ஆறு ஆண்டின் எட்டு மாதங்களுக்கு உறைந்த நிலையிலேயே காணப்படுகிறது. மெக்ஸிக்கோ வளைகுடாவில் கலக்கும் ரியோ கிரேன்டி நதி அமெரிக்காவிற்கும் மெக்சிகோவிற்கும் இடையில் எல்லையாக அமைந்துள்ளது.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> கிராண்ட் கேன்யான் (Grand Canyon) என்பது அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் கொலராடோ ஆற்றினால் உருவாக்கப்பட்ட செங்குத்தான பக்கங்களைக் கொண்ட மிக ஆழமான பள்ளத்தாக்கு ஆகும்

இக்கண்டத்தின் பனி உறைந்த, குறிப்பாக வடக்கு மின்னசொட்டா பகுதியில் பல ஏரிகள் காணப்படுகின்றன. இவ்வேரிகள் மிகச்சிறியதாக இருப்பதால் பொழுதுபோக்கு அம்சங்களாக பயன்படுத்தப்படுகின்றன. கிரேட் ஏரிகள் கண்டத்தின் மேற்கு கிழக்காக பரவலாக காணப்படுகின்றன. இதன் முக்கிய தொகுப்பு ஐந்து முக்கிய ஏரிகளை கொண்டுள்ளது. இதில் மிகப்பெரிய ஏரியானது சுப்பீரியர் ஏரி ஆகும். இது உலகின் மிகப்பெரிய நன்னீர் ஏரி



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 172 9/30/2023 11:16:14 AM

ஆகும். வின்னிபெக் ஏரி, கிரேட் பேர் ஏரி (Great Bear Lake) மற்றும் அதபாஸ்கா ஏரி ஆகியவை கனடாவில் காணப்படும் பிற ஏரிகள் ஆகும்.



மிஸிஸிப்பி ஆறு

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> "பெரிய சேற்று ஆறு" என்ற புனைப் பெயருடன் மிஸிஸிப்பி ஆறு அழைக்கப்படுகிறது. இது மலைகளில் பாய்ந்து வரும் போது மண்ணையும் சேற்றையும் அடித்து வருவதால் இதற்கு இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது.
>
> மிசிசிபி மற்றும் மிசௌரி ஆறுகளின் துணை ஆறுகளின் பெயர்களை அடிப்படையாக கொண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டின் சில மாநிலங்களுக்கு பெயரிடப்பட்டுள்ளது.

## காலநிலை

அட்சக்கோடுகளின் அடிப்படையில் வெப்பமண்டல பகுதி முதல் தூந்திர பகுதி வரை பரவியுள்ள வட அமெரிக்கக் கண்டத்தில் ஆசியாவை போலவே பல தரப்பட்ட காலநிலைகள் காணப்படுகின்றன. இந்தியாவின் இமயமலைகள் போலில்லாமல் ராக்கி மலைத்தொடர் வடக்கு தெற்காக அமைந்திருப்பதால், இது ஆர்டிக் பகுதியில் இருந்து வீசும் கடுங்குளிர் காற்றினை தடுக்கும் அரணாக செயல்படவில்லை. மத்திய சமவெளிகளில் ஊடுருவும் குளிர் காற்றினால் வட அமெரிக்காவில் நீண்ட கடுங் குளிர்காலமும் குறுகிய வெப்பமான கோடைக் காலமும் காணப்படுகிறது. சூறாவளி புயல்களினால் இங்கு மழைப்பொழிவு உண்டாகிறது. ஆர்டிக் பகுதி குளிர்ந்தும் வறண்டும் காணப்படுகிறது. இங்கும் குளிர் காலங்கள் நீண்டு கடும் குளிரோடும் கோடை காலங்கள் குறுகி இருக்கின்றன. வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லச்செல்ல கோடைகாலம் வெப்பமானதாகவும், குளிர்காலம் மிகுந்த குளிரோடும் காணப்படுகின்றன. மத்திய சமவெளிகளில் உறைபனியோடு கூடிய குளிர்காலமும் வெப்ப மண்டலம் போன்ற அதிக வெப்பமுடைய கோடை காலமும் காணப்படுகின்றது.

வட அமெரிக்கக் கண்டத்தின் தெற்குப்பகுதியில் பெரும்பாலும் ஆண்டு முழுவதும் வெப்பமான காலநிலையே நிலவி வருகிறது. மிஸிஸிப்பி மிஸ்சௌரி ஆறுகளின் முகத்துவார பகுதிகளும் வளைகுடா கடற்கரை பகுதிகளும் கோடை காலங்களில் வீசும் வடகிழக்கு வியாபாரக் காற்றினால் கோடை மழையைப் பெறுகின்றன. சூடான ஈரப்பதம் மிகுந்த தென்மேற்குப் பருவக் காற்றுகள் வட அமெரிக்காவின் வட மேற்குப் பகுதிகளுக்கு மழை பொழிவை தருவதோடு இல்லாமல் அப்பகுதி வெப்பமாக இருக்கவும் உதவுகிறது. வடமேற்கு கடற்கரை பகுதியில் நகரும் அலாஸ்கா வெப்ப நீரோட்டம் அப்பகுதியில் பனி உறையாமல் இருப்பதற்கு காரணமாகிறது. ஈரப்பதம் மிக்க குளிர் காலத்தையும் வறண்ட கோடை காலத்தையும் உள்ளடக்கிய மத்திய தரைக்கடல் காலநிலை அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் காணப்படுகிறது.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> மேற்கத்திய காற்றுகள் அல்லது எதிர் வர்த்தக காற்றுகள் 30° முதல் 60° வரையிலான மத்திய அட்சகோட்டுப் பகுதியில் மேற்கிலிருந்து கிழக்காக வீசும் நிலையான காற்றுகள் ஆகும்.



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 173
9/30/2023 11:16:15 AM

வட அமெரிக்கக் கண்டத்தில் காணப்படும் காடுகளின் வகைகள், தாவரங்கள் மற்றும் விலங்குகள்

| வரிசை எண் | காடுகளின் வகை | காலநிலை | பகுதி | தாவரங்கள் | விலங்குகள் |
|---|---|---|---|---|---|
| 1 | தூந்திர காடுகள்  | நீண்ட கடுமையான கடும் குளிர் காலங்கள். குறுகிய குளிர்ச்சியான கோடைகாலம் மற்றும் மிகக்குறைந்த மழைப் பொழிவு.. | கனடாவின் வடக்கு கடற்கரைப் பகுதிகள் மற்றும் வட தீவுகள் | பாசிகள் மரப் பாசிகள் மற்றும் குள்ளமான வில்லோ மரங்கள் | ஆர்க்டிக் நரி, கலைமான், கஸ்தூரி எருது, பனிக்கரடி, வால்வரின், சாபில் மற்றும் நீல நரி. |
| 2 | டைகா அல்லது குளிர் மிதவெப்ப ஊசியிலைக் காடுகள்  | குளிரான குளிர்காலம், வெப்பமான குறுகிய கோடை காலம். குளிர் காலத்தில் மிக அதிகமான பனிப்பொழிவு. | தென் மத்திய அலாஸ்கா மற்றும் வடகிழக்கு கனடா | பைன், பின், தேவதாரு மற்றும் ஸ்புரூஸ் | நீர்நாய், நரி, வெள்ளை கீரி, ஸ்கங்க், கலைமான், கடமான், காட்டுமான், கருப்பு கரடிகள், கிரிஸ்லி கரடிகள் |
| 3. | மிதவெப்ப மண்டல பிரெயிரி புல்வெளி.  | கடுங் குளிர் காலம் வெப்பமான குறுகிய கோடை காலம். மிதமான மழை பொழிவு. | ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மத்திய பகுதி மற்றும் மத்திய கனடா. | புற்கள், முட்புதர்கள் மற்றும் மூலிகைகள். | கொயோடோ நாய், வளை தோண்டும் கொறி விலங்கு வகை, குழி முயல், புல்வெளி நாய், காட்டு எருமை (Bison) |
| 4. | மத்திய தரைக்கடல் தாவர வகைகள்  | வெப்பமான வறண்ட கோடைகாலம் குளிர்ந்து ஈரப்பதமான குளிர்காலம். | மேற்கு கடற்கரை எல்லை மற்றும் தென் கலிபோர்னியா | ஆலிவ், திராட்சை, ஆரஞ்சு, ஒக், வால்நட், அத்தி | குறிப்பிடும் வகையில் விலங்குகள் இங்கு காணப்பட வில்லை. |
| 5. | பாலைவன காடுகள்.  | குளிர்ந்த குளிர்காலம் மற்றும் வெப்பமான கோடைக்காலம். மிகவும் குறைந்த மழை பொழிவு. | தென்மேற்கு அமெரிக்கா மற்றும் மெக்சிகோ பாலைவனத்தின் வடக்குப் பகுதிகள். | கள்ளிச்செடி வகை, சகுவாரோ, சோல்லா கற்றாழை, யூக்கா | பாலைவன நரி, சிறு மான்வகை. (Gazelles), தேள், பல்லி, விரியன் பாம்புகள் |
| 6. | குளிர்ந்த மித வெப்ப இலையுதிர் காடுகள்.  | வெப்பமான கோடைகாலம் மற்றும் மிதமான குளிர்காலம். மிதமான மழை பொழிவும் காணப்படுகிறது. | புளோரிடா, வளைகுடா கடற்கரை, தென்கிழக்கு அமெரிக்கா | கொட்டை மரம், ஒக், நெட்டிலிங்கம், சைப்ரஸ் | நரிகள், அணில்கள், மான், கீரிப்பிள்ளை, முயல்கள், கஸ்தூரி எருது |



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 174 9/30/2023 11:16:18 AM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | வெப்ப மண்டல மழை காடுகள்  | ஆண்டு முழுவதும் அதிகமான வெப்பம், அதிகமான மழை. | தென் மெக்ஸிகோ மத்திய அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகள் | பனை, அமெரிக்க சாய மரவகை, மஹோகனி, ரப்பர் (Rubber), கொக்கோ மரம் | குரங்குகள், பாம்புகள். |
| 8.. | மழைக்காடுகள்  | உயரேச் செல்லச் செல்ல வெப்பம் குறையும். மலைச்சரிவுகளில் மழையின் அளவு வேறுபடுகிறது. | ராக்கி மலைத்தொடர் | ஊசியிலை மரவகை, ஃபர், பாசிகள், மரப்பாசிகள் | மான் மற்றும் கரடி |



காட்டு எருமை



கீரிப்பிள்ளை



விரியன் பாம்புகள்



கஸ்தூரி எருது

## இயற்கை தாவரங்கள்

வட அமெரிக்கா மாறுபட்ட விரிவான வனப்பகுதியை கொண்டுள்ளது. மொத்த நிலப்பரப்பில் சுமார் 30 சதவீத நிலப்பரப்பு காடுகளால் நிறைந்துள்ளது. மரம் வெட்டும் தொழில் இங்கு சிறப்பாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக கனடா மற்றும் வட அமெரிக்காவில் மரக்கட்டை, மரப்பலகை, மரக்கூழ் மற்றும் காகிதம் ஆகியவற்றை பெருமளவில் உற்பத்தி செய்கின்றனர். மரக்கட்டை உற்பத்தியில் உலகின் மொத்த உற்பத்தியில் சுமார் 20% வட அமெரிக்காவில் இருந்து வருகிறது. பல்வேறு அட்ச ரேகைகள், உயர வேறுபாடுகள், மண், மழைப் பொழிவில் மாற்றம் ஆகியவை வட அமெரிக்காவின் இயற்கை தாவரத்தில் உள்ள பல்வேறுபட்ட வேறுபாடுகளுக்கு முதன்மை காரணமாக விளங்குகிறன.



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 175 9/30/2023 11:16:21 AM




வட அமெரிக்காவின் இயற்கைப் பிரதேசங்கள்

## வேளாண்மை

வேளாண்மைத் தொழிலில் மிகக் குறைந்த விகிதத்தினர் ஈடுபட்டு இருந்தாலும், அமெரிக்கா அதிகமான உற்பத்தியை தரக்கூடிய அளவில் உள்ளது. விரிவான வேளாண்மை முறை அமெரிக்காவிலும் கனடாவிலும் கடைப்பிடிக்கப் படுகிறது. கோதுமை உற்பத்தியில் கனடாவும் அமெரிக்காவும் உலகின் முக்கிய ஏற்றுமதியாளர்களாக விளங்குகின்றன. கோதுமை, மக்காசோளம், ஓட்ஸ், சோயாபீன்ஸ், பார்லி மற்றும் இன்னும் பிற உணவு தானியங்கள் வட அமெரிக்காவின் பரந்து விரிந்த சமவெளிகளில் விளைவிக்கப்படுகின்றன.

## கோதுமை

கோதுமைப் பயிர் ஐரோப்பிய குடியேற்றங்களால் வட அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது. வட அமெரிக்காவின் பிரெய்ரி புல்வெளி நிலங்களில் கோதுமை பெருமளவில் விளைவிக்கப்படுகிறது. உலகின் முதல் கோதுமை ஏற்றுமதியாளராக வட அமெரிக்கா விளங்குகிறது. கோதுமை விளையும் பெரும் பரப்புகளை கோதுமை பிரேதேசம் என அழைக்கின்றனர்.

## சோளம்

வட அமெரிக்காவின் பூர்வீக மக்களின் முக்கிய உணவுப் பயிர் சோளமாகும். மெக்ஸிகோவின் முக்கிய உணவுப் பயிரும் இதுவே. தெற்கு புல்வெளிப் (Prairies) பகுதியில் சோளம் அதிக அளவில் விளைவிக்கப்படுகிறது. உலகின் மொத்த சோள உற்பத்தியில் பாதிக்கும் மேல் வட அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

## பார்லி மற்றும் ஓட்ஸ்

பார்லி மற்றும் ஓட்ஸ் இரண்டும் மித வெப்ப மண்டலப் பயிர்கள் ஆகும். இவை அதிகமான குளிரை எதிர்கொண்டு குறைவான நீர் தேவையில் வளரக்கூடியவை. ஐக்கிய அமெரிக்க நாடுகளில் பார்லி விளைவிக்கப்படுகிறது. மினசோட்டா, வட டகோட்டா மற்றும் வாஷிங்டனிலும் உற்பத்தி செய்யப்படுகிறது. விலங்குகளுக்கு பார்லியும் ஓட்ஸும் உணவாகப் பயன்படுத்தப்படுகிறது.

## பருத்தி

வட அமெரிக்காவில் தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களில் பருத்தி நன்கு விளைகிறது. மேலும் டெக்சாஸ், கலிபோர்னியா, மிஸிஸிப்பி, தெற்கு புல்வெளி மற்றும் மெக்ஸிகோவில் அதிகமாக விளைகிறது. மழையுடன் கூடிய வெப்பமான கோடைக் காலம் மற்றும் வளமான மண் ஆகியவை பருத்தி விளைவதற்கான ஏற்ற சூழலாக உள்ளன.

## கரும்பு

மெக்ஸிகோ வளைகுடா பகுதியிலும் மத்திய அமெரிக்காவின் சில பகுதிகளிலும், மேற்கிந்திய தீவுகளிலும், கரும்பு விளைவிக்கப்படுகிறது. மேற்கிந்திய தீவுகளின் முக்கிய பணப் பயிராக கரும்பு விளங்குகிறது. உலகின் சர்க்கரைக்

கிண்ணம் என கியூபா அழைக்கப்படுகிறது. இது உலகின் மிகப்பெரிய சர்க்கரை ஏற்றுமதியாளர் ஆகும்.




வட அமெரிக்கா – வேளாண்மை

## சோயா பீன்ஸ்

சோளம் விளையும் அதே பகுதிகளில் சோயாபீன்ஸ் விளைவிக்கப்படுகிறது. சமையல் எண்ணை தயாரிக்க சோயாபீன்ஸ் பயன்படுத்தப்படுகிறது.

## உருளைக்கிழங்கு மற்றும் சர்க்கரை வள்ளிக் கிழங்கு

உருளைக்கிழங்கு மற்றும் சர்க்கரை வள்ளிக்கிழங்கு பிரெய்ரி, வட டகோட்டா மற்றும் மினசோட்டா பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. சர்க்கரை வள்ளிக் கிழங்கு சர்க்கரை தயாரிக்க பயன்படுகிறது. உருளைக்கிழங்கும் சர்க்கரை வள்ளிக்கிழங்கும் கால்நடை மற்றும் பன்றிகளுக்கும் உணவாக பயன்படுத்தப்படுகிறது.

## பழங்கள்

டெக்சாஸ் கலிபோர்னியா கிரேட் ஏரி பகுதிகள் மற்றும் லாரன்ஸ் பள்ளத்தாக்கு பகுதிகளில் சிட்ரஸ் வகை பழங்கள் வளர்க்கப்படுகின்றன. வட அமெரிக்காவில் கிரான்பெரீஸ், ப்ளுபெர்ரி, கான்கார்ட் திராட்சைகள், ஸ்ட்ராபெரி, நெல்லிக்கனி மற்றும் பிற பழவகைகள், முக்கிய பழங்களாக விளைவிக்கப்படுகின்றன.



## கால்நடை பராமரித்தல்

வட அமெரிக்காவின் தென்மேற்கில் உள்ள பிரெய்ரியின் வறண்ட பகுதிகளில் கால்நடை பராமரித்தல் வர்த்தக ரீதியில் செயல்படுத்தபடுகிறது. பெரிய அளவிலான கால்நடை மந்தைகளும், செம்மறி ஆடுகளும், மிகப்பெரிய பண்ணைகளில் வைத்து பராமரிக்கப்படுகின்றன. செழுமையான மேய்ச்சல் நிலங்கள் கால்நடைகளுக்காகவும் செழுமையற்ற மேய்ச்சல் நிலங்கள் செம்மறி ஆடுகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. வட அமெரிக்கா உலகின் மொத்த கறி உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு அளவு உற்பத்தி செய்து, உலகின் அதிகமான உற்பத்தியாளர் என்ற மதிப்பினை பெறுகிறது.

## பால்பண்ணை பராமரிப்பு

பால் உற்பத்திக்காக கால்நடைகளை பராமரிப்பது, பண்ணை பராமரிப்பு என அழைக்கப்படுகிறது. இது அமெரிக்கா மற்றும் கனடாவின் முக்கியமான தொழில் ஆகும். குளிர்ந்த மற்றும் ஈரப்பதம் மிகுந்த பிரெய்ரி, பெரும் ஏரிகள் மற்றும் அட்லாண்டிக் கடற்கரையின் வடகிழக்குப் பகுதிகளில் பண்ணை பராமரிப்பு தொழில் அதிகமாக உள்ளது. உலகின் மொத்த பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தியில் 25 சதவிகிதத்தை வட அமெரிக்கா கொண்டுள்ளது.



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 177 9/30/2023 11:16:24 AM

## மீன்பிடித் தொழில்

மீன் பிடித் தொழில் வட அமெரிக்க கண்டத்தை சுற்றியுள்ள கடல் பகுதிகளில் முக்கியமான உள்நாட்டு தொழிலாகும். கனடாவின் நியுபவுண்ட்லாந்து தீவுக்கு அருகில் அமைந்துள்ள கிராண்ட் பேங்க் உலகின் மிகச்சிறந்த மீன்பிடி தளமாகும். இங்கு கல்ப் வெப்ப நீரோட்டமும் லாபரடார் குளிர் நீரோட்டமும் சந்தித்து கொள்வதால், மீன்கள் வளர்வதற்கான ஏற்ற சூழலை உருவாக்குகிறது. மீன்களுக்கு உணவாகும் பிளாங்டன்கள் எனப்படும் கடல் பாசிகளை லாபரடார் குளிர் நீரோட்டம் இப்பகுதிக்கு அதிக அளவில் எடுத்து வருகிறது. காட், ஹெர்ரிங், மெக்கிரல், சால்மோன் மற்றும் ஹாலிபட் ஆகியவை வட அமெரிக்காவில் காணப்படும் முக்கிய மீன் வகைகள் ஆகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

**கிராண்ட் பேங்க்**

உலகின் முக்கிய பெரிய மற்றும் வளமான இயற்கை வளங்களை கொண்டது கிராண்ட் பேங்க். இங்கு மீன் மற்றும் பெட்ரோலிய படிவுகள் காணப்படுகின்றன.

## கனிம வளம்

வட அமெரிக்கா மிகுந்த கனிம வளம் கொண்ட கண்டமாக திகழ்கிறது. வட அமெரிக்கா, இரும்பு, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு, தாமிரம், வெள்ளி, சல்ஃபர், துத்தநாகம், அலுமினியம் மற்றும் மெக்னீசியம் உற்பத்தியில் உலகில் முன்னணியில் உள்ளது. மேலும் ஈயம் மற்றும் யுரேனியம் பிற முக்கிய கனிமங்கள் ஆகும். வட அமெரிக்காவில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு படிவுகள் பரவலாக காணப்படுகின்றன. அமெரிக்கா, கனடா மற்றும் மெக்சிகோ உலகின் முன்னணி எண்ணெய் உற்பத்தியாளர்களாக திகழ்கின்றன.




வட அமெரிக்காவின் கனிம வளங்கள்

**வட அமெரிக்காவின் முக்கிய கனிமங்கள்**

| கனிமம் | கிடைக்கும் இடம் |
|---|---|
| இரும்புத் தாது | கனடியன் ஷீல்ட், கிரேட் ஏரி பகுதி, அப்பலேஷியன் உயர் நிலங்கள், மத்திய அலபாமா மற்றும் மினசோட்டா |
| தாமிரம் | கிரேட் ஏரி பகுதி, அரிசோனா, உதா, புதிய மெக்ஸிகோ, நிவடா, மோன்டானா, ராக்கி மலைகள், ஒன்டாரியோ மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா. |
| வெள்ளி | நிவடா, உதா, பிரிட்டிஷ் கொலம்பியா, ஒன்டாரியோ மற்றும் கியூபெக். |
| தங்கம் | கனடா– ஒன்டாரியோ கியூபெக்<br>அமெரிக்கா– கலிபோர்னியா, கொலராடோ, உதா, நிவடா |
| நிலக்கரி | அப்பலேஷியன், பென்சில்வேனியா, ஒஹியோ, அலபாமா, அல்பர்டா மற்றும் கொலம்பியா. |
| பெட்ரோலியம் | அமெரிக்கா – அலாஸ்காவிலிருந்து டெக்சாஸ் வரை<br>கனடா மற்றும் மெக்ஸிகோ |
| எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு | மத்திய தாழ் நிலங்கள், வளைகுடா கடற்கரை பகுதிகள், ராக்கி மலைகள், அப்பலேஷியன் மற்றும் அலாஸ்கா |

## தொழிற்சாலைகள்

வட அமெரிக்கா வளங்கள் நிறைந்த கண்டமாகும். கண்டத்தின் வளர்ச்சிக்கு தேவையான நிலக்கரி, இரும்புத்தாது போன்ற கனிம வளங்கள் அதிகமாகவும், சாலை, இரயில் மற்றும் நீர்ப் போக்குவரத்து வசதிகள் நிறைந்த பகுதியாகவும் விளங்குகின்றது. கண்டத்தின் வடகிழக்கு பகுதியில் தொழிற்சாலைகள் அடர்த்தியாக காணப்படுகின்றன. தொழில் மயமான நாடுகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஒன்றாகும். மொத்த நாட்டு உற்பத்தியில் தொழிற்சாலைகளின் பங்களிப்பு 25% ஆகும். இரும்பு, எஃகு தொழிலில் ஐக்கிய அமெரிக்க நாடுகள் முன்னிலை வகிக்கிறது. நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி அவர்கள் தங்களது தொழிற்சாலைகளை முன்னேற்றி வருகின்றனர்.

## வட அமெரிக்காவின் முக்கிய தொழிற்சாலைகள்

### 1. இரும்பு எஃகு தொழிற்சாலை

வட அமெரிக்கக் கண்டம் இரும்பு எஃகு தொழிலில் உலகின் முக்கிய மையமாக உள்ளது. இரும்புத்தாது, நிலக்கரி மற்றும் நவீனப் போக்குவரத்து ஆகியவை இரும்பு எஃகு தொழிற்சாலைகளின் முக்கிய தேவைகளாகும். அமெரிக்காவின் பிட்ஸ்பர்க், சிக்காகோ மற்றும் பிர்மின்ஹாம் நகரங்களும் கனடாவின் ஹமில்டன் நகரமும் வட அமெரிக்காவின் முக்கிய இரும்பு எஃகு தொழிற்சாலை நகரங்களாகும்.

### 2. கனரக பொறியியல் தொழிற் சாலைகள்

கனமான மற்றும் பருமனான மூலப்பொருட்களைக் கொண்டு பெருமளவிலான எரிபொருள், மூலதனம் மற்றும் போக்குவரத்து செலவினங்களை பயன்படுத்தி பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலைகளை கனரக பொறியியல் தொழிற் சாலைகள் என அழைக்கப்படுகின்றன. இவை இரும்பு எஃகு தொழிற்சாலைகளை சார்ந்துள்ளன. ஆட்டோமொபைல் தொழிற்சாலை, வான் ஊர்தி தொழிற்சாலை, கப்பல் கட்டும் தொழிற்சாலை, இரயில்பெட்டி தொழிற்சாலை மற்றும் விவசாய பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆகியவை முக்கிய கனரக தொழிற்சாலைகள் ஆகும். ஐக்கிய அமெரிக்க நாடுகள் தானியியங்கி வாகன உற்பத்தியில் முதன்மையான நாடாக விளங்குகிறது. வட அமெரிக்காவின் டெட்ராய்ட், சிக்காகோ, பஃபலோ, இண்டியானாபோலிஸ், லாஸ் ஏஞ்சல்ஸ், செயின்ட் லூயிஸ், பிலடெல்பியா, நியூயார்க், பால்டிமோர் மற்றும் அட்லாண்டா ஆகியவையும், கனடாவின் வின்ஸரும் முக்கிய கனரக தொழில் மையங்களாக திகழ்கின்றன.

### 3. மரக்கூழ் மற்றும் காகிதத் தொழிற்சாலை

உலகின் மொத்த மரக்கூழ் மற்றும் செய்தித்தாள் உற்பத்தியில் 50% வடஅமெரிக்காவில் உற்பத்திச் செய்யப்படுகின்றன. உலகின் அனைத்து வகையான காகிதங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் கனடா முன்னிலை வகிக்கிறது. கனடாவிலுள்ள ஒன்டாரியோவில் காகிதத் தொழிற்சாலைகள் அதிக அளவில் காணப்படுகின்றன.

### 4. ஆடை உற்பத்தி தொழிற்சாலைகள்

ஆடை உற்பத்தி தொழிற்சாலை என்பது பருத்தி, கம்பளி மற்றும் செயற்கை இழை போன்ற மூலப் பொருள் உற்பத்தியை உள்ளடக்கியதாகும். அமெரிக்கா பருத்தி ஆடை உற்பத்தியில் உலகின் மிகப்பெரும் பங்கு வகிக்கிறது. டெக்ஸாஸ், கலிபோர்னியா, அரிசோனா, மிஸிஸிப்பி, அர்கன்சஸ் மற்றும் லூசியானாவில் முக்கிய ஆடை தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. டொரன்டோ, கான்வெல் மற்றும் கிங்ஸ்டன் ஆகியவை கனடாவின் முக்கிய ஆடைத் தொழில் உற்பத்தி செய்யும் நகரங்கள் ஆகும். இப்பகுதிகளில் காணப்படும் குளிர்ந்த ஈரப்பதம் மிக்க காலநிலை நூல் அறுந்து போகாமல் காப்பதால் நூல் நூற்கும் மற்றும் நெசவு தொழில்களுக்கு பொருத்தமாக



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 179 9/30/2023 11:16:32 AM

காலநிலையாக அமைந்துள்ளது. கம்பளி ஆடை தொழிற்சாலைகள் அலெக்ஹனி பீடபூமிக்கு கிழக்கில் அமைந்துள்ளன. புதிய இங்கிலாந்து பகுதியில் 70 சதவீத கம்பளி தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. செயற்கை இழை தயாரிப்பில் வட அமெரிக்கா உலகின் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. ரேயான் மற்றும் இதர செயற்கை இழைகள் மரக்கூழிலிருந்து கிடைக்கும் செல்லுலோஸ் மூலம் தயாரிக்கப்படுகிறது.

### 5. இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலை

வடஅமெரிக்காவில் புல்வெளி (Prairies) பகுதிகளில் கால்நடை பராமரிப்பு மிகப்பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருவதால் கனடா மற்றும் அமெரிக்காவின் மிக முக்கிய தொழில்களில் இறைச்சி பதப்படுத்துதலும் ஒன்றாகும். வட அமெரிக்காவிலுள்ள சிக்காகோ, கன்ஸாஸ் புனித லூயிஸ் மற்றும் கனடாவிலுள்ள கல்கேரி, வின்னிபெக் ஆகிய நகரங்கள் முக்கிய இறைச்சி பதப்படுத்தும் மையங்களாகும்.

## மக்கள் தொகை

வட அமெரிக்காவின் பெரும்பான்மையான மக்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து குடியேறியவர்களின் வாரிசுகளே ஆவர். குடியேறியவர்களில் முதன்மையானவர்கள் பதினாறாம் நூற்றாண்டில் குடியேறிய ஐரோப்பியர்கள் ஆவர். மத்தியில் தற்போது சிறிய எண்ணிக்கையில் வாழ்ந்து வரும் அமெரிக்காவின் பூர்வீக குடிமக்கள் அவர்களுக்கே உரிய பாரம்பரியமான வாழ்க்கை முறையோடு வாழ்ந்து வருகிறார்கள்.

## மக்கள் தொகை பரவல்

2018ம் ஆண்டு, வட அமெரிக்காவின் மக்கள் தொகை 364, 446, 736. உலக மக்கள் தொகையில் 4.77 சதவீதத்தை வடஅமெரிக்கா கொண்டுள்ளது. நிலப்பரப்பின் அடிப்படையில் மிகப்பெரிய நாடு கனடாவாகும். அதிக மக்கள் தொகை கொண்ட நகரம் மெக்ஸிகோ நகரம். மக்கள்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 20 நபர் என்ற அளவில் காணப்படுகிறது.

### வட அமெரிக்காவின் மக்கள் தொகை மற்றும் அடர்த்தி

| வரிசை. எண் | நாடு | மக்கள் தொகை (மில்லியனில்) | அடர்த்தி |
|---|---|---|---|
| 1. | அமெரிக்கா | 327.16 | 30 நபர்கள் |
| 2. | கனடா | 36.95 | 3 நபர்கள் |
| 3. | மெக்ஸிகோ | 123.00 | 51 நபர்கள் |

**அதிக மக்கள் அடர்த்தி கொண்ட பகுதிகள்:** வட அமெரிக்காவின் கிழக்குப் பகுதிகள், கிரேட் ஏரி பகுதி, புளோரிடா, கலிபோர்னியா மெக்ஸிகோ மற்றும் மத்திய அமெரிக்காவில் மக்கள் அடர்த்தி அதிகமாக காணப்படுகிறது

**மிதமான மக்கள் அடர்த்தி கொண்ட பகுதிகள்:** அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மத்தியப் பகுதிகள், மத்திய உயர்நிலங்கள், மெக்ஸிகோ உயர் நிலங்கள், கனடாவின் மத்திய மற்றும் மேற்கு பகுதிகளில் மிதமான மக்கள் அடர்த்தி காணப்படுகிறது.

**குறைந்த மக்கள் அடர்த்தி கொண்ட பகுதிகள்:** வடக்கு கனடா, அலாஸ்கா ராக்கி மலைகள்மற்றும்பாலைவனப்பகுதிகளில்மிகக் குறைவான மக்கள் அடர்த்தி காணப்படுகிறது.

**மொழிகள் மற்றும் சமயங்கள்:** வட அமெரிக்காவில் பெரும்பான்மையான மக்கள் ஆங்கிலம், ஸ்பானிஷ் மற்றும் பிரெஞ்ச் மொழிகள் பேசுகின்றனர். அவர்களது கலாச்சாரம் தத்துவம் மற்றும் சட்டத்தில் பல்வேறு சமய நம்பிக்கைகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இவர்களில் 80 சதவீதம் மக்கள் கிறிஸ்தவ சமயத்தை பின்பற்றுகின்றனர். ஐக்கிய அமெரிக்க நாடுகள் "உருகும் பானை" என அழைக்கப்படுகிறது. ஏனெனில் இங்கு நூற்றுக்கணக்கான பல கலாச்சாரங்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து,



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 180 9/30/2023 11:16:32 AM

கலந்து புதிய கலாச்சாரத்தை உருவாக்குகின்றன.

**எஸ்கிமோக்கள்** கடும் குளிர் மற்றும் வாழ்வதற்கு கடினமான பகுதிகளில் எங்கு மீன்கள் அதிகம் கிடைக்கிறதோ, அங்கு வாழ்கிறார்கள். விலங்குகளின் மென்மையான முடிகளால் ஆன உடைகளை உடுத்தி இஃலூக்களில் வாழ்கிறார்கள்.


எஸ்கிமோக்கள்


இஃக்லூ

சுற்றுச்சூழலை பெரிதும் மாற்றி அமைக்க இயலாத நிலையில் இவர்கள் எளிய வாழ்க்கையை வாழ்கிறார்கள். பனிக்கட்டிகளை கொண்டு இவர்கள் கட்டும் வீடுகளுக்கு இஃக்லூ என்று பெயர்.

## போக்குவரத்து

வட அமெரிக்கா சாலை வழி, இரயில் வழி, நீர் வழி மற்றும் வான்வழி போக்குவரத்துகளைக் கொண்டு மிகச் சிறந்த போக்குவரத்து வலைப்பின்னலை உருவாக்கி உள்ளது.

**அ) சாலை வழி போக்குவரத்து**

வட அமெரிக்காவில் குறிப்பாக அமெரிக்காவிலும் கனடாவிலும் உலகின் தலைசிறந்த சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. எல்லாவித காலநிலையிலும் பயன்படுத்த கூடிய அஸ்பால்ட் மற்றும் கான்கிரீட்களால் ஆன சாலைகள் இங்கு போடப்பட்டுள்ளன. மேம்படுத்தப்பட்ட (Superways) அல்லது தடையில்லா சாலைகள் (Freeways) பயணத்தை இலகுவாகவும் வேகமாகவும் மாற்றியுள்ளன. பான் அமெரிக்கன் நெடுஞ்சாலை வடமேற்கில் அலாஸ்காவையும் தெற்கில் பனாமாவையும் இணைக்கிறது.

**ஆ) இரயில் போக்குவரத்து**

வட அமெரிக்கா நன்கு விரிவடைந்த சிறப்பான இரயில் போக்குவரத்தினால் இணைக்கப்பட்டுள்ளது. டிரான்ஸ் கான்டினென்டல் மற்றும் டிரான்ஸ் கனடியன் இரயில் பாதைகள் மேற்கு, கிழக்கு கடற்கரைகளிலுள்ள அமெரிக்கா மற்றும் கனடாவை இணைக்கின்றன. உலகின் மிகப்பெரிய இரயில்வே முனையம் சிக்காகோவில் உள்ளது. நியூயார்க் ரயில் நிலையம் உலகில் பரபரப்பான இரயில் நிலையங்களுள் ஒன்று.

உங்களுக்குத் தெரியுமா?

**பனாமா கால்வாய்**

1914ல் பனாமா நிலச்சந்தியின் குறுக்கே 80 கிலோமீட்டர் நீளத்திற்கு அட்லாண்டிக் பெருங்கடலையும் பசிபிக் பெருங்கடலையும் இணைக்கும் விதமாக பனாமா கால்வாய் வெட்டப்பட்டது.


பனாமா கால்வாய்

இக்கால்வாய் ஐரோப்பா மற்றும் வட தென் அமெரிக்காவின் மேற்குக் கடற்கரைக்கு இடையிலான தூரத்தை வெகுவாக குறைக்கின்றது.

**இ) நீர்வழி போக்குவரத்து**

கிரேட் ஏரி (Great Lakes) பகுதிகளும் லாரன்ஸ் மற்றும் மிஸிஸிப்பி ஆறுகள், வட அமெரிக்காவின் முக்கியமான உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து தடங்களாகும். கியூபெக் நகரம், மான்ட்ரியல், பாஸ்டன், நியூயார்க், பிலடெல்பியா, சார்லஸ்டன் மற்றும் நியூ ஆர்லியன்ஸ் ஆகியவை

சில முக்கியமான உள்நாட்டு துறைமுகங்களாகும். கிழக்குக் கடற்கரையில் நியூயார்க்கும், மேற்கு கடற்கரையில் வான்கூவர், சான்பிரான்சிஸ்கோ ஆகியவை முக்கிய துறைமுகங்கள் ஆகும்.

**ஈ) வான்வழி போக்குவரத்து**

வான்வழி போக்குவரத்து மதிப்புமிக்க வழிகளை வழங்குகிறது. வட அமெரிக்காவில் உள்ள அனைத்து நகரங்களும், தொழில்துறை மையங்களும், விமான வழிகளால் இணைக்கப்பட்டுள்ளன. நியூயார்க், சிகாகோ, லாஸ் ஏஞ்சல்ஸ், அட்லாண்டா, டொராண்டோ, மாண்ட்ரீல் மற்றும் மெக்ஸிகோ நகரம் ஆகியவை வட அமெரிக்காவில் உள்ள சர்வதேச விமான நிலையங்கள் ஆகும்.

## வர்த்தகம்

வட அமெரிக்கா விவசாயம் மற்றும் தொழில்துறை தயாரிப்புகளை ஏற்றுமதி செய்கின்றன. தொழில்துறை இயந்திரங்கள், ஆட்டோமொபைல், காகிதம், மீன், கோதுமை, வாழைப்பழங்கள், இறைச்சி, விமானம், தொலைத்தொடர்பு உபகரணங்கள், இரசாயன, பிளாஸ்டிக், உரங்கள், மரக்கூழ், கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, அலுமினியம், நிக்கல் மற்றும் ஈயம் ஆகியவை முக்கிய ஏற்றுமதி பொருட்களாகும். வட அமெரிக்கா இறக்குமதி பொருட்களாவன காபி, கோகோ, சர்க்கரை, ஜவுளி, இரும்பு தாது மற்றும் எலெக்ட்ரானிக்ஸ் பொருட்கள் அடங்கும். ஐரோப்பா, ஜப்பான், சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் வட அமெரிக்காவின் முக்கிய வர்த்தக நாடுகளாகும்.

# ஆ. தென் அமெரிக்கா

ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் வட அமெரிக்காவிற்கு அடுத்து உலகின் நான்காவது பெரிய கண்டங்களுள் ஒன்று தென் அமெரிக்கா. அமெரிக்க கண்டத்தின் பெரும் பகுதி தெற்கு அரைக்கோளத்தில் இருப்பதால் இது "தென் கண்டம்" என்று அழைக்கப்படுகிறது. வடமேற்கில் உள்ள பனாமா நிலச்சந்தி தென் அமெரிக்காவை வடஅமெரிக்காவுடன் இணைக்கிறது.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> மத்திய அமெரிக்காவுடன் இணைந்து தென் அமெரிக்கா, லத்தீன் அமெரிக்கா என அழைக்கப்படுகிறது. ஐரோப்பியர்கள் குறிப்பாக ஸ்பானியர்கள் மற்றும் போர்த்துகீசியர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றின் காலனியாக ஆட்சி செய்யப்பட்டதால் இப்பெயரை பெறுகிறது.

## அமைவிடம்

தென் அமெரிக்கா $12^\circ$ வடக்கு முதல் $55^\circ$ தெற்கு அட்சங்கள் வரையிலும் $35^\circ$ மேற்கு முதல் $81^\circ$ மேற்கு தீர்க்க ரேகைகள் வரையிலும் பரவியுள்ளது. அமேசான் ஆற்றின் முகத்துவாரத்தின் வழியாக பூமத்திய ரேகை ($0^\circ$) கடக்கின்றது. பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரம் வழியாக மகர ரேகை ($23\frac{1}{2}^\circ$ தெற்கு அட்சரேகை) கடக்கின்றது. தென் அமெரிக்கா தலைகீழ் முக்கோண வடிவத்திலான ஓர் நிலப்பகுதி ஆகும். தென் அமெரிக்காவின் மொத்த நிலப்பரப்பு 17,840,000 சதுர கிலோ மீட்டர்கள். இது உலகின் மொத்த நிலப்பரப்பில் 15 சதவீதத்தை பிடித்துள்ளது.

## இயற்கை அமைப்பு

தென் அமெரிக்கா, வட அமெரிக்காவைப் போலவே நிலத்தோற்றங்கள் மற்றும் இயற்கை அமைப்புகளைக் கொண்டுள்ளது. தென் அமெரிக்கா உலகின் பழமையான மற்றும் இளைய பாறைகளால் ஆனது. இயற்கை பிரிவுகளின் அடிப்படையில் கீழ்க்கண்ட நிலத்தோற்றங்களாக பிரிக்கப்படுகின்றன.



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 182 9/30/2023 11:16:33 AM




தென் அமெரிக்காவின் இயற்கை பிரிவுகள்



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 183 9/30/2023 11:16:34 AM

❖ ஆன்டஸ் மலைத்தொடர்
❖ ஆற்றுப்படுகை அல்லது மத்திய சமவெளிகள்
❖ கிழக்கு உயர் நிலங்கள்.




தென் அமெரிக்காவின் அரசியல் பிரிவுகள்

## ஆன்டஸ் மலைத்தொடர்

இமயமலை போன்றே ஆன்டஸ் மலைத்தொடர் மடிப்பு மலைகளால் ஆனது. இது உலகின் மிக நீண்ட மலைத்தொடர் ஆகும். பசிபிக் கடற்கரை ஓரமாக 6,440 கி.மீ நீளத்திற்கு இம்மலைத்தொடர் நீண்டுள்ளது. அர்ஜென்டினா எல்லையில் 6,961 மீ. உயர்ந்துள்ள தணிந்த எரிமலையான அகான்காகுவா சிகரம் ஆன்டஸ் தொடரின் உயர்ந்த சிகரமாகும். சிலி நாட்டில் இம்மலைத்தொடர் கடற்கரைக்கு மிக அருகில் அமைந்துள்ளது. வட அமெரிக்காவின் ராக்கி மலைகளைப் போன்று இம்மலைகளின் மேற்குப் பகுதி வன்சரிவாகவும் கிழக்குப்பகுதி மென் சரியாகவும் அமைந்துள்ளது. பசிபிக் நெருப்பு வளையத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ளதால் நிலநடுக்கம், எரிமலை வெடிப்புகள் அடிக்கடி ஏற்படுகின்றன. கடோபாக்ஸி (5,991 மீ.) போன்ற பல சீறும் எரிமலைகள் ஆன்டிஸ் மலைத்தொடரில் காணப்படுகின்றன. ஆன்டிஸ் மலைத்தொடரில் தாமிரம், தகரம் போன்ற உலோகங்களும் மற்றும் மரகதம் போன்ற விலை மதிப்பற்ற கற்களும் அதிக அளவில் காணப்படுகின்றன.



அகான்காகுவா மலைத்தொடர்



கடோபாக்ஸி

## ஆற்றுப் படுகைகள் அல்லது மத்திய சமவெளிகள்

தென் அமெரிக்க கண்டத்தில் பாதிக்குமேலுள்ள நிலப்பரப்பு சமவெளிகளாக உள்ளன. மூன்று பெரிய ஆறுகள் அட்லாண்டிக் பெருங்கடலில் கலக்கின்றன. அவற்றில் மிகப்பெரிய ஆறு அமேசான் ஆறு ஆகும். கரிசல் மண் பரப்பைக் கொண்ட அமேசான் ஆற்றுப்படுகை உலகின் அடர்த்தியான காடுகளைக் கொண்ட பகுதியாகும். இப்படுகை ஆன்டிஸ் மலைத்தொடர் அருகில் அகலமாகவும் முகத்துவாரத்திற்கு அருகில் குறுகியும் காணப்படுகிறது. அமேசான் படுகையில் இருந்து ஒரினாகோ ஆற்றுப்படுகையில் சிறிய அளவிலான நீர் பிரிமேடு (interfluves) பிரிக்கின்றன. இது அமெரிக்க கண்டத்தின் உற்பத்தி பகுதியாகவும் விளங்குகிறது. பரானா



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 184 9/30/2023 11:16:35 AM

மற்றும் பராகுவே ஆறுகளின் சமவெளிகள் வண்டல் படிவுகளால் மூடப்பட்ட ஒரு பாறை பிரதேசமாகும். இங்கு அதிக அளவிலான பெட்ரோலிய படிவுகள் காணப்படுகின்றன.

## கிழக்கு உயர் நிலங்கள்

கிழக்கு உயர் நிலங்கள் ஆன்டஸ் மலைத்தொடரை விட புதுமையானவை மற்றும் பல ஆறுகளால் வெட்டப்பட்டுள்ள பீடபூமி ஆகும். இது அமேசான் ஆற்றின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் பரவியுள்ளது. தென் அமெரிக்க கண்டத்தின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள கயானா உயர்நிலங்கள் உலகின் உயரமான ஏஞ்சல் நீர்வீழ்ச்சி உட்பட பல நீர்வீழ்ச்சிகளை கொண்டுள்ளன. அமேசான் வடிநிலத்திற்கு தெற்கில் அமைந்துள்ளன ப்ரேசிலியன் உயர் நிலங்கள். இவை மேடு, பள்ளங்களை கொண்ட பீடபூமிகளையும் கிழக்குக் கடற்கரையிலுள்ள செங்குத்து பாறைகளையும் கொண்டுள்ளது.

## காலநிலை

தென் அமெரிக்காவின் காலநிலையை அட்சக்கோடுகள், கடல் மட்டத்தின் உயரம் மற்றும் பசிபிக் அட்லாண்டிக் பெருங்கடல்களின் அருகாமை ஆகிய இம்மூன்றும் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அமேசான் வடிநிலப் பகுதியில் பூமத்தியரேகை செல்வதால் இங்கு வெப்ப காலநிலை காணப்படுகிறது. அதே சமயத்தில் அதே அட்சரேகையில் ஆன்டஸ் மலைகளின் மேல் அமைந்திருக்கும் குவிடோ என்னும் நகரம் நிரந்தரமாக வசந்த காலத்தை அனுபவிக்கிறது. ஏனெனில் இது 9350 அடி அல்லது 2749.88 மீட்டர் கடல் மட்டத்திற்கு மேல் உயரத்தில் அமைந்து மிதமான காலநிலையை கொண்டுள்ளது. தென் அமெரிக்காவில் கோடைக்காலம் நவம்பர் முதல் ஜனவரி வரை காணப்படுகிறது. பிரேசிலில் வெப்பமான காலநிலை நிலவி வரும் அதே நேரத்தில் அர்ஜென்டினாவில் குளிர்ந்த காலநிலை நிலவுகிறது. இதற்கு, கீழ் தென் அட்சரேகைகளில் அமைந்திருக்கும் அதன் அமைவிடம் காரணமாகும்.

தென் அமெரிக்க கண்டத்தின் இயற்கை பிரிவுகளும், கடலிலிருந்து தூரமும் மழைப் பொழிவின் பரவலை தீர்மானிக்கின்றன. கிழக்கத்திய காற்றுகள் அல்லது வியாபார காற்றுகள் கிழக்கு கடற்கரை பகுதிக்கும், மேற்கத்திய காற்றுகள் மேற்கு கடற்கரை பகுதிகளுக்கும் அதிகமான மழைப்பொழிவை தருகின்றன. பூமத்திய ரேகை பகுதியில் அமேசான் வடிநிலப் பகுதி அமைந்திருப்பதால் ஆண்டு முழுவதும் மழை பெறுகிறது. பூமத்திய ரேகையை சுற்றியுள்ள பகுதிகள் தினந்தோறும் 4 மணி 'கடிகார மழையை' பெறுகின்றன. இவை வெப்பச்சலன மழை ஆகும். கண்டத்தின் உட்பகுதிக்கு செல்லச்செல்ல மழையின் அளவு குறையும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

பூமத்திய ரேகை பகுதிகளில் வெப்பச்சலன மழை கிட்டத்தட்ட தினமும் பிற்பகலில் நிகழ்கிறது. இது பொதுவாக மாலை 4 மணிக்கு நிகழ்கிறது, அதனால்தான் இது 4 மணி 'கடிகார மழை' என்று அழைக்கப்படுகிறது.

## வடிகால்

ஆன்டஸ் மலைத்தொடரின் அமைவு காரணமாக இக்கண்டத்தின் முக்கிய ஆறுகள் அனைத்தும் அட்லாண்டிக் பெருங்கடலில் கலக்கின்றன. குறுகிய மற்றும் விரைவான ஆறுகள் பசிபிக் பெருங்கடலில் கலக்கின்றன. பெரு நாட்டின் கடற்கரையோரத்திலுள்ள சில ஆறுகள் நீர் பாசனத்திற்கும். நீர் மின்சாரம் தயாரிப்பிற்கும் பயன்படுத்தப்படுகின்றன. தென் அமெரிக்காவின் மிக நீண்ட ஆறு அமேசான் ஆறு (6,450 கிலோ மீட்டர்) ஆகும். இது உலகின் மிகப்பெரிய நதியமைப்பு ஆகும். அமேசான் ஆறு ஆயிரக்கணக்கான கிளை நதிகளை கொண்டது. ரியோ, நீக்ரோ, மதீரா



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 185 9/30/2023 11:16:35 AM

மற்றும் தாபாஜோஸ் ஆகியவை மிக முக்கிய கிளை நதிகள் ஆகும். இக்கிளை நதிகள் கடலில் கலக்கும் இடத்தில் விரிவாகவும் வேகமாகவும் கலப்பதால் கடலுக்குள் 80 கிலோமீட்டர் வரை நன்னீர் கிடைக்கிறது. ஒரினாகோ ஆறு கயானா உயர் நிலங்களில் ஆரம்பித்து மேற்கு நோக்கி பாய்ந்து கரீபியன் கடலில் கலக்கிறது. பரானா மற்றும் உருகுவே ஆறுகள் வரலாற்றின் முக்கிய கிளை நதிகள் ஆகும். இவை அனைத்தும் ஒன்றாக சேர்ந்து ஆற்றுப் படுகை என அழைக்கப்படுகிறது. கடலில் சேரும் இடத்தில் இருந்து உள்நோக்கி குறிப்பிட்ட தூரம் வரை அனைத்து ஆறுகளும் போக்குவரத்திற்கு பயன்படுத்தக்கூடிய வகையில் உள்ளன.

> உங்களுக்குத் தெரியுமா?
>
> அமேசான் தென் அமெரிக்காவின் மிகப்பெரிய நதியாகும். அதில் பாயும் நீரின் அளவு மற்றும் அதன் வடிநில பரப்பு ஆகியவற்றைக் கொண்டு உலகின் மிகப்பெரிய வடிகால் அமைப்பாக விளங்குகிறது.

## இயற்கை தாவரங்கள்

தென் அமெரிக்காவில் நான்கு முக்கிய இயற்கை தாவர பகுதிகள் உள்ளன. அவை செல்வாஸ் என அழைக்கப்படும் அமேசான் காடுகள், கிழக்கு உயர்நிலங்கள், கிராண்சாக்கோ மற்றும் ஆன்டிஸ் மலைச்சரிவுகள். பூமத்திய ரேகை பகுதியில் உள்ள அமேசான் காடுகள் 'உலகின் நுரையீரல்' என அழைக்கப்படுகிறது. அமேசான் மழைக்காடுகள் உலகிலேயே மிகப்பெரிய காடுகளாகும். விலை உயர்ந்த சீமைத் தேக்கு, கருங்காலி போன்ற கடினமான மரங்கள் இங்கு அதிகமாகக் காணப்படுகின்றன. இக்காடுகளில் காணப்படும் இன்னும் பிற பொதுவான மரங்கள் ஈட்டி மரம், கொய்னா மரம் மற்றும் பனைமரம் ஆகும். ஈட்டி மரப்பட்டை கியூனைன் என்னும் மலேரியாவிற்கான மருந்து தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. அமேசான் காடுகள் தற்போது மெல்ல அழிந்து வருகின்றன. மனிதகுல வளர்ச்சிக்காக போக்குவரத்துப் பாதைகள், குடியிருப்புகள் மற்றும் விவசாய செயல்பாடுகள் போன்றவை இக்காடுகளை மெல்ல அழிவை நோக்கி தள்ளுகின்றன. இது எதிர்காலத்தில் பெரும் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என சுற்றுசூழல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.



அமேசான் மழைக்காடுகள்

கிழக்கு உயர் நிலங்களில் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பலவகை மரங்கள் உள்ளன. எர்பா மேட் எனும் மரத்தின் இலைகளை கொண்டு டீ போன்ற ஒரு பானத்தை தயாரிக்கலாம். கிரான்சாக்கோ பகுதி அடர்ந்த இலையுதிர் காடுகளை கொண்டுள்ளது. இப்பகுதியில் காணப்படும் ஓர் முக்கியமான கடினமான மரம் கியுபிராகோ (Quebracho) ஆகும். இதற்கு கோடாலி உடைப்பான் என்ற பெயரும் உண்டு. கியுபிராகோ மரத்திலிருந்து டானின் தயாரிக்கப்படுகிறது. டானின் தோல் பதனிட பயன்படுகிறது. ஆன்டஸ் மலைச்சரிவுகளில் உள்ள காடுகளில் பைன், தேவதாரு, ஸ்பூரூஸ் போன்ற ஊசியிலை மரங்கள் காணப்படுகின்றன. இக்காடுகள் மோண்டானா எனவும் அழைக்கப்படுகின்றன. இவை காகிதம் மற்றும் காகித கூழ் தொழிற்சாலைகளுக்கான மென் மரங்கள் வளரும் காடுகளாகும்.




தென் அமெரிக்காவின் காலநிலை பிரதேசங்கள்

## வனவிலங்கு

தென் அமெரிக்கா பலவிதமான வன உயிரினங்களால் ஆசீர்வதிக்கப்பட்டு உள்ளது. அமேசான் நதி படுகையில் உள்ள அடர்ந்த காடுகளிலும், சதுப்பு நிலங்களிலும், ஆற்றிலும் பலவிதமான விலங்குகள், பறவைகள் மற்றும் ஊர்வன வாழ்கின்றன. இக்கண்டத்தில் 1500க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் காணப்படுகின்றன. கான்டோர் மிகப்பெரிய பறவையாகும். ஆப்பிரிக்காவின் தீக்கோழி (Ostrich) போன்று பறக்க இயலாத பறவை ரியா மற்றும் ப்ரே. டுகான், மக்காவ் (macaw) தேன் சிட்டுக் குருவி (Humming bird), பிளமிங்கோ மற்றும் பலவகையான கிளிகள் காணப்படுகின்றன. பலவகையான குரங்கினங்கள் வாழ்விடமாக காடுகள் உள்ளன. சிலந்திக் குரங்கு, ஆந்தை குரங்கு மற்றும் அணில் குரங்கு ஆகியவை மென்மையான பிராணிகளாகும். உலகின் மிகப் பெரிய பாம்பாக கருதப்படும் அனகோண்டாவும் இங்கு காணப்படுகிறது. எரும்பு தின்னிகளும், ஆர்மாடில்லோஸ் ஆகியவை தென் அமெரிக்காவில் காணப்படுகின்றன. தென் அமெரிக்காவிற்கு சிறப்பு பெற்ற விலங்கு லாமாஸ். தென் அமெரிக்க நதிகளில் பல வகையான மீன் இனங்கள் காணப்படுகின்றன. அவற்றில் அமேசான் நதியில் காணப்படும் பிரன்ஹா எனும் வகை மீன் கடுமையான மாமிச உண்ணி ஆகும்.

தென் அமெரிக்காவின் காடுகளின் வகைகளும் அதன் தாவரங்கள் மற்றும் விலங்குகள்

| வரிசை எண் | காடுகளின் வகைகள் | காலநிலை | பகுதி | தாவரங்கள் | விலங்குகள் |
|---|---|---|---|---|---|
| 1. | பூமத்தியரேகை காடுகள்  | ஆண்டு முழுவதும் வெப்பம் ஈரப்பதம் நிறைந்த காலநிலை. | அமேசான் நதி படுகை, வடகிழக்கு பிரேசில் மற்றும் கொலம்பியாவின் கடற்கரை பகுதிகள். | ரப்பர், சீமைத்தேக்கு, கருங்காலி, லாக்வுட், பிரேசில் கொட்டை மற்றும் சிபா.. | அனகோண்டா, ஆர்மாடில்லோஸ், பிரன்ஹா, குரங்கு, பாம்பு, முதலை மற்றும் கிளிகள். |
| 2. | மித வெப்பமண்டல காடுகள்  | ஆண்டு முழுவதும் மிதமான ஈரப்பதம் மிக்க காலநிலை. | தெற்கு பிரேசில் மற்றும் சிலி. ப்ரேசிலியன் உயர் நிலங்கள் பராகுவே மற்றும் உருகுவே. | பீச், ஊசியிலை மரங்கள் பயின்ஸ் மற்றும் கியூபிராக்கோ. | வெள்ளை வால் மான், ராகூன், ஒப்போஸம் முள்ளம் பன்றி மற்றும் செவ்வோ நரி.. |



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 187 9/30/2023 11:16:38 AM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | மத்தியதரைக் கடல் காடுகள்  | வெப்பமான வரண்ட கோடைகாலம். குளிர்ந்த ஈரப்பதமான குளிர்காலம். | தெற்கு அட்டகாமா பாலைவனம், மத்திய சிலி. | முட்புதர்கள் கள்ளிச்செடி லாரல் மற்றும் கருவேல மரம். | அதிக விலங்கினங்கள் காணப்பட வில்லை. |
| 4. | சவானா புல்வெளி நிலம்  | வெப்பமான ஈரப்பதம் நிறைந்த கோடைக் காலம். குளிர்ந்து வரண்ட குளிர்காலம். | கயானா உயர் நிலங்கள், ப்ரேசிலியன் உயர்நிலம், வட அர்ஜென்டினா மற்றும் பராகுவே. | உயரமான ஒழுங்கற்ற புற்கள் மற்றும் கருவேல மரங்கள். | கேபிபாரா, மார்ஷி மான், வெள்ளை வயிறு மற்றும் சிலந்தி குரங்கு. |
| 5 | பாம்பாஸ் புல்வெளி  | மிக வெப்பமான கோடைகாலம் குளிர்காலம் மற்றும் மிதமான மழை. | வடக்கிழக்கு அர்ஜென்டினாவின் வடகிழக்குப் பகுதிகள் உருகுவே மற்றும் பிரேசிலின் தென்பகுதி. | குட்டையான புற்கள். | ரியா, சாம்பார் மான் ஜாகுவார் ஒட்டகம், மியூல் மற்றும் கலைமான். |
| 6. | பாலைவனம்  | வெப்பமான கோடைகாலம் குளிரான குளிர்காலம். | தெற்கு அர்ஜென்டினா, அட்டகாமா பாலைவனம், தெற்கு பெரு, வடக்கு சிலி மற்றும் வடகிழக்கு பிரேசில். | முட்புதர் கள்ளிச்செடிகள், கருவேல மரம் மற்றும் மர பாசிகள். | கெக்கோஸ் மற்றும் இக்குவானா |



ரியா – பறக்க இயலாத பறவை



லாமாக்கள்



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 188 9/30/2023 11:16:42 AM

## வேளாண்மை

தென் அமெரிக்காவில் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் வேளாண்மை தொழில் செய்து வாழ்கிறார்கள். இக்கண்டத்தில் தன்னிறைவு வேளாண்மை மேற்கொள்ளப்படுகிறது. இக்கண்டத்தில் பெரும்பான்மையான பகுதி அமேசான் காடுகளை போன்ற காடுகளால் மூடப்பட்டுள்ளது அர்ஜென்டினா, உருகுவே, பிரேசில் ஆகிய மூன்று நாடுகள் மட்டுமே முன்னேறிய வேளாண்மை முறைகளை கொண்டுள்ளன. தென் அமெரிக்கக் கண்டத்தில் அர்ஜென்டினா, வேளாண்மை தொழிலில் முன்னேறிய நாடு ஆகும். அர்ஜென்டினாவின் ஈரப்பதம் நிறைந்த பாம்பாஸ் பகுதியில் வேளாண்மை மேற்கொள்ளப்படுகின்றன. பாம்பாஸ் பகுதியின் இயற்கை மற்றும் காலநிலை அமைப்பு வேளாண்மைக்கு உறுதுணையாக இருக்கிறது. ஆன்டிஸ் மலைத்தொடரின் ஆறுகள் பாயும் பியட் மான் பள்ளத்தாக்குகளில் சாதகமான காலநிலைச் சூழலில் விவசாயிகள் திராட்சைத் தோட்டங்களையும் சிட்ரஸ் பழங்களையும் விளைவிப்பதில் கவனம் செலுத்துகின்றனர். காபி, கொக்கோ, கரும்பு, வாழை, பருத்தி போன்ற பணப்பயிர்களும் விளைவிக்கப் படுகின்றன.

## கோதுமை

அர்ஜென்டினா, பிரேசில், பராகுவே, உருகுவே மற்றும் சிலி ஆகிய நாடுகள் அதிக அளவில் கோதுமையை உற்பத்தி செய்கின்றன. கோதுமை அர்ஜென்டினாவின் பாம்பாஸ் பகுதிகளில் மிக அதிக அளவில் விளைவிக்கப் படுகின்றன. உலகின் முக்கிய கோதுமை உற்பத்தியாளராகவும் ஏற்றுமதியாளராகவும் அர்ஜென்டினா விளங்குகிறது.

## கரும்பு

தென் அமெரிக்காவின் ஈரப்பதம் மிகுந்த, வெப்ப மண்டல பகுதிகளில் கரும்பு உற்பத்தி செய்கின்றன. ஸ்பானியர்கள் மற்றும் போர்ச்சுகீசியர்கள் கரும்புப் பயிரை மேற்கிந்திய தீவுகளுக்கும், பிரேசில் நாட்டிற்கும் அறிமுகப்படுத்தினர். தென் அமெரிக்காவிலுள்ள பிரேசில் அதிகமாக சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடாகத் திகழ்கிறது.



தென் அமெரிக்கா – வேளாண்மை

## சோளம்

சோளம் என்பது மக்கா சோளம் எனவும் அழைக்கப்படுகின்றது. பாம்பாஸின் வெப்பமான பகுதிகளிலும், பிரேசிலின் கடற்கரை பகுதிகளிலும், அமேசான் வடிநிலத்தின் சில பகுதிகளிலும் சோளம் விளைவிக்கப்படுகின்றன. அவ்வபோது மழை பெய்யும் கோடை காலமும் வெப்ப காலநிலையும் சோள உற்பத்திக்கு ஏற்றதாக உள்ளது. உலகில் சோள உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் அர்ஜென்டினா முதன்மை நாடாக விளங்குகின்றது.

## காபி மற்றும் கொக்கோ

காபியும் கொக்கோவும் தென் அமெரிக்காவின் மிக முக்கியமான தோட்டப்பயிர்களாகும். அதிக வெப்ப நிலையும்



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 189 9/30/2023 11:16:43 AM

அடிக்கடி ஏற்படும் மழை பொழிவும், மழைநீர் தேங்கி நிற்காத மண் வளமும், இப்பயிர்கள் விளைய ஏற்றதாக உள்ளது. பிரேசிலின் உயர் நிலங்களின் செம்மண் பகுதிகளில் இவை நன்கு விளைகின்றன. பிரேசில் அடிப்படையில் ஒரு விவசாய நாடு. இது காபி உற்பத்தியில் உலகின் முதல் இடத்தையும், கொக்கோ உற்பத்தியில் உலகின் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளது. மனாஸ் கிராயஸ் மற்றும் சாவோ பாலோ முக்கிய காபி விளையும் பகுதிகளாகும். பிரேசில் உலகின் 'காபி பானை' (Coffee Pot) என அழைக்கப்படுகின்றது. கொலம்பியாவும் வெனிசுலாவும் அதிக அளவில் காபி உற்பத்தி செய்கின்றன. ஈக்வடார் மற்றும் கொலம்பியாவில் அதிக அளவில் கொக்கோ உற்பத்தி செய்யப்படுகிறது.



தென் அமெரிக்காவில் உள்ள காபி பயிர்

## பருத்தி

தென் அமெரிக்காவின் மற்றொரு முக்கிய பணப்பயிர் பருத்தி ஆகும். வெப்ப காலநிலையும் அதிக மழை பொழிவும் பருத்தி உற்பத்தி செய்வதற்கேற்ற சூழல்களாக அமைகின்றன. பருத்தி பிரேசிலின் இரண்டாவது முக்கிய பயிராகும். சாவோ பாலோ பகுதியில் பாதியளவு பருத்தியினை உற்பத்தி செய்கிறது. வெனிசுலா மற்றும் பெரு தென் அமெரிக்காவின் பருத்தி உற்பத்தி செய்யும் பிற நாடுகள் ஆகும்.

## பார்லி, கம்பு மற்றும் ஓட்ஸ்

பாம்பாஸ் பகுதியில் பார்லி, கம்பு மற்றும் ஓட்ஸ் பெருமளவில் உற்பத்தி செய்யப் படுகின்றன. பார்லி புல் வகையை சேர்ந்த ஓர் முக்கிய தானியப் பயிராகும். இது மிதவெப்ப மண்டல கால நிலையில் நன்கு விளைகிறது. அர்ஜென்டினா, உருகுவே, சிலி, ஆன்டஸ் பகுதி, பொலிவியா உயர் நிலங்கள், ஈக்வடார் மற்றும் பெரு போன்ற பகுதிகளில் ஓட்ஸ் அதிக அளவில் உற்பத்தி செய்கின்றது. பல்வேறு நாடுகளில் கால்நடைகளின் முக்கிய உணவு ஓட்ஸ் ஆகும்.

## கால்நடை பராமரிப்பு

கால்நடை பராமரிப்புத் தொழில் தென் அமெரிக்காவில் ஒரு முக்கிய பொருளாதார செயல்பாடாகும். லானோஸ் மற்றும் காம்போஸ் ஆகியவை தென் அமெரிக்காவின் வெப்பமண்டல புல்வெளிகள் ஆகும். அர்ஜென்டினாவின் பாம்பாஸ்ஸில் இறைச்சிக்கான கால்நடைகள் வளர்க்கப் படுகின்றன. மேலும் வண்டி இழுக்கவும் வளர்க்கப்படுகின்றன. வெனிசுலாவின் ஒரினாகோ வடிநிலம், பிரேசில், கொலம்பியா போன்ற பகுதிகளில் லானோ புல்வெளி நிலங்கள் காணப்படுகின்றன. பெரும்பாலும் இங்கு நிலவும் காலநிலைக்கு ஏற்ற இனமாக க்ரயல்லோ (Criollo) வளர்ப்பு கால்நடைகள் உள்ளன. இவ்வகை கால்நடைகள் ஆல்ஃபலாஃபா என்னும் புல்வகையை உண்டு வாழ்கின்றன. பெரும் மேய்ச்சல் நிலங்கள் 'எஸ்டான்சியா' என அழைக்கப்படுகின்றன.

தென் அமெரிக்காவின் வறண்ட பகுதிகளில் ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. டைரா டெல் பியுகோ மற்றும் ஃபாக்லாந்து தீவுகளின் மித வெப்ப மண்டல புல்வெளிகள் ஆடுகளின் வளர்ப்பிற்கு ஏற்றவையாகும். ஆடு வளர்ப்பில் அர்ஜென்டினா மற்றும் உருகுவே முக்கிய நாடுகள் ஆகும். அர்ஜென்டினா உலகின் முக்கிய இறைச்சி ஏற்றுமதியாளராகத் திகழ்கிறது.



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 190
9/30/2023 11:16:44 AM



தென் அமெரிக்காவின் வறண்ட பகுதிகளில் செம்மறி ஆடுகள்

**எஸ்டான்சியாஸ்**

கால்நடைகள் வளரும் பெரும் புல்வெளி பரப்புகள் எஸ்ட்டென்ஷன் என அழைக்கப்படுகின்றன. இவை சிறிய புல்வெளி தளங்களாக பிரிக்கப்படுகின்றன. இவை மேலும் பராமரிப்பு தளங்களாக பிரிக்கப்பட்டு இங்கு கால்நடைகள் தரம் பிரித்து முத்திரை இடப்படுகின்றன. 'எஸ்டான்சியாரே' எனப்படும் எஸ்டான்சியா பராமரிப்பாளரின் கீழ் 'கவ்சோ' எனப்படும் வேலையாட்கள் வேலை செய்கின்றனர்.

## மீன்பிடித் தொழில்

வெப்பமண்டல மீன் வகைகளின் மிகப்பெரிய உற்பத்தியாளராக பெரு விளங்குகிறது. ஹம்போல்ட் (பெரு) குளிர் நீரோட்டமானது மீன்களின் முக்கிய உணவான பிளாங்டன்களை (Plankton) பெரு நாட்டிற்கு அருகில் கொண்டு சேர்ப்பதால் மீன் உற்பத்தி அதிகமாக செய்யப்படுகின்றன. வியாபார ரீதியிலான ஆழ்கடல் மீன்பிடித் தொழில் பெருவின் கடற்கரையில் இருந்து 3000 கிலோ மீட்டர் வரை கடலுக்குள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. வால்மீன், கானாங்கெளுத்தி (Mackerel), யல்லோ ஃபின் (Yellow Fin), பாம்பானா (Pompana) மற்றும் சுறா ஆகிய மீன் இனங்கள் இங்கு அதிகமாக காணப்படுகின்றன. தொழில் ரீதியாக ஐம்பதிற்கும் மேற்பட்ட மீன் இனங்கள் பிடிக்கப்படுகின்றன. பெருவின் கடற்கரையில் நாற்பதிற்கும் மேற்பட்ட மீன்பிடி துறைமுகங்கள் உள்ளன. பைட்டா கலாலோஆகியவைமுக்கியதுறைமுகங்களாகும்.

கடலோர மீன்பிடித்தலோடு உள்நாட்டு மீன் பிடித்தலும் தென் அமெரிக்காவில் மேற்கொள்ளப் படுகின்றன. அமேசான் நதி பல வகையான மீன்களின் மிகப்பெரிய அருங்காட்சியமாகும். ஏறக்குறைய 750 வகையான மீன்கள் இங்கு உயிர் வாழ்கின்றன.

## கனிம வளங்கள்

தென் அமெரிக்கா பல வகையான கனிம வளங்களை கொண்டுள்ளது. இக்கனிம வளங்கள் சீரற்ற தன்மையில் பரவியுள்ளன. இரும்புத்தாது, மாங்கனீசு, பெட்ரோலியம், தாமிரம் மற்றும் பாக்சைட் போன்ற முக்கியமான கனிமங்களை தன்னுள் கொண்டுள்ளது. மேலும் தங்கம் மற்றும் வெள்ளி சுரங்கங்கள் இன்னும் செயல்பட்டு வருகின்றன. தொழில்துறை பொருளாதாரத்திற்கு முக்கியமானதாக கருதப்படும் நிலக்கரி சிறிய அளவில் இக்கண்டத்தில் கிடைக்கிறது. இயற்கையாக தோன்றும் உலகில் சோடியம் நைட்ரேட் படிவுகள் கிடைக்கும் ஒரே இடமாக தென் அமெரிக்கா உள்ளது. இது வேளாண் தொழிலில் உரம் தயாரிப்பதற்கான முக்கிய மூலப்பொருளாகும்.

## இரும்புத்தாது

உலகின் மொத்த இரும்புத்தாது படிவுகளில் ஐந்தில் ஒரு பங்கு தென் அமெரிக்காவில் உள்ளது. பிரேசில் மற்றும் சிலி உலகின் பெருமளவிலான இரும்புத் தாது இருப்புள்ள நாடுகளாகும். ரஷ்யாவிற்கு அடுத்தபடியாக பிரேசில் அதிகப்படியான இரும்புத்தாது இருப்பை கொண்டுள்ளது. உலகின் மொத்த இரும்பு ஏற்றுமதியில் 15 சதவீதத்தை பிரேசில் மேற்கொள்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. உயர்தரமான இரும்புத் தாது இட்டாபிரா, மினாஸ், கிராய்ஸ், கராஜாஸ் ஆகிய இடங்களில் வெட்டி எடுக்கப்பட்டு வருகின்றன.

## மாங்கனீசு

அதிக அளவிலான மாங்கனீசு இருப்பு பிரேசிலில் உள்ளது. லஃபாய்டி, மினார், கிராய்ஸ்

அமாபாவின் வடக்கு மாநிலத்தில் மாங்கனீசு கிடைக்கிறது.

### பெட்ரோலியம்

வெனிசுலாவில் பெருமளவிலான பெட்ரோலிய படிவுகள் காணப்படுகின்றன. அர்ஜென்டினா, கொலம்பியா, ஈக்வடார், பெரு,சிலி மற்றும் பொலிவியா ஆகிய நாடுகளில் எண்ணை வயல்கள் உள்ளன. பெட்ரோலியம் மட்டுமே இங்கு கணிசமான அளவிற்கு உற்பத்தி செய்யப்படுகிறது. அர்ஜென்டினா பெரும்பாலும் பெட்ரோலிய உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளது. வெனிசுலா உலகின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடாகவும், மத்திய கிழக்கிற்கு வெளியே மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடாக விளங்குகிறது.

### தாமிரம்

தாமிர உற்பத்தியில் சிலி இரண்டாவது மிகப்பெரிய நாடாக விளங்குகிறது. மொத்த ஏற்றுமதியில் 40 சதவீத மதிப்பை தாமிரம் அளிக்கிறது. உலகின் மிகப்பெரிய தாமிர சுரங்கங்கள் பெரு நாட்டில் அமைந்துள்ளன. இவை அட்டகாமா பாலைவனத்தில் உள்ளன.

### பாக்சைட்

உலக பாக்சைட் உற்பத்தியில் பிரேசில் மூன்றாவது இடத்தில் உள்ளது. உலகின் முக்கியமான பாக்சைட் சுரங்கம் அமேசான் நதியின் முகத்துவாரத்தில் அமைந்துள்ளது. அலுமினியம் உற்பத்திக்கு மூலப்பொருளாக பாக்சைட் பயன்படுத்தப்படுகிறது.

### தொழிற்சாலைகள்

தென் அமெரிக்காவில் தொழிற்சாலைகள் மிகவும் மெதுவாகவே வளர்ச்சி அடைந்தன. இக்கண்டத்தில் அர்ஜென்டினா, பிரேசில் மற்றும் சிலி ஆகிய நாடுகள் தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளாகும். முதலாம் உலகப்போர் வரை பெட்ரோலியம், தாமிரம் மற்றும் இரும்பு போன்ற சுரங்கத் தொழிலில் கிடைக்கும் பொருட்களை ஏற்றுமதி செய்து வந்தது.. தொழில்மயமாதலுக்கு முக்கியமான காரணியான உள்கட்டமைப்பு (குறிப்பாக போக்குவரத்து) போதிய அளவு வளர்ச்சி அடையவில்லை. தென் அமெரிக்காவின் கரடுமுரடான நிலப்பரப்பின் காரணமாக அங்கு ரயில் போக்குவரத்தும் சாலை போக்குவரத்தும் போதிய அளவிற்கு வளர்ச்சி அடையவில்லை. அமேசான் மற்றும் லா பிளாட்டா ஆறுகள் குறைந்த செலவிலான நீர்வழி போக்குவரத்தை வழங்குகின்றன. வளங்கள் நிறைந்த பூமியாக இருந்தபோதும் தென் அமெரிக்காவில் தொழில்மயமாதல் மிகவும் தாமதமாகவே துவங்கியது. உள்நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களைக் கொண்டு தற்போது புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு வருகின்றன. தென் அமெரிக்காவில் தொழில் மயமாக்கப்பட்ட நாடாக பிரேசில் விளங்குகிறது. அதனைத் தொடர்ந்து அர்ஜென்டினா இரண்டாம் இடத்தில் உள்ளது.

| வரிசை எண் | நாடு | தொழிற்சாலைகள் |
|---|---|---|
| 1. | பிரேசில் | இரும்பு எஃகு, பருத்தி ஆடை, சர்க்கரை, உணவு பதப்படுத்துதல், எண்ணெய் சுத்திகரிப்பு, இரசாயனங்கள் மற்றும் ஆட்டோமொபைல். |
| 2. | அர்ஜென்டினா | இறைச்சி பதப்படுத்துதல், பால் பொருட்கள், உணவு பதப்படுத்துதல், தோல் பதப்படுத்துதல், கம்பளி ஆடைகள், சர்க்கரை மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு. |
| 3. | சிலி | எண்ணெய் சுத்திகரிப்பு, இரசாயன உரங்கள் மற்றும் தாமிரம் உருக்குதல். |
| 4. | பெரு | சுரங்கம் மற்றும் கனிம தொழில், இரசாயனங்கள், உரங்கள், சர்க்கரை, காபி மற்றும் கம்பளி ஆடைகள். |



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 192 9/30/2023 11:16:44 AM

| | | |
|---|---|---|
| 5. | உருகுவே | பால் பொருட்கள், இறைச்சி பதப்படுத்துதல் மற்றும் கம்பளி ஆடைகள். |
| 6. | வெனிசுலா | எண்ணெய் சுத்திகரிப்பு, ரசாயன உரங்கள் மற்றும் தாமிரம் உருக்குதல். |

## வணிகம்

தென் அமெரிக்கா உலக வர்த்தகத்தில் ஒரு முக்கிய பங்கு வருகிறது. தென் அமெரிக்காவில் பாதிக்கும் மேற்பட்ட வணிகத்தை பிரேசில், அர்ஜென்டினா, வெனிசுலா, பெரு மற்றும் சிலி ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன. சர்க்கரை, காபி, கொக்கோ, புகையிலை, மாட்டிறைச்சி, சோளம், கோதுமை, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு, ஆளி விதை (Linseed), பருத்தி, இரும்புத்தாது மற்றும் தாமிரம் ஆகியவை தென் அமெரிக்காவின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாகும். இப்பொருட்கள் அதிகமாக வட அமெரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இயந்திரங்கள், வாகனங்கள், இரசாயனங்கள், மருந்து பொருட்கள், காகிதம் மற்றும் ஆடைகள் ஆகியவை தென் அமெரிக்காவின் இறக்குமதி பொருட்களாகும். இவை வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

## போக்குவரத்து

வட அமெரிக்காவை போன்று தென் அமெரிக்காவில் போதிய அளவிலான ஒருங்கிணைக்கப்பட்ட போக்குவரத்து வலைப்பின்னல் இல்லை. தென் அமெரிக்க கண்டத்தின் நாடுகளுக்கு இடையேயும் நாட்டிற்கு உள்ளாகவும் இருக்கும் இணைப்புகளை மேம்படுத்துவதற்கான குறிப்பிடத்தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## சாலை வழி போக்குவரத்து

தென் அமெரிக்கா மிகப்பெரிய அளவிலான, மிக வேகமாக விரிவடைந்து வரும் சாலை போக்குவரத்து இணைப்புகளைக் கொண்டுள்ளது. பல நாடுகளில் குறைந்த சதவீத சாலைகள் மட்டுமே முறையாக அமைக்கப்பட்டுள்ளன. அந்நாட்டின் தொலைதூரப் பகுதிகளில் இரண்டு வாகனங்கள் கூட ஒரே நேரத்தில் செல்ல இயலாத அகலத்தோடு தான் சாலைகள் உள்ளன. வெனிசுலாவையும் பிரேசிலையும் இணைக்கும் சாலை, வடக்கு தெற்காக அமேசான் வடிநிலப்பகுதி வழியாக போக்குவரத்திற்கு உதவி செய்கிறது. பான் அமெரிக்கன் நெடுஞ்சாலை அமைப்போடு இணைந்து சாலைகளின் மிகப்பெரிய வலைப்பின்னலை பிரேசில் கொண்டுள்ளது.



தென் அமெரிக்கா – சாலை போக்குவரத்து

## இரயில் வழி போக்குவரத்து

பல தென் அமெரிக்க நாடுகளில் போக்குவரத்தின் பிரதான இடத்தை இரயில் போக்குவரத்து இழந்தது. அதற்கு பதிலாக

1960 களுக்குப் பின் வேகமாக வளர்ச்சியடைந்த சாலை போக்குவரத்து அவ்விடத்தை பிடித்தது. மேலும் தென் அமெரிக்க இரயில் போக்குவரத்து நடைமுறை பிரச்சினைகளாலும் காலாவதியான உபகரணங்களாலும் பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் அனைத்து இருப்புப் பாதைகளும் ஒருவழி பாதையாக இருப்பதால் வேகம் குறைந்து பயணிகளின் போக்குவரத்திற்கு ஏற்றதாக அமையவில்லை. சில நாடுகளில் இரண்டிற்கும் மேற்பட்ட இருப்புப் பாதைகள் இருப்பதனால் மேம்படுத்தப்பட்ட இரயில் போக்குவரத்து ஒருங்கிணைப்பிற்கு தடையாக உள்ளன.



தென் அமெரிக்கா – இரயில்வே போக்குவரத்து

## நீர்வழி போக்குவரத்து

தென் அமெரிக்க நாடுகளின் போக்குவரத்து அமைப்பில் கடல் வழி மிக நீண்ட காலமாக முக்கிய பங்காற்றி வருகிறது. தென் அமெரிக்காவின் பெரும்பான்மையான ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்கள் கண்டத்திற்கு உள்ளேயும், கண்டத்திற்கு வெளியிலும் கப்பல்கள் மூலமே கொண்டு செல்லப்படுகின்றன. தென் அமெரிக்கா பல அற்புதமான இயற்கை துறைமுகங்களை கொண்டுள்ளன.அவை ரியோ–டி–ஜெனிரோ, சால்வடார், மொண்டேவிடியோ மற்றும் வால்பரைசோ ஆகும். சிலி மற்றும் பிரேசில் போன்ற பல நாடுகள் கடல் வழியை மேம்படுத்தி பலப்படுத்த உறுதியான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.




தென் அமெரிக்கா – நீர்வழி போக்குவரத்து

சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துகள் உள்ளன. அவை (i) நான்கு நாடுகளை உள்ளடக்கிய பராகுவே – உருகுவே வடிநிலப் பகுதி (ii) ஆறு நாடுகளை உள்ளடக்கிய அமேசான் வடிநில பகுதி. இவை பல ஆயிரம் மைல்கள் பயணிக்கும் நீர் வழியை கொண்டுள்ளன.

## வான்வழி போக்குவரத்து

இரண்டாம் உலகப்போருக்கு பின் வான்வழி மிக வேகமாக வளர்ச்சி அடைந்து உள்ளது. பயணிகள் போக்குவரத்து மற்றும் மொத்த சரக்குப் போக்குவரத்திலும் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. தென் அமெரிக்க நாடுகளின் தலைநகரங்கள் மற்றும் முக்கிய நகரங்கள் அனைத்தும் வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் முக்கிய நகரங்களுக்கு நேரடி வான்வழி போக்குவரத்தால் இணைக்கப்பட்டுள்ளன.

## மக்கள் தொகை

உலகின் பலதரப்பட்ட கலவையான மக்கள் தொகையை கொண்டது தென் அமெரிக்கா. தென் அமெரிக்காவின் பெரும்பாலான மக்கள் பதினைந்தாம் நூற்றாண்டில் வருகை புரிந்த ஐரோப்பியர்களான ஸ்பானியர் மற்றும் போர்ச்சுக்கீசியரின் வம்சாவளியினர் ஆவர். ஐரோப்பியர்கள் ஆப்பிரிக்கர்களை அடிமைகளாக கொண்டு வந்ததன் விளைவாக ஆப்பிரிக்க வம்சாவளியினரும் இங்கு



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 194 9/30/2023 11:16:45 AM

இருக்கின்றனர். பூர்வகுடி மக்கள் இன்றும் மலைகளிலும் மழைக்காடுகளிலும் அவர்களது சொந்த மொழி மற்றும் கலாச்சாரத்தோடு வாழ்ந்து வருகின்றனர். அமெரிக்க இந்தியர்கள், ஐரோப்பியர்கள் மற்றும் கருப்பர் என மூன்று முக்கிய இனங்கள் தென் அமெரிக்காவில் காணப்படுகின்றன. பூர்வ குடிமக்கள் மற்றும் ஐரோப்பியர்களின் கலப்பினம் "மெஸ்டிஜோ" என அழைக்கப்படுகின்றது. ஐரோப்பியர்கள் மற்றும் கருப்பர்களின் கலப்பினம் முலாடோ என அழைக்கப்படுகிறது. பூர்வ குடிமக்கள் மற்றும் கருப்பர்களின் கலப்பினம் ஸாம்போ என அழைக்கப்படுகின்றது. தென் அமெரிக்காவின் தற்போதைய மக்கள் தொகை 42,91,15,060 அதாவது 42.91 கோடி ஆகும். சதுர கிலோ மீட்டருக்கு 21 நபர்கள் என்பது தென் அமெரிக்காவின் மக்களடர்த்தி ஆகும். உலகில் மக்கள் தொகையில் ஐந்தாம் இடத்தில் தென் அமெரிக்கா இருக்கிறது.

## மக்கள் தொகை பரவல்

(அ) **அதிக மக்கள் தொகை :** அதிகமான மக்கள் அடர்த்தி கொண்ட பகுதிகளாக கயானா, வெனிசுலா, சுரினாம், கொலம்பியா, பிரேசில் மற்றும் பெரு உள்ளன.

(ஆ) **மிதமான மக்கள் தொகை :** பராகுவே சிலி உருகுவே ஆகிய பகுதிகளில் மிதமான மக்களடர்த்தி காணப்படுகிறது

(இ) **மிகக் குறைந்த மக்கள் தொகை:** அர்ஜென்டினா பொலிவியா மற்றும் அமேசான் வடிநிலப் பகுதி.

## மொழி மற்றும் சமயம்

போர்ச்சுகீஸ் மற்றும் ஸ்பானிஷ் ஆகியவை தென் அமெரிக்காவின் பிரதான மொழிகளாகும். டச்சு, பிரெஞ்ச், ஆங்கிலம், ஜெர்மன் மற்றும் ஹிந்தி ஆகியவை தென் அமெரிக்கர்கள் பயன்படுத்தும் பிற மொழிகள் ஆகும். தென் அமெரிக்காவின் பிரதான சமயம் கிறிஸ்துவம் ஆகும். இஸ்லாம் மற்றும் இந்து சமயமும் கிறிஸ்துவ சமயத்திற்கு அடுத்தபடியாக இங்கு பின்பற்றப்படுகின்றன.

**உங்களுக்குத் தெரியுமா?**

தென் அமெரிக்க நாடுகளில் பல்வேறு வகையான இசைகள் உள்ளன. பிரேசிலிலிருந்து சம்பா, அர்ஜென்டினாவைச் சேர்ந்த டேங்கோ மற்றும் உருகுவே மற்றும் கொலம்பியாவைச் சேர்ந்த கும்பியா ஆகியவை மிகவும் பிரபலமான வகைகளில் அடங்கும்.

**வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா**

| வரிசை எண் | | வட அமெரிக்கா | தென் அமெரிக்கா |
|---|---|---|---|
| 1. | புவியியல் பரவல் | 7° வ முதல் 84° வ அட்ச ரேகைகள் மற்றும் 53° மே முதல் 180° மே வரை தீர்க்க ரேகைகள். | 12° வ முதல் 55° தெ அட்சக்கோடுகள் மற்றும் 35° மே முதல் 81° மே வரை தீர்க்க ரேகை. |
| 2. | முக்கிய நாடுகள் | கனடா, ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் மெக்ஸிகோ | அர்ஜென்டினா, பொலிவியா, பிரேசில், சிலி, கொலம்பியா, ஈக்வடார், கயானா, பராகுவே, பெரு, சுரிநாம், உருகுவே மற்றும் வெனிசுலா |
| 3. | மிகச்சிறிய நாடு | கிரெனடா | சுரிநாம் |
| 4. | உயரமான சிகரம் | மெக்கென்லீ மலைகள் | ஆண்டிஸ் மலைகள் |



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 195 9/30/2023 11:16:45 AM

| | | | |
|---|---|---|---|
| 5. | சுற்றியுள்ள கடல்களும் பெருங்கடல்களும் | ஆர்க்டிக் பெருங்கடல் பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், மெக்ஸிக்கோ வளைகுடா. | பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், கரீபியன் கடல், தென் பெருங்கடல். |
| 6. | முக்கிய ஆறுகள் | மிஸிஸிப்பி ஆறு, மிஸ்ஸௌரி ஆறு, கொலாடோ ஆறு, ரியோ கிரண்டே | அமேசான், பரானா, மெடிரா, டாகோடன்டிஸ், ஒரினாகோ |
| 7. | மிகப்பெரிய ஏரி | சுப்பீரியர் ஏரி | மராகாய்போ ஏரி |
| 8. | முக்கிய பாலைவனங்கள் | கிரேட் பேசின், மோஜாவே, சொனோரான், சிஹுவாஹான் பாலைவனங்கள் | அட்டகாமா பாலைவனம் படகோனிய பாலைவனம் |
| 9. | முக்கிய விலங்குகள் | பழுப்பு, கரடி, வழுக்கை கழுகு, ஹம்மிங்பேர்ட், புல்ஃப்ராக், பீவர், சிவப்பு காகடட் மரச்செக்கு, சிவப்பு நரி, காட்டெருமை | லாமா, அனகோண்டா, எரும்பு தின்னி, அகூட்டி, அர்மாடில்லோ மற்றும் சின்சில்லா |
| 10. | விளையும் முக்கிய பயிர்கள் | சோளம், கோதுமை, சோயாபீன்ஸ் | கோதுமை, சோளம், அரிசி, உருளைக்கிழங்கு |
| 11 | பேசும் முக்கிய மொழிகள் | ஆங்கிலம், ஸ்பானிஷ், பிரெஞ்சு | போர்த்துகீசியம், ஸ்பானிஷ், டச்சு, ஆங்கிலம், பிரஞ்சு |

## சுருக்கம்

- ❖ ஆசிய மற்றும் ஆப்பிரிக்க கண்டங்களுக்கு அடுத்து வட அமெரிக்கா மூன்றாவது பெரிய கண்டமாகும். இது நான்கு முக்கிய இயற்கை பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
- ❖ வெப்பமண்டலம் முதல் துருவப் பகுதிகள் வரை விரிந்துள்ள அட்சக்கோடுகளின் பரவல் வட அமெரிக்காவின் காலநிலையை ஆசியாவை போன்று பலவகைபட்டதாக அமைத்துள்ளது.
- ❖ விரிந்து பரந்த பல்வேறுபட்ட காடுகளை கொண்டுள்ளது வடஅமெரிக்கா. கிட்டதட்ட 30 சதவீத நிலப்பரப்பில் உள்ளன.
- ❖ கோதுமை, சோளம், ஓட்ஸ் சோயாபீன்ஸ், பார்லி மற்றும் பல உணவு தானியங்கள் வட அமெரிக்காவில் பரந்த சமவெளிகளில் விளைவிக்கப்படுகின்றன.
- ❖ வடஅமெரிக்கா இரும்பு தாது, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு, தாமிரம், வெள்ளி, சல்ஃபர், துத்தநாகம், பாக்சைட், மாங்கனீசு போன்றவற்றின் உற்பத்தியில் முன்னணியில் இருக்கிறது.
- ❖ நூற்றுக்கணக்கான பல்வேறுபட்ட கலாச்சாரங்களை சந்தித்து கலந்து புதிய கலாச்சாரத்தை உருவாக்குவதால் அமெரிக்கா உருகும் பனி என அழைக்கப்படுகிறது.
- ❖ ஆசியா,ஆப்பிரிக்கா,வடஅமெரிக்காவினைத் தொடர்ந்து தென் அமெரிக்கா உலகின் நான்காவது மிகப்பெரிய கண்டமாக



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 196 9/30/2023 11:16:45 AM

உள்ளது. இது மூன்று பெரிய இயற்கை பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

❖ தென் அமெரிக்காவின் காலநிலையை அட்சக்கோடுகள், கடல் மட்டத்தின் உயரம் மற்றும் பசிபிக் அட்லாண்டிக் பெருங்கடல்களின் அருகாமை ஆகிய இம்மூன்றும் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

❖ நான்கு முக்கிய இயற்கை தாவர பகுதிகளைக் கொண்டது தென் அமெரிக்கா. அமேசான் படுகை, கிழக்கு உயர்நிலங்கள், கிராண்ட் சாக்கோ மற்றும் ஆன்டஸ் மலைச்சரிவுகள்.

❖ கோதுமை, சர்க்கரை, சோளம், காபி, கொக்கோ, வாழை, பருத்தி ஆகியவை தென் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப் படுகின்றன.

❖ இரும்புத்தாது, மாங்கனீசு, பெட்ரோலியம், தாமிரம், பாக்சைட் போன்ற கனிமங்களோடு இன்னும் பிற விலைமதிப்புள்ள கனிமங்கள் தென் அமெரிக்காவில் காணப்படுகின்றன.

❖ போர்ச்சுகீஸ் மற்றும் ஸ்பானிஷ் தென் அமெரிக்காவின் முதன்மை மொழிகள் ஆகும்.

| **கலைச்சொற்கள்:** | | | |
|---|---|---|---|
| 1. | நிலச்சந்தி | A narrow stretch of land joining two large land masses | Isthmus |
| 2 | நீர்ச்சந்தி | A narrow stretch of water joining two large water bodies | Strait |
| 3. | மரக்கூழ் | Obtained from wood Pulp | Cellulose |
| 4. | பிரெய்ரி புல்வெளி | A temperate grassland of North America | Prairies |
| 5. | இக்லூ (எஸ்கிமோக்களின் வீடு) | The specially designed a house by ice | Igloos |
| 6. | பசிபிக் நெருப்பு வளையம் | These places are subject to great volcanic eruption and earthquake activities | The Pacific Ring of Fire |
| 7. | மழைக் காடுகள் | A tract of land covered by dense equatorial forest in the Amazon basin. | Selvas |
| 8. | பாம்பாஸ் | A temperate grassland of South America | Pampas |
| 9. | நான்கு மணி மழை | In equatorial regions, convectional rain occurs at 4pm | 4'o Clock Rain |
| 10. | செம்மறி ஆட்டுப் பண்ணை | The Breeds raised on large pasture lands | Estancias |



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 197 9/30/2023 11:16:45 AM

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வட அமெரிக்காவையும் ஆசியாவையும் ________________ பிரிக்கிறது.
   அ) பேரிங் நீர் சந்தி
   ஆ) பாக் நீர் சந்தி
   இ) மலாக்கா நீர் சந்தி
   ஈ) ஜிப்ரால்டர் நீர் சந்தி

2. _______ உலகின் சர்க்கரைக் கிண்ணம் என அழைக்கப்படுகிறது.
   அ) மெக்ஸிகோ
   ஆ) அமெரிக்கா
   இ) கனடா
   ஈ) கியூபா

3. _________ வட அமெரிக்காவின் நீளமான ஆறுகள் ஆகும்.
   அ) மிஸிஸிப்பி மற்றும் மிஸ்ஸௌரி
   ஆ) மெக்கென்ஸி ஆறு
   இ) புனித லாரன்சு ஆறு
   ஈ) கொலரடோ ஆறு

4. உலகின் மிக நீண்ட மலைத்தொடர் ________________.
   அ) ஆன்டிஸ்
   ஆ) ராக்கி
   இ) இமயமலை
   ஈ) ஆல்ப்ஸ்

5. பூமத்திய ரேகை பகுதியில் இருப்பதால் _________ வடிநிலப் படுகை தினந்தோறும் மழை பெறுகிறது.
   அ) மெக்கென்ஸி
   ஆ) ஒரினாகோ
   இ) அமேசான்
   ஈ) பரானா

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. வட அமெரிக்காவின் தாழ்வான பகுதியான _________ கடல் மட்டத்திலிருந்து 86 மீட்டர் ஆழத்தில் உள்ளது.
2. உலகின் தலைசிறந்த மீன்பிடித் தளமாக _________ விளங்குகிறது.
3. சிலி அர்ஜென்டினா எல்லையில் அமைந்துள்ள ______ ஆண்டிஸ் மலைத் தொடரின் உயரமான சிகரமாகும்.
4. பூமத்திய ரேகைப் பகுதியில் இருக்கும் _____________ உலகின் நுரையீரல் என அழைக்கப்படுகிறது.
5. _________ற்கு உலகின் காப்பி பானை என்ற பெயரும் உண்டு.

### III. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | மெக்கென்லீ சிகரம் | – வெப்ப மண்டல காடுகள் |
| 2. | கிராண்ட் கேன்யான் | – பறக்க இயலாத பறவை |
| 3. | எபோனி | – கொலரடோ ஆறு |
| 4. | நான்கு மணி கடிகார மழை | – 6194 மீ |
| 5. | ரியா | – பூமத்திய ரேகை பகுதி |

### IV. காரணம் கூறுக.

1. வட அமெரிக்காவின் கிழக்கு கடற்கரை பகுதிகள் குறிப்பாக அமெரிக்கா மிதமான காலநிலையை அனுபவிக்கிறது.
2. அமெரிக்கா "உருகும் பானை" என அழைக்கப்படுகிறது.
3. கியுடோ மற்றும் அமேசான் படுகை ஒரே அட்சரேகையில் அமைந்திருந்தாலும் கியுடோ நிரந்தரமான வசந்த காலத்தை அனுபவிக்கிறது.
4. வெப்பமண்டல மீன்களை அதிக அளவில் உற்பத்தி செய்யும் நாடு பெரு.



7th Std Social Science Geography Term 3 TM Unit 1.indd 198 9/30/2023 11:16:45 AM

## V. வேறுபடுத்துக.

1. ராக்கி மலைகள் மற்றும் அப்பலேஷியன் மலைகள்
2. பிரெய்ரி மற்றும் பாம்பாஸ் புல்வெளிகள்
3. துந்திர பகுதி மற்றும் டைகா பகுதி

## VI. கீழ்கண்ட வாக்கியங்களில் பொருத்தமானதை (✓ ) டிக் செய்யவும்

1. **கூற்று** (A) : வட அமெரிக்காவின் தெற்கு மற்றும் மேற்கு மாநிலங்களில் பருத்தி நன்றாக வளருகிறது.

   **காரணம்** (R): மழையுடன் கூடிய வெப்பமான கோடைகாலம் மற்றும் வளமான மண் ஆகியவை பருத்தி விளைவதற்கான ஏற்ற சூழல்களாக உள்ளன.

   அ) கூற்றும் காரணமும் சரி.

   ஆ) கூற்று சரி. காரணம் தவறு.

   இ) காரணம் தவறு. கூற்று சரி.

   ஈ) காரணம் மற்றும் கூற்று தவறு.

2. **கூற்று:** தென் அமெரிக்காவில் உள்ள தொழிற்சாலைகள் வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளன.

   **காரணம்:** தொழில்மயமாவதற்கான அடிப்படை வசதிகள் குறிப்பாக போக்குவரத்து வளர்ச்சியில் பின்தங்கியுள்ளது.

   அ) கூற்றும் காரணமும் சரி.

   ஆ) கூற்று சரி. காரணம் தவறு.

   இ) காரணம் தவறு. கூற்று சரி.

   ஈ) காரணம் மற்றும் கூற்று தவறு.

## VII. கீழ்கண்டவற்றிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

1. வட அமெரிக்காவின் எல்லைகளை கூறுக.
2. மெக்கன்சி ஆறு பற்றி குறிப்பு வரைக.
3. வட அமெரிக்காவில் விளையும் பழங்களின் வகைகள் யாவை? அவற்றில் சில பழங்களைப் பட்டியலிடுக.
4. எஸ்கிமோவின் வாழ்க்கை முறை பற்றி குறிப்பு வரைக.
5. வட அமெரிக்காவில் அதிக மக்கள்தொகை கொண்ட பகுதிகள் யாவை?
6. தென் அமெரிக்காவின் இயற்கை பிரிவுகளை எழுதுக.
7. 4 மணி 'கடிகார மழை' என்றால் என்ன?
8. தென் அமெரிக்காவில் உள்ள வெப்ப மண்டலக் காடுகளில் வாழும் தாவரங்கள் மற்றும் விலங்குகளை பட்டியலிடுக.
9. எஸ்டான்சிய என்றால் என்ன?
10. தென் அமெரிக்காவின் முக்கிய ஏற்றுமதிகளை கூறுக.

## VIII. பத்தியளவில் விடையளி.

1. வட அமெரிக்காவின் காலநிலை பற்றி விளக்குக.
2. வட அமெரிக்காவின் கனரக பொறியியல் தொழிற் சாலை பற்றி எழுதுக.
3. தென் அமெரிக்காவின் ஆறுகள் பற்றி விவரிக்கவும்.
4. தென் அமெரிக்காவில் உள்ள பல்வேறு முக்கிய இனங்கள் பற்றி எழுதுக.

## IX. வரைபட திறன்.

1. பாடப்புத்தகம் மற்றும் நிலவரைபடம் உதவிக்கொண்டு வட அமெரிக்காவை சுற்றியுள்ள கடல்கள், வளைகுடாக்கள் மற்றும் விரிகுடாகளை வரைபடத்தில் குறிக்கவும்.
2. கொடுக்கப்பட்டுள்ள தென் அமெரிக்க வரைபடத்தில் அமேசான், ஒரினாகோ, நீக்ரோ, பராகுவே, உருகுவே ஆறுகளை குறிக்கவும்.

## X. செயல்பாடு.

1. சில முக்கிய நகரங்களும் சில தொழிற்சாலைகளும் அடைப்பு குறிகளில் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்.

   அ) பிட்ஸ்பர்க் (ஜவுளி, இரும்பு எஃகு, கப்பல் கட்டும் தொழில்)

   ஆ) சிகாகோ (வாகனங்கள், காகிதம், சிமெண்ட்)

   இ) சிலி (எண்ணை சுத்திகரிப்பு, சர்க்கரை, பருத்தி ஆடை)

   ஈ. உருகுவே (தோல் பதனிடுதல், தாமிரம் உருக்குதல், பால் பொருட்கள்)

2. வினாக்களுக்கான விடைகளை கொடுக்கப்பட்டுள்ள பெட்டிகளுக்குள் எழுதவும்.

   அ) தென் அமெரிக்காவின் உயரமான சிகரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|

   ஆ) தென் அமெரிக்காவிலுள்ள இயங்கும் எரிமலை.

| | | | | | |
|---|---|---|---|---|---|

   இ) பரானா மற்றும் பராகுவே ஆறுகள் இணைந்து அழைக்கப்படுவது.

| | | | |
|---|---|---|---|

   ஈ) உலகின் உயரமான நீர்வீழ்ச்சி.

| | | | | | |
|---|---|---|---|---|---|

   உ) உலகின் மிகப்பெரிய நதி.

| | | | | | |
|---|---|---|---|---|---|

3. வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்காவில் காணப்படும் விலங்குகள் மற்றும் பறவைகளின் படங்களை ஒட்டி ஒரு தொகுப்பை உருவாக்கவும்.

## மூலாதார நூல்கள்:


1. World Geography, Alka Gautham, (2013), Sharda Pustak Bhawan, Allahabad-211002.
2. Purnell's concise Encyclopedia of Geography – C.J. Turnney,(1984),Little Hampton Book Services Ltd, UK.
3. The World Geography by Time life (1999), USA.
4. The illustrated Encyclopedia of Geography, (2005), Pentagon Press, USA.
5. A Dictionary of Geography, Mayhew Susan, (2015), Oxford University Press, UK2.

அலகு – 2

# நிலவரைபடத்தை கற்றறிதல்




## கற்றல் நோக்கங்கள்

- ❖ நிலவரைபடம் மற்றும் அளவையைப் பற்றி அறிந்து கொள்ளுதல்
- ❖ நிலவரைபடங்களின் வகைகளை அடையாளம் காணுதல்
- ❖ நிலவரைபடக்கூறுகளைப் புரிந்து கொள்ளுதல்
- ❖ நிலவரைபடத்தின் குறிப்பு, குறியீடு மற்றும் சின்னங்களைக் கற்றுக்கொள்ளுதல்

## அறிமுகம்

நிலவரைபடத்தினை வாசித்தல் என்பது புவியியல் ரீதியான இருப்பிடம், இயற்கை அமைப்புகளான மலைகள், பீடபூமிகள் மற்றும் சமவெளிகள் குறித்தும், நீர்நிலைகளான ஆறு, ஏரி, கடல் குறித்தும், கலாச்சார அமைப்புகளான சாலைகள் மற்றும் குடியிருப்புகள் குறித்தும், புரிந்து கொள்ள வழிவகுக்கின்றது. நிலவரைபடங்களானவை கடந்த காலத்தினைப் பதிவு செய்தலாக இருக்க வேண்டும். இவை கடந்த காலத்தினைப் புரிந்து கொள்ளவும் எதிர்காலத்தினை உணரவும் வழிவகை செய்யவேண்டும்.

நிலவரைபடங்கள், பல்வேறு நாடுகள் மற்றும் மாநிலங்களின் எல்லைகளை படங்களாகக் காட்டுகின்றன. அனைத்து நாடுகள் மற்றும் கண்டங்களின் அளவு மற்றும் வடிவத்தினை மாணவர்கள் புரிந்துகொள்ள வழிவகைச் செய்கிறது. நிலவரைபடங்கள் புவியியல் எல்லைகளின் பண்புகளைக் குறித்து தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

## நிலவரைபடங்கள்

புவியியலாளர்களின் ஒரு முக்கிய கருவியாக நிலவரைபடம் அமைகிறது. நிலவரைபடம் என்பது புவியின் முழு பகுதி அல்லது ஒரு பகுதியின் காட்சியினை ஒரு தட்டையான மேற்பரப்பில் கொடுக்கப்பட்டுள்ள அளவையில் வரையப்படுவதாகும். நிலவரைபடமானது கண்டங்கள், நாடுகள், பெருநகரங்கள், மற்றும் சிறிய உள்ளூர் பகுதிகள் உட்பட சில குறிப்பிட்ட விவரங்களைக் காட்டுவதாக வரையப்படுகிறது. இது கையாள்வதற்கும் சுருட்டியோ அல்லது மடித்தோ கையில் எடுத்துச் செல்வதற்கும் கணினியில் சேமித்து வைப்பதற்கும் எளிதானதாக அமைகிறது.



7th Std Social Science Geography Term 3 TM Unit 2.indd 201 9/30/2023 11:18:42 AM

**உங்களுக்குத் தெரியுமா?** ஆரம்பகாலங்களில் காகிதத்தோல் (விலங்குகளின் தோல்), பாப்பிரஸ் (Papyrus), துணிகள், ஈரநிலம் மற்றும் களிமண் பலகைகள் நிலவரைபடம் தயாரிக்க பயன்படுத்தப்பட்டன.

## நிலவரைபடங்களின் வகைகள்

ஒவ்வொரு நிலவரைபடமும் அதன் வடிவமைப்பு, பொருளடக்கம் மற்றும் கட்டமைப்பில் தனித்துவமுடையது. பொதுவான சில அமைப்புகளின் அடிப்படையில் நிலவரைபடங்கள் பல வகைப்படும்.




## அளவையின் அடிப்படியிலான நிலவரைபடங்கள்

**பெரிய அளவை நிலவரைபடம்:** குறைந்த பரப்பளவிலான இடங்களைக் குறித்து அதிக விவரங்களைக் கொடுக்கக் கூடியது பெரிய அளவை நிலவரைபடம் ஆகும். ஏனெனில் அவை ஒப்பீட்டளவில் பெரிய பகுதிகளில் வரையப்படுகிறது.

- **நிலஅளவைப் படங்கள்** (Cadastral) என்பது கிராமம் மற்றும் நகர்ப்புறங்களின் வரைபடமாகும். அவை நிலம் மற்றும் வீடு மனைகள் (sites) குறித்து விளக்குகின்றன.

- **தல வரைபடம் (Topographical)** சிறிய பரப்பளவு குறித்து அதிக விவரங்களைத் தருவனவாகும். இவை இந்தியாவின் நில ஆய்வு மையத்தால் (சர்வே ஆப் இந்தியா) தயாரிக்கப்படுகிறது. இவ்வகை பெரிய அளவை நிலவரைபடங்கள் இயற்கை அமைப்புக்களான குன்றுகள் மற்றும் பள்ளத்தாக்குகள் குறித்தும், கலாச்சார அமைப்புக்களான மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டடங்கள், சாலைகள், மற்றும் கால்வாய்களை குறித்தும் விளக்குகின்றன.

**சிறிய அளவை வரைபடங்கள் :** கண்டங்கள் அல்லது நாடுகள் போன்ற பெரிய அளவிலான பகுதிகளை சிறிய அளவுகளைக் கொண்டு வரையப்படும் வரைபடம் சிறிய அளவு வரைபடமாகும். இவ்வகை வரைபடம் 1 செ.மீ = 1000 கி.மீ. ஆகும்.

- **சுவர் வரைபடங்கள்** என்பது அதிக பரப்பளவை காட்டும் சிறிய அளவை படங்களாகும். இவை வகுப்பறையில் மணவர்களுக்கும் மற்றும் அலுவலகங்களிலும் பயன்படுகிறது. சிறிய அளவை வரைபடமானது அதிக பரப்பளவிலான இடங்களுக்கு குறைந்த அளவு விவரங்களைக் கொடுக்கக் கூடியது.

- **நிலவரைபட நூல்** என்பது பல வகையான நிலவரைபடங்களின் தொகுப்பு புத்தகம் ஆகும். இவை அதிக பரப்பளவிலான கண்டங்கள் மற்றும் நாடுகளைக் காட்டும் சிறிய அளவை வரைபடங்களைக் கொண்டது. முக்கிய நிலத்தோற்றங்கள், பிரதான சாலைகள், இரயில்பாதைகள் மற்றும் முக்கிய நகரங்களை நிலவரைபட நூல் வரைபடங்களில் முதன்மையாகக் காட்டப்படுகின்றன. அதிக பரப்பின் புவியியல் கூறுகள் ஒரே நேரத்தில் குறித்து அறிந்துகொள்ள நிலவரைபட நூல் உதவுகிறது.



7th Std Social Science Geography Term 3 TM Unit 2.indd 202 9/30/2023 11:18:42 AM

**உங்களுக்குத் தெரியுமா?**

நிலவரைபடத்தை உருவாக்கும் அறிவியல் என்பது கார்ட்டோகிராஃபி என அழைக்கப்படுகிறது. கார்டே (Carte) என்பது நிலவரைபடம் கிராபிக் (graphic) என்பது வரைதல். நிலவரைபடத்தை வரைந்து உருவாக்குபவர் கார்டோகிராஃபர் (Cartographer) ஆவர்.

## நிலவரைபட நூலின் வகைகள்

- **பள்ளி நிலவரைபட நூலில்** நாடுகள் குறித்து போதுமான விவரங்களை அளிக்கக் கூடிய வரைபடங்கள் உள்ளன.
- **மேம்படுத்தப்பட்ட நிலவரைபட நூல்** கண்டங்களின் சிறிய பகுதிகளின் அதிக விவரங்கள் கொண்டதுடன் குறிப்பு நிலவரைபட நூலாகவும் பயன்படுத்தப்படுகின்றன.
- **பிராந்திய நிலவரைபட நூல்** சிறிய பரப்பளவிற்கான, அதிக அளவு விவரங்களை உள்ளடக்கியது. இவை பிராந்திய திட்டமிடுதலுக்கு உதவும் நோக்கில் தயாரிக்கப்படுகிறது.
- **தேசிய நிலவரைபட நூல்** என்பது நாடுகளைக் குறித்து அதிக விவரங்கள் உள்ளடக்கிய வகையில் தயாரிக்கப்படுகிறது. இவை பெரிய அளவையுடன் இரு நாட்டின் பொதுவான மற்றும் புவியியல் கூறுகள் குறித்தும் சித்தரிக்கின்றது.

## கருத்தின் அடிப்படையில்

**இயற்கை அமைப்பு நிலவரைபடங்களாது** நிலத்தோற்றம் (மலை) வடிகால், வானிலை கூறுகள் மற்றும் தாவரங்கள் போன்ற இயற்கை அமைப்புகளைக் காட்டுகிறது.

- **நிலத்தோற்ற வரைபடம்** பொதுவான நில அமைப்புகளான மலைகள், பள்ளத்தாக்குகள், சமவெளிகள், பீடபூமிகள் மற்றும் நதிகளைப் பற்றிக் காட்டக்கூடியது.
- **புவி அமைப்பியல் வரைபடம்** புவியியல் கட்டமைப்புகள், பாறைகள் மற்றும் தாதுக்களைக் குறித்து வரையப்படுகிறது.
- **காலநிலை வரைப்படங்கள்** வெப்பநிலை பரவல், மழையளவு, மேகமூட்டம் ஒப்பு ஈரப்பதம், காற்று வீசும் திசை மற்றும் வேகம், மேலும் சில வானிலை கூறுகளைக் குறித்து காட்டுகின்றன.
- **மண்வகை நிலவரைபடங்கள்** என்பன வெவ்வேறு வகையான மண் மற்றும் அதன் பண்புகள் குறித்து வரையப்படுவனவாகும்.

## கலாச்சார அடிப்படையில்

- கலாச்சார **நிலவரைபடங்கள்** என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட அமைப்புகளைக் காட்டுவது ஆகும்.
- **அரசியல் நிலவரைபடங்கள்** ஒரு நாட்டின் மாநிலம் அல்லது மாவட்டத்தின் நிர்வாக பிரிவுகளைக் காட்டுவதாகும். சம்பந்தப்பட்ட நிர்வாகப் பிரிவுகளில் திட்டமிடல் மற்றும் நிர்வாகத்தை எளிதாக்க இந்த வரைபடம் உதவுகிறது.
- **மக்கள் தொகை நிலவரைபடங்கள்** என்பது மக்கள் தொகை பரவல், அடர்த்தி மற்றும் வளர்ச்சி, வேலைவாய்ப்பு அமைப்பு மற்றும் கல்வியறிவு பற்றி குறித்துக்காட்டுவது ஆகும்.
- **பொருளாதார நிலவரைபடங்கள்** வெவ்வேறு வகைப்பட்ட பயிர்வகைகள், தாதுக்கள், தொழிற்சாலை அமைவிடங்கள், வாணிப வழிகள், பொருள்களை எடுத்து செல்லும் வழிகளைப் பற்றி விளக்குவது ஆகும்.
- **போக்குவரத்து நிலவரைபடங்கள்** என்பது சாலைகள், இருப்புபாதை, விமான நிலையம், துறைமுகம் போன்றவற்றைக் காட்டுகின்றன.
- **கருத்து நிலவரைபடங்கள்** அனைத்தும் ஒரு குறிப்பிட்ட அம்சம் அல்லது கருத்தின்

பரவலைக் கொண்டும், இடத்திற்கு இடம் மாறுபடுதலைக் குறித்தும் குறிப்பிடுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

**மின்னணு வரைபடங்கள்** (Digital Maps) என்பது உலகம் முழுவதும் அமைந்துள்ள புவியியல் பகுதிகள் மற்றும் தலங்களைக் குறித்து அதிகப்படியான தகவல்களை வழங்கும் வலைதள சேவைப்பகுதி ஆகும்.

## நிலவரைபடக் கூறுகள்

நிலவரைபடம் அதிக தகவல்களை வழங்குகிறது. நிலவரைபடத்தினை எப்படி வாசித்து விளக்கமளிக்க வேண்டுமென ஒருவர் தெரிந்துகொள்ள வேண்டும். குறிப்பிட்ட சில அம்சங்களுடன் வழங்கப்படும் நிலவரைபடமானது அதில் அடங்கியுள்ள தகவல்களை அறிய உதவும் கருவியாக செயல்படுகிறது. தலைப்பு, திசை, அளவை, சின்னங்கள் மற்றும் குறியீடுகள் போன்றவை நிலவரைபடத்தின் அடிப்படைக் கூறுகள் ஆகும்.

## தலைப்பு

நிலவரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை விவரிக்கும் தலைப்பினை ஒவ்வொரு நிலவரைபடமும் கொண்டிருக்கும். உதாரணமாக, இந்திய நதிகள் என்னும் தலைப்பு கொண்ட நிலவரைபடமானது இந்திய நதிகளைப் பற்றி விளக்குவதாகும்.

## திசைகள்

பொதுவாக வரைபடங்கள் வடக்கு நோக்கிய நிலையில் வரையப்படுகிறது. நிலவரைபடத்தில் மற்ற திசைகளான கிழக்கு, மேற்கு, மற்றும் தெற்கு திசையை கண்டறிய உதவுகிறது. வடக்குக் குறியீட்டிற்குக் கூடுதலாக அட்சரேகைகள் மற்றும் தீர்க்க ரேகைகள் விளிம்புகளில் வரையப்படுகிறது. வடக்கு என்பது 'வ' எனும் எழுத்தால் அம்புக்குறியீட்டுடன் குறிக்கப்படுகிறது.







## அளவை

நிலவரைபடத்தின் அளவை என்பது நிலவரைபடத்தில் இரண்டு இடங்களுக்கிடையே உள்ள தூரத்திற்கும் நிலத்தில் அதே இரண்டு இடங்களுக்கிடையேயுள்ள தூரத்திற்கும் உள்ள விகிதம் ஆகும். உதாரணமாக குறிக்கப்படும் அளவையானது 1 செ.மீ. = 10 கி.மீ அதாவது, நிலவரைபடத்தில் 1 செ.மீ. என்பது நிலத்தில் 10 கி.மீ.க்கு சமம். இது நிலவரைபடத்தில் இரண்டு இடங்களுக்கிடையே உள்ள தூரத்தை கண்டறிய உதவுகிறது.




## குறிப்பு

குறிப்பு என்பது நிலவரைபடத்தில் வேறுபட்ட இயற்கை மற்றும் கலாச்சார அம்சங்களைக் காட்ட பயன்படுத்தப்பட்ட சின்னங்கள் மற்றும் குறியீடுகளைக் குறித்து விளக்குவதாகும். நிலவரைபடத்தில் பயன்படுத்தப்படும் பொதுவான சின்னம் மற்றும் குறியீடுகள், உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகும். அவை மரபுக்குறியீட்டு மற்றும் சின்னங்கள் என அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு நிலவரைபடம் அதில் பயன்படுத்தப்பட்டுள்ள வண்ணம் மற்றும் சின்னங்களை விளக்கும் குறிப்பினைப் பெற்றுள்ளன. நிலவரைபடத்தில் குடியிருப்புகள், பாலங்கள், தபால்நிலையங்கள், இரயில்வே பாதைகள் மற்றும் காடுகள் போன்றவற்றின் உண்மையான வடிவத்தைக் காண்பிப்பது கடினம். அவைகளைக் குறிப்பிட்ட



7th Std Social Science Geography Term 3 TM Unit 2.indd 204 9/30/2023 11:18:42 AM

சில வண்ணங்கள், சின்னங்கள் அல்லது எழுத்துக்களால் சித்தரித்துக் காட்டப்படுகின்றன.




இந்தியா இயற்கை அமைப்பு

| நிறங்கள் | அமைப்புகள் |
|---|---|
| வெள்ளை | பனி |
| மஞ்சள் | விவசாயம் |
| பச்சை | காடுகள் |
| நீலம் | நீர்நிலைகள் (பெருங்கடல்/கடல்/ஆறுகள்) |
| பழுப்பு | மலை, குன்று மற்றும் சம உயரக்கோடு (Contour) |
| சிவப்பு | குடியிருப்பு, சாலை |
| கருப்பு | இரயில் பாதை |

## முறைக்குறிகளும் குறியீடுகளும்

நிலவரைபடத்தில் புவிக்கூறுகளை, முறைக்குறிகள் மற்றும் குறியீடுகளாக காட்டப்படுகின்றன. இத்தகைய குறியீடுகள் கோட்டுக் குறியீடுகள் (அல்லது) நிறங்கள் போன்றவற்றால்காட்டப்படுகின்றன. இந்தியநில அளவைத் துறையானது நிலவரைப்படத்தில் பயன்படுத்த வேண்டிய முறைக்குறிகள் மற்றும் குறியீடுகளின் தொகுப்பினைத் தயாரித்துள்ளது.

நிலவரைப்படத்தில் பொதுவாக பல வண்ணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.




## நிலவரைபடத்தின் பயன்கள்

1. நிலத்தோற்றம் மற்றும் நில அமைப்புகளின் விளக்கங்களைத் தெரிந்து கொள்ள உதவுகிறது.

2. நிலவரைபடங்கள் இராணுவத்தின் திட்டமிடல் பணியில் மகத்தான செயல்களுக்கு முக்கியத்துவம் பெறுகிறது.

3. விமானங்கள் குறிப்பிட்ட இடத்தை சேரவும், கப்பல் கடலில் பாதுகாப்பாக செல்லவும் உதவுகின்றது.

4. நிலவரைபடங்கள் வானிலை முன்னறிவிப்பிற்கு பயன்படுகிறது.

## நிலவரைபடம் மற்றும் புவி மாதிரிக்கு இடையேயுள்ள வேறுபாடுகள்

| | நில வரைபடம் | புவி மாதிரி |
|---|---|---|
| 1. | நிலவரைபடம் என்பது புவியின் இரு பரிமாண அமைப்பு. | புவி மாதிரி என்பது புவியின் முப்பரிமாண அமைப்பு. |
| 2. | சிறிய மற்றும் பெரிய பரப்பளவைக் காட்டுகிறது. | புவியின் மாதிரி அமைப்பு. |
| 3. | ஒரு இடத்தின் அதிகப்படியான தகவல்களை நிலவரைபடம் வழங்க இயலும். | ஒரு இடத்தின் அதிகப்படியான தகவல்களை நிலவரைபடம் வழங்க இயலாது. |
| 4. | நிலவரைபடமானது கையில் எடுத்துச் செல்ல ஏதுவானது. | புவிமாதிரியினை கையில் எடுத்துச் செல்ல இயலாது. |

## மீள் பார்வை

❖ நிலவரைபடம் என்பது புவியின் ஒரு பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ கொடுக்கப்பட்ட அளவையில் வரைந்து காட்டுவதாகும்.

❖ நிலவரைபடமானது அளவையின் அடிப்படையிலும், கருத்தின் அடிப்படையிலும் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது.

❖ நிலவரைபடத்தின் அடிப்படைக் கூறுகள் தலைப்பு, திசை, அளவை மற்றும் குறிப்பு.

❖ அடிப்படை திசைகள் வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு.

❖ நிலவரைபடத்தின் அளவை என்பது வரைபடத்தில் இரண்டு இடங்களுக்கிடையே உள்ள தூரத்திற்கும், நிலத்தில் அதே இரண்டு இடங்களுக்கிடையே உள்ள தூரத்திற்கும் உள்ள விகிதம் ஆகும்.

❖ நிலவரைபடத்தின் குறிப்பு என்பது வரைபடத்தின் விவரங்களை விளக்குகிறது.

❖ இந்திய நில அளவைத் துறையானது நிலவரைப்படத்தில் பயன்படுத்த வேண்டிய முறைக்குறிகள் மற்றும் குறியீடுகளின் தொகுப்பினைத் தயாரித்துள்ளது.

| கலைச்சொற்கள்: | | | |
|---|---|---|---|
| 1. | நிலவரைபடம் | Representation of Earth on a flat surface | Map |
| 2. | அளவை | Ratio between the Actual distance of two points on the earth and the distance on a map | Scale |
| 3. | குறி விளக்கம் | It is a representation of different geographical features by using different colours and symbols | Legend |
| 4. | நிலத்தோற்ற வரைபடம் | Map that shows the physical appearance of hills, mountains, ridges, valleys, slopes | Relief maps |
| 5. | வரைபடம் | Collection of several maps | Atlas |
| 6. | முதன்மையான திசைகள் | North, south, east and west are called cardinal direction | Cardinal direction |
| 7. | கருத்துப்படம் | Represent the distribution of a particular feature. | Thematic map |
| 8. | பகுத்துக் குறியிட்ட அளவு | Arranged in a series | Graduated |

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நிலவரைபடம் உருவாக்குதலின் அறிவியல் பிரிவு என அழைக்கப்படுகிறது_________
   அ) புவியியல் (ஜியோகிராஃபி)
   ஆ) கார்டோகிராஃப்ட்
   இ) பிஸியோகிராபி
   ஈ) பௌதீக புவியியல்

2. வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய நான்கும் ____________ திசைகள் ஆகும்.
   அ) முக்கியமான
   ஆ) புவியியல்
   இ) அட்சரேகை
   ஈ) கோணங்கள்

3. கலாச்சார நிலவரை படங்கள் என்பன __________________ அமைப்புகளைக் காட்டுகின்றன.
   அ) இயற்கையான
   ஆ) மனிதனால் உருவாக்கப்பட்ட
   இ) செயற்கையான
   ஈ) சுற்றுச்சூழல்

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. புவியியலாளர்களின் ஒரு முக்கிய கருவியாக ____________ அமைகிறது.
2. முதன்மை திசைகளுக்கு இடையே உள்ள திசைகள் இடைநிலை ____________ எனப்படும்.
3. நிலவரைபடத்தில் உள்ள ____________ வரைபடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வண்ணங்கள் மற்றும் சின்னங்களை விளக்குகிறது.
4. காடாஸ்ட்ரல் நிலவரைபடங்கள் ____________ என அழைக்கப்படுகின்றன
5. சிறிய அளவை நிலவரைபடங்கள் ____________ மற்றும் ____________ போன்ற அதிக பரப்பளவு இடங்களைக் காட்ட உதவுகின்றன.



7th Std Social Science Geography Term 3 TM Unit 2.indd 207 9/30/2023 11:18:44 AM

### III. பொருந்தாதவற்றை வட்டமிட்டுக் காட்டுக.

1. வடகிழக்கு, அளவை, வடமேற்கு மற்றும் கிழக்கு.
2. வெண்மை, பனி, உயர்நிலம் மற்றும் சமவெளி.
3. நில அமைப்பு நிலவரைபடம், மண் நிலவரைபடம், இயற்கை அமைப்பு நிலவரைபடம் மற்றும் நிலவரைபட நூல் .
4. வானிலை முன்னறிவிப்பு, காலநிலை, மழைவீழ்ச்சி மற்றும் வெப்பநிலை.

### IV. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | மேல் வலது மூலை | அடர்த்தி மற்றும் வளர்ச்சி |
| 2. | குறிப்பு | மாவட்டம் அல்லது நகரம் |
| 3. | பெரிய அளவை நிலவரைபடம் | இயற்கை நில அமைப்பு |
| 4. | இயற்கை அமைப்பு வரைபடம் | வண்ணங்கள் மற்றும் சின்னங்கள் |
| 5. | மக்கள் தொகை வரைபடம் | 'N' எழுத்து |

### V. பின்வரும் கூற்றுகளை ஆய்வு செய்க.

1. i. நிலவரைபட நூல் என்பது பல வகைப்பட்ட நிலவரைபடங்கள் கட்டமைக்கப்பட்ட தொகுதி ஆகும்.

   ii. நிலவரைபட நூலின் வரைபடங்கள் சிறிய அளவையில் வரையப்படுகின்றன.

   iii. முக்கியமற்ற விவரங்கள் தவிர்க்கப் பட்டுள்ளன.

   அ) i மற்றும் iii சரி
   ஆ) ii மற்றும் iii சரி
   இ) i மற்றும் ii சரி
   ஈ) i, ii மற்றும் iii சரி

2. **கூற்று 1:** உலக உருண்டை என்பது புவியின் முப்பரிமாண மாதிரி.

   **கூற்று 2:** இதனை இது கையாள்வதற்கும், எடுத்துச் செல்வதற்கும் எளிது. சுருட்டியோ அல்லது மடித்தோ கையில் எடுத்துச் செல்வதற்கும் எளிது.

   அ) கூற்று 1 சரி, 2 தவறு
   ஆ) கூற்று 1 தவறு, 2 சரி
   இ) இரண்டும் சரி
   ஈ) இரண்டும் தவறு

### VI. பின்வருவனவற்றிற்கு பெயரிடுக.

1. தட்டையான பரப்பில் பூமியைக் குறிப்பது.
2. நிலவரைபடத்தில் உள்ள தூரத்திற்கும் நிலத்தில் உள்ள தூரத்திற்கும் உள்ள விகிதம்.
3. தரைவழி மற்றும் சாலைவழி போக்குவரத்தினைக் காட்ட உதவும் குறியீடு.
4. வேறுபட்ட நிலவரைபடங்களை உள்ளடங்கிய புத்தகம்.
5. நிர்வாகப் பிரிவுகளைக் காட்டும் நிலவரைபடம்.

### VII. பின்வருவனவற்றிற்கு விடையளிக்க.

1. நிலவரைபடம் என்றால் என்ன?
2. கார்டோகிராஃபி என்றால் என்ன?
3. முதன்மை திசைகள் யாவை?
4. நிலவரைபட நூல் என்பது என்ன?
5. நிலவரைபட நூலின் வகைகளைக் குறிப்பிடுக.
6. நிலவரைபடத்தின் பயன்கள் யாவை?

### VIII. விரிவான விடையளிக்க.

1. நில வரைபடத்தின் முக்கிய கூறுகள் யாவை? அவற்றைப் பற்றி எழுதுக?
2. நில வரைபடத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று வழிகள் யாவை?
3. கருத்தின் அடிப்படையில் வரைபடத்தை வகைப்படுத்தவும்?
4. நில வரைபடம் மற்றும் புவி மாதிரிகளை வேறுபடுத்தி எழுதுக?
5. அளவையின் அடிப்படையில் நில வரைபடத்தின் வகைகளை விரிவாக எழுது?

## IX. உயர் சிந்தனை வினா.

1. பயணிகளின் முதன்மை கருவி நிலவரைபடம் ஏன்?

## X. செயல்பாடு.

1. இந்திய நிலவரைபடத்தில் பின்வரும் அமைப்புகளை உரிய சின்னங்கள் மற்றும் வண்ணங்களைக் கொண்டு குறித்துக் காட்டுக.
   அ) ஏதேனும் இரண்டு மாவட்டத் தலைநகரங்களைக் குறித்துக்காட்டுக.
   ஆ) ஏதேனும் ஒரு ஆற்று வழிப்பாதையை வரைந்திடுக.
   இ) ஏதேனும் ஒரு மலையைக் குறித்துக் காட்டு.

2. கொடுக்கப்பட்டவற்றிற்கு மரபுச் சின்னங்கள் மற்றும் குறியீடுகளை வரைந்திடுக.
   அ) பாலம்
   ஆ) கால்வாய்
   இ) அணைக்கட்டு
   ஈ) கோவில்
   உ) காடு
   ஊ) இரயில்வே நிலையம்

## மூலாதார நூல்கள்:


1. *Practical Geography* R.L. Singh Practical Geography.
2. RP. Misra, A. Ramesh (2002) *Fundamental ofCartography*,publishedandprintedbyAshok kumar Mittal. New Delhi.




7th Std Social Science Geography Term 3 TM Unit 2.indd 209 9/30/2023 11:18:44 AM

## அலகு – 3

# இயற்கை இடர்கள் – பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை புரிந்து கொள்ளல்



### கற்றல் நோக்கங்கள்

- ❖ இயற்கை இடர்கள் மற்றும் பேரிடர்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதல்.
- ❖ இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரிடர்களைத் தெரிந்து கொள்ளுதல்.
- ❖ பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் மேலாண்மை சுழற்சி பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- ❖ வாழும் நுட்பங்கள் பற்றி தெரிந்து கொள்ளுதல்.

## அறிமுகம்

உலகின் பல பகுதிகளில் நிகழும் இயற்கை இடர்கள் மற்றும் பேரிடர்கள் குறித்த செய்திகளை ஒவ்வொரு நாளும் அனைத்து தொலைக்காட்சி மற்றும் செய்திதாள்கள் கொண்டு வருகிறது. இடர்களையும் பேரிடர்களையும் நிகழாமல் தடுக்க முடியாது. ஆனால் அதனுடைய அழிவைக் குறைக்க முடியும்.

இயற்கை இடர் என்றால் என்ன? பேரிடர் என்றால் என்ன? பேரிடர் மேலாண்மை என்றால் என்ன? என்பதை நாம் தெரிந்துக் கொள்ள வேண்டும். மேலும் பேரிடர் மேலாண்மை நுட்பங்களுடன், அதற்கு தொடர்புடைய கலைச்சொற்களையும் பற்றி கற்றுக் கொள்வோம்.

## இடர் (Hazard)

பொதுவாக இடர் என்பது ஒரு ஆபத்தான நிகழ்வு, மனித செயல்பாடு அல்லது வாழ்க்கையில் இழப்பை ஏற்படுத்தும் நிலை, காயம், பொருட்சேதம், சொத்துக்கள் சேதமடைதல், வேலையிழப்பு, சுகாதார பாதிப்புகள், வாழ்வாதார இழப்பு, சமூக, பொருளாதார இடையூறு மற்றும் சுற்றுச்சூழல் சேதம் போன்றவையாகும். இயற்கை இடர்கள் என்பது இயற்கை நிகழ்வுகளையும், மற்றும் சுற்றுச்சூழல் மேல் ஏற்படும் எதிர்மறைத் தாக்குதலாகும். இயற்கை இடர்களை புவியியல் மற்றும் உயிரியல் இடர்கள் என இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## பேரிடர் (Disaster)

ஒரு பேரிடர் என்பது பொதுவாக "சமூகத்தில் ஒரு கடுமையான இடையூறு, பரவலான பொருள், பொருளாதார, சமூக அல்லது சுற்றுச்சூழல் இழப்புகளை ஏற்படுத்துகிறது, இது பாதிக்கப்பட்ட சமூகத்தின் சொந்த வளங்களைப் பயன்படுத்தி சமாளிக்கும் திறனை மீறுகிறது".



7th Std Social Science Geography Term 3 TM Unit 3.indd 210 9/30/2023 11:20:21 AM

பேரழிவு தாக்கங்களில் உயிர் இழப்பு, காயம், நோய் மற்றும் மனித உடல், மன மற்றும் சமூக நல்வாழ்வில் பிற எதிர்மறையான விளைவுகள், சொத்து சேதம், சொத்துக்களை அழித்தல், சேவைகள் இழப்பு, சமூக மற்றும் பொருளாதார சீர்குலைவு மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவு ஆகியன அடங்கும்.

மனித வாழ்வில் பெரிய அளவில் சொத்துக்கள் மற்றும் மனித உயிர்கள் பரவலாக பாதிக்கப்படும்போது அவை பேரழிவுகள் என்று அழைக்கப்படுகின்றன.

### உதாரணம்

சூறாவளி (ஹரிக்கேன்) என்பது ஒரு இயற்கை இடர்! இது கடலில் உருவாகிறது. இந்த சூறாவளி நிலத்தை வந்து அடையும் பொழுது கட்டடங்களை சேதப்படுத்துகின்றன. மேலும் உயிர்சேதத்தையும் ஏற்படுத்துகிறது. இதனால் இதை பேரிடர் என அழைக்கின்றனர்.

## பேரிடர்களின் வகைகள்

| வ. எண் | பேரிடரின் வகை | ஆதாரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1. | இயற்கைப் பேரிடர் | புவி உட்பகுதியில் | நிலநடுக்கம், சுனாமி மற்றும் எரிமலை வெடிப்புகள். |
| | | புவி மேற்பரப்பில் | நிலச்சரிவு மற்றும் பனிச்சரிவு. |
| | | வானிலை ஆய்வு / நீர் வளம் | புயல்காற்று, சூறாவளி, பனிமழை மற்றும் வெள்ளம். |
| | | சுகாதாரம் | தொற்றுநோய்கள். |
| 2. | மனிதனால் உருவாகும் பேரிடர் | சமூக தொழில்நுட்பம் | தொழில்நுட்ப, போக்குவரத்து பேரழிவுகள், கட்டமைப்பு சரிவு மற்றும் உற்பத்தி வீழ்ச்சிகள். |
| | | போர் | தேசிய மற்றும் சர்வதேச அளவில் |

## இயற்கை பேரிடர்கள்

### நிலநடுக்கம்

ஒரு திடீர் நகர்வு (அல்லது) புவி மேலோட்டில் ஏற்படும் நடுக்கத்தை நில நடுக்கம் என அழைக்கின்றோம். புவித்தட்டுகளின் நகர்வு, நிலச்சரிவு, மற்றும் மேற்பரப்பு பிளவு போன்றவை நில நடுக்கத்திற்கு காரணமாகின்றன.

### பாதிப்புகள்

அதிகப்படியான நில நடுக்கத்தால் கட்டடங்கள், சாலைகள், பாலங்கள் மற்றும் அணைக்கட்டுகள் இடிந்து சேதமடைகிறது. நிலநடுக்கத்தால், வெள்ளம், சுனாமி, நிலச்சரிவு, தீ, மின்சாரம் துண்டிக்கப்படுதல் மற்றும் நீர் குழாய்கள் உடைதல் போன்றவை நிகழ்கின்றன. மேலும் இது ஆற்றின் பாதையைக் கூட மாற்றியமைக்கிறது.





நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட விளைவுகள்

**இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் அண்மையில் ஏற்பட்ட இடர்கள்**

2018 மே 2 மற்றும் 3 தேதியில் அதிக திசை வேகத்துடன் வீசிய புழுதிப்புயல் வட இந்தியாவின் ஒரு பகுதியைத் தாக்கியது. அதில் உத்திரபிரதேசத்தில் 43 பேர், இராஜஸ்தானில் 35 பேர் மற்றும் பிற மாநிலத்திலும் பலர் இறந்தனர். 200 க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த காற்றானது 8000 மின்கம்பங்களை கீழே சாய்த்தது. நூற்றாண்டுகளாக வாழ்ந்த மரங்களையே வேரோடு சாய்த்தது.

2004 சுனாமிக்குப் பிறகு, தமிழகத்தைத் தாக்கிய மிக மோசமான புயல் கஜா. இது கடலோர மாவட்டங்களில் மிக மோசமான சேதத்தை ஏற்படுத்தியது, குறிப்பாக வேளாண்மையை சீர்குலைத்தது.



கஜா புயலின் தாக்கம்



வட இந்தியாவில் புழுதிப் புயலின் தாக்கம்

## ஆழிப்பேரலை (சுனாமி)

நிலநடுக்கம் கடலுக்கு அடியில் ஏற்படும் நிலச்சரிவு, எரிமலை வெடிப்பு மற்றும் குறுங்கோள்கள் போன்றவற்றால் ஏற்படும் மிகபெரிய அலைகளே ஆழிப் பேரலையாகும். கடல் அலைகள் பல மீட்டர்கள் உயர எழுந்து சில நிமிடங்களில் கடற்கரையை அடைகிறது.

### பாதிப்புகள்

வெள்ளப்பெருக்கு, போக்குவரத்து இடையூறு, மின்சாரம், தகவல் தொடர்பு, தண்ணீர் விநியோகம் போன்றவற்றைப் பாதிக்கின்றது.



உங்களுக்குத் தெரியுமா?

சுனாமி என்ற சொல் ஜப்பானிய சொல்லிலிருந்து பெறப்பட்டது ஆகும். சு (Tsu) என்பது துறைமுகம் என்றும் னாமி (nami) என்பது அலைகள் எனவும் பொருள்படும்.

## வெள்ளப்பெருக்கு

கனமழை, புயல், பனி உருகுதல், ஆழிப்பேரலை (சுனாமி) அல்லது அணைக்கட்டு உடைதல் போன்றவற்றால் திடீரென ஏற்படும் அதிக அளவிலான நீர் வெளியேறுதலே வெள்ளப்பெருக்கு என்கிறோம்.

### பாதிப்புகள்

1. சொத்து மற்றும் உயிரிழப்பு
2. மக்கள் இடப்பெயர்வு
3. காலரா மற்றும் மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவுதல்.



7th Std Social Science Geography Term 3 TM Unit 3.indd 212 9/30/2023 11:20:24 AM





## புயல்

உயர் அழுத்தத்தால் சூழப்பட்ட குறைவழுத்தப் பகுதியில் உருவாகும் காற்று "புயல்" என அழைக்கப்படுகிறது.

## புயலினால் ஏற்படும் பாதிப்புகள்

வெப்பமண்டல சூறாவளியால் உருவாகும் முக்கிய பாதிப்புகளில் கனமழை, பலத்த காற்று, கரையின் அருகில் பெரிய புயல் மற்றும் சுழல்காற்று உள்ளடங்கும்.





புயலினால் ஏற்பட்ட பாதிப்புகள்

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள கடலோர பகுதிகளான வேதாரண்யம் மற்றும் நாகப்பட்டினத்தைச் சுற்றிலும் 2018ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் தேதி அதிகாலையில் கஜா என்னும் தீவிர புயல்காற்று 120 கி.மீ. வேகத்தில் வீசியதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்தது.





நாகப்பட்டினத்தில் கஜா புயலினால் ஏற்பட்ட பாதிப்புக்கள்

## மனிதனால் உருவாகும் பேரிடர்கள்

**நெரிசல்**

நெரிசல் என்பது மக்கள் கூட்டத்தில் திடீரென ஏற்படும் பாதிப்பை குறிக்கும். காயங்கள், மூச்சுத்திணறல் மற்றும்

மிதித்தலினால் ஏற்படும் காயம், போன்றவை இதன் விளைவாக அமையும். பெரிய அளவிலான மக்கள் நெரிசலினால் ஏற்படும் பேரிடர் எளிமையான கூட்ட மேலாண்மை உத்திகளால் தடுக்க முடியுமென நம்பப்படுகிறது. மக்கள் கூட்ட நெரிசலானது, நிர்வாகம் போக்குவரத்து கட்டுப்பாடுகளான தடைகள், வரிசைமுறை பின்பற்றுதல் மற்றும் கூட்டம் கூடுதலை தவிர்த்தல் போன்றவைகளால் தடுக்கப்படலாம்.

## தீ

தீ என்பது ஒரு பேரிடர். அது குறுகிய மின்சுற்று, வேதியியல் தொழிற்சாலை, தீப்பெட்டி, மற்றும் வெடி தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்தினை குறிக்கும்.

**தீயின் மூன்று அம்சங்கள்**

1. கண்டறிதல்; 2. தடுத்தல்; 3. அணைத்தல்



மலைப்பாங்கான பகுதியில் ஏற்படும்
காட்டுத்தீ விபத்துக்கள்



பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்படும்
தீ விபத்துக்கள்

தீ விபத்திற்கு முன், தீ விபத்தின்போது, தீ விபத்திற்குபின் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

## தொழிற்சாலை பேரிடர்

தொழிற்சாலையானது அதன் உற்பத்தி, மற்றும் எஞ்சிய கழிவுகளை அகற்றுதல், அணுமின் மற்றும் வேதியியல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப்பொருள்களால் பல ஆபத்துக்களை எதிர் கொள்கின்றன.

**உதாரணம் :** போபால் விஷவாயு கசிவு

## பேரிடர் மேலாண்மை

பேரழிவின் விளைவுகளைத் தணிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட நடவடிக்கைகள் பேரழிவு மேலாண்மை என்று அழைக்கப்படுகின்றன. பேரிடர் மேலாண்மையின் நிலைகள் ஆறு படிநிலைகளை கொண்டுள்ளது. அவை பின்வருமாறு

**பேரிடருக்கு முன் ஆபத்தைக் குறைத்தல் நிலை:**

- தயார் நிலை
- மட்டுப்படுத்துதல்
- கட்டுப்படுத்துதல்

**பேரிடருக்குப் பின் மீட்டெடுத்தல் நிலை:**

- துலங்கல்
- மீட்டல்
- முன்னேற்றம்

**பேரிடர் மேலாண்மை சுழற்சி (அ) பேரிடர் சுழற்சி**

பேரிடர் மேலாண்மை நிலைகள் ஆறு படிநிலைகளாகக் கொண்டு பேரிடர் சுழற்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.



## பேரிடருக்கு முந்தைய நிலை

### கட்டுப்படுத்துதல் மற்றும் மட்டுப்படுத்துதல்

எதிர்கால பேரழிவு அச்சுறுத்தலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை செயல்படுத்துதல் மற்றும் தவிர்க்க முடியாத அச்சுறுத்தலின் தீங்கு விளைவிக்கும் விளைவுகளைக் குறைத்தல் ஆகியவை அடங்கும். பேரழிவைக் குறைத்தல் என்பது தாக்கத்தின் அளவை குறைப்பதாகும். மட்டுப்படுத்துதல் என்பது ஆபத்தை குறைப்பது மற்றும் பாதிக்கக்கூடிய நிலைமைகளை குறைப்பது போன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாகும்.

இந்த இயற்பியல் காரணிகளுக்கும் கூடுதலாக, தீமை, மற்றும் பாதிப்பிற்கு அடிப்படைக்காரணங்களும் மற்றும் அச்சுறுத்தக்கூடிய உடல் ரீதியான, பொருளாதார, சமூகத் தீமைகளைக் குறைப்பதும் மட்டுப்படுத்தலின் முக்கிய குறிக்கோளாக அமைகிறது. எனவே மட்டுப்படுத்தல் என்பது நில உரிமை, குத்தகை உரிமைகள், வளங்கள் பரவல், புவி அதிர்ச்சியைத் தாங்கக்கூடிய கட்டட குறியீடுகள் செயல்படுத்த இன்னும் பல இது போன்ற பிரச்சனைகளை அடையாளம் காணுதல் போன்றவற்றையும் உள்ளடக்கியதாகும்.

### தயார்நிலை

இந்த படிநிலையானது அரசாங்கம், சமூகங்கள் மற்றும் தனி ஒரு மனிதன் பேரிடர் சூழ்நிலைகளை திறம்பட சமாளிக்க எடுக்கும் பல்வேறு நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும். உதாரணமாக, அரசின் அவசரநிலை திட்டங்கள், எச்சரிக்கை அமைப்பை மேம்படுத்துதல், சரக்குகளின் பராமரிப்பு, பொதுமக்கள் விழிப்புணர்வு, கல்வி மற்றும் தனிநபர் பயிற்சி போன்றவை அடங்கும்.

தொடர் பேரழிவின் ஆபத்தில் உள்ள பகுதிகளுக்கான மீட்பு நடவடிக்கைகளைக் கண்டறிவதுடன் திட்டங்களை வெளியேற்றவும் இதில் அடங்கும் அனைத்துவகை தயார்நிலை திட்டங்களும் உரிய பொறுப்பு மற்றும் பட்ஜெட் ஒதுக்கீடுகளும் கூடிய சட்ட விதி மற்றும் ஒழுங்குமுறைகளினாலும் ஆதரிக்கப்பட வேண்டும்.

### ஆரம்பகால எச்சரிக்கை

பேரிடர் ஆரம்பிக்கும் நிலையில் பாதிக்கப்படக் கூடியதாக உள்ள பகுதிகளைப் பார்வை இடுவது மற்றும் பேரிடர் தொடங்க உள்ளது என்ற செய்தியினை மக்களுக்கு பாதிப்பில்லாத வழியில் தெரிவிப்பது போன்றவை ஆரம்ப கால எச்சரிக்கையாகும். பயனுள்ளதாக அமைய, என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென அளிக்கப்படும் எச்சரிக்கை நிகழ்வுகள் மக்கள் கல்வி மற்றும் பயிற்சியுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும்.

### பேரிடரின் தாக்கம்

பேரிடரின் தாக்கம் என்பது பேரிடர் நிகழும் கால அளவு மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்பையும் குறிக்கும். பேரிடர் நிகழும் கால அளவு என்பது அச்சுறுத்தலின் வகையைப் பொறுத்து அமையும். புவி அதிர்ச்சியின்போது நில நடுக்கமானது சில நொடிகள் நிகழும். அதுவே, ஆழிப்பேரலை ஏற்பட ஒரு காரணமாகிறது.

## பேரிடரின் போது

### துலங்கல்

கட்டுப்பாட்டு அறைகளை அமைத்தல், தற்செயல் திட்டத்தை செயல்படுத்துதல், எச்சரிக்கை விடுதல், வெளியேற்றுவதற்கான நடவடிக்கை, மக்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் செல்வது, தேவைப்படுபவர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குதல், ஒரே நேரத்தில் நிவாரணம் வழங்குதல் உள்ளிட்ட எந்தவொரு பேரிடருக்கும் இது முதல் கட்ட பதிலைக் குறிக்கிறது.

வீடு இழந்தோருக்கு உணவு, உடை, குடிநீர் மற்றும் நிவாரணம் வழங்குதல், தகவல் தொடர்பு மறு சீரமைத்தல், பணமாகவோ அல்லது கருணையாகவோ உதவி வழங்குதலும் அடங்கும். பேரிடரின்போதோ, பேரிடரினைத் தொடர்ந்தோ அவசர கால நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதில் நிவாரணம் வழங்குதல், மீட்பு, சேதார மதிப்பீடு, மற்றும் தேவையற்ற குப்பைகளை நீக்குதலும் அடங்கும்.

## பேரிடருக்குப் பின் மீட்பு நிலை

மீட்புநிலை என்பது அவசரகால நிவாரணம் வழங்குதல், மறுவாழ்வு மற்றும் மறுகட்டமைப்பு போன்ற 3 நிலைகளை உள்ளடக்கியது.

மறுவாழ்வு: மறுவாழ்வு என்பது இடைக்கால நிவாரணமாக தற்காலிக பொது பயன்பாட்டுப் பொருள்கள் மற்றும் வீடுகள் வழங்குதல் அடங்கும் இது நெடுங்காலத்திற்கு உதவக்கூடிய வகையில் அமையும்

மறு சீரமைப்பு: எல்லா அமைப்புகளும் இயல்பான அல்லது சிறப்பான நிலைக்கு வரும் வரை மீட்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன. கட்டட மறுசீரமைப்பு, அடிப்படை வசதிகள் வழங்குதல் இதில் அடங்கும். இதன் மூலம் பழைய நிலையே மீண்டும் தொடராமல் நிகழ நீண்ட கால மேம்பாட்டிற்கான வாய்ப்பினை அதிகரிக்கிறது.

வளர்ச்சி: வளர்ந்து வரும் பொருளாதாரத்தில், வளர்ச்சி மேம்பாட்டு திட்டம் என்பது தற்போதைய செயல்பாடு ஆகும். நீண்ட கால தடுப்பு மற்றும் பேரிடரைக் குறைத்தல் என்பது வெள்ளப்பெருக்கினைத் தடுக்கும் வகையில் ஏரிக்கரை கட்டுதல், வறட்சியை ஈடுகட்ட நீர்ப்பாசன வசதிகள் செய்தல், நிலச்சரிவினைச் சரிசெய்ய மரம் நடுதல், சூறாவளி காற்று மற்றும் நிலநடுக்கத்தைத் தாங்கிக் கொள்ளும் வீடுகள் கட்டுதல் ஆகியவை மேம்பாட்டுத் திட்டத்தில் அடங்கும்.

இந்தியாவில் நடைமுறையில் உள்ள சில பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகள் குறித்து பார்ப்போம்

இடரை மட்டுப்படுத்துதல் முக்கியமானது ஏன்?

பேரிடருக்குப்பின் மீட்டெடுத்தல் என்பதை விட இயற்கைப் பேரிடரை மட்டுப்படுத்துதல் என்பது குறைந்த செலவுடையதாகும். இடரை மட்டுப்படுத்துதல் என்பது எதிர்கால பேரிடர் விளைவுகளைக் குறைப்பதற்கான செயல்திட்டம் ஆகும்.

இடர்களின் பாதகமான பாதிப்பு மற்றும் பேரழிவிற்கான வாய்ப்பைக் குறைக்கும் பொருட்டு நிர்வாக கொள்கைகளை முறையான வழிமுறையில் பயன்படுத்துதல், நிறுவன மற்றும் செயல்பாட்டு திறன்கள் வளர்த்தல், சமாளிக்கும் திறனை அதிகப்படுத்துதல் போன்றவை பேரிடர் மேலாண்மை எனப்படும்.

இந்தியாவின் எச்சரிக்கை மையங்கள்

அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை (DST), விண்வெளித்துறை (DOS), மற்றும் அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் (CSIR) ஆய்வகங்கள் இந்தியப் பெருங்கடலில் சுனாமி புயல் எழுச்சி எச்சரிக்கை மையங்களை அமைத்துள்ளன.

## இந்தியாவில் பேரிடர் மேலாண்மை

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் NDMA என சுருக்கமாக அழைக்கப்படுகிறது. இது உள்துறை அமைச்சகத்தின் நிறுவனமாகும். இதன் முதன்மை நோக்கமானது இயற்கை மற்றும் மனிதனால் உருவாகும் பேரிடர்களுக்கான செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல், பேரழிவு நெகிழித் திறனில் மேம்பாடு, நெருக்கடிக்கால செயல்பாடு ஆகும்.

டிசம்பர் 25, 2005–ந் தேதி இந்திய அரசால் கொண்டுவரப்பட்ட பேரிடர் மேலாண்மை சட்டத்தின் மூலம் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) உருவாக்கப்பட்டது. தேசிய பேரிடர் மறுமொழி படை என்பது பேரழிவு மேலாண்மைச் சட்டம் 2005ன் கீழ் அச்சுறுத்தும் பேரழிவு நிலைமை அல்லது பேரழிவுக்கு நிபுணர் பதிலளிக்கும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட ஒரு சிறப்பு சக்தியாகும்.

தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம் (NDMI)

இந்தியாவில் இயற்கை பேரழிவுகளை நிர்வகிப்பதற்கான பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு திட்டங்களுக்கான ஒரு முதன்மை நிறுவனமாகும்.

## தமிழ்நாட்டில் பேரிடர் மேலாண்மை

- தமிழ் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையமானது பேரழிவை மட்டுப்படுத்துதல், தயார்நிலை, துலங்கல் மற்றும் மீட்டெடுத்தல் போன்றவற்றிற்கு பொறுப்பானது ஆகும். இவை அனைத்தும் ஆணையத்தின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.
- தமிழ்நாடு பேரிடர் மறுமொழி படை (SDRF) என்பது 80 போலீஸ் தனிப்படையுடன் அமைக்கப்பட்டது. இவர்கள் பேரிடர் மேலாண்மையில் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் தேசிய பேரிடர் மறுமொழி (NDRF) படையின் ஆலோசனையின்படி மீட்புச் செயல்களில் ஈடுபடுவோர்.
- மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம் (DDMA) மாவட்ட அளவிலான பேரிடர் மேலாண்மைக்கு பொறுப்பு ஆகும்.

**மாநில பேரிடர் மேலாண்மைத்திட்டம்** 2018–2030 முன்னோக்கத் திட்டமானது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையத்திற்கும், மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கும் இடையே ஒரு சிறு அமைப்பு தொடங்கப் பட்டுள்ளது. தொலைபேசி, தொலைநகல் (Fax) மற்றும் மாநிலப் பிரிவுகள், தாலுகா, மாவட்ட தலைநகரை மாநிலத்தோடு தொடர்புபடுத்த IP தொலைபேசி மூலமும் மாவட்டத்தில் மீட்டெடுத்தல் பணி செய்யப்படுகிறது. கம்பியில்லா வானிலை அலைவரிசையானது மாநிலத்தில் அதிக அலைவரிசை மற்றும் குறைந்த அலைவரிசையிலும் கிடைக்கிறது..

உயிர் வாழ்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

- புவி அதிர்சியின்போது மேசையின்கீழ் செல்ல வேண்டும்; தரையில் மண்டியிட்டு மற்றும் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். உறுதியான சுவற்றின் அருகில் செல்ல வேண்டும், தரையில் அமர்ந்து மற்றும் தரையை இறுகப் பிடித்துக்கொண்டு உங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். டார்ச் விளக்கினை மட்டும் பயன்படுத்தவும்.
- வெள்ள முன்னறிவிப்பின் போது முதலுதவிக்குத் தேவையான பொருள்களை சேமித்து வைக்கவும், உள்ளூர் ரேடியோ மற்றும் தொலைக்காட்சி அறிவிப்புகளைக் கவனிக்க வேண்டும். நில நடுக்கம் மற்றும் வெள்ளத்தின்போது அனைத்து மின்சார இணைப்புகளைத் துண்டித்து விட வேண்டும்.
- தீ விபத்து எனில் அவசர சேவைக்கு 101 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவேண்டும்.
- ஒருவருக்கு ஆடையில் எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டால், அவரை ஓடாமல் தரையில் படுத்து உருள செய்ய வேண்டும்.
- சாலை விபத்தினைத் தவிர்க்க வேண்டுமெனில், ஓட்டுநர் உரிமம் பெற்றவரை

மட்டுமே வாகனத்தை இயக்க அனுமதிக்க வேண்டும். சாலையில் நடந்து செல்லும்போதும், வாகனத்தை இயக்கும்போதும் பின்பற்றபட வேண்டிய சாலை விதிகளைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

- இரயில் பாதுகாப்பு ஆலோசனைகளை தெரிந்து கொண்டு அதன்படி பின்பற்ற வேண்டும். இரயில் எந்த நேரமும், எந்த திசையிலும் வரக்கூடும்.
- இரயில் நிலைய மேடையின் ஓரங்களில் அமரக்கூடாது.
- தண்டவாளங்களைக் கடந்து செல்ல கூடாது. நடைமேடையை பயன்படுத்த வேண்டும்.
- விமான நிலையத்தில் இருக்கும்போது பாதுகாப்பு குறித்த அறிவிப்பைக் விமானக்குழுவினர் அறிவிக்கும்பொழுது கவனமுடன் கேட்க வேண்டும். இருக்கை பையில் உள்ள பாதுகாப்பு விளக்க அட்டையினை வாசித்து அதில் பின்பற்ற வேண்டிய வழிகளை கையாள வேண்டும்.

## சுருக்கம்

- ❖ இடர் மற்றும் பேரிடர் இரண்டுமே பொருள்சேதம் மற்றும் உயிரிழப்பை ஏற்படுத்தும்.
- ❖ பேரிடர் மேலாண்மை என்பது இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரிடரின்போது சொத்து மற்றும் உயிரைப் பாதுகாத்தலைக் குறிப்பது ஆகும்.
- ❖ தயார்நிலை, மட்டுப்படுத்துதல், கட்டுப்படுத்துதல், துலங்கல், மீட்டெடுத்தல் மற்றும் முன்னேற்றம் ஆகியவை பேரிடர் மேலாண்மையின் ஆறு நிலைகள் ஆகும்.
- ❖ புவி அதிர்ச்சி, சுனாமி, வெள்ளம் மற்றும் புயல் ஆகியன சில இயற்கைப் பேரிடர்களாகும்.
- ❖ தீ விபத்து மற்றும் தொழிற்சாலையில் ஏற்படும் விபத்துக்களும் மனிதனின் கவனக்குறைவால் ஏற்படும் இந்நிகழ்வுகளும் பேரிடர்களாகும்.
- ❖ அவசர கால மருத்துவ உதவிக்கு எண் 108–ற்கும், தீ விபத்திற்கு எண் 101–ற்கும் அழைக்க வேண்டும்.
- ❖ ஒருவருக்கு ஆடையில் எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டால், அவரை ஓடாமல் தரையில் படுத்து உருள செய்ய வேண்டும்.

| கலைச்சொற்கள்: | | | |
|---|---|---|---|
| 1. | இடர் | a dangerous event | Hazard |
| 2. | பேரிடர் | an event which causes enormous damage to property and fife | Disaster |
| 3. | பாதிப்பு | severity | Vulnerability |
| 4. | மட்டுப்படுத்துதல் | reduce (or) make something less severe | Mitigate |
| 5. | வானிலை அறிவிப்ப | forecasting of weather | Meteorology |
| 6. | நடுக்கம் | shaking or vibration | Trembling |
| 7. | தடுத்தல் | stop something before it happens | Preventive |
| 8. | அணைத்தல் | to stop a fire or light | Extinguish |
| 9. | அவசரகால | a serious, or dangerous situation | Emergency |
| 10. | உளவியல் ரீதியான | Mental or emotional state of a person | Psychological |

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தெரிவு செய்க.

1. பொருள்சேதம், உயிரிழப்பு மற்றும் சுற்றுச்சூழலில் பெரிய மாற்றத்தை நிகழ்த்தும் ஒரு இயற்கைக் காரணி ______________.
   அ) இடர்
   ஆ) பேரிடர்
   இ) மீட்பு
   ஈ) மட்டுப்படுத்தல்

2. பேரிடரின் விளைவைக்குறைக்கும் செயல்பாடுகள்.
   அ) தயார்நிலை ஆ) பதில்
   இ) மட்டுப்படுத்தல் ஈ) மீட்பு நிலை

3. ஒரு திடீர் நகர்வு அல்லது புவி மேலோட்டின் திடீர் நடுக்கம் ______________ என அழைக்கப்படுகிறது.
   அ) சுனாமி ஆ) புவி அதிர்ச்சி
   இ) நெருப்பு ஈ) சூறாவளி

4. கன மழையினால் திடீரென அதிக நீர் வெளியேறுதல் ______________ என அழைக்கப்படுகிறது.
   அ) வெள்ளம் ஆ) சூறாவளி
   இ) வறட்சி ஈ) பருவ காலங்கள்

5. ______________ வைத்துள்ளோரை வாகனம் ஓட்ட அனுமதித்தால் சாலை விபத்தினைத் தவிர்க்கலாம்.
   அ) ரேஷன் அட்டை
   ஆ) ஓட்டுநர் உரிமம்
   இ) அனுமதி
   ஈ) ஆவணங்கள்

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மனிதனுக்கும், அவனுடைய உடமைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வு ________________.
2. பேரிடரின் போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் ____________என அழைக்கப்படுகிறது.
3. மிகப்பெரிய அழிவு ஏற்படுத்தும் அலைகளை ஏற்படுத்தும் நீரின் இடப்பெயர்வு _______________ எனப்படும்.
4. தீ விபத்து ஏற்பட்டால் அழைக்க வேண்டிய எண் ______________.
5. இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கக்கூடிய பேரிடரின் போது மனித வாழ்க்கை மற்றும் உடைமைகளை ___________ பேரிடர் மேலாண்மை எனப்படுகிறது.

### III. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | புவிஅதிர்ச்சி | – இராட்சத அலைகள் |
| 2. | சூறாவளி | – பிளவு |
| 3. | சுனாமி | – சமமற்ற மழை |
| 4. | தொழிற்சாலை விபத்து | – புயலின் கண் |
| 5. | வறட்சி | – கவனமின்மை |

### IV. பின்வரும் வாக்கியங்களை கருத்திற் கொண்டு சரியான விடையை செய்க.

1. **கூற்று** (A) : நவீன உலகத்தில் அனுதினமும் மகிழ்ச்சியாக வாழ முடியாது
   **காரணம்** (R): மாசடைதல் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவின் காரணமாக இயற்கை இடை மற்றும் பேரிடரை சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.
   அ) கூற்று மற்றும் காரணம் சரி; கூற்று காரணத்தை விளக்குகிறது.
   ஆ) கூற்று மற்றும் காரணம் சரி; கூற்று காரணாத்தை விளக்கவில்லை
   இ) கூற்று தவறு; காரணம் சரி.
   ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.



7th Std Social Science Geography Term 3 TM Unit 3.indd 219 9/30/2023 11:20:30 AM

2. **கூற்று** (A) : திடீர் நுகர்வு அல்லது பூமியின் மேலேட்டில் ஏற்படும் நடுக்கம் புவி அதிர்ச்சி ஆகும்.

**காரணம்** (R): டெக்டானிக் தட்டுகளின் நகர்வு, ஜனநெருக்கடி, பிளவு போன்றவை புவி அதிர்ச்சிக்கு வித்திடுகின்றன

அ) கூற்று மற்றும் காரணம் சரி மற்றும் கூற்று காரணத்தை விளக்குகிறது.

ஆ) கூற்று மற்றும் காரணம் சரி; கூற்று காரணாத்தை விளக்கவில்லை

இ) கூற்று தவறு; காரணம் சரி.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

## V. சுருக்கமாக விடையளிக்க.

1. இடர் வரையறு:
2. பேரிடர் என்றால் என்ன?
3. பேரிடர் மேலாண்மை சுழற்சியின் ஆறு நிலைகள் யவை?
4. தமிழ்நாட்டில் உள்ள எச்சரிக்கை அமைப்பு சார்ந்த இரண்டு நிறுவனங்கள் எவை?
5. வெள்ளத்தினால் ஏற்படும் மூன்று விளைவுகள் பற்றி எழுதுக.
6. இரயில் நிலையத்தில் பின்பற்றப்பட வேண்டிய நான்கு நடவடிக்கைகள் குறித்து எழுதுக.
7. தொழிற்சாலை விபத்து அடிக்கடி நிகழக்கூடிய நான்கு வேறுபட்ட தொழிற்சாலைகளைப் பட்டியலிடுக.

## VI. வேறுபடுத்துக.

1. புவி அதிர்ச்சி மற்றும் ஆழி பேரலை (சுனாமி).
2. வெள்ளம் மற்றும் சூறாவளி.
3. இடர் மற்றும் பேரிடர்.

## VII. விரிவான விடையளி.

1. பேரிடர் மேலாண்மை சுழற்சி பற்றி விளக்குக.
2. வெள்ளம் மற்றும் அதன் விளைவுகளையும் அதனை மட்டுப்படுத்துதல் பற்றியும் விளக்குக.
3. ஏதேனும் 5 பொதுவான வாழும் நுட்பங்கள் பற்றி எழுதுக.
4. புவி அதிர்ச்சி, அதன் பாதிப்புகள் மற்றும் மட்டுப்படுத்துதல் படிநிலைகள் பற்றி எழுதுக.

## VIII உயர்சிந்தனை வினாக்கள்:

1. நான் ஏன் இயற்கை பேரிடர்கள் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்?
2. இந்தியாவில் நிலச்சரிவு அடிக்கடி நிகழும் 4 இடங்களைப் பட்டியலிடுக.

## இணையச் செயல்பாடு

# இயற்கை இடர்கள்



**இந்தச் செயல்பாட்டின் மூலம் இயற்கை இடர்கள் பற்றி தெரிந்துகொள்ளுதல்**

### செயல்முறை:

படி –1: கொடுக்கப்பட்டுள்ள உரலி (URL) அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்கு செல்க.

படி –2: பின்பு Sesmic Monitor என்னும் திரை தோன்றும்.

படி –3: திரையின் வலதுப் பக்கத்தில் கொடுக்கப் பட்டுள்ள ஏதேனும் ஒரு பகுதியினை தேர்வு செய்யவும்.

படி –4: குறிக்கப்பட்டுள்ள நிலைகளை சொடுக்கி பேரழிவு பற்றின விரிவான விளக்கத்தினை காணலாம்.



படி – 1


படி – 2


படி – 3

உரலி : http://ds.iris.edu/seismon/

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே .

*If browser requires, allow Flash Player or Java Script to load the page.

# குடிமையியல்



7th Std Social Science Civics Term 3 TM Unit 1.indd 222 9/30/2023 11:23:31 AM

*அலகு – 1*

# பெண்கள் மேம்பாடு



## கற்றல் நோக்கங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை குறித்த அறிவினைப் பெறுதல்

- சமூகத்தில் பாலினத்தைப் பற்றிய கண்ணோட்டத்தை அறிதல்
- சமூகத்தில் பெண்களின் பல்வேறு பங்களிப்பினை பற்றி புரிந்துகொள்ளுதல்
- பொருளாதார முன்னேற்றத்திற்கான பெண்களின் பங்களிப்பை அறிந்துகொள்ளுதல்
- பெண்களின் உரிமைகள் பற்றிய கருத்தைப் புரிந்துகொள்ளுதல்

## அறிமுகம்

பெண்ணியம் என்பது பெண்களை வலிமையாக்குவது மட்டும் அன்று. அவர்களிடம் ஏற்கெனவே உள்ள வலிமையை உலகம் உணரும் விதமாக மாற்றுவதே பெண்ணியம் ஆகும்.

பெண்கள் சமத்துவத்திற்கான போராட்டமானது எந்த ஒரு பெண்ணியவாதிக்கோ அல்லது ஏதேனும் ஒரு அமைப்பிற்கோ சொந்தமானது அல்ல. மாறாக, அது மனித உரிமைகள் பற்றிய அக்கறை கொண்டவர்களின் கூட்டு முயற்சியாகும்.

"ஒரு ஆணுக்கான கல்வி என்பது அவருக்கு மட்டுமே பயன்படும். ஆனால் ஒரு பெண்ணுக்கு வழங்கும் கல்வியானது, ஒரு தலைமுறைக்கான கல்வியாகும்."

பெண்களைப் பலவீனமான பாலினம் என்று சொல்வது ஒரு அவதூறு. அது பெண் இனத்திற்கு ஆணினம் இழைத்த அநீதியாகும் என்று மகாத்மா காந்தியடிகள் கூறியுள்ளார்.

பெண்களின் மேம்பாடு மற்றும் தனித்துவம் என்பது அவர்கள் அரசியல், சமூகப் பொருளாதார மற்றும் நலவாழ்வு நிலையில் பெறும் முன்னேற்றத்தையே குறிக்கும். இதுவே அவர்களின் நிலைத்த மேம்பாட்டிற்கு ஆணிவேராகும்.

நாட்டின் நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சிக்கு நமது சமூகத்தில் பெண்களுக்கு அதிகாரப் பகிர்வு அளித்தலும் பாலினச் சமத்துவம் அடைதலும் அவசியமாகும்.

## பாலினம் பற்றிய சமூக அம்சங்கள்

சமூகவியலில் பாலினத்திற்கு இடையே வேறுபாட்டைக் காண்கிறோம். பாலியல் என்பது உயிரியல் பண்புக்கூற்றின்படி ஆண் அல்லது பெண் என சமூகத்தில் பயன்படுத்துவதாகும்.



7th Std Social Science Civics Term 3 TM Unit 1.indd 223 9/30/2023 11:23:31 AM

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை மக்கள் பேசும்போது, பெரும்பாலும் பாலியல் பற்றிய கருத்துகளே பேசப்படுகின்றன. ஆனால், பாலினம் என்பதைவிட உயிரியல் பண்பிலான வேறுபாடு மட்டுமே அது என்பது பற்றிய நமது சமூகத்தின் புரிதல் மிக அவசியமானதாகும்.




பாலினம் என்பது உயிரியல் பண்புகளைச் சார்ந்தது. குறிப்பாக, சமூகம் எவ்வாறு பாலியல் வகைகளைக் கருத்தில் கொள்கிறது மற்றும் நடத்துகிறது என்பதே இதன் கருப்பொருளாகும். பாலினம் ஆண் பெண் பங்களிப்பின் சமூக விதிமுறைகளை உள்ளடக்கியது. இது ஆண், பெண், திருநங்கை மற்றும் பிற பாலின நிலைகளை உள்ளடக்கி அதனை சமூகம் எவ்வாறு அணுகிச்செயல்படுத்துகிறது என்பதும் பார்க்கப்படவேண்டும். அதேபோன்று, பாலினம் என்பதை ஒரு நபர் எவ்விதம் உணர்கிறார் என்பதன் மூலமும் தீர்மானிக்கப்படுகிறது.

பாலினச் சமூகவியல் ஆண்மை, பெண்மைக்கு இடையிலான வேறுபாடுகளை எவ்வாறு ஆராய்கிறது மற்றும் சமூகம் எவ்வாறு புரிந்துகொள்கிறது என்பதும் ஆகும். (ஆண்கள் மற்றும் பெண்களுக்குப் பொருத்தமான நடத்தை என்ன என்று சமூகம் கருதுவதைப் பார்ப்பது) இவை எவ்வாறு சமூக நடைமுறைகளின் அடையாளத்தைப் பாதிக்கின்றது என்பதை நாம் ஆராயவேண்டும்.

### மேம்பாட்டிற்கான முக்கிய காரணிகள்:

1. **கல்வி:** ஒருவருக்கு அறிவுபூர்வமாகச் சிந்திக்கும் திறன் மற்றும் தனித்தன்மை வாய்ந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது.
2. **பாலினப் பாகுபாடு:** பாலினப்பாகுபாடு பார்க்கும் சமூகம் எக்காலத்திலும் முன்னேறுவதற்கான வாய்ப்பு அரிது.
3. சாதி, இன, சமய பாகுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட சமூகம், முன்னேற்றம் அடையாது.

## பெண் கல்வி



கல்வி என்பது பெண்களுக்கு அறிவு, திறன்கள் மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளில் ஒன்றாகும். 40 ஆண்டுகளுக்கு முன்பே பன்னாட்டு மனித உரிமைகள் ஆணையம் 'அனைவருக்கும் கல்வி' என்ற உரிமையை வலியுறுத்தி உள்ளது.

கல்விபெறும் பெண்குழந்தையானவள், குடும்பத்தாருக்குப் பெரும் அரவணைப்பை வழங்குவதன் மூலம் சமுதாயத்திற்குச் சிறப்புச் சேர்க்கிறார். பெண் குழந்தைகளின் அவசியத் தேவையான கல்வி, அறிவினைப் பெறவும் அவர்களின் திறனை மேம்படுத்தவும் அதனால்



7th Std Social Science Civics Term 3 TM Unit 1.indd 224
9/30/2023 11:23:31 AM

சமூகத்தில் அவர்களின் தகுதிநிலை உயரவும் அவர்களின் சுய முன்னேற்றத்திற்கும் உறுதுணையாய் இருக்கின்றது

> நமது எதிர்காலம் பெண்களை உதாசீனப்படுத்துவோர் கையிலில்லை. அது நமது மகன்களைப்போல் பள்ளிக்குக் கல்வி கற்கச்செல்லும் நமது மகள்களின் கனவுகளில் உள்ளது. அவர்களே, இவ்வுலகத்தில் தாங்கிநிற்கும் வல்லமைக் கொண்டவர் என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஐக்கிய நாடுகளின் பொது சபையில், 2012 ஆம் ஆண்டு உரையாற்றும்போது கூறினார்.

## பெண் கல்வியின் இணையற்ற முக்கியத்துவங்கள்

1. **அதிகரித்த கல்வியறிவு:** உலகெங்கிலும் கல்வியறிவற்ற இளையோரில் கிட்டத்தட்ட 63 சதவிகிதம்பேர் பெண்கள். எனவே அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி வழங்கப்பட வேண்டும் அப்போதுதான் பின்தங்கிய நாடுகளும் முன்னேற்றம் அடையும்.

2. **ஆள் கடத்தல்:** ஆள் கடத்தலில் அதிகம் பாதிக்கப்படுவது படிப்பறிவு இல்லாத பெண்கள் மற்றும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்று ஆள்கடத்தல்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் இடை முகமைத் திட்டம் விளக்குகின்றது. இளம் பெண்களுக்கு அடிப்படைத் திறன்கள் மற்றும் அவர்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதினால் ஆள் கடத்தல்கள் கணிசமாகக் குறைக்கப்படும்.

3. **அரசியல் பிரதிநிதித்துவம்:** உலகம் முழுவதும் பெண்கள் வாக்காளர்களாகவே உள்ளனர். அவர்களது அரசியல் ஈடுபாடு கட்டுப்படுத்தப்படுகிறது. குடிமைக்கல்வி மற்றும் குடிமைப் பயிற்சி அனைத்து விதமான மேம்பாடு மற்றும் முன்னேற்றத்திற்கான தடைகளை உடைக்கின்றது என்று ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கான தலைமை மற்றும் பங்கேற்பினைப் பற்றிய ஆய்வு பரிந்துரைக்கிறது.

4. **வளரும் குழந்தைகள்:** கல்வியறிவு பெற்ற தாய்மார்களின் குழந்தைகள் கல்வியறிவு பெறாத தாய்மார்களின் குழந்தைகளை ஒப்பிடுகையில் இரு மடங்கு அதிகரித்து ஐந்து வயதுக்கு மேல் வாழ வாய்ப்புள்ளது என்று ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கான கல்வி முனைப்பு நிறுவனம் பரிந்துரைத்துள்ளது.

5. **காலம் தாழ்த்திய திருமணம்:** பின்தங்கிய நாடுகளில் மூன்றில் ஒரு பெண்குழந்தைக்குப் பதினெட்டு வயதுக்குள் திருமணமாகிவிடுகிறது மற்றும் எந்த நாடுகளில் பெண்குழந்தைகள் ஏழு அல்லது அதற்கும் மேலான வருடங்கள் படிக்கிறார்களோ, அவர்களின் திருமணம் நான்கு ஆண்டுகள்வரை தள்ளிப்போகிறது என்று ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் பரிந்துரைக்கிறது.

6. **வருமான சாத்தியம்:** ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் (UNESCO) கூற்றுப்படி கல்வி ஒரு பெண்ணின் வருமானம் ஈட்டும் திறனை அதிகரிக்கிறது. ஒரு பெண் ஆரம்பக் கல்வி பெற்றாள் கூட அந்த பெண்ணின் வருவாயில் 20 சதவீதம் வரை அதிகரிக்க உதவுகின்றது.

7. **மொத்த உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துதல்:** பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு கல்வி வாய்ப்புகள் வழங்கப்படும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியானது உயருகிறது. 10 சதவீதம் கூடுதலாக பெண்கள் கல்வி கற்றால் மொத்த உள்நாட்டு உற்பத்தி சராசரியாக மூன்று சதவிகிதம் அதிகரிக்கின்றது.



7th Std Social Science Civics Term 3 TM Unit 1.indd 225 9/30/2023 11:23:31 AM

8. **வறுமை குறைப்பு:** பெண்களுக்குக் கல்வியில் உரிமைகள் சம வாய்ப்புகள் வழங்கப்பட்டால் அவர்களும் பொருளாதார செயல்பாடுகளில் பங்கேற்பர். இதனால் அவர்களின் வருவாய் ஈட்டும் திறன் அதிகரித்து வறுமை அளவைக் குறைக்க வழி ஏற்படும்.

சாவித்ரிபா புலே, பாரம்பரியத்தை உடைத்த முதல் பெண்கள் பள்ளியின் முதல் பெண் ஆசிரியர் ஆவார். பெண்கள் கல்வியை பற்றி பேசும்போதெல்லாம் நினைவில் வருபவர், இந்தியாவில் பெண் கல்வியை செயல்வடிவமாக்கிய ஜோதிராவ்புலே, சாவித்ரிபாயின் கணவர் ஆவார். இவர்கள் இருவரும் பெண்களுக்கான முதல் பள்ளியை 1848 ஆம் ஆண்டு தொடங்கினர்.



### உலகின் முதன்மை பெண்மணிகள்

| முதல் பெண் | பெயர் | நாடு |
|---|---|---|
| பிரதம மந்திரி | சிறிமாவோ பண்டாரநாயக | இலங்கை |
| விண்வெளி | வாலென்டினா தெரேஷ்கோவா | சோவியத் ஒன்றியம் |
| எவரெஸ்ட் சிகரத்தை அளவிட்டவர் | ஜன்கோ தபே | ஜப்பான் |
| ஒலிம்பிக்கில் தங்கம் வென்றவர் | சார்லோட் கூப்பர் | இங்கிலாந்து |

## இந்தியாவின் முதன்மை பெண்மணிகள்

1. முதல் மகளிர் பல்கலைக்கழகம் மகர்ஷிகார்வே 1916இல் ஐந்து மாணவிகளுடன் புனேவில் SNDT பல்கலைக்கழகத்தைத் தொடங்கினார்.
2. மத்திய அமைச்சரவையில் பதவி வகித்த முதல் பெண் விஜயலட்சுமி பண்டிட்.
3. மத்திய வெளியுறவு அமைச்சர் பதவியை வகித்த முதல் பெண் சுஷ்மா ஸ்வராஜ்.
4. மாநிலத்தின் இளம் வயது அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் அவர் 25 வயதாக இருந்தபோது ஹரியானா அமைச்சரவையில் அமைச்சரானார்.
5. சுதந்திர இந்தியாவின் முதல் பெண் ஆளுநர் சரோஜினி நாயுடு, ஒன்றிணைந்த மாகாணங்களின் பொறுப்பாளர் ஆனார்.
6. ஐக்கிய நாடுகளின் பொது சபையில் முதல் பெண் தலைவர் விஜயலட்சுமி பண்டிட் (1953).
7. இந்தியாவில் முதல் பெண் பிரதமர் – இந்திராகாந்தி (1966).
8. முதல் பெண் காவல்துறை உயர் அதிகாரி – கிரண்பேடி (1972).
9. அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முதல் பெண் அன்னைதெரசா (1979).
10. எவரெஸ்டை சிகரத்தை அடைந்த முதல் இந்திய பெண் பச்சேந்திரி பால் (1984).
11. புக்கர் பரிசு வென்ற முதல் இந்திய பெண் அருந்ததி ராய் (1997).
12. முதல் பெண் குடியரசுத் தலைவர் பிரதிபா பாடீல் (2007).
13. மக்களவையின் சபாநயகர் பதவிவகித்த முதல் பெண் சபாநாயகர் மீராகுமார் (2009).
14. உச்ச நீதிமன்ற முதல் பெண் நீதிபதி மீராசாகீப் பாத்திமா பிவி.



7th Std Social Science Civics Term 3 TM Unit 1.indd 226 9/30/2023 11:23:32 AM

15. இந்திய தேசிய காங்கிரசின் முதல் பெண் தலைவர் அன்னிபெசன்ட்.
16. இந்தியாவின் முதல் பெண் மாநில முதலமைச்சர் சுச்சித கிருபாளினி.
17. முதல் பெண் காவல்துறை இயக்குநர் (DGP) காஞ்சன் சௌத்ரி பட்டாச்சாரியா.
18. இந்தியாவின் முதல் பெண் பாதுகாப்புத்துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீத்தாராமன்
19. இந்தியாவின் முதல் பெண் நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன்

## பெண்களின் கல்வியறிவு விகிதம் குறைவுக்கான காரணங்கள்

1. பாலின அடிப்படையிலான சமத்துவமின்மை
2. சமூகப் பாகுபாடு மற்றும் பொருளாதார சீரழிவு
3. பெண் குழந்தைகளை வீட்டு வேலைகளில் ஈடுபடுத்துவது
4. பள்ளிகளில் பெண் குழந்தைகளின் சேர்க்கை குறைவு
5. பள்ளிகளில் குறைந்த தக்கவைப்பு வீதம் மற்றும் அதிக இடைநிற்றல் விகிதம்

## பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு

- பெண்களின் பொருளாதார வளர்ச்சி அல்லது முன்னேற்றம் சமூகத்தில் தவிர்க்க முடியாத ஒன்று.
- மனித உரிமைகளை முன்னெடுக்கும் போதும் அதன் வளர்ச்சியின் போதும் பெண்கள் மேம்பாடு அவசியமான நடைமுறைகளில் ஒன்றாகும்.
- நீடித்த நிலையான வளர்ச்சிக்கு பெண்கள் முன்னேற்றம், மேம்பாடு மற்றும் பாலின சமத்துவம் அடைவது ஆகியன அவசியக் காரணிகள் ஆகும் .

## பெண்கள் பொருளாதார மேம்பாடு அடைவதால் ஏற்படும் நன்மைகள்

1. பெண்களின் பொருளாதார மேம்பாடானது, பெண்கள் பாலியல் சமத்துவம் பெறுவதற்கும் உரிமைகளை அடைவதற்கும் வழிவகுக்கிறது.
2. பெண்களைப் பொருளாதார முன்னேற்றமடைய செய்வதும், உலகில் பாலின இடைவெளிகளை குறைப்பதும் நிலைத்த நீடித்த இலக்கை அடைய உதவுகிறது.
3. பொருளாதாரம் மேம்பாடு அடைகின்றது.

### இந்தியாவில் ஆண்/பெண் கல்வியறிவு விகிதம் (1951 –2011)

| வரிசை எண். | மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆண்டு | நபர்கள் | ஆண்கள் | பெண்கள் | ஆண்/பெண் கல்வியறிவு இடைவெளி வீதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 1951 | 18.33 | 27.16 | 8.86 | 18.30 |
| 2. | 1961 | 28.3 | 40.4 | 15.35 | 25.05 |
| 3. | 1971 | 34.45 | 45.96 | 21.97 | 23.98 |
| 4. | 1981 | 43.57 | 56.38 | 29.76 | 26.62 |
| 5. | 1991 | 52.21 | 64.13 | 39.29 | 24.84 |
| 6. | 2001 | 64.83 | 75.26 | 53.67 | 21.59 |
| 7. | 2011 | 74.04 | 82.14 | 65.46 | 16.68 |



7th Std Social Science Civics Term 3 TM Unit 1.indd 227 9/30/2023 11:23:32 AM

4. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான கல்வி இலக்கினை அடைவதன் மூலம் பெண்களால் பொருளாதார முன்னேற்றம் அடைய முடிகிறது.

5. மூன்று அல்லது அதற்குமேலான பெண்கள் ஒரு நிறுவனத்தில் செயல்படும்போது, அனைத்து பரிமாணங்களிலும் அந்த நிறுவனம் வளர்ச்சியடைகிறது.

## பெண்களின் பொருளாதார மேம்பாட்டின் நோக்கங்கள்

1. சட்டங்களில் பாலின வேறுபாடுகள் காணப்படுவது வளரும் மற்றும் வளர்ந்த நாடுகளின் பொருளாதாரத்தையும் பெண்களையும் பாதிக்கும்.
2. உலகத் தொழிலாளர் சந்தையில் பெண்கள் பங்கேற்பதற்கான வாய்ப்பு குறைவாக உள்ளது.
3. ஆண்களைவிட பெண்களுக்கு வேலைவாய்ப்பு குறைவாக உள்ளது.
4. முறைசாரா மற்றும் பாதிக்கப்படக்கூடிய வேலைகளில், பெண்கள் அதிகம் பணிபுரிகிறார்கள்.
5. உலகளவில்ஆண்களைவிடபெண்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்படுகிறது.
6. பெண்கள் சமமற்ற பொறுப்புணர்வுடன் ஊதியம் பெறாமல் வீட்டு பராமரிப்பு பணிகளைப் பார்க்கின்றனர்.
7. ஊதியம் பெறாத பராமரிப்பு பணி அவசியமான ஒன்று. ஆனால், அதை பொருளாதார செயல்பாடாகவோ அங்கீகாரமுடையதாகவோ கணக்கிடுவது இல்லை.
8. பெண்கள் தொழில்முனைவோராக இருப்பது குறைவு. மேலும், அவர்கள் தொழில் தொடங்குவதில் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்கிறார்கள்.
9. நிதி நிறுவனங்களையோ, வங்கிகளையோ ஆண்களை விட பெண்கள் குறைவாகவே அணுகுகிறார்கள்.
10. பெண்கள் இன்றளவும் சமூகப்பாதுகாப்பைப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவு.
11. பணிபுரியும் இடங்களில் வன்முறை மற்றும் துன்புறுத்தல் போன்ற பிரச்சனைகள், பெண்களுக்கு வயது, இருப்பிடம், வருமானம், சமூகநிலை போன்றவற்றைப் பொருட்படுத்தாமல் ஏற்படுகிறது.

இந்திய சமூகம் பன்முகத்தன்மைக்கும் ஒற்றுமைக்கும் பெயர் பெற்றது. இந்திய சமுதாயத்தைப் போலவே வேறுபட்ட சமூகத்தின் பலவீனமான பிரிவினரைப் பெற்ற இந்த சமுதாயத்திலும் சமூக சமத்துவமின்மை நிலவுகிறது. அது பெண்கள், பட்டியல் சாதி, பட்டியல் பழங்குடியினர், குழந்தைகள், ஏழை, நிலமற்ற விவசாயிகள் ஆகியோரைப் பலவீனமான பிரிவினர்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் பண்டைய காலத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்தும் பிரிவின் கைகளில் சமூக–பொருளாதார மற்றும் அரசியல் பாகுபாட்டை எதிர்கொண்டுள்ளனர். மேலும் உரிமைகள் மற்றும் நீதிக்கான அவர்களின் போராட்டம் இந்த தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் பலவீனமான குழுவிற்கு எதிரான முந்தைய பாகுபாட்டைப் போலவே பழையது.

## சுருக்கம்

பெண்கள் அதிகாரம் மற்றும் அது தொடர்பான பிரச்சனைகள், இப்போது உலகளவில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. தனிப்பட்ட உரிமைகள் சமூக, சமத்துவம் அரசியல் சக்தி மற்றும் பொருளாதார வாய்ப்பு ஆகியவை பெண் அதிகாரமளிப்பின் அம்சங்களாகும். உலகின், வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் பெண்களுக்கு அதிகாரமளித்தல் இலக்கை அடைய உண்மையிலேயே செயல்படுகின்றன. உலகின் மொத்த மக்கள்தொகையில் 50% பெண்கள் பகிர்ந்துகொண்டுள்ளனர். இந்த உலகில் பெண்களை மேம்பாடு அடையச் செய்யாமல் உலக அமைதியையும்



7th Std Social Science Civics Term 3 TM Unit 1.indd 228 9/30/2023 11:23:32 AM

செழிப்பையும் நாம் கற்பனை செய்துகூடபார்க்க முடியாது. ஒவ்வொரு பெண்ணையும் ஒரு சுய சிந்தனையுடைய அதிகாரம் பெற்ற பெண்ணாக மாற்றுவது அனைவருடைய பொறுப்பாகும்.

## சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| 1. | **பலவீனனைக் கொடுமைப்படுத்துபவர், கொடுமைக்காரர்** | bully | to hurt or frighten someone, terrorise |
| 2. | **ஆள் கடத்தல்** | trafficking | the act of buying or selling people |
| 3. | **வெற்றிகரமான** | thriving | very lively and profitable, successful |
| 4. | **வேலை, பணி** | chores | task, duty |
| 5. | **தேக்கி வைத்தல், வைத்திருத்தல்** | retention | the act of retaining something, with holding |
| 6. | **தொழிலதிபர்** | entrepreneur | a person who sets up a business or businesses |
| 7. | **துன்புறுத்தல், தொல்லை கொடுத்தல்** | harassment | aggressive pressure, irritation |

## மதிப்பீடு

### I. சரியான விடையை தேர்வு செய்க

1. பின்வருவனவற்றில் எது பாலின சமத்துவமின்மை அல்ல?
   அ) மோசமான பேறுகால ஆரோக்கியம்
   ஆ) ஆண்களுக்கு அதிக பாதுகாப்பற்ற தன்மை
   இ) எச்.ஐ.வி/எய்ட்ஸ் பரவுதல்
   ஈ) பெண்களின் குறைந்த எழுத்தறிவு விகிதம்

2. பாலின சமத்துவம் என்பது எது தொடர்புடைய பிரச்சனை
   அ) பெண்குழந்தைகள்; பெண்களின் பிரச்சனை
   ஆ) அனைத்து சமூகத்திலும் பெண்களும் ஆண்களும் சமம்,
   இ) மூன்றாம் உலக நாடுகள் மட்டும்
   ஈ) வளர்ந்த நாடுகள் மட்டும்

3. பெண்கள் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக மேம்பட பின்வரும் எந்த உத்திகள் உதவுகின்றது?
   அ) பாகுபாடுகளுக்கு எதிரான சவால்களுக்கு பெண்கள் இணைந்து பணியாற்றுகின்றனர்.
   ஆ) பெண்களுக்கான அதிகமான வருமான ஆதாரங்கள்
   இ) மேம்பட்ட கல்விக்கான அணுகுமுறை
   ஈ) மேலே உள்ள அனைத்தும்

4. வளரும் நாடுகளில் சிறுவர்களைவிட பெண்குழந்தைகள் இடைநிலைக் கல்வியை தவற விடுவது ஏன்?
   அ) பள்ளிக் கல்வி கட்டணம் உயர்வு காரணமாக, சிறுவர்கள் மட்டும் பள்ளிக்கு அனுப்பப்படுகிறார்கள்
   ஆ) பெண்குழந்தைகள் வீட்டுவேலை செய்ய எதிர்பார்க்கப்படுகிறது
   இ) குழந்தைத் திருமணம் அவர்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது
   ஈ) மேலே உள்ள அனைத்தும்



7th Std Social Science Civics Term 3 TM Unit 1.indd 229
9/30/2023 11:23:32 AM

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. இந்தியாவில் பெண்கள் கல்வியை செயல்வடிவாக்கிய ஜோதிராவ் புலே நினைவில் வைக்கப்படுகிறார் அவர், தனது மனைவியுடன் ______ 1848 இல் சிறுமிகளுக்கான முதல் பள்ளியைத் தொடங்கினார்
2. மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பதவி வகித்த முதல் பெண் ______
3. முதல் பெண் காவல்துறை இயக்குநர் (DGP) ______ ஆவார்
4. புக்கர் பரிசை வென்ற முதல் இந்திய பெண் ______

## III. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. | சிரிமாவோ பண்டாரநாயக | இங்கிலாந்து |
| 2. | வாலென்டினா தெரோஷ்கோவா | ஜப்பான் |
| 3. | ஜன்கோ தபே | இலங்கை |
| 4. | சார்லோட் கூப்பர் | சோவியத் ஒன்றியம் |

## IV. பின்வரும் அறிக்கைகளை ஆராய்க.

1. பொருத்தமான பதிலைத் தேர்வு செய்க

**கூற்று (கூ)** : இப்போது அனைத்து மனிதாபிமான நடவடிக்கைகள் அனைத்திலும் பெண்கள் ஒருங்கிணைகிறார்கள்.

**காரணம் (கா)** : சமூகத்தின் அனைத்து மோதல்களிலும் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள்.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரி

2. **கூற்று (கூ)** : பெண்களுக்கு எதிரான வன்முறை சாதி, மதம், வர்க்கம், வயது மற்றும் கல்வியை கடந்து நடைபெறுகிறது

3. **காரணம் (கா)** : வீட்டு வன்முறைகள், கருக்கலைப்பு, பெண்சிசுக் கொலை, வரதட்சணை கொலை, திருமணம் மூலம் கொடுமை, சிறுவருக்கு நிகழும் கொடுமைகள் என வெளிப்படுகிறது

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரி

## V. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க

1. சமூகத்தில் பெண்கள் வகிக்கும் பல்வேறு பாத்திரங்களை பற்றி விவாதிக்கவும்.
2. பாலின சமத்துவம் என்றால் என்ன?
3. பெண்கள் உரிமையை விளக்குக.
4. பெண்களின் மேம்பாட்டிற்கான அத்தியாவசிய காரணிகளை பட்டியலிடுக
5. பெண் கல்வியின் முக்கியத்துவத்தை குறிபிட்டு ஒரு கட்டுரையை எழுதுக.

## VI. செயல்பாடு

1. தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளில் சாதனைப் புரிந்த ஏதேனும் பத்து பெண்மணிகளைப்பற்றிய படத்தொகுப்பை தயார் செய்க.



# பகுதி–2
# சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

**கற்றலின் நோக்கங்கள்**

- நான்கு வகையான சந்தை அமைப்புகளை கண்டறிதல்
- ஒவ்வொரு சந்தை அமைப்புகளுக்கும் இடையேயான வேறுபாட்டை அறிதல்
- நுகர்வோர் பாதுகாப்பின் தேவையைப் புரிந்துகொள்ளுதல்
- நுகர்வோர் உரிமைகளைப் புரிந்துகொள்ளுதல்

## அறிமுகம்

ஒரு சந்தை என்றவுடன் நம் கண்முன்னே வருவது ஏராளமான கடைகள் மற்றும் நுகர்வோர் நெரிசலாக வந்து செல்லும் இடமாக இருக்கும். மளிகை பொருள்கள், ஆடை, மின்னணுப் பொருள்கள் போன்ற பல்வேறு வகையான பொருள்களை மக்கள் சந்தையில் வாங்குகிறார்கள்.

கடைகள் பலவிதமான தயாரிப்புகளையும், சேவைகளையும் விற்பனை செய்கின்றன. எனவே பழங்கால முறைப்படி ஒரு சந்தை என்பது வாங்குபவர்களும் விற்பவர்களும் தங்கள் பொருள்கள் மற்றும் சேவைகளை பரிமாறிக்கொள்ளும் இடமாக அமைந்தது.

ஆனால் பொருளாதாரத்தில் சந்தை என்றால் என்ன? பொருளாதாரத்தில் சந்தை என்பது இயற்கை இடம் சார்ந்தது எனக் கூறப்படவில்லை. பொருளாதார வல்லுநர்கள் ஒரு சந்தையை வாங்குபவர்கள் மற்றும் விற்பனையாளர்கள் ஒன்றாக வருவதாக விவரிக்கின்றனர் மற்றும் விற்பனையாளர்கள், வாங்குபவர்கள் பொருள்களை விற்கவோ வாங்கவோ நேரடியாக வருவது அல்லது மறைமுகமாக தொடர்புக்கு வருவது, எடுத்துக்காட்டாக புத்தகச் சந்தையானது அனைத்து விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் அனைவரையும் உள்ளடக்கியதாகும் என்கிறது பொருளாதாரம். இது ஒரு புவியியல் இருப்பிடத்தைக் குறிக்கவேண்டிய அவசியமில்லை.

பொருள்கள், சேவைகள் மற்றும் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட அமைப்பு சந்தை என அழைக்கப்படும். ஒரு சந்தை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அமைப்புகள் வாங்குவதிலும் விற்பதிலும் ஈடுபடுகின்ற இடமாக அமைகின்றது. பணப்பரிவர்த்தனையில் ஈடுபடுகின்ற இரு தரப்பினரும் விற்பனையாளர் மற்றும் வாங்குபவர் என்று அழைக்கப்படுகிறார்கள்.



7th Std Social Science Civics Term 3 TM Unit 2.indd 231 9/30/2023 11:28:44 AM

விற்பனையாளர் பணம் மற்றும் பரிமாற்றங்களை வாங்குபவருக்கு விற்கிறார். சந்தைப்போட்டித் தன்மையுடன் இருக்க ஒன்றுக்கும் மேற்பட்ட வாங்குபவர் மற்றும் விற்பவர் என இருக்கவேண்டும்.

## சந்தையின் அம்சங்கள்

பொருளாதாரத்தில் சந்தை என்ற சொல் பண்டத்திற்கான கடைகளையும் அல்லது பொருள்களின் தொகுப்பையும் குறிக்கிறது. உதாரணமாக அரிசி சந்தை, துணிகளுக்கான சந்தை, மின்னணு பொருள்களுக்கான சந்தை போன்றவற்றை குறிப்பதாகும்.



1. ஒரு சந்தை இயற்பியல் சார்ந்த அல்லது புவியியல் சார்ந்த இருப்பிடத்தைக் குறிப்பதாயில்லை. சந்தை ஒரு பொதுவான பரந்த பகுதியாகவும் பிராந்தியத்தின் தேவையையும் அளிப்பையும் விநியோகிக்கும் சக்திகளைக் கொண்டுள்ளது.
2. சந்தையை உருவாக்குவதற்கு பொருள்களை வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள்ஒருகுழுவாகஇருக்கவேண்டும். இந்த விற்பனையாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையிலான உறவுகள் வணிக உறவுகளாக இருக்கவேண்டும்.
3. விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் என இருவரும் சந்தையைப் பற்றிய அறிவைப் பெறவேண்டும். தேவைக்கான தயாரிப்புகள், நுகர்வோர் தேர்வு, விருப்பத் தேர்வு, முன்னுரிமை, நவீன காலத்துக்கு ஏற்ப மாற்றங்கள் போன்ற விழிப்புணர்வைப் பெற்றிருக்கவேண்டும்.

## சந்தைகளின் வகைப்பாடு




பரவலாக சந்தைகள் இரண்டு வகைகளாக உள்ளன. அவை தயாரிப்பு சந்தை மற்றும் காரணிச் சந்தை. காரணிச் சந்தை என்பது நிலம், மூலதனம், உழைப்பு போன்ற உற்பத்திக் காரணிகளை வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்குமான சந்தையைக் குறிப்பதாகும். சந்தைகளின் மற்ற வகைகளைப் பின்வருமாறு அறியலாம்.

### 1.புவியியல் இருப்பிடத்தின் அடிப்படையில்

**உள்ளூர் சந்தைகள்:** உள்ளூர் சந்தையில் வாங்குபவர்களும் விற்பவர்களும் உள்ளூர் பகுதியை சார்ந்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் வழக்கமாக தினசரி பயன்பாட்டின் விரைவில் வீணாகிவிடும்/அழுகும் பொருள்களை விற்கின்றனர். ஏனெனில் அத்தகைய பொருள்களின் போக்குவரத்துச் செலவு மிக உயர்ந்ததாக இருக்கும்.

**பிராந்திய சந்தைகள்:** பிராந்திய சந்தைகளானது உள்ளூர் சந்தைகளை விட

பரந்த அளவிலானவை அல்லது சில சிறிய மாநிலங்கள் இணைந்த பகுதியாக இருக்கும்.

**தேசிய சந்தைகள்:** தேசிய சந்தையில் பொருள்களின் தேவை ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கு மட்டும் தேவையாக இருக்கலாம். அல்லது தேசிய எல்லைகளுக்கு வெளியே இத்தகையை பொருள்களின் வர்த்தகத்தை அரசாங்கம் அனுமதிப்பதில்லை.

**சர்வதேச சந்தை:** தயாரிப்புகளுக்கான தேவை சர்வதேச அளவிலானது மற்றும் சர்வதேச அளவில் பொருள்கள் மொத்த அளவில் வர்த்தகம் செய்யப்படும்போது அச்சந்தை சர்வதேச சந்தை என அழைக்கப்படுகிறது.

## 2. நேரத்தின் அடிப்படையில்

**மிகக் குறுகிய கால சந்தை:** மிகக் குறுகிய கால சந்தையில் பொருள்களின் அளிப்பு நிலையானது மேலும் அதை உடனடியாக மாற்ற முடியாது. உதாரணமாக பூக்கள், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றிற்கான சந்தைகள் பொருள்களின் விலையானது தேவையை பொறுத்து அமையும்.

**குறுகிய கால சந்தை:** குறுகிய கால சந்தை என்பது முந்தைய சந்தையை விட சற்று கூடுதல் நேரம் உடையது. இங்கே அளிப்பை சற்றே மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

**நீண்ட கால சந்தை:** நீண்ட கால சந்தையில் உற்பத்தியை கணக்கிடுவதன் மூலம் விநியோகத்தை எளிதாக மாற்றியமைக்கலாம். எனவே இத்தகைய சந்தையை தேவைகேற்ப மாற்றலாம். எனவே சந்தையின் சமநிலை விலையை சரியான சமயத்தில் தீர்மானித்துக் கொள்ளும்.

## 3. பரிவர்த்தனையின் அடிப்படையில்

**உடனடிச் சந்தை :** பரிவர்த்தனைகள் நிகழும் இடத்திலேயே பணம் உடனடியாக செலுத்தப்படுகிறது கடன் முறை இல்லை.

**எதிர்கால சந்தை:** எதிர்கால சந்தையின் பரிவர்த்தனைகள் கடன் அடிப்படையிலான பரிவர்த்தனைகள் ஆகும். எதிர்காலத்தில் திரும்ப செலுத்த ஒரு வாக்குறுதியும் உள்ளது.




## 4. ஒழுங்குமுறை அடிப்படையில்

**ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை:** ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையானது பொருத்தமான அரசாங்க அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் நடைபெறுகின்றன. இத்தகைய சந்தை நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் இல்லை என்பதை உறுதி செய்கிறது. ஒழுங்குபடுத்தப்பட்ட உற்பத்தி அல்லது உற்பத்திகளின் குழுவைக் குறிக்கிறது. எ.கா, பங்குச்சந்தை மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையாக உள்ளது.




படம் –1: சந்தை கட்டமைப்புகளின் வகைகள்




படம் –2: ஒழுங்கற்ற போட்டியின் வகைகள்

**கட்டுப்பாடற்ற சந்தை:** முற்றிலும் கட்டுப்பாடு எதுவுமற்ற சந்தை. சந்தையில் கண்காணிப்போ ஒழுங்குமுறையோ கிடையாது. அதுவே முடிவுகளை மேற்கொள்கிறது .

## 5. போட்டியின் தன்மை அடிப்படையில்

**முற்றுரிமை :** முற்றுரிமை என்பது ஒரு சந்தை கட்டமைப்பைக் குறிக்கிறது. அதில் ஒரு உற்பத்தியாளர் அல்லது ஒரு விற்பனையாளர் முழு சந்தையிலும் கட்டுப்பாட்டைக் கொண்டு உள்ளனர். இத்தகைய தனி விற்பனையாளர் நெருக்கமான மாற்று பொருள்கள் இல்லாத தயாரிப்புகளில் ஒப்பந்தம் செய்யப்படுகிறார்.

**ஏகபோக போட்டி:** ஏகபோக போட்டி என்ற சொல் பேராசியரியர் எட்வர்ட். எச். 1933 ஆம் ஆண்டில் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் சேம்பர்லின் தனது ஏகபோக போட்டியின் கோட்பாட்டு நூலின் குறிப்பிட்டுள்ளார். ஏகபோக போட்டி என்ற சொல் ஏகபோக மற்றும் சரியான போட்டி என்பதன் கலவையைக் குறிக்கிறது. அதில் ஏராளமான வாங்குபவர்கள் மற்றும் தயாரிப்புகளை விற்பவர்கள் உள்ளனர். இருந்தபோதிலும் ஒவ்வொரு விற்பனையாளரின் தயாரிப்பும் ஒரு அம்சத்தில் அல்லது மற்றொன்றிலிருந்து வேறுபட்டுள்ளது.




**ஒலிகோபோலி :** ஒலிகோபோலி என்ற சொல் இரண்டு கிரேக்க சொற்களிலிருந்து பெறப்பட்டது. ஒலிகோய் என்றால் சில மற்றும் பாலி என்றால் கட்டுப்பாடு. எனவே ஒலிகோபோலி என்பது ஒரு சந்தை வடிவத்தைக் குறிக்கிறது. இதில் ஒரே மாதிரியான அல்லது வேறுபட்ட தயாரிப்புகளில் சில விற்பனையாளர்கள் உள்ளதைக் குறிக்கிறது.

## 1. நுகர்வோர் என்பவர் யார்?

நுகர்வோர் என்பவர் ஒரு பொருளை வாங்குதல் அல்லது ஒரு சேவையைப் பெறுவதற்காக அது அவரது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக அல்லது சுய வேலைவாய்ப்பு மூலம் தனது வாழ்வாதாரத்தை பெருக்கிக்கொள்பவர் ஆவார்.

**நுகர்வோர் என்பவர்:**

- ❖ பணம் செலுத்தியவர்
- ❖ வாக்குறுதி பெற்றவர்
- ❖ ஓரளவு பணம் செலுத்தியவர் மற்றும் ஓரளவு வாக்குறுதி பெற்றவர்

நுகர்வோரின் ஒப்புதலுடன் இத்தகைய பயன்பாடு செய்யப்படும்போது. அத்தகைய பொருள்கள்/ சேவைகளின் பயனாளிகளும் இதில் அடங்கும்.

## 2. நுகர்வோர் இல்லாதவர் யார்?

ஒரு நபர் எப்போது நுகர்வோராய் இருக்கவியலாது :

- ❖ எந்தவொரு பொருளையோ வாங்குகிறது அல்லது எந்தவொரு சேவையையோ இலவசமாகப் பெறுகின்ற போது.
- ❖ வணிக நோக்கத்திற்காக ஒரு சேவையை அமர்த்துவது அல்லது பொருளை வாங்குவது

ஒப்பந்த அடிப்படையில் ஒரு சேவையைப் பெறுவது.



7th Std Social Science Civics Term 3 TM Unit 2.indd 234 9/30/2023 11:28:46 AM

## நியாயமற்ற வர்த்தக நடைமுறை என்றால் என்ன?



"நியாயமற்ற வர்த்தக நடைமுறை" என்பது ஒரு வர்த்தக நடைமுறை அல்லது எந்த ஒரு பொருள் அல்லது சேவைகளின் விற்பனை, பயன்பாடு அல்லது விநியோகத்தை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக, நியாயமற்ற துறையை அல்லது நியாயமற்ற அல்லது ஏமாற்றும் நடைமுறை பின்பற்றப்படுவது. இந்த நடைமுறைகளில் சில பின்வருமாறு:

- தவறான பிரதிநிதித்துவம்
- பொருள்கள் மற்றும் சேவைகள் குறிப்பிட்ட தரநிலை, தரம் அல்லது தரத்தில் இல்லாத போது;
- உபயோகித்தப் பொருள், புதுப்பிக்கப்பட்ட பொருள்கள் புதியது போல விற்கப்படுவது.
- பொருள்கள் மற்றும் சேவைகளுக்கு உரிமை அல்லது நன்மை இல்லாதபோது;
- தயாரிப்புகள் / சேவைகளுக்கு உரிமை கோரப்பட்ட உத்திரவாதம் / பொறுப்புறுதி இல்லாதபோது.
- தயாரிப்பு அல்லது சேவையின் விலை தவறாக குறிக்கப்படும் போது.
- பேரம் பேசும் விலையில் விற்பனை செய்வதற்கான தவறான விளம்பரம்.
- பரிசுகளை, பரிசு போன்றவற்றை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கான எந்த நோக்கமும் இல்லாமல் அவற்றை வழங்குவதற்காக.
- தகுதிவாய்ந்த அதிகாரத்தால் அமைக்கப்பட்ட பாதுகாப்புத் தரங்களுக்குள் வராத பொருட்களை விற்பனை செய்தல்.
- அதிக விலைகளை ஏற்றும் வகையில் அதிக எண்ணிக்கையில் உற்பத்தி செய்யப்படும் அல்லது ஒரே மாதிரியான பொருட்களின் விலையை உயர்த்தும் நோக்கத்துடன் பதுக்கல் அல்லது பொருட்களை அழித்தல்.
- மோசமான பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது வழங்குதல் அல்லது சேவைகளை வழங்குவதில் ஏமாற்றும் நடைமுறைகளை பின்பற்றுவது.

உங்களுக்குத் தெரியுமா?

**விற்பனை செய்யப்பட்ட பொருள் திரும்பப் பெறபட மாட்டாது.**
**(அல்லது)**
**"பொருட்களை மாற்ற இயலாது",**
**(அல்லது)**
**"எந்தச் சூழலிலும் பணம் திருப்பித்தரப்படமாட்டாது"**

இது முறையற்ற வணிக நடவடிக்கை மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைக்கு ஏற்றதல்ல.

### நுகர்வோர் பாதுகாப்பு:

நுகர்வோர் பாதுகாப்பு என்பது நுகர்வோரின் உரிமைகள், நியாயமான வர்த்தகப் போட்டி மற்றும் துல்லியமான தகவல்கள் சந்தையில் இருக்க வேண்டும் என்பதற்காக இயற்றப்பட்ட சட்டங்களின் குழு ஆகும் நியாயமற்ற நடைமுறைகளில் ஈடுபடும் வணிகத்தை போட்டியாளர்களுக்கு மேலாகப் பெறுவதைத் தடுக்க சட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவை சமூகத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு கூடுதல் பாதுகாப்பையும் வழங்கும். நுகர்வோர் பாதுகப்பு சட்டங்கள் என்பது நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட அரசாங்க வழிமுறைகளின் ஒரு வடிவமாகும். எடுத்துகாட்டாக, தயாரிப்புகள் பற்றிய விரிவான தகவல்களை வெளியிட ஒரு அரசாங்கத்திற்கு வணிகங்கள் தேவைப்படலாம். குறிப்பாக பொது



7th Std Social Science Civics Term 3 TM Unit 2.indd 235 9/30/2023 11:28:46 AM

சுகாதாரத்தின் பாதுகாப்பு என்பது உணவு போன்ற பிரச்சினைகளை உள்ளடக்கியதாகும்.




நுகர்வோர் பாதுகாப்பு என்பது நுகர்வோர் அமைப்புகளின் யோசனைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது நுகர்வோர் சந்தையின் சிறந்த தேர்வுகளை அனைவரும் எடுக்க உதவுகிறது. மற்றும் நுகர்வோர் புகார்களுக்கு நடவடிக்கை எடுக்க உதவுகிறது. நுகர்வோர் பாதுகாப்பை ஊக்குவிக்கும் பிற நிறுவனங்களில் அரசு நிறுவனங்கள் மற்றும் சுய ஒழுங்குப்படுத்தும் வணிக நிறுவனங்கள் அடங்கும்.

எடுத்துக்காட்டு: இந்தியாவில் தொலைதொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் (TRAI), மற்றும் ஆயுள் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் இந்தியாவின் மேம்பாட்டு ஆணையம் (IRDAI).

## நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986

இந்திய நாடாளுமன்றத்தில் 1986 – ஆம் ஆண்டில் நுகர்வோரின் நலன்களைப் பாதுகாப்பதற்காக இயற்றப்பட்ட சட்டம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் ஆகும். நுகர்வோர் குறைகளைத் தீர்ப்பதற்காக நுகர்வோர் கவுன்சில்கள் மற்றும் பிற அதிகாரிகள் நுகர்வோர் தொடர்புடையவர்களோடு நுகர்வோருக்கு உதவும் வகையில் உள்ளது. இச்சட்டம் அக்டோபர் 1986 இல் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு 1986 டிசம்பர் 24 முதல் இந்தியாவில் நடைமுறைக்கு வந்தது.

**எட்டு அடிப்படையான நுகர்வோர் உரிமைகள்:**

1. அடிப்படைத் தேவைகளுக்கான உரிமை
2. பாதுகாப்புக்கான உரிமை
3. தகவல் அறியும் உரிமை
4. தேர்ந்தெடுக்கும் உரிமை
5. பிரதிநிதித்துவ உரிமை
6. குறை தீர்க்கும் உரிமை
7. நுகர்வோர் கல்வி மற்றும் உரிமை
8. தூய்மையான சுற்றுப்புறச் சூழலைப் பெறுவதற்கான உரிமை

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் "நுகர்வோருக்கனா மகா சாசனம்" என்று அழைக்கப்படுகிறது. இச்சட்டத்தின் வாயிலாக நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள், பொருள்களின் குறைபாடுகள் மற்றும் சேவைகளின் உள்ள குறைகளை சரிபார்க்க நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் அவசியமாகிறது. இந்தியா முழுவதும் நுகர்வோர் மன்றங்கள் மற்றும் மேல்முறையீட்டு நீதி மன்றங்களின் பரவலான வலையமைப்பை நிறுவ வழிவகுத்துள்ளது. வணிக அமைப்புகள் நுகர்வோர் புகார்களை எவ்வாறு அணுகுகின்றன என்பதையும், நுகர்வோருக்கனா அதிகாரங்களை மேம்படுத்தவும் இச்சட்டம் கணிசமாக உயர்த்தியுள்ளது.

நுகர்வோர் விழிப்புணர்வை அதிகரிக்க தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் நுகர்வோர் பாதுகாப்பு சபைகள் அமைக்கப்பட்டுள்ளன. நுகர்வோரின் விழிப்புணர்வை அதிகரிக்க பல்வேறு நுகர்வோர் அமைப்புகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அதிக அளவில் செயல்படவேண்டும்.



7th Std Social Science Civics Term 3 TM Unit 2.indd 236 9/30/2023 11:28:47 AM

## நுகர்வோர் குறை தீர்க்கும் முகவர்

தேசிய நுகர்வோர் குறை தீர் ஆணையம் மத்திய அரசால் நிறுவப்பட்டது. இவ்வாணையம் 1 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புமிக்க நுகர்வோர் குறைகளை தீர்க்க முயல்கிறது. இது மத்திய நுகர்வோர் நீதிமன்றம் ஆகும்.

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மாநில அரசால் நிறுவப்பட்டது. இவ்வாணையம் 1 கோடி ரூபாய்க்கும் குறைவான மதிப்புமிக்க நுகர்வோர் குறைகளை மாநில அளவிலான தீர்க்கும் நீதிமன்றமாகும்.

மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாநில அரசால் நிறுவப்பட்டு அது மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் எனவும் அழைக்கப்படுகிறது. மாநில அரசாங்கம் ஒரு மாவட்டத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்ட மன்றங்களை நிறுவலாம். இது மாவட்ட அளவிலான நீதிமன்றமாகும். இது ரூ 20 லட்சம் மதிப்புமிக்க அளவிலான குறைகளை தீர்க்கும் மாவட்ட நீதிமன்றமாகும்.

## நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019

இந்திய பாராளுமன்றத்தில் ஆகஸ்ட் 2019ஆம் ஆண்டு ஒரு மைல்கல் என்று அழைக்கப்படும் நுகர்வோர் பாதுகாப்பு மசோதா, 2019–இல் நிறைவேற்றப்பட்டது. இந்த நவீன தொழில்நுட்பகாலத்தில் நுகர்வோர்களின் குறைகளை குறித்த நேரத்திலும், பயனுள்ள நிர்வாகத்தையும், நியாயமான தீர்வையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டது. புதிய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மத்திய அரசு அறிவிக்கும் தேதியில் இருந்து நடைமுறைக்கு வரும். புதிய நுகர்வோர் பாதுகாப்புசட்டம் முப்பது வருடங்களுக்கு மேலான சட்டமாகும். பழைய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986 – இல் மாற்றங்களை ஏற்படுத்த முற்படுகிறது.




## புதிய சட்டத்தின் சிறப்பம்சங்கள்:

1. **இ – வணிக பரிவர்த்தனைகள்:** புதிய சட்டம் நுகர்வோர் என்ற வரையறையை விரிவுபடுத்தியுள்ளது. இணையத்தின் நேர்முகக் கட்டுப்பாட்டில் இல்லாத அல்லது இணையத்தின் இயக்க கட்டுபாட்டில் உள்ள பரிவர்த்தனைகள், மின்னணு வழிமுறைகள், தொலைநோக்கி, நேரடி விற்பனை அல்லது பல நிலை சந்தைப்படுத்தல் மூலம் எந்தவொரு பொருளையும் வாங்கும் எந்தவொரு நபரும் இப்போது அமைப்பில் உள்ளனர்.

2. **பணவியல் அதிகார வரம்பை மேம்படுத்துதல்:** திருத்தப்பட்ட பணவியல் அதிகார வரம்பு: புதிய சட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட பண வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டன. அதன்படி, மாவட்ட நுகர்வோர் நீதி மன்றம் இப்போது நுகர்வோர் புகார்களை ஏற்றுக்கொள்ள முடியும். அங்கு செலுத்தப்பட்ட பொருள்கள் அல்லது சேவைகளின் மதிப்பு 10,000,000 ரூபாய்க்கு மிகாமல் இருக்கும், என்றால் மாநில நுகர்வோர் ஆணையம் விசாரிக்க முடியும் அதுவே 10,000,000 ரூபாய்க்கு மேல் மதிப்பு இருக்குமானால் அத்தகையவற்றை தேசிய நுகர்வோர் ஆணையம் விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

3. **புகார்களை இ– தாக்கல் செய்தல்:** புதிய சட்டம் நுகர்வோருக்கு மின்னணு முறையில் புகார்களைத் தாக்கல் செய்வதற்கும்



7th Std Social Science Civics Term 3 TM Unit 2.indd 237 9/30/2023 11:28:47 AM

ஒளிகாட்சிக் கலந்தாய்வுக் கூடம் (Video Conferencing) மூலம் வாதிகளைக் கேட்பதற்கும் அல்லது ஆய்வு செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

4. **மத்திய நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரத்தை நிறுவுதல்:** புதிய சட்டம் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் என அழைக்கப்படும். ஒரு ஒழுங்குமுறை அதிகாரத்தை நிறுவுவதற்கு முன்மொழிகிறது மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்திற்கு ஒரு தலைமை இயக்குநர் தலைமையில் ஒரு விசாரணை பிரிவு இருக்கும். இது நுகர்வோர் சட்ட மீறல்கள் குறித்து விசாரணை அல்லது விசாரணையை நடத்தக்கூடும்.

5. **நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள்:** புதிய சட்டம் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளுக்கு ஒரு குறிப்பிட்ட பரந்த வரையறையை அறிமுகப்படுத்துகிறது. இது வேறு எந்த சட்டத்தின் விதிகளின்படி வெளிப்படுத்தப்படாவிட்டால், நுகர்வோர் நம்பிக்கையுடன் வழங்கிய தனிப்பட்ட தகவல்களைப் பகிர்வதும் அடங்கும்.

6. **தவறான விளம்பரத்திற்கு அபராதம்:** தவறான விளம்பரத்திற்காக மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் ஒரு உற்பத்தியாளர் அல்லது ஒப்புதல் அளிப்பவருக்கு 1,000,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கலாம். மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் தவறான விளம்பரத்திற்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கலாம். அடுத்தடுத்த குற்றத்தில் அபராதம் 5,000,000 ரூபாய் மற்றும் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். தவறான விளம்பரத்திற்கு ஒப்புதல் அளிப்பவர் குறிப்பிட்ட தயாரிப்பு அல்லது சேவையை ஒரு வருடம் வரை ஒப்புதல் அளிப்பதை மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் தடை செய்யலாம். ஒவ்வொரு அடுத்தடுத்த குற்றத்திற்கும் தடைக்காலம் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கப்படலாம்.




## இந்தியாவில் நுகர்வோர் நீதிமன்றங்கள்:

**தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் (NCDRC):** ஒரு தேசிய அளவிலான நீதிமன்றம் இந்தியா முழுவதற்கும் குறைதீர் ஆணையமாக செயல்படுகிறது. இழப்பீடு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இருந்தால் தேசிய ஆணையம் நுகர்வோர் நீதிமன்றங்களின் உச்ச அமைப்பாகும். இவ்வகை நுகர்வோர் நீதிமன்றங்கள் மிக உயர்ந்த மேல்முறையீட்டு நீதிமன்றமாகும். தேசிய நுகர்வோர் குறைதீர் நிவாரண ஆணையம். இந்தியாவில் ஒரு பகுதியான – நீதி ஆணையமாகும். இது 1986 ஆம் ஆண்டில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1988 – இல் அமைக்கப்பட்டது அதன் தலைமை அலுவலகம் புது டெல்லியில் உள்ளது. இந்த ஆணையம் அதனை இந்தியாவில் உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியின் தலைமையில் செயல்படுகிறது.

**மாநில நுகர்வோர் குறைதீர் மன்றம் (SCDRF):** மாநில அளவில் ஒரு நீதிமன்றம் செயல்படுகிறது. இழப்பீடு கோரப்பட்ட வழக்குகள் 20 லட்சத்திற்கும் மேல் இருக்குமானால் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் அதனை ஏற்கிறது. மாவட்ட ஆணையத்தின் மேல்முறையீட்டு அதிகார வரம்பை மாநில ஆணையம் கொண்டுள்ளது.

**மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் (DCDRF):** மாவட்ட நுகர்வோர் குறைதீர்



7th Std Social Science Civics Term 3 TM Unit 2.indd 238 9/30/2023 11:28:48 AM

நீதிமன்றம் இழப்பீடு 20 லட்சம் வரை விசாரிக்க அனுமதிக்கிறது அனுமதிக்கிறது. மாவட்ட அளவிலான நீதிமன்றம் மாவட்ட அளாவில் செயல்படுகிறது

**முக்கியமான சட்டங்கள்**

- ✓ நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986
- ✓ சட்ட அளவீட்டு சட்டம், 2009
- ✓ இந்திய தர நிர்ணய பணியகம், 1986
- ✓ அத்தியாவசிய பொருள்கள் சட்டம், 1955
- ✓ கறுப்பு சந்தைப்படுத்துதல் தடுப்பு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் பராமரிப்பு
- ✓ பொருட்களின் சட்டம், 1980.

http://consumeraffairs.nic.in
http://ncdrc.nic.in/
http://ncdrc.nic.in/statelist.html
http://ncdrc.nic.in/districtlist.html

**சுருக்கம்:–** இக்காலத்தில் நுகர்வோர்கள் விற்பனையாளர்களுக்கு, வணிகத்தை கொண்டு வருவதன் காரணமாக, அவர்களை ஓர் அரசரைப்போல் உபசரிக்க வேண்டிய தேவை இருக்கிறது. முன்பெல்லாம், நுகர்வோர்கள் எப்பொருளையும் வாங்கும் முன் மிக எச்சரிக்கையும் இருக்கவேண்டிய தேவை இருந்தது. ஆனால், இக்காலங்களில் அரசாங்கச் சட்டங்களும், அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைகளும், நுகர்வோர் பாதுகாப்பு, அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சந்தைகளின் அதிகரிக்கப்ட்ட போட்டிகளின் காரணமாக, விற்பனையாளர்கள் எப்பொருளையும் விற்கும் முன் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டிய தேவை இருக்கிறது. நுகர்வோர்கள் சட்டங்கள் மற்றும் கொள்கைகளினால் பாதுகாக்கப்பட்டிருப்பினும் நுகர்வோர்களுக்கு மத்தியில் விழிப்புணர்வு குறைபாடு மேம்பட்டிருக்கிறது. நுகர்வோர்கள் அவர்களின் உரிமையும், பாதுகாப்பும் பலபடுத்தப்பட்டிருப்பது காலத்தின் தேவையாக இருக்கிறது.

## கலைச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | வியாபாரப் பொருள்கள் | Commodities | trade goods, supplies |
| 2. | எங்குமிருக்கும், வழக்கமான | Prevalent | very common, frequent |
| 3. | தொகுப்புக் குழு, திரள் | Cluster | a grouping of a number of similar things, bunch |
| 4. | உடனடியாக, கணப்பொழுதில் | Instantaneously | immediately, without hesitation |
| 5. | போலியான, பொய்யான | Spurious | invalid, fake |
| 6. | பாதிக்கப்படக்கூடிய ஆபத்தான | Vulnerable | attacked either physically or emotionally, helpless |
| 7. | குறை நிவர்த்தி குறை தீர்க்கும் | Redress | compensate, remedy, rectify |
| 8. | பொருள் சார்ந்த பணவகையான | Pecuniary | relating to money, financial |

## மதிப்பீடு

### I. சரியான விடையை தேர்வு செய்க.

1. எந்தவொரு சந்தர்ப்பத்தில் ஒரு நுகர்வோர் குறைபாடுள்ள தயாரிப்புக்காக உற்பத்தியாளருக்கு எதிராக புகார் செய்ய முடியாது?
   அ) காலாவதியாகும் தரவு குறிப்பிடப்படாதது
   ஆ) பொருள்களின் விலை
   இ) பொருள்களின் தொகுதி எண்
   ஈ) உற்பத்தியாளரின் முகவரி
2. உற்பத்தியாளரின் முடிவில் இருந்து நுகர்வோர் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்?
   அ) நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள்
   ஆ) பரந்த அளவிலான பொருள்கள்
   இ) நிலையான தரமான பொருள்கள்



7th Std Social Science Civics Term 3 TM Unit 2.indd 239 9/30/2023 11:28:48 AM

ஈ) உற்பத்தியின் அளவு

3. நுகர்வோருக்கு ஒரு பொருள்கள் தயாரிப்பு பற்றிய போதுமான தகவல்கள் வழங்கப்பட வேண்டும்
   அ) உற்பத்தியின் முதலீடு
   ஆ) பொருள்கள் விற்பனையில் முடிவு
   இ) கடனில் பொருள்கள் வாங்குதல்
   ஈ) பொருள்கள் வாங்குவதில் முடிவு
4. தேசிய, மாநில மற்றும் மாவட்டங்களில் உள்ள நுகர்வோர் நீதிமன்றங்களின் அமைப்பு, வணிகர்களின் நியாயமானதை வர்த்தக நடைமுறைகளுக்கு எதிரான நுகர்வோர் குறைகளை ஆராய்வது என அழைக்கப்படுகிறது
   அ) மூன்று அடுக்கு அமைப்பு
   ஆ) ஒரு அடுக்கு அமைப்பு
   இ) இரு அடுக்கு அமைப்பு
   ஈ) நான்கு அடுக்கு அமைப்பு
5. தரம் குறைவான பிற வெளிப்புற பொருள்களை ஒரு உயர்ந்த தரமான பொருளுடன் கலப்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
   அ) தூய்மையாக்கல் ஆ) கலப்படம்
   இ) சுத்திகரிப்பு ஈ) மாற்றம்

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ________ பொருள்கள் சேவைகள் மற்றும் தகவல்களின் ஈடுபடும் ஒரு சந்தை என்று அழைக்கப்படுகிறது.
2. ஒழுங்குப்படுத்தப்பட்ட சந்தைகளில், பொருத்தமான ___________ அதிகாரிகளால் சில மேற்பார்வை உள்ளது.
3. ______________ என்பது ஒரு சந்தை கட்டமைப்பைக் குறிக்கிறது, அதில் முழு உற்பத்தியிலும் ஒரு கட்டுப்பாட்டைக் கொண்ட ஒரு ஒற்றை தயாரிப்பு அல்லது விற்பனையாளராக இருக்கிறார்.
4. ______________ நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளை சரிபார்க்க நுகர்வோர் பாதுகாப்பு துறையின். மகா சாசனம் என்று கருதப்படுகிறது.

## III. பின்வருவனவற்றைப் பொருத்தவும்:

| | | |
|---|---|---|
| 1. | நுகர்வோர் உற்பத்தி சட்டம் | 1955 |
| 2. | சட்ட பூர்வமான அளவீட்டு சட்டம் | 1986 |
| 3. | இந்திய தர நிர்ணய பணியகம் | 2009 |
| 4. | அத்தியாவசிய பொருள்கள் சட்டம் | 1986 |

## IV. பின்வரும் கூற்றுகளை ஆய்க.

1. **பொருத்தமான பதிலைத் தேர்வு செய்க:**

**கூற்று:** உள்ளூர் சந்தைகளில் வாங்குபவர்களும் விற்பவர்களும் உள்ளூர் பகுதி பகுதியை சேர்ந்தோர் அல்லது மட்டுமே.

**காரணம்:** ஒரு சந்தை இயற்கை இடம் அல்லது புவியியல் இருப்பிடத்திற்கு கட்டுப்படுத்தப்படவில்லை

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் ஆகும்

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால், காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.

இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

ஈ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரி

## V. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்

1. சந்தை என்றால் என்ன?
2. 'நுகர்வோர் பாதுகாப்பு' விவரிக்கவும்
3. நுகர்வோரின் உரிமைகளைப் பட்டியலிடுக
4. நுகர்வோர் நீதிமன்றங்களின் பங்கு பற்றி விவாதிக்கவும்
5. சந்தைகளின் வகைகள் மற்றும் அதன் செயல்பாடுகளைப் பற்றி எழுதுக.

## VI. செயல்பாடு :

1. இன்றைய நாளில் நம் வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் பத்து அத்தியாவசிய பொருள்களின் பெயர் மற்றும் அதன் விலையை பட்டியலிடுக.

*அலகு – 3*

# சாலைப் பாதுகாப்பு



## கற்றல் நோக்கங்கள்

- சாலைப் பாதுகாப்பின் அவசியத்தைப் புரிந்து கொள்ளுதல்
- சாலை விபத்திற்கான காரணங்களை ஆராய்தல்
- சாலைப் பாதுகாப்பு முறைகளைப் பட்டியலிடுதல்
- அரசாங்கம் மற்றும் தனிமனிதனின் சாலைப் பாதுகாப்பு அங்கீகரித்தல்
- சாலைப் பாதுகாப்பு வாரம் போக்குவரத்துக் குறியீடுகள் முதலியவற்றை அறிந்து கொள்ளுதல்

Safe driving, Saves lives, Drive fine, Avoid fine

### அறிமுகம்

புரட்சிகர கண்டுபிடிப்பான சக்கரமானது போக்குவரத்துமுதல் இயந்திரம்வரை பலவித தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்துள்ளது. இது நமது அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் பல அடிப்படை கண்டுபிடிப்புகளில் ஒன்றாகும். சக்கரத்தின் கண்டுபிடிப்பு புரியாத புதிராக இருப்பினும், வாகனங்களின் வரலாற்றில் மனிதனின் அறிவுத்திறமையை நிரூபிக்கிறது. இருசக்கர, மூன்று சக்கர, நான்கு சக்கர வாகனங்கள் இல்லாத வையகத்தை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியுமா?

### சாலைப் பாதுகாப்பு




ஒவ்வொரு நாளும் நாம் பள்ளிக்கோ, கல்லூரிக்கோ அலுவலகத்திற்கோ, கடைகளுக்கோ, உறவினர்கள் மற்றும் நண்பர்களைச் சந்திப்பதற்கோ சாலைவழியே பயணிக்கிறோம். சாலையில் பயணிக்கும்போது, நாம் பாதுகாப்பாக இருக்க வேண்டும். சாலைப் பாதுகாப்பு என்பது, சாலையைப் பயன்படுத்துவோர் உயிரிழப்பு மற்றும்

கடுமையாகக் காயப்படுவதை தடுக்கும் முறைகள் மற்றும் நடவடிக்கைகளைக் குறிக்கிறது.

### சாலைப் பாதுகாப்பின் தேவை



உலகத்திலேயே, அதிகமான சாலை விபத்துகள் இந்தியாவில்தான் ஏற்படுகின்றன என்பது மிகவும் வருந்தத்தக்கச் செய்தியாகும். உலகளவில் 10% சாலை விபத்துகளுக்கு இந்தியா பொறுப்பாகிறது. சாலை விபத்துகள், இந்தியமக்களின் வாழ்வு, வளர்ச்சி மற்றும் பொருளாதாரத்தைப் பெரிதும் அச்சுறுத்துகின்றன.

### சாலை விபத்திற்கான காரணங்கள்

### வாகனம் இயக்கும் போது ஏற்படும் கவனச்சிதறல்



வாகனம் இயக்கும் போது ஏற்படும் கவனச்சிதறலே, சாலைவிபத்துகள் ஏற்படுவதற்கு முதன்மையான காரணமாக விளங்குகிறது. ஓட்டுநர் வாகனத்தை இயக்கும்போது, வேறு ஏதேனும் செயல்களில் ஈடுபடுவதால், கவனச்சிதறல் ஏற்படுகிறது. வாகனம் இயக்கும்போது, கைப்பேசியில் பேசுவதோ, அதில் குறுஞ்செய்தி அனுப்புவதோ, மற்ற பல செயல்களில் ஈடுபடுவதோ கவனச்சிதறலுக்கு வழிவகுக்கிறது.

### கட்டுப்பாடு இல்லாமல் வாகனங்களை இயக்குதல்



கட்டுப்பாடு இல்லாமல் வாகனங்களை இயக்குதல் என்பது ஓட்டுநர் போக்குவரத்து விதிகளை மீறும் செயலாகும். ஓட்டுநர் வேண்டுமென்றே போக்குவரத்து விதிகளை மதிக்காமல் வாகனங்களை இயக்கும் மனநிலையாகும்.

### இரவில் வாகனங்களை இயக்குதல்





7th Std Social Science Civics Term 3 TM Unit 3.indd 242 26-09-2023 18:28:53

இரவு நேரத்தில் வாகனம் இயக்கும்போது அதிகமான கவனம் தேவைப்படுகிறது. கட்டுப்படுத்த முடியாத தூக்கம், அதிக தூரம் தொடர்ந்து வாகனங்களை இயக்குவதால் ஏற்படும் சோர்வு மற்றும் சாலையில் குறைந்த வெளிச்சம் ஆகியவையே கோரமான சாலை விபத்துகளுக்குக் காரணமாகின்றன.

### வாகனங்களுக்கிடையே இடைவெளி இல்லாதிருத்தல்



ஒரு வாகனத்தின் ஓட்டுநர் தம் வாகனத்திற்கும் தமக்கு முன்னால்போகும் வாகனத்திற்கும் இடையே போதுமான இடைவெளி இல்லாது இயக்குவதேயாகும். இந்நிலையில், முன்னால் செல்லும் வாகனம் திடீரென நிறுத்தப்படும்போது, பின்னால் செல்லும் வாகனம் அதன்மீது மோதுகிறது.

### போக்குவரத்து நெரிசல்

வாகனங்களின் அதிக எண்ணிக்கையால் சாலையில் போக்குவரத்து நெரிசலும், மாசுபாடும் அதிகரிக்கிறது.



### சாலையின் நிலை





வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் அளவிற்குச் சாலைகளின் விரிவாக்கம் இல்லாமல் மிகவும் குறைவாகவே உள்ளது.

### பாதுகாப்பு கவசங்களை தவிர்த்தல்



இருசக்கர வாகனங்கள் இயக்கும்போது, தலைக்கவசம் அணியாமல் இருப்பது, நான்கு சக்கரவாகனம் இயக்கும்போது இருக்கைப்பட்டை அணியாமல் இருப்பது விபத்து காயங்களை தீவிரமாக்குகிறது.

### பாதசாரிகளின் பொறுமை இன்மை

சாலையில் நடந்துசெல்லும் பாதசாரிகளின் பொறுமையின்மையும், சாலைவிதிகளைப் புறக்கணித்தலுமே விபத்துகளை ஏற்படுத்துகின்றன.



7th Std Social Science Civics Term 3 TM Unit 3.indd 243 26-09-2023 18:28:54





## இதர காரணங்கள்

மது அருந்திவிட்டு வாகனம் இயக்குதல், போக்குவரத்து குறியீடுகளை மதிக்காமல் இருத்தல், அதிவேகமாக இயக்குதல், ஆளில்லா இருப்புப்பாதை பகுதிகளில் கவனமில்லாது கடப்பது போன்ற செயல்களால் உயிர்ச்சேதம் அதிகரிக்கிறது. இதனால், பல குடும்பங்கள் வருமானம் ஈட்டும் தம் நபரை இழந்து வாடுகின்றன.

## சாலைப் பாதுகாப்பு விதிகள்

ஒவ்வொரு நாடும் அதன் குடிமக்களின் நலன்கருதி, சாலைப்போக்குவரத்து விதிமுறைகளையும் ஒழுங்குமுறைகளையும் வகுத்துள்ளது. இந்தியாவும் சாலைகளைப் பயன்படுத்துவோரின் பாதுகாப்புகருதி விபத்தோ, காயமோ ஏற்படாவண்ணம் சாலைப் பாதுகாப்பு விதிகளை வகுத்துள்ளது.

## 10 சாலை பாதுகாப்பிற்கான முக்கிய விதிகள்



**நில் அல்லது மெதுவாகச் செல்**
வரிக்குதிரைக் கடவில், பாதசாரிகள் பாதுகாப்பாக முதலில் கடந்து செல்வதற்கு அனுமதித்தல் பாதையைப் பயன்படுத்திடும் முழு உரிமை அவர்களுக்கு உள்ளது (விதிமுறை 11).



**இருக்கையின் வார்ப்பட்டையை அணிதல்**
இருக்கையின் வார்பட்டையை அணிவதால் நீங்களும் உங்கள் குடும்பமும் பாதுகாப்பாக இருத்தல் இருக்கையின் வார்பட்டையினால் 60% காரோட்டிகளின் இறப்பில் மாற்றம் நிகழ்கிறது.



**போக்குவரத்து விதிமுறைகளையும் சைகைகளையும் பின்பற்றுதல்**
சாலை விபத்துகளைத் தடுக்க (பகுதி 119).




**வேகத்தடைகளை மதித்தல்**
உங்களின் பாதுகாப்பு மற்றும் மற்றவர்களின் பாதுகாப்பிற்காக மக்கள் வசிக்கும் இடம் மற்றும் வணிக வளாகம் இருக்கும் இடம் ஆகியவற்றில் சரியான வேகம் 20 கி.மீ/மணி வேகத்தின் அளவு 30 கி.மீ/மணி (பகுதி 112).



**வாகனத்தை முறையாக பராமரித்தல்**
வாகனத்தில் அதிகம் பழுது ஏற்படாமலும், வாகனத்தைக் கட்டுப்படுத்துவதில் சிரமம் ஏதும் நேராமலும் தடுப்பதால் சாலை விபத்துகளும் தடுக்கப்படுகின்றன (பகுதி 190).



**வாகனம் இயக்கும்போது கைப்பேசியை எப்போதும் பயன்படுத்தாமல் இருத்தல்**
விபத்துக்களுக்கு வழிவகுக்கும் கவனச்சிதறலைத் தவிர்க்கவும் (பகுதி 184).



**தலைக்கவசம் அணிதல்**
இருசக்கர வாகனம் இயக்கும்போது தலைக்கவசம் அணிவதால் தலைக்கு பாதுகாப்பு தரமான தலைக்கவசம் அணிவதால் 70% கடுமையான தலைக்காயங்கள் குறையும் வாய்ப்புகள் உள்ளன. (பகுதி 129).




**வாகனத்தை வேகமாக இயக்காது இருத்தல்**
உங்கள் பாதுகாப்பு மற்றும் சாலையை பயன்படுத்துவோரின் பாதுகாப்பினை உறுதி செய்தல் (பகுதி 184).



**மற்றவர்மீது அக்கறை கொள்ளுதல்**
சாலையை அனைவரும் பயன்படுத்த வழிவகை செய்வதும் மற்றவர் மீது கரிசனத்தோடு நடந்து கொள்வதும் அவசியம் அதிவேகமாக ஓட்டுவதால் உங்களுக்கும் சாலையை பயன்படுத்துவோருக்கும் ஆபத்து நேரிடும். மது அருந்துவதையும் வாகனம் ஓட்டுவதையும் ஒன்றாகச் செய்யாதீர்கள்.



**கவனக்குறைவால்/சிதறலால் ஏற்படும் விபத்துக்களை தடுத்தல்**
பொறுப்பாக இருங்கள்... குடித்துவிட்டு வாகனம் ஓட்ட வேண்டாம் (பகுதி 185)

1. சாலை விதிகளின் ஒழுங்குமுறைகள் 1989 2. மத்திய மோட்டார் வாகன விதிமுறைகள் 1989 3. மோட்டார் வாகன விதிமுறைகள் 1968.

இந்திய சட்டப்படி, ஒருவர் வாகன ஓட்டுநர் உரிமம் பெறும் வயது 18 ஆகும். வாகனம் இயக்கும்போது. கைப்பேசி பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. மருத்துவமனை அல்லது பள்ளிவளாகம் அருகில் வாகனங்கள் ஒலியெழுப்ப தடைசெய்யப்பட்டுள்ளது.

இருசக்கர வாகனம் இயக்கும்போது, தரமான தலைக்கவசம் அணியவேண்டும். வாகனத்தில் ஏறும் முன்பே அதனைப் பொருத்திக் கொள்ளவேண்டும். மகிழுந்தில் பயணிக்கும்போது ஓட்டுநரும் அவர் அருகில் இருப்பவரும் இருக்கை வார்பட்டையைப் பொருத்திக் கொள்ள வேண்டும். இருசக்கர வாகனத்தை இயக்கும்போது அதிகமான பளுவை ஏற்றக்கூடாது. இரு சக்கர வாகனம் இயக்குபவர், தம் பின்னால் ஒருவரை மட்டுமே அமர்த்திச் செல்ல வேண்டும். குடும்பம் முழுவதையும் ஏற்றக் கூடாது. ஓட்டுநர் ஒவ்வொருவரும் தமக்கு முன்னால் செல்லும் வாகனத்திற்குப் போதுமான பாதுகாப்பான இடைவெளி விட்டுத்தான் இயக்கவேண்டும். வளைவுகளில், திருப்பங்களில் முக்கியமாக மலைப்பிரதேசங்களில் வேகத்தைக் குறைத்தே இயக்கவேண்டும். சாலை போக்குவரத்துச் சட்டம், பாராளுமன்றத்தால் 1988இல் ஏற்படுத்தப்பட்டு, 1989இல் நாடு முழுவதிற்குமாக நடைமுறைபடுத்தப் பட்டுள்ளன.

## தடுப்பு நடவடிக்கைகள்

**அரசாங்கம்**

சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் வாயிலாக, நமது இந்திய அரசாங்கம் சாலை விபத்துகளைக் குறைப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

i) அதிகமான விபத்து பகுதிகளில் சாலைகளை சீர்செய்தல் மற்றும் கட்டமைப்பை மேம்படுத்துதல்.




ii) போக்குவரத்துக் குறியீடுகள் மற்றும் சாலைச் சைகைகள் முதலியன போக்குவரத்து அதிகம் உள்ள சாலைகளில் நன்றாகச் செயல்படுகின்றனவா என்பதை உறுதி செய்கின்றன.

iii) நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களின் சாலைகளை நல்ல முறையில் அமைத்தல்.

iv) அதிவேகமாக இயக்குபவர்களைக் கண்காணித்திட கண்காணிப்பு காமிராக்களைப் பொருத்துதல்.

v) சாலைகளில் குழிதோண்டுதல் மற்றும் மணல்களை குவிப்பதை தடை செய்தல்.

vi) சாலை ஆக்கிரமிப்புகளை நீக்கி பாதசாரிகள் பாதுகாப்பாக நடந்து செல்வதை உறுதி செய்ய வேண்டும். பொதுமக்கள் சாலை விதிகளை மதிக்காமல் சென்றால் அரசு கடுமையான விதிகளை நடைமுறைபடுத்தி அவர்கள் மீது குற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## தனிமனிதன்

ஒரு வாகனத்தை இயக்கும் ஒருவர், அதற்கான ஓட்டுநர் உரிமம் பெறுவதற்குத் தேவையான



7th Std Social Science Civics Term 3 TM Unit 3.indd 245 26-09-2023 18:28:54

பயிற்சியும் அதற்கான தேர்வுகளில் தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும். வாகனம் இயக்குபவர்கள், எப்போதும் தம்முடைய ஓட்டுநர் உரிமம், வாகனத்தின் பதிவுச் சான்றிதழ், காப்பீட்டுச் சான்றிதழ், வாகனவரி கட்டியதற்கான சான்றிதழ், அனுமதி மற்றும் தகுதிச் சான்றிதழ் ஆகியவற்றை வைத்திருக்க வேண்டும்.

வாகனத்தின் பிரேக் திடீரெனப் பழுதாவதால், பயங்கரமான விபத்துகள் நேர்ந்துவிடுகின்றன, எனவே, வாகனம் நல்ல நிலையில் இருப்பதும், தகுந்த இடைவெளிக் காலங்களில் வாகனங்களை பழுதுநீக்கி இயக்குவதும் அவசியமாகிறது.

**கார் பூலிங்:** ஒவ்வொருவரும் ஒரு இடத்திற்கு வழக்கமாக மகிழுந்தில் செல்லும்போது அந்த இடத்திற்கு அதிகமான மகிழுந்து செலுத்தப்படுகிறது. இதை தவிர்க்க மகிழுந்தில் பயணப் பகிர்வு மேற்கொண்டு ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அதிக மகிழுந்து செல்வதை தடுத்தல்.

ஒரே பகுதியிலிருந்தோ அல்லது ஒரே வழித்தடத்தில் தினந்தோறும் மகிழுந்து அல்லது இருசக்கர வாகனத்தில் செல்பவர்கள் அதே இடத்திற்கோ அல்லது அதே தடத்தில் செல்பவர்களையோ உடன் அழைத்துச் செல்வதே கார் பூலிங் ஆகும்.

**ரக்ஷா பாதுகாப்பு வாகன இயக்கக் கருவி:** ரக்ஷா ஒரு தானியங்கி கருவி. இது வாகனம் தற்போது எங்கு உள்ளது என்பதையும், வாகனத்தின் இயந்திரத்தின் செயல்பாட்டினை கண்காணிக்கவும், வாகனத்தின் பதட்ட நிலையையும் உடனடியாக வெளிப்படுத்தவும் வாகனத்தில் பொருத்தப்படுகிறது.

சாலைகளில் உள்ள குழிகள் மற்றும் மேடுகளால் ஏற்படும் விபத்துகளைத் தடுத்திட வாகனங்களில் ரக்ஷா பாதுகாப்பு கருவி பொருத்தப்படுவதால், சாலையில் உள்ள மேடுகள் பற்றிய முன்னெச்சரிக்கையையும் மோசமான நிலையில் உள்ள சாலை பற்றியும், வேகத்தை மீறும்போதும் ஓட்டுநருக்கு எச்சரிக்கை செய்கிறது.

கார்பூலிங் செய்வதால் சாலைகளில் வாகனங்களின் எண்ணிக்கை குறையும். பலர் ஒரே வாகனத்தை பயன்படுத்துவதால் எரிபொருள், பணம் மற்றும் நேரம் சேமிக்கப்படுகிறது. சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படாது காற்று மாசுபாடும் குறைகிறது. சகமனிதர்களை நன்கு புரிந்து கொள்ளவும் இணக்கமான உறவுமுறை ஏற்படவும் வழிவகுக்கிறது.

## பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள்

இளம் வயதினருக்கு, சாலைப்பாதுகாப்புக் கல்வியைத் தருவதில் பெற்றோரும் ஆசிரியர்களும் பெரும்பங்கு வகிக்கின்றனர். ஒரு பெற்றோர் போக்குவரத்து விதிகளை மீறும்போது, அந்தக்குழந்தையும் பிற்காலத்தில் தன் பெற்றோரைப் போலவே போக்குவரத்து விதிகளை மீறும். எனவே பெரியவர்கள் போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடித்து முன்மாதிரியாளர்களாக விளங்கவேண்டும். குழந்தைகள் காணொலி மற்றும் கணினியில் வாகனத்தை வேகமாக இயக்குவது போன்ற படக்காட்சிகள் காண்பதையோ, விளையாடுவதையோ பெற்றோர்கள் அனுமதிக்கக் கூடாது. ஏனெனில், அவ்விளையாட்டுகள் பிற்காலத்தில் வாகனங்களை வேகமாக இயக்கும் பழக்கத்தைக் குழந்தைகளிடையே ஏற்படுத்திவிடும். எனவே அரசு இத்தகைய விளையாட்டுகளை தடை செய்யவேண்டும்.



போக்குவரத்து குறியீடுகள் மற்றும் போக்குவரத்து விதிகளை குழந்தைகள் அறிந்திட உதவுங்கள், சரியான குறியீட்டிற்காகக் காத்திருந்து, பாதசாரிகளுக்கான வரிக்குதிரை பாதையின் வழியாகச் சாலையைக் கடந்திட அறிவுறுத்துங்கள். சாலைகளில் அங்கும் இங்குமாகவோ, குறுக்காகவோ ஓடுதல் கூடாது என்பதைக்கூறி எச்சரிக்கை செய்யுங்கள். சாலைகளில் நடந்து செல்லும்போது நடைபாதையை பயன்படுத்த வேண்டும் என்பதை கற்றுக்கொடுக்க வேண்டும்.

குழந்தைப் பருவத்திலிருந்தே போக்குவரத்துக் கல்வியை கற்றுத்தரவேண்டும். பள்ளிப்பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக போக்குவரத்துக் கல்வி இணைக்கப்பட வேண்டும். கலைத்திட்டத்தில் சாலைப்பாதுகாப்பு தொடர்பான போட்டிகள் நடத்தப்படவேண்டும். வாசகங்கள் மற்றும் கட்டுரைகள் எழுதுதல், படம் வரைதல் போன்ற செயல்களால் சாலைப்பாதுகாப்பினை வலுபெறச் செய்யலாம்.

### ஊடகம்




வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் மற்றும் விளம்பரங்கள் போன்ற ஊடகங்களுக்கு, சாலைப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொறுப்பு உள்ளது.



சச்சின் டென்டுல்கரின் 45ஆவது பிறந்தநாளையொட்டி மும்பை காவல்துறை, மோட்டார் வாகனம் ஓட்டுபவரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் "தலைக்கவசம் அணிந்து சிறந்த சாதனைகளைச்செய்துள்ள இவரைப்பாருங்கள்! நாமும் இவரைப் பின்பற்றுவோம், என்று குறிப்பிடப்பட்டுள்ளது"

### போக்குவரத்துக் குறியீடுகள்






7th Std Social Science Civics Term 3 TM Unit 3.indd 247
26-09-2023 18:28:55

போக்குவரத்துக் குறியீடுகள், சாலைகளில் போக்குவரத்தை நடத்தும் சத்தமில்லா நடத்துநராகவே செயல்படுகின்றன. 'நில்', வேகத்தடை, 'வலப்புறம் திரும்பு' 'இடப்புறம் திரும்பாதே' போன்ற சில குறியீடுகள் கட்டாயக் குறியீடுகள் ஆகும்.

குறியீடுகள் ஓட்டுநருக்கு எச்சரிக்கை தருவதால், எச்சரிக்கை குறியீடுகள் ஆகின்றன. மருத்துவமனை, பெட்ரோல் பங்க், இளைப்பாறும் இடம், வாகனம் நிறுத்துமிடம், நிறுத்தக்கூடாத இடம் போன்றவை தகவல்களைத் தருவதால் தகவல் குறியீடுகள் என்றழைக்கப்படுகின்றன.

## சாலைப் பாதுகாப்பு வாரம்



பொதுமக்களிடையே போக்குவரத்து விதிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சாலைவிபத்துகளால் ஏற்படும் இறப்புகளைக் குறைக்கவும், சாலைப் பாதுகாப்பு வாரம் தேசிய நிகழ்வாக நடத்தப்படுகிறது. இது ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது. மிகுந்த மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் கொண்டாடப்படுகிறது. சாலைபாதுகாப்பு தொடர்பான பலவித நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. சாலைப்பாதுகாப்பு குறித்த பேனர்கள், போஸ்டர்கள் சுவரொட்டிகள் ஆகியவை வழிப்புணர்வு ஏற்படுத்திடும் வண்ணம் அமைக்கப்படுகின்றன.

இந்திய அரசாங்கம், ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில், சாலைப்பாதுகாப்பு வாரத்தை அனுசரிக்கிறது.

## பரிந்துரைகள்

- 1 கி.மீ அல்லது 2 கி.மீ. தூரமெனில் நடந்து செல்வது மற்றும் மிதிவண்டியில் செல்வது நல்லதொரு பயிற்சியாகவும் கருதப்படுகிறது.
- சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படாத வாகனங்களை பயன்படுத்த வேண்டும்.
- தடுப்பு இல்லாத இருப்புப்பாதை வழிகளில் கட்டைகளை ஊன்றிவைக்கலாம்.
- மிதிவண்டியில் செல்வோர்க்கான தனிவழியைச் சாலைகளை அமைத்தால், சாலை விபத்துகளைக் குறைத்து பல நன்மைகளை அடையலாம்
- மிதிவண்டியில் செல்வது ஆரோக்கியமான பழக்கமாகவும் காற்று மாசுபாட்டைத் தடுப்பதாகவும் அமைகிறது.
- வாகன உற்பத்தியாளர்கள் இருசக்கர வாகனத்தை உற்பத்தி செய்யும்போதே அதிகபட்ச வேகமாக 50கி.மீ./மணிக்குமேல் செல்லாதபடி வடிவமைக்க வேண்டும்.
- உண்மை நிகழ்வுகளைத் தொகுத்துக் கூறியோ, காணொலி மூலமாகவோ விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகிறது.

## பாடச்சுருக்கம்

- சாலைப்பாதுகாப்பு என்பது, சாலையைப் பயன்படுத்துவோர் மற்றும் வாகனம் பயன்படுத்துவோரைக் கோரவிபத்துகள் மற்றும் பெரும் காயங்கள் ஏற்படுவதிலிருந்து பாதுகாக்கும் வண்ணம் ஏற்படுத்தப்பட்ட வழிமுறைகள் ஆகும். சாலை விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்காததால் ஏற்படும் சாலை விபத்துகள் ஒரு நாட்டின் முன்னேற்றம் மற்றும் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கும்.

❖ போக்குவரத்துக் குறியீடுகள் சாலையில் சத்தமில்லா நடத்துநராக அனைவரையும் வழிநடத்துகின்றன.

❖ ஒவ்வொரு நாடும் சாலைப் பாதுகாப்பு வாரத்தைக் கொண்டாடுகிறது.

❖ நாம்சாலைபாதுகாப்பிற்கானவிதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளைத் தீவிரமாகக் கடைப்பிடித்து நமது நாட்டைப் பாதுகாப்போம்.

## சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| 1. | **பாதசாரிகள்** | Pedestrians | persons walking on the road |
| 2. | **விபத்தால் ஏற்படும் இழப்பு** | Fatalities | deaths due to accident |
| 5. | **குடும்பத்திற்காக சம்பாதிப்பவர்** | Breadwinner | one who earns money to support the family |
| 6. | **மிகவும் கடுமையான** | Stringent | severe |
| 7. | **மோதல்** | Collision | crash |
| 8. | **திருத்தம்** | Rectification | correction |
| 9. | **பாதையில் உள்ள குழிகள்** | Potholes | holes in a road surface |
| 12. | **கட்டாயம்** | Mandatory | compulsory |
| 13. | **கட்டை தூண்கள்** | Bollards | short concrete posts used to prevent vehicles on the road |
| 14. | **இருசக்கர வாகன பின்இருக்கை** | Pillion | seat behind in a two wheeler |

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. சாலைப்பாதுகாப்பு என்பது இவர்களுக்கானது
   அ) வழிப்போக்கர்கள்
   ஆ) ஓட்டுநர்கள்
   இ) பொதுமக்கள்
   ஈ) சாலையைப் பயன்படுத்துவோர் அனைவருக்கும்

2. சாலை விபத்துகள் ஒரு நாட்டின் ________________ பாதிக்கின்றன
   அ) முன்னேற்றத்தை
   ஆ) வாழ்வை
   இ) பொருளாதாரத்தை
   ஈ) மேற்கூறிய அனைத்தையும்

3. அனுமதி என்பது
   அ) இயக்குவதற்கு அனுமதி
   ஆ) பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதி
   இ) ஓட்டுநருக்கு சான்றிதழ்
   ஈ) வாகனத்தை பதிவு செய்த சான்றிதழ்

4. ரக்ஷா பாதுகாப்பு
   அ) பாதசாரிகள்
   ஆ) மோட்டார் வாகன ஓட்டிகள்
   இ) கார் இயக்குபவர்கள்
   ஈ) பயணிகள்

5. இந்தியாவில் சாலைப் பாதுகாப்பு வாரம் முதன்முதலாகக் கொண்டாடப்பட்ட வருடம்
   அ) 1947 ஆ) 1990
   இ) 1989 ஈ) 2019

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. போக்குவரத்தில் மனிதனின் மிக பயனுள்ள கண்டுபிடிப்பு ________________ ஆகும்.



7th Std Social Science Civics Term 3 TM Unit 3.indd 249 26-09-2023 18:28:55

2. நமது வாழ்க்கைப் பயணத்தில் ________________ யைப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாததாகும்.

3. சாலைகளில் அதிகமான வாகனங்களால் ________________________ மற்றும் ______________________ மாசுபாடும் ஏற்படுகின்றன.

4. ____________________ குடும்பத்திற்கு வருமானம் ஈட்டித் தருபவர் ஆவார்

5. மருத்துவ உதவியின் அவசர தேவைக்கு ______________________ எண்ணை அழைக்கலாம்.

### III. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | தகவல் குறியீடுகள் | போக்குவரத்து விளக்குகள் |
| 2. | வரிக்குதிரை கடப்பு | குறுகிய வளைவு குறியீடு |
| 3. | கட்டாயக் குறியீடுகள் | பெட்ரோல் பங்க் குறியீடு |
| 4. | எச்சரிக்கைக் குறியீடுகள் | ஓட்டுநர் உரிமம் |
| 5. | வாகனம் ஓட்டும் உரிமை | பாதசாரிகள் |

### IV. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. **கூற்று:** கார் பூலிங் என்பது ஒரே தடத்திலிருந்து பலர் ஒன்றுகூடி ஒரே வாகனத்தைப் பயன்படுத்துவது.

**காரணம்:** அது எரிபொருள், நேரம் மற்றும் பணத்தை மிச்சப்படுத்துகிறது.

அ) கூற்று சரி, காரணம் தவறு

ஆ) கூற்று சரி, காரணமும் சரி

இ) கூற்று தவறு, காரணம் சரி

ஈ) இரண்டுமே தவறு

### V. பொருத்தமில்லாத ஒன்றைக் கண்டுபிடி.

அ) கார் ஆ) டிரக்

இ) டெம்போ ஈ) ஏரோப்ளேன்

### VI. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை எவை என்பதைக் கண்டுபிடி.

அ) பள்ளிப் பாடத்திட்டத்தில், சாலைப் பாதுகாப்புக் கல்வியை இணைப்பது மாணவர்களுக்கு மேலும் சுமையை அதிகரிப்பதே ஆகும்.

ஆ) சாலைகளில் மண் குவிப்பதைத் தடை செய்ய வேண்டும்.

இ) குழந்தைப்பருவத்திலிருந்தே சாலைப் பாதுகாப்பு விதிகளைக் கடைப்பிடித்தல், பிற்காலத்தில் அவர்களது பழக்க வழக்கமாகிவிடும்.

### VII. ஓரிரு வாக்கியங்களில் விடையளி.

1. வாகனம் இயக்கும்போது ஏற்படக்கூடிய கவனச்சிதறல்கள் எவை?
2. பாதுகாப்பாக வாகனத்தை இயக்குவதற்கு இரண்டு பாதுகாப்பு முறைகளைக் கூறு.
3. இரவு நேரங்களில் வாகனம் இயக்குவது பாதுகாப்பற்றது ஏன்?
4. ஒரு வாகனத்தை இயக்குவதற்குரிய உரிமம் எப்போது ஒருவருக்குக் கிடைக்கும்?
5. பொதுமக்களிடையே சாலைப்பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்பட ஊடகம் என்ன செய்ய வேண்டும்?

### VIII. விரிவான விடையளி.

1. ஓர் இந்தியன் வாகனம் ஓட்டுவதற்குத் தேவையான ஆவணங்கள் எவை?
2. பள்ளிப் பாடத்திட்டத்தில் சாலைப் பாதுகாப்புக் கல்வியை இணைத்திடும் தேவை என்ன?
3. பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்குச் சாலைப்பாதுகாப்பு விதிகளை எவ்வாறு கற்றுக் கொடுக்கலாம்?

### IX. உயர் சிந்தனை வினா.

1. சாலைப் பாதுகாப்பு விதிகளைப் பற்றித் தெரிந்து கொண்ட நீங்கள், உங்கள்



7th Std Social Science Civics Term 3 TM Unit 3.indd 250 26-09-2023 18:28:55

பெற்றோர்கள், உறவினர்கள் இடையே எவ்வித தாக்கத்தை ஏற்படுத்துவீர்கள்?

2. சக்கரம் கண்டுபிடிக்கப்படாமல் இருந்திருந்தால், நமது போக்குவரத்து எவ்விதமாக இருந்திருக்கும்?

## X. செயல்பாடுகள்.

1. போக்குவரத்துக் குறியீடுகள் பற்றிய ஆல்பம் தயாரித்திடுக.
2. பொதுமக்களிடையே சாலைப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தத் தேவையான வாசகங்களைத் தொகுத்து எழுதுக.
3. சாலைப்பாதுகாப்பு பற்றிய போட்டிகளை நடத்துக.

### இணையச்செயல்பாடு

## சாலை பாதுகாப்பு




**இச்செயல்பாட்டின் மூலம் சாலைகளின் பாதுகாப்பு விதிமுறைகளைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.**

### படிநிலைகள்:

**படி 1:** கொடுக்கப்பட்டுள்ள உரலி (URL) அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப்பக்கத்திற்கு செல்க.

**படி 2:** திரையில் தோன்றும் இணையப்பக்கத்தில் PLAY பொத்தானை சொடுக்கி ஏதேனும் ஒரு கதாபாத்திரத்தை தெரிவு செய்யவும்.

**படி 3:** URBAN அல்லது RURAL (கிராமப்புற / நகர்புற ) பகுதியினை தெரிவு செய்யவும். பின்பு கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றி விளையாட்டினை தொடங்கவும்.

**படி 4:** இலக்கினை பாதுகாப்பாக அடைய சரியான பாதையினை A அல்லது B யினை தேர்வு செய்யவும்.




படி 1




படி 2



படி 3

**புத்த மதம் உரலி:**

http://www.buddhanet.net/e-learning/buddhism/storybuddha.htm

** படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

* தேவையெனில் 'Adobe Flash' ஐ அனுமதிக்கவும்.



7th Std Social Science Civics Term 3 TM Unit 3.indd 251 26-09-2023 18:28:56

# பொருளியல்



7th Std Social Science Economics Term 3 TM Unit 1.indd 252 9/30/2023 11:32:36 AM

அலகு – 1

# வரி மற்றும் அதன் முக்கியத்துவம்




## கற்றல் நோக்கங்கள்

- ❖ வரிவிதிப்பு, அதன் கோட்பாடுகள், வகைகள் பற்றியும் அறிந்து கொள்ளல்
- ❖ வரியின் முக்கியத்துவத்தையும் அதன் வகைகளையும் தெரிந்து கொள்ளல்
- ❖ 'மக்கள் நலத்திற்காகவே வரிகள்' என்னும் கருத்தைப் புரிந்து கொள்ளல்.

*இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்ல தரசு*

*– திருவள்ளுவர்*

*"சூரியன், தான் பூமியிடமிருந்து உறிஞ்சிய ஈரப்பதத்தைப் பன்மடங்கு திருப்பித் தருகிறது. அதுபோல, மன்னன் தன் குடிமக்களிடம் வரி வசூலித்து, அவர்களின் நலத்திற்காகவே மீண்டும் செலவு செய்கிறான்."*

*– காளிதாஸ்*

### அறிமுகம்

அரசு, சமூக நலத்திற்காகப் பல்வேறு திட்டங்களை மேற்கொள்கிறது. அவற்றை நிறைவேற்றுவதற்கு வருவாய் தேவைப்படுகிறது. இன்றைய காலக்கட்டத்தில், வருவாயைப் பெருக்குவதற்கான பல்வேறு வளங்கள் அரசிடம் உள்ளன. அவற்றுள் முதன்மையாகக் கருதப்படுபவை: வரிகள், கட்டணங்கள், விலைகள், குறிப்பிட்ட மதிப்புகள், ராஃபில் திட்டம் போன்றவை. மற்ற நாடுகளைப் போலவே, இந்திய நாட்டிலும் வருவாய் ஈட்டுவதில் வரிகள் இன்றியமையாத இடம்பெறுகின்றன.

### வரி விதிப்பு

வழக்கமாக அரசால் விதிக்கப்படும் வரியையே '**வரிவிதிப்பு**' என்னும் சொல்லால் குறிப்பிடுகிறோம். வரி விதிப்பு என்பது வருமானம், முதலீட்டால் பெறும் ஆதாயம், சொத்து போன்ற அனைத்து வகைக்கும் விதிக்கப்படும் வரியைக் குறிக்கும். **வரி விதிப்பு** என்பது, பெயராகவோ செயலாகவோ இருக்கலாம். ஆயினும், அது செயல்பாட்டையே குறிக்கிறது. அச்செயலால் விளையும் வருவாயையே நாம் '**வரிகள்**' என்கிறோம்.

## வரிகள்:

வரி செலுத்துவோர், எவ்வித நேரடியான பலனையும் எதிர்பார்க்காமல் அரசுக்குக் கட்டாயமாகச் செலுத்துபவையே வரிகள் ஆகும். பேராசிரியர் சேலிக்மனின் கூற்றுப்படி "வரிகள் என்பவை, ஒருவர் அரசுக்குச் செலுத்த வேண்டிய கட்டாயப் பங்களிப்பாகும். இதில், பெறப்பட்ட சிறப்புச் சலுகைகள் குறிப்பிடப்படுவதில்லை. இப்பங்களிப்பின் மூலம், பொது நலத்திற்காக அரசு மேற்கொள்ளும் செலவுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

## வரிகள் விதிக்கப்படுவதற்கான காரணங்கள்



ஒவ்வொருவரும் சட்டத்திற்கு உட்பட்டு, வரி செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள். வரியாகச் செலுத்தப்படும் மொத்தத் தொகையும் அரசுக் கருவூலத்தில் இருப்பு வைக்கப்படுகிறது. அவ்வாறு பெறப்பட்ட வரிப்பணத்தை எவ்வாறு செலவிடுவது என்பதையும் வரவுசெலவுத் திட்டத்தை எவ்வாறு நிருணயிப்பது என்பதையும் அரசே தீர்மானிக்கிறது. வரி செலுத்துவது என்பது, ஒருவரின் தனிப்பட்ட விருப்பம் அன்று; மாறாக, ஒருவர் தாம் ஈட்டும் வருமானம், வருமான வரம்பிற்கு உட்பட்டதாயின் வரி செலுத்தவேண்டும். வருமான வரி செலுத்துதல், ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். அதிகமாகப் பெறப்படும் வரிகள், மேன்மேலும் பல நலத்திட்டங்களைச் செயல்படுத்த அரசுக்கு உதவுகின்றன.

## வரி விதிப்புக் கோட்பாடு:

வரி விதிப்புக் கோட்பாடுகள், இன்றைய காலக்கட்டத்திலும் வரிக் கட்டமைப்புக்கான அடிப்படையை உருவாக்குகின்றன.

**ஆடம் ஸ்மித்தின் நால்வகையான வரிவிதிப்புக் கோட்பாடுகள்**

1. சமத்துவ விதி
2. உறுதிப்பாட்டு விதி
3. வசதி விதி
4. சிக்கன விதி



**1. சமத்துவ விதி:** மக்கள் தத்தமது வசதிக்கேற்ற வகையில் செலுத்துவதற்காக அரசு வரி விதிக்கும் முறைகளுள் ஒன்று, சமத்துவ விதியாகும். இதனால், அனைவரும் சமமாக வரி செலுத்தவேண்டும் என்பது பொருளன்று; மாறாக, மக்கள்மீது சுமத்தப்படும் வரியானது, எளிமையாகவும் நியாயமாகவும் இருக்கவேண்டும் என்பதையே இவ்விதியே விளக்குகிறது.

**2. உறுதிப்பாட்டு விதி:** வசூலிக்கப்படும் வரியின் மூலம், வரி செலுத்துவோர்க்கு ஓர் உறுதிப்பாட்டுத் தன்மையை, இவ்விதி உருவாக்குகிறது. பொருளாதார வளத்தை மேம்படுத்துகிறது. ஏனெனில், இவ்விதியின் மூலம், பொருளாதாரத்தில் ஏற்படும் அனைத்து வீண் செலவுகளும் தவிர்க்கப்படுகின்றன.

**3. வசதி விதி:** வரி செலுத்தவோர்க்கு அதிகபட்ச வசதிகளை வழங்கும் வகையில், வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. வரி செலுத்துவோர், தாம் செலுத்தும் வரியின் மூலம், குறைந்தபட்ச அளவிலேயே துன்பப்படுவர் என்பதை எப்போதும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

**4. சிக்கன விதி:** வசூலிக்கப்படும் வரியிலிருந்து குறைந்த அளவிலேயே தொகை செலவழிக்கப்பட வேண்டும். வசூலிக்கப்பட்ட தொகை முழுவதும் அரசுக் கருவூலத்தின் இருப்பில் வைக்கப்பட வேண்டும்.



7th Std Social Science Economics Term 3 TM Unit 1.indd 254 9/30/2023 11:32:38 AM

## வரி விதிப்பு வகைகள்:

வரிவிதிப்பில் மூவகை உள்ளன. அவையாவன:

1. **விகிதாச்சார வரி** (Propotional tax)
2. **வளர் வீத வரி** (Progressive tax)
3. **தேய்வு வீத வரி** (Regressive tax)




**வரி விதிப்பின் வகைகள்**

**விகிதாச்சார வரி:** வருமான அளவைப் பொருட்படுத்தாமல், ஒரே மாதிரியாக வரி விதிப்பது, விகிதாச்சார வரி ஆகும். வருமான விகிதத்திற்கேற்ப, வரி விகிதமும் மாறுபடும்.

எடுத்துக்காட்டாக, வருமானத்திற்கு 5 % வரி விகிதம் விதிக்கப்படுகிறது. ஒருவர், ரூபாய் 1000 வருமானம் ஈட்டுகிறார் எனில், அவர் ரூபாய் 50/– செலுத்தவேண்டும். மற்றொருவர், ரூபாய் 5000 வருமானம் ஈட்டுகிறார் எனில், அவரும் ரூபாய் 250/– செலுத்தவேண்டும். சுருங்கக் கூறின், விகிதாச்சார வரி என்பது, வரி செலுத்துபவர்களின் வருமான வரி விகிதத்தை மாற்றாமல் விட்டுவிடுகிறது.

**வளர்வீத வரி:** ஒருவரின் வருமானம் அதிகரிக்கும்போது, அதற்கேற்ப வரி விகிதிமும் அதிகரிப்பது, வளர்வீத வரி ஆகும். எடுத்துக்காட்டாக, ஒருவரின் ஆண்டு வருமானம் ரூபாய் 1000 எனில், அதற்கான வரி விகிதம் 10 %. ஆகவே, அவர் செலுத்த வேண்டிய வரி ரூபாய் 100 ஆகும். இதனைப் போலவே, மற்றொருவரின் வருமானம் ரூபாய் 10,000 எனில், அவருக்கு விதிக்கப்படும் வரி விகிதம் 25 %. அவர் செலுத்த வேண்டிய வரி ரூபாய் 2,500/–. வேறொருவர் ரூபாய் 100,000 வருமானம் பெற்றால், வரி விகிதம் 50 % எனில், அவர் செலுத்த வேண்டிய வரி ரூபாய் 50,000/. ஆகவே, வளர்வீத வரியானது, வருமானம் அதிகரிக்க, அதிகரிக்க வரி விகிதமும் அதிகரித்துக் கொண்டே செல்லும் என்பதை விளக்குகிறது.

**தேய்வு வீத வரி:** அதிகமாக வருமானம் ஈட்டுபவர்களுக்கும் குறைவாக வருமானம் ஈட்டுபவர்களுக்கும் ஒரே மாதிரியாக விதிக்கப்படும் வரி, தேய்வு வீத வரியாகும். இதனால், அதிக அளவு வருமானம் ஈட்டுபவர்களைக் காட்டிலும், குறைந்த அளவு வருமானம் ஈட்டுபவர்கள் அதிக வரி விகிதத்தால் பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய தேய்வு வீத வரியானது, வளர்வீத வரிக்கு எதிரானதாக உள்ளது.

## வரியின் முக்கியத்துவம்:

வரிகள் இல்லையெனில், சமுதாய நலத்திற்குத் தேவையானவற்றைச் செய்ய அரசால் இயலாது. அரசுக்கு வரிகள் மிகவும் இன்றியமையாத வளங்களாக உள்ளன. ஏனெனில், வசூலிக்கப்பட்ட வரிப்பணம் பின்வரும் சமுதாய நலன்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

**1. நலவாழ்வு**

சுகாதார நலவாழ்வுக்காக செலவழிக்கப்படும் தொகை, வரிப்பணத்தில் இருந்தே பெறப்படுகிறது. வரிகள் இல்லையெனில், இத்தகைய செயல்கள் நடைபெறுவது கடினம். சமூக நலவாழ்வு, மருத்துவ ஆய்வு, சமூக நலப் பாதுகாப்பு போன்றவற்றிற்காக வரிப்பணத்திலிருந்து நிதி ஒதுக்கப்படுகிறது.



**நலவாழ்வு**

**2. கல்வி**

அரசுக்குச் செலுத்தப்படும் வரிப்பணத்திலிருந்து அதிக அளவிலான தொகை, கல்விக்காகச் செலவிடப்படுகிறது.



7th Std Social Science Economics Term 3 TM Unit 1.indd 255 9/30/2023 11:32:39 AM

மனித வளங்களை மேம்படுத்துவதற்கும் கல்வியை மையப்படுத்துவதற்கும் அரசு அதிக முதன்மை அளிக்கிறது.



கல்வி

### 3. ஆட்சி நிர்வாகம்

அரசின் நிர்வாக அமைப்புகள் நன்முறையில் இயங்கினால்தான், ஆட்சியும் நன்முறையில் இயங்கும். நிர்வாக அமைப்புகள் சரியாக இயங்கவில்லையெனில், பொருளாதார வளர்ச்சியில் அவை, மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். ஆகவே, நன்முறையில் நிர்வகிக்கும் ஓர் அரசு, தான் வசூலிக்கும் வரிப்பணத்தை, நாட்டின் நலனுக்காகச் சரியான முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்கிறது.




டிஜிட்டல் இந்தியா

### 4. உள்கட்டமைப்பு மேம்பாடு, போக்குவரத்து, வீட்டு வசதி போன்ற பிற பிரிவுகள்:

அரசு, தான் வசூலிக்கும் வரிப்பணத்தைச் சமூக நலத்திட்டங்களுக்காகச் செலவு செய்கிறது. இது மட்டுமின்றி, மக்கள் நலன் காக்கும் வகையில் பாதுகாப்பு, அறிவியல் ஆராய்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற பிரிவுகளுக்கும் நிதி ஒதுக்குகிறது.

மேலும் ஓய்வூதியங்கள், வேலைவாய்ப்பு இல்லாதோருக்கான ஊக்கத்தொகை, குழந்தைப் பாதுகாப்பு போன்றவற்றிற்காகவும் நிதி ஒதுக்கப்படுகிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலையின்மீது வரிகள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பொதுவாக, வரிகள் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குத் (GDP) தம் பங்களிப்பை வழங்குகின்றன.

ஓய்வூதியம் வேலையின்மை சலுகைகள் குழந்தை பராமரிப்பு போன்ற நிதி திட்டங்களுக்கும் சிறுது பணம் செலுத்தப்படுகிறது. வரி ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் நிலையை பாதிக்கும். வரி பொதுவாக ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) பங்களிக்கிறது.



அறிவியல் ஆராய்ச்சி



சுற்றுச்சூழல் பாதுகாப்பு

## வரியின் வகைகள்:

இன்றைய காலக்கட்டத்திற்கேற்ப, வரிகள் இருவகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவை:

1. நேர்முக வரி
2. மறைமுக வரி




## நேர்முக வரி

நேர்முக வரி என்பது தனியாளோ, நிறுவனமோ நேரடியாக அரசுக்கு வரி செலுத்துவதைக் குறிக்கும். வரி செலுத்துபவர், பல்வேறு காரணங்களுக்காக அரசுக்கு நேர்முக வரியைச் செலுத்துகிறார். எடுத்துக்காட்டாக, உண்மையான சொத்து வரி, தனியாள் சொத்துவரி, வருமான வரி அல்லது உறுதிமொழிப் பத்திரங்களின் மீதான வரி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.




வருமான வரி

**உங்களுக்குத் தெரியுமா?**

மத்திய வருமானச் சட்டம் 1963இன்கீழ் 'நேர்முக வரிகளுக்கான மத்திய வருவாய் வாரியம்' என்னும் பெயரில் தனி வாரியம் (CBDT) ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

பிற நேர்முக வரிகள் பின்வருமாறு:

### நிறுவன வரி

நிறுவனங்கள், அலுவலகங்கள் ஆகியவை ஈட்டும் இலாபத்தின் மீது விதிக்கப்படும் வரியே நிறுவன வரியாகும். காப்புரிமை, வட்டி, இந்தியாவிலுள்ள மூலதனச் சொத்துகளை விற்பனை செய்வதன் மூலம் பெறும் இலாபம், தொழில்நுட்பப் பணிகளுக்காகவும் பங்கீடுக்காகவும் (ஈவுத்தொகை) பெறப்படும் கட்டணங்கள் ஆகியவற்றின் மீது வரி விதிக்கப்படுகிறது.



நிறும வரி

### சொத்து வரி:




ஒருவர் வைத்துள்ள சொத்துகளின் மதிப்புக்கு ஏற்ப விதிக்கப்படும் வரி, சொத்து வரி ஆகும். ஒவ்வோர் ஆண்டும் நடைமுறையிலுள்ள சந்தை மதிப்புகளைப் பொருத்து, அதே அளவில் வரி வசூலிக்கப்படுகிறது.

### அன்பளிப்பு வரி:





7th Std Social Science Economics Term 3 TM Unit 1.indd 257 9/30/2023 11:32:41 AM

ஒருவர் வெகுமதியாக அல்லது அன்பளிப்பாகப் பெறும் பொருள்களின் மதிப்புக்கேற்ப விதிக்கப்படும் வரி, அன்பளிப்பு வரியாகும்.

**சொத்து வரி:**



சொத்து வரி

முன்னோர்கள் சொத்துகளின் மீது விதிக்கப்படும் வரி, சொத்து வரியாகும். இத்தகைய வரிகளை அரசுக்குக் கட்டாயமாகச் செலுத்தவேண்டும். வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதில்லை. அரசுக்கு நேரடியாக வரி செலுத்தும் ஒருவரின் வருமானம் அல்லது சொத்துகளின் மீது, இவ்வரி விதிக்கப்படுகிறது.

**மறைமுக வரி:**




தொடக்கத்தில், ஒருவருக்கு விதிக்கப்பட்ட வரிச்சுமை, மற்றொருவர் மீது மாற்ற இயலும் முறையையே மறைமுக வரி என்கிறோம். எடுத்துக்காட்டாக, ஒரு பொருளை (மகிழுந்து / இரு சக்கர வண்டி போன்றவை) விற்பனை செய்யும் விற்பனையாளர், தொடக்கத்தில் அந்தப் பொருளுக்கான வரிச்சுமையை ஏற்கிறார். அவரிடமிருந்து, அந்தப் பொருளை யார் வாங்குகிறார்களோ, அவர்களே பின்னர் அந்தப் பொருளுக்கான வரிச்சுமை முழுவதையும் ஏற்கிறார்கள். ஆகவே, மறைமுகவரி என்பது, ஒருவரின் வரிச்சுமை மற்றொருவர் மீது சுமத்தப்படுவதைக் குறிக்கிறது. மறைமுக வரிகளுக்குச் சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

**சேவை வரி:**




சேவை வழங்குவதன் அடிப்படையில் விதிக்கப்படுவது, சேவை வரியாகும். சேவையைப் பெறுபவர்களிடமிருந்து வரி வசூலிக்கப்பட்டு, மத்திய அரசுக்குச் செலுத்தப்படுகிறது.

**விற்பனை வரி :**




விற்பனை செய்யப்படும் பொருள்களின் மீது விதிக்கப்படும் வரி, விற்பனை வரி. இஃது ஒரு மறைமுக வரியாகும். ஏனெனில், பொருள் விற்பனை செய்பவர் செலுத்த வேண்டிய வரிச்சுமை, அந்தப் பொருளை வாங்குபவர் மீது சுமத்தப்படுகிறது. இதனால், பொருள் விற்பனை செய்பவர், தாம் விற்கும் பொருளின் விலையோடு அதற்குரிய வரியையும் சேர்த்தே விற்பனை செய்கிறார்.

**கலால் (ஆயத்தீர்வை) வரி:**



கலால் (ஆயத்தீர்வை) வரி

மொத்த விற்பனையாளர்களிடமிருந்தும் சில்லறை விற்பனையாளர்களிடமிருந்தும் பொருள்களை வாங்குபவர்கள் செலுத்த வேண்டிய வரி, கலால் வரியாகும். இந்தியாவில், இந்த வரியானது மத்திய அரசால் சுமத்தப்படுகிறது.

**பொழுதுபோக்கு வரி:**




மாநில அரசுகளால், பொழுதுபோக்கிற்காக ஒவ்வொரு முறையும் வசூலிக்கப்படும் வரி, பொழுதுபோக்கு வரியாகும். எடுத்துக்காட்டாக, திரைப்படங்களுக்கான கட்டணங்கள், காணொலி விளையாட்டுகள், மேடை அரங்கேற்ற நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், பொழுதுபோக்குப் பூங்காக்கள், விளையாட்டு தொடர்பான செயல்பாடுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**சரக்கு மற்றும் சேவை வரி (GST):**

பொருள்களின் விற்பனை, உற்பத்தி, பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் விதிக்கப்படுவது, பொருள் மற்றும் சேவை வரியாகும். தேசிய அளவில், ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்படுகிறது. சரக்கு மற்றும் சேவை மீது விதிக்கப்படும் மறைமுக வரிக்கு மாற்றாக, மத்திய, மாநில அரசுகளால் இவ்வரியானது சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது

சரக்கு மற்றும் சேவை வரி




**சரக்கு மற்றும் சேவை (GST) வரிகளின் வகைகள்**




**சரக்கு மற்றும் சேவை வரி – ஓர் அறிமுகம்**

முந்தைய மறைமுக வரி கட்டமைப்பு மற்றும் அதன் சிரமங்கள்

இந்திய வரிவிதிப்பு வரலாறு பண்டைய காலத்திற்குச் செல்கிறது, கௌடில்யர் எழுதிய அர்த்த சாஸ்திரத்தின் கூற்றுப்படி, பண்டைய காலங்களில் வரி விதிக்கப்பட்டு



7th Std Social Science Economics Term 3 TM Unit 1.indd 259 9/30/2023 11:32:43 AM

ரொக்கமாகவும், வேறு வகையாகவும் சேகரிக்கப்பட்டது. மறைமுக வரிகளின் நவீன வரலாறு 20 ஆம் நூற்றாண்டின் முறப்குதியில் இருந்து உப்பு, சர்க்கரை, வாகன எரிபொருள் போன்றவற்றுக்கு மத்திய கலால் வரி விதிக்கப்பட்டதிலிருந்து தொடங்குகிறது. படிப்படியாகக் கலால் வரிகளின் அடிப்படை விரிவுபடுத்தப்பட்டது, சுதந்திரம் பெற்ற நேரத்தில், தேசிய அளவில் மத்திய கலால் வரி மற்றும் மாநில அளவில் விற்பனை வரி ஆகியவை நடைமுறையில் இருந்தன நீண்டகால முயற்சிகள் மற்றும் திருத்தங்களுக்கு பிறகு, 2003 ஆம் ஆண்டில் இந்திய மாநிலமான ஹரியானாவில் முதன்முதலில் மதிப்பு கூட்டு வரி (VAT) அறிமுகப்படுத்தப்பட்டது, அதன் பிறகு பஞ்சாப், சண்டிகர், இமாச்சலப் பிரதேசம், ஜம்மு மற்றும் காஷ்மீர் மற்றும் டெல்லி உள்ளிட்ட 24 மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களில் 2005 இல் மதிப்பு கூட்டு வரி (VAT) அறிமுகப்படுத்தப்பட்டது.

மதிப்புக் கூட்டு வரி முன்பு இருந்த விற்பனை வரியைவிடப் பெரிய வளர்ச்சியாக இருந்திருந்தாலும், சரக்கு மற்றும் சேவை வரி உண்மையில் குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றமாகும். மேலும், நாட்டின் வரி விதிப்பு அமைப்பில் முழுமையை உணர்ந்து கொள்வதற்கான தர்க்க அடிப்படையிலான படியாகும்ஆரம்பத்தில் ஒரு முனை மற்றும் தேசிய அளவிலான சரக்கு மற்றும் சேவை வரி (GST) இருக்கும் என்று முன்மொழியப்பட்டது. இருப்பினும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) விதி இறுதியாக 2017 ஜூலை 1 முதல் இந்தியா முழுவதும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் நாட்டின் ஒரு பொருளாதார அமைப்பு ஒரு வரி, ஒரு சந்தை மற்றும் ஒரு தேசத்துடன் உள்ளது.

சரக்கு மற்றும் சேவை வரி (GST) என்பது நாம் வாங்கும் அனைத்துப் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான வரி. இது மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (CGST) மற்றும் மாநில சரக்கு மற்றும் சேவை வரி (SGST) என இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. இது ஒரு வெளிப்படையான வரி. நீங்கள் வாங்கும் பொருள்களுக்கான ரசீது கிடைத்தால், பின்வரும் தகவல்களை காண்பீர்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| தயாரிப்பு மதிப்பு | = | ₹ 100 | SGST 9% | ₹ 9 |
| CGST 9% | = | ₹ 9 | மொத்தம் | ₹ 118 |

மசோதாவில், GST 18%, அது சமமாகப் பிரிக்கப்பட்டுள்ளது மத்திய மற்றும் மாநிலத்திற்கும் தனித்தனியாக ரூ. 9க்கு 9% எனவே ரூ.9 மாநில அரசுக்கும், மேலும் ரூ 9. மத்திய அரசுக்கும் செல்லும்.

தமிழ்நாட்டில் ஒரு விற்பனையாளர் ஒரு பொருளை வெறுமாநிலத்தில் வாங்குபவருக்கு விற்றால் (எடுத்துகாட்டாக கர்நாடகா), அது மாநிலங்களுக்கு இடையேயான வர்த்தகம் என்று அழைக்கப்படுகிறது. மாநிலங்களுக்கிடையிலான வர்த்தகத்தை பொருத்தவரை. மசோதா கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| உற்பத்தியின் மதிப்பு | = | ₹ 100 |
| IGST 18% | = | ₹ 18 |
| மொத்தம் | = | ₹ 118 |

ரூ 18 மத்திய அரசுக்குச் செல்லும். மத்திய அரசு ரூ 9 எடுத்து கர்நாடக அரசுக்கு மேலும் ரூ 9 அனுப்பும் வரி 0 சதவீதம், 5 சதவீதம், 12 சதவீதம், 18 சதவீதம் மற்றும் 28 சதவீதம் என ஐந்து அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. GST மத்திய அரசால் வசூலிக்கப்பட்டாலும், பெட்ரோலியப் பொருள்கள், ஆல்கஹால், மின்சாரம் ஆகியவற்றின் மீதான வரி தனித்தனியாக மாநில அரசால் வசூலிக்கப்படுகிறது மற்றும் காய்கறிகள் மற்றும் உணவு தானியங்கள் போன்ற வாழ்கையின் அனைத்து அத்தியாவசிய பண்டங்களுக்கும் இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன.



7th Std Social Science Economics Term 3 TM Unit 1.indd 260 9/30/2023 11:32:43 AM

**சுங்க வரியும் சாலை வரியும்**



அரசால் மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளை நாம் அடிக்கடி பயன்படுத்துகிறோம். அதற்காக விதிக்கப்படும் வரி, சுங்கம் மற்றும் சாலை வரிகளாகும். எடுத்துக்காட்டாக, நாம் பயன்படுத்தும் சாலைகள் மற்றும் பாலங்கள் போன்றவற்றைக் கூறலாம். சாலை/பாலம் வசதிகளின் பராமரிப்புப் பணிக்காகவும் குறிப்பிட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகவும் இவ்வரிகள் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன.

**தூய்மை பாரத வரி**



இந்திய அரசால் இவ்வரி விதிக்கப்படுகிறது. தூய்மை பாரதத்தின் பெயரால் வசூலிக்கப்படும் இவ்வரி, 2015ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 15ஆம் நாள் தொடங்கப்பட்டது. இஃது அனைத்து வகையான வரிச் சேவைகளுக்கும் பொருந்தும். இதன் வரி விகிதம் 0.5% ஆகும். தற்போது, 14% க்கும் மேற்பட்ட சேவை வரி நடைமுறையில் உள்ளது.

**நேர்முக மற்றும் மறைமுக வரிகளுக்கு இடையிலான வேறுபாடுகள் :**

| நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|
| வரி செலுத்துவோர், தமக்கு விதிக்கப்பட்ட வரிச்சுமையைப் பிறருக்கு மாற்ற இயலாது. | ஒருவர், தமக்கு விதிக்கப்பட்ட வரிச்சுமையை மிக எளிதாக வேறொருவருக்கு மாற்ற இயலும். |
| தனியாள் மற்றும் நிறுவனங்கள் பெறும் வருமானங்கள்மீது வரி விதிக்கப்படுகிறது. | பல்வேறு பொருள் மற்றும் சேவைகளின் மீது வரி விதிக்கப்படுகிறது. |
| பணவீக்க அழுத்தம் இல்லை | பணவீக்க அழுத்தம் உண்டு |
| வரித் தாக்கமும் வரி நிகழ்வும் சமமாக உள்ளன. | வரித் தாக்கமும் வரி நிகழ்வும் வெவ்வேறாக உள்ளன. |
| நெகிழ்வுத் தன்மை குறைவு. | நெகிழ்வுத்தன்மை அதிகம். |

## வரித் தேவையும் மக்கள் நலத் தேவையும்:

நிதி நிர்வாகத்திற்கு வருவாயை உயர்த்துவதே, வரி விதிப்பதன் நோக்கமாகும். நிதிப் பற்றாக்குறையால் ஏற்படும் பாதிப்புகளைச் சமன் செய்ய, விலை மாற்றத்திற்கு உதவுகிறது. நிதி நிருவாக வரலாற்றில், மாநிலங்கள் வரி விதிப்பின் மூலமாகவே பல செயல்பாடுகளை மேற்கொண்டுள்ளன என்பதை அறியமுடிகிறது.

போக்குவரத்து, சுகாதாரம், பொதுமக்களின் பாதுகாப்பு, கல்வி, நலவாழ்வுத் திட்டங்கள், அறிவியல் ஆராய்ச்சி, கலையும் பண்பாடும், பொதுப்பணி, பொதுக் காப்பீடு மேலும் பல பொருளாதார உள்கட்டமைப்புகளுக்காகவும் வரிப்பணம் செலவழிக்கப்படுகிறது. ஓர் அரசின்



7th Std Social Science Economics Term 3 TM Unit 1.indd 261 9/30/2023 11:32:44 AM

திறனுக்கேற்ப, வரிகளை உயர்த்துவது, அதன் 'நிதித் திறன்' என்றழைக்கப்படுகிறது.



செலவுகள், வரி வருவாயைவிட அதிமாகும்போது, அரசு கடன்களைத் திரட்டுகிறது. வாராக் கடன்களைத் திரட்டுவதற்கு, வரிகளிலிருந்து ஒருபகுதியும் செலவழிக்கப்படலாம். மேலும், நலவாழ்வுக்கும் பொதுப் பணிகளுக்கும் தேவைப்படும் நிதிகளுக்கு வரிப்பணம் பயன்படுத்தப்படுகிறது. கல்வித் திட்டங்கள், வயதானவர்களுக்கான ஓய்வூதியப் பலன்கள், வேலைவாய்ப்பு இல்லாதோருக்கான ஊக்கத் தொகைகள், பொதுப் போக்குவரத்துகள், ஆற்றல், நீர் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்கள் போன்ற பொதுப் பயன்பாட்டுகளுக்கு உரியவை அனைத்தும் பொதுப் பணிகளுக்குள் அடங்கும்.

பண உருவாக்கக் கோட்பாடுகளின் அடிப்படையில், ஒப்புறுதிப் பணம் அளிப்பதற்கு அரசு கேள்வி கேட்கும்வரை, அரசின் வருவாய்க்கு வரிகள் தேவைப்படா. நாணய மதிப்பைத் தக்கவைத்தல், சொத்துப் பங்கீடு தொடர்பான பொதுக் கொள்கை வெளியிடுதல், குறிப்பிட்ட சில தொழிற்சாலைகள் அல்லது குழுக்கள் அல்லது நெடுஞ்சாலைகள் அல்லது சமூகப் பாதுகாப்பு போன்ற தனிப்பட்ட வகையில் நன்மை தருவன ஆகியவற்றிற்கு மானியம் அளித்தல் போன்றவை வரி விதிப்பின் நோக்கங்களாகும்.

## சுருக்கம்

- ❖ ஒரு வரி விதிக்கும் அதிகாரம் அதாவது அரசாங்கம் வரி விதிப்பதை " வரி விதிப்பு" என்கிறோம் வருமானம் முதல் மூலதன ஆதாயங்கள் மற்றும் சொத்துவரி வரை அனைத்து வகையான தன்னிச்சையான வரிவிதிப்புகளும் "வரி விதிப்பு" என்ற சொல்லிற்கு பொருந்தும்.
- ❖ வரி செலுத்துவோருக்கு நேரடி அல்லது திரும்பப் பெறக் கூடிய வாய்ப்பு அல்லது நன்மை என்ற எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் அரசாங்கத்திற்குக் கட்டாய செலுத்துகைகள் ஆகும்.
- ❖ இந்த முறையில் வருமான அளவைப் பொருட்படுத்தாமல் வரி விகிதம் ஒரே மாதிரியாக இருக்கும்.
- ❖ நாட்டு விவகாரங்களைச் சீராக நடத்துவதில் ஆட்சிமுறை முக்கியமான அங்கமாகும்.
- ❖ ஒரு நேர்முக வரி என்பது அதன் சுமையை நேரடியாக சுமத்தப்படும் நபரால் சுமக்கப்படும் வரி, அதாவது, அதன் சுமையை மற்றவர்களுக்கு மாற்ற முடியாது.
- ❖ பரம்பரைச் சொத்தின் வாரிசுகளிடமிருந்து சொத்து அல்லது பண்ணை வரி வசூலிக்கப்படுகிறது. வரி செலுத்துவதைத் தவிர்ப்பது விரும்பத்தக்கதன்று.
- ❖ மறைமுக வரி என்பது ஒரு வரி, அதன் சுமையை மற்றவர்களுக்கு மாற்ற முடியும்.
- ❖ இந்தியாவில் கலால் வரி மத்திய அரசால் விதிக்கப்படுகிறது.
- ❖ சரக்கு மற்றும் சேவை வரி என்பது பொருள்கள் மற்றும் சேவைகளின் விற்பனை, உற்பத்தி மற்றும் பயன்பாடு ஆகியவற்றிற்கு விதிக்கப்படும் ஒரு வகையான வரி.

## References


1. *Public Finance,* Tyagi.
2. *Public Finance,* H.L. Bhatia.
3. *Direct Taxes,* V.K. Singhania.
4. htt:\\www.GST.in.

| கலைச்சொற்கள் | | | |
|---|---|---|---|
| 1. | **சமத்துவம்** | சம வாய்ப்புகள் | Equality |
| 2. | **வசதி** | சிரமமின்றி எதையாவது தொடரக்கூடிய நிலை | Convenience |
| 3. | **விகிதாச்சார** | சமமான | Proportional |
| 4. | **பிற்போக்கு வரி** | குறைந்த வருமானம் உள்ளவர்களிடமிருந்து விகிதாச்சாரமாக அதிக தொகையை வசூலிப்பது | Regressive |
| 5. | **மரபுரிமை** | இதற்கு முன் வைத்திருப்பவர் இறப்பிற்கு பின் வாரிசுதாரர் பெறுவது. | Inherited |
| 6. | **குவிக்க** | ஒன்றுசேர் | Accumulate |
| 7. | **மானியம்** | பங்களிக்க | Subsidize |
| 8. | **துன்புறுத்தல், அடக்குமுறை** | ஒரு நபர் அல்லது ஒரு குழுவை நியாயமற்ற முறையில் நடத்துவது குறிப்பாக அவர்களின் சமய அல்லது அரசியல் நம்பிக்கைகள் காரணமாக | Persecution |

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. வரிகள் என்பவை ---------- செலுத்தப்பட வேண்டும்.
   அ) விருப்பத்துடன்
   ஆ) கட்டாயமாக
   இ) அ மற்றும் ஆ
   ஈ) இவற்றில் எதுவுமில்லை

2. வசூலிக்கப்படும் வரியிலிருந்து குறைந்த அளவிலேயே தொகை செலவழிக்கப்படுவது------
   அ) சமத்துவ விதி
   ஆ) உறுதிப்பாட்டு விதி
   இ) சிக்கன விதி
   ஈ) வசதி விதி

3. வளர்வீத வரிக்கு எதிராக அமைந்துள்ள வரி ------
   அ) விகிதச்சாரா வரி
   ஆ) தேய்வுவீத வரி
   இ) அ மற்றும் ஆ
   ஈ) இவற்றில் எதுவுமில்லை

4. வருமான வரி என்பது ------
   அ) நேர்முக வரி
   ஆ) மறைமுக வரி
   இ) அ மற்றும் ஆ
   ஈ) இவற்றில் எதுவுமில்லை

5. சேவை வழங்குவதன் அடிப்படையில் விதிக்கப்படுவது ----------
   அ) செல்வ வரி
   ஆ) நிறுவன வரி
   இ) விற்பனை வரி
   ஈ) சேவை வரி

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. வழக்கமாக, அரசால் விதிக்கப்படும் வரியையே --------என்னும் சொல்லால் குறிக்கிறோம்.



7th Std Social Science Economics Term 3 TM Unit 1.indd 263 9/30/2023 11:32:44 AM

2. வருமான அளவைப் பொருட்படுத்தாமல் ஒரே மாதிரியாக வரி விதிப்பது ---------.
3. ------ வரி என்பது, அன்பளிப்பின் மதிப்பைப் பொருத்து, அன்பளிப்பு பெறுபவர் அரசுக்குச் செலுத்துவதாகும்.
4. ________________ வரிச்சுமையை வரி செலுத்துவோர் மாற்ற முடியாது.
5. மறைமுக வரி என்பது ________________ நெகிழ்ச்சி உடையது.

## III. பின்வருவனவற்றைப் பொருத்துக:

1. வரி விதிப்புக் கொள்கை – நேர்முக வரி
2. சொத்து வரி – சரக்கு மற்றும் சேவை வரி
3. சுங்கவரி – ஆடம்ஸ்மித்
4. 01.07.2017 – குறைந்த நெகிழ்ச்சி உடையது
5. நேர்முக வரி – மறைமுக வரி

## IV பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

1. பின்வருவனவற்றில் எது மறைமுக வரி அல்ல?

அ) சேவை வரி
ஆ) மதிப்பு கூட்டப்பட்ட வரி (VAT)
இ) சொத்துவரி
ஈ. சுங்கவரி

## V சரியான ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

1. பின்வரும் வரியில் எது நேர்முக வரி?

அ) சேவை வரி
அ) செல்வ வரி
இ) விற்பனை வரி
ஈ) வளர் விகித வரி

## VI சுருக்கமாக விடையளிக்கவும்.

1. வரியை வரையறுக்கவும்.
2. வரி ஏன் விதிக்கப்படுகிறது?
3. வரிவிதிப்பு வகைகளின் பெயரை எழுதி அதன் வரைபடத்தை வரையவும்.
4. வரிகளின் முக்கியத்துவம் ஏதேனும் மூன்றினைக் கூறுக.
5. வரியின் வகைகள் யாவை? மற்றும் அதனைப் பற்றி விளக்குக.
6. நன்கொடை அல்லது அன்பளிப்பு வரி மற்றும் சேவை வரி பற்றிச் சிறுகுறிப்பு வரைக.
7. சரக்கு மற்றும் சேவை வரி (GST என்றால் என்ன?
8. நேர்முக மற்றும் மறைமுக வரிக்கு இடையிலான வேறுபாடுகள் யாவை

## VII விரிவான விடையளிக்கவும்.

1. வரி விதிப்பு கொள்கை பற்றிச் சுருக்கமாகக் கூறுக.
2. வரி விதிப்பின் வகைகளாக விளக்குக.
3. வரியின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்குக.
4. நேர்முக மற்றும் மறைமுக வரியை உதாரணத்துடன் விளக்குக
5. மக்கள் நலனுக்கு வரி ஏன் அவசியம் என்பதை பற்றி விளக்குக.

## VIII செயல்பாடு மற்றும் செயல் திட்டம்.

1. மாணவர்கள் அருகிலுள்ள பல்பொருள் அங்காடிக்குச் சென்று சரக்கு மற்றும் சேவை வரி (GST) குறித்து கேட்டறிந்து அதைப் பற்றி கலந்துரையாடுக.
2. வரி என்றால் என்ன? நாம் ஏன் வரி செலுத்துகிறோம்? இந்த வரியை மக்கள் நலனுக்காக அரசாங்கம் எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதை குறித்து கட்டுரை எழுதுக.

## IX வாழ்க்கைத் திறன்கள்.

1. ஆசிரியரும் மாணவர்களும் சேர்ந்து நாட்டின் வளர்ச்சியில் வரியின் முக்கியத்துவம் குறித்து விவாதித்தல்.

# சமூக அறிவியல் – ஏழாம் வகுப்பு – மூன்றாம் பருவம்
## பாடநூல் உருவாக்கம்
## வரலாறு

கல்வி ஆலோசகர்

**முனைவர் பொ. குமார்**
இணை இயக்குநர் (பாடத் திட்டம்),
மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை–6.

கல்விக்குழு ஒருங்கிணைப்பாளர்

**க. இராமராஜ்**
துணை முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
தே.கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்.

உள்ளடக்கம் வாசிப்பாளர்கள்

**முனைவர் ஐ. பிரின்ஸஸ்**
வரலாற்றுத் துறை,
லயாலோ கல்லூரி,
சென்னை.

**முனைவர் க. சுரேஷ்**
பட்டதாரி ஆசிரியர்,
குமாரராஜா முத்தையா மேல்நிலைப் பள்ளி,
அடையாறு, சென்னை.

**ச. ராஜேஸ்வரி**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
நெல்லிக்குப்பம், காஞ்சிபுரம்.

**ஹ. உஷா**
பட்டதாரி ஆசிரியர்,
ஆர். கே. எம். சாரதா வித்யாலயா,
மகளிர் மேல்நிலைப் பள்ளி,
உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை.

**சௌ. மஞ்சு**
ஆசிரியர் பயிற்றுநர் (வரலாறு),
வட்டார வளமையம்.
சேடப்பட்டி, மதுரை.

குழுத்தலைவர்

**முனைவர் கா. அ. மணிக்குமார்**
மேனாள் பேராசிரியர், வரலாற்றுத் துறை,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநேல்வேலி.

மொழி பெயர்ப்பாளர்

**முனைவர் சு. ரவிச்சந்திரன்**
மேனாள் இணைப் பேராசிரியர்,
இராஜபாளையம் ராஜுக்கள் கல்லூரி, இராஜபாளையம்.

பாடநூல் ஆசிரியர்கள்

**முனைவ ஜெ. முருகன்**
இணைப் பேராசிரியர்,
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி,
வட சென்னிமலை, ஆத்தூர், சேலம்.

**முனைவர் E. மனமாறன்**
இணைப் பேராசிரியர்,
வரலாற்றுத் துறை,
தர்மபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கல்லூரி, மயிலாடுதுறை,

**முனைவர் சிந்தியா ஜுடு**
உதவிப் பேராசிரியர்,
வரலாறு மற்றும் சுற்றுலாத் துறை,
ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி,
சென்னை.

## புவியியல்

பாட வல்லுநர் & மேலாய்வாளர்

**முனைவர் இரா. ஜெகன்குமார்**
இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்,
புவியியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி.

மொழி பெயர்ப்பாளர்

**இரா.இந்துஜா**
ஆசிரியர் பயிற்றுநர் (புவியியல்),
வட்டார வள மையம்,
திருப்பரங்குன்றம், மதுரை.

**ஜா. தெரேசா கேத்தரின்**
பட்டதாரி ஆசிரியை ( புவியியல் )
ஸ்ரீ வரதம் அரசு மகளிர் மேனிலைப்பள்ளி
வேணுகோபாலபுரம், கடலூர்

பாடநூல் ஆசிரியர்கள்

**நா. ஹேமாவதி**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு (ஆ.தி.ந.) மகளிர் மேல்நிலைப் பள்ளி,
கன்னிகாபுரம், சென்னை.

**முனைவர் மா. கமலா**
முதுகலை ஆசிரியர்,
அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளி
கும்பகோணம், தஞ்சாவூர்.

**ம. ஆனந்தகுமார்**
முதுகலை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி,
த.பழூர், உடையார் பாளையம், அரியலூர்.

**சித்ரா உமாபதி**
பட்டதாரி ஆசிரியர்,
எஸ்.பி.ஐ.ஓ.எ. மாதிரி மேல்நிலைப் பள்ளி,
முகப்பேர், சென்னை.

# குடிமையியல்

பாட வல்லுநர் & மேலாய்வாளர்கள்

**முனைவர் எம். கலியபெருமாள்**
மேனாள் இணைப் பேராசிரியர் & துறைத்தலைவர்,
அரசியல் அறிவியல்துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை.

மொழி பெயர்ப்பாளர்கள்

**முனைவர் கா. செல்வகுமார்**
உதவி பேராசிரியர் / துறைத்தலைவர்,
அரசியல் அறிவியல் துறை,
பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்,
தஞ்சாவூர்.

**முனைவர் K. இளங்கோ**
உதவிப் பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை,
மாநிலக் கல்லூரி,
சென்னை – 5.

பாடநூல் ஆசிரியர் & மேலாய்வாளர்

**சிவகுமார் ரெங்கசாமி**
உதவி பேராசிரியர்,
அரசியல் அறிவியல் துறை,
மாநிலக் கல்லூரி,
சென்னை – 6.

**ச. ஆனந்த சொரூப சாந்தி**
முதுநிலை விரிவுரையாளர் (ஓய்வு),
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
தே.கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்.

உள்ளடக்கம் வாசிப்பாளர்

**இரா. சுதா பாகீரதி**
வளமைய பயிற்றுநர் (வரலாறு),
வட்டார வளமையம்,
கள்ளிக்குடி, மதுரை மாவட்டம்.

# பொருளியல்

பாட வல்லுநர் & மேலாய்வாளர்

**முனைவர் சித்ரா ரெஜிஸ்**
உதவி பேராசிரியர், பொருளாதாரத் துறை,
லயாலோ கல்லூரி, சென்னை.

மொழி பெயர்ப்பாளர்

**கு. சுரேஷ்**
முதுகலை ஆசிரியர்
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி
பென்னாகரம், தருமபுரி.

பாடநூல் ஆசிரியர்

**இல. கௌசல்யாதேவி**
முதுகலை ஆசிரியை,
அரசு மேல்நிலைப்பள்ளி,
தொப்பூர், தருமபுரி.

## கலை மற்றும் வடிவமைப்பு

**பி. ரவிக்குமார்**

**ஷாலினி ராஜீ**

**வினோத்**

புத்தக கட்டமைப்பு
**வே.சா. ஜாண்ஸ்மித்**
**பேச்சிமுத்து கைலாசம்**
**செல்வகுமார் மாணிக்கம்**

அட்டை வடிவமைப்பு
**கதிர் ஆறுமுகம்**

தரக்கட்டுபாடு
**மனோகர் இராதாகிருஷ்ணன்**
**காமாட்சி பாலன்**

ஒருங்கிணைப்பாளர்
**ரமேஷ் முனிசாமி**

தட்டச்சர்
**மா. கல்பனா ஜெகநாதன்**

இணையச் செயல்பாடு
**இரா. பாரதிராஜா**
ஆசிரியர், அரசு தொடக்கப்பள்ளி,
முருங்கப்பாக்கம், வட்டம் II, புதுச்சேரி – 4.

EMIS தொழில்நுட்பக் குழு

**இரா.மா.சதீஸ்**
மாநில ஒருங்கிணைப்பாளர் தொழில்நுட்பம்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.

**இரா. அருண் மாருதி செல்வன்,**
தொழில்நுட்ப திட்டபணி ஆலோசகர்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.

**க. ப. சத்தியநாராயணா,**
தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
வெப் ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

குறிப்பு

குறிப்பு



7th Std Social Science Economics Term 3 TM Unit 1.indd 268 9/30/2023 11:32:44 AM